National Centre for School Leadership



# பள்ளித் தலைமைப்பண்பு மேம்பாடு

## ஒரு கையேடு

National Institute of Educational Planning and Administration

# TEAM MEMBERS


Rashmi Diwan

Sunita Chugh

Kashyapi Awasthi

Subitha G.V.

N. Mythili

Seema Singh

Shreya Tiwari

G  S Negi

Charu Smita Malik

Darakshan Parween

Monika Bajaj

National Centre for School Leadership

# பள்ளித் தலைமைப்பண்பு மேம்பாடு

# ஒரு கையேடு

National Institute of Educational Planning and Administration

National Institute of Educational Planning and Administration (NIEPA)
(Deemed to be University)

© NIEPA

First Published in English : February 2014
Tamil Translation : September 2018

Published by the Registrar, National Institute of Educational Planning and Administration (NIEPA)
17-B, Sri Aurobindo Marg, New Delhi - 110016 and Design & Layout by Bachan Singh

# முன்னுரை

உலகளாவிய நிலையில், ஆரம்பக் கல்வியைக் கொண்டு செல்லும் வகையில், இந்தியக் கல்வி அமைப்பு, அண்மைக் காலத்தில், முன்னர் கண்டிராத வேகத்தில், மிகப்பெரிய விரிவாக்கத்தைக் கண்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையும், மிகப் பெரிய அளவில் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. கல்வி அலைகளும், நாட்டின் பல்வேறு பகுதிகளில், உலகளாவிய நிலைக்கு வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்த எண்ணிக்கை சார்ந்த விரிவாக்கம், குழந்தைகள் பங்கு கொள்ளும் நிலையில் சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தாலும், தரத்தில் மாற்றம் இல்லாமல் இருப்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. தரத்தில் அக்கறை கொள்ள, மிகப்பெரிய அளவுமுறை, திறன் மூலம் மட்டுமே சாத்தியப்படாது எனினும் தற்போது அதிக அளவில் உணரப்படுகிறது. அமைப்பு நிலை சீர்திருத்தங்களிலிருந்து, பள்ளி நிலை செயல்களுக்கு நம் கவனம் மாற்றப்படுவது அவசியமாகிறது. பள்ளிகள் 1.5 மில்லியன் மேல் இருக்கும் பட்சத்தில், இது ஒரு எளிமையான பணியன்று; மைய நிலை செயல்கள் மூலம் இது சாத்தியமாகாது. தானே செயல்திறன் கொண்ட கற்றல் நிறுவனமாகப் பள்ளியை உருமாற்ற, வட்டாரப் பங்காற்றுபவர்களின் நேரடி தொடர்பு அவசியமாகிறது. இந்த ஆவணத்தில் தரப்பட்டிருக்கும் பள்ளித் தலைமை முன்னேற்றத்திற்கான ‘தேசிய திட்டத்தின்’ நோக்கமே இதுதான். இந்த திட்டத்தில், பள்ளித் தலைமை ஆசிரியர் முக்கிய பங்கு பெறுகிறார் என்பதில் சந்தேகமேயில்லை.

தேசிய மற்றும் மாநில அளவில் இருக்கும் தனித்திறன் வாய்ந்தவர்களும் மற்றும் பங்குதாரர்களோடு இணைந்து மையத்தின் தீவிர பங்கு பெறும் செயல்முறைகளைக் கொண்டு உருவாக்கப்பட்டது தான் இந்தக் கையேடு. மூலப்பொருளுக்கு இணையாக, இந்தக் கையேடு ஒலி–ஒளி காட்சிகள், மாதிரிப் பயிற்சிகள் மேற்கோள் மற்றும் புத்தகத்திலிருக்கும் பகுதிகள் – இவற்றை உள்ளடக்கி இருக்கிறது. 10 நாட்கள் தீவிரப் பயிற்சிக்காக, இவை ‘ஒழுங்கமைந்த கட்டமை’ப்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருப்பினும், இந்தக் கையேட்டின் கட்டமைப்பைக் கண்டிப்பான ஆணையாகப் பார்க்காமல் இது ஒரு மாதிரியே என நினைக்க வேண்டும். மேலும், தற்போதைய பள்ளித் தலைமை ஆசிரியர்கள், எதிர்காலப் பள்ளித் தலைமை ஆசிரியர்களோடு கூடி, வருடத்திற்கு ஒருமுறை தொடர்பு வைத்துக் கொள்ளும் விதத்தில்தான், 10 நாள் பயிற்சி நடத்தப்படுகிறது. கற்பித்தல், பள்ளி நிர்வாகத்தில் அனுபவமிக்கத் தொழில் சார்ந்த ஆசிரியர்களாக இருப்பது, நற்பயனளிக்கும் விதத்தில் உபயோகப்படுத்திக் கொள்ள, இது முயற்சிக்கிறது. பங்குபெறுபவர்களிடையே, பிரதிபலிக்கும் கலந்துரையாடலுக்கு வாய்ப்பளிக்கவும், தனக்குச் சமமானவர்களோடு கற்றலைப் பாரம்பரியமாக்க

ஊக்குவிக்கவும், பள்ளியைக் கற்றல் நிறுவனமாக்குவதும்தான், இந்தக் கையேட்டின் முக்கிய நோக்கம். இந்தக் கையேட்டிலுள்ள, வளங்கள் அனைத்தும், NCSL பணியாளர்கள் அல்லது எளிதாக கிடைக்கக்கூடிய கல்வி சார்ந்த வளங்கள் மூலம், நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டதாகும். பள்ளித் தலைமை முன்னேற்றத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும், இந்தக் கையேடு எளிதாகக் கிடைக்க வழி செய்யப்படுகிறது. இதுதான் கையேட்டின் முதல் பிரதியாகும். இதன் பொருளடக்கமும், வழங்கப்படும் விதமும், களத்தில் இது உபயோகப்படுத்தப்படுவது மற்றும் கருத்துக்கூறலின் அடிப்படையில், வழக்கமான மறு ஆய்விற்கு உட்படப்போவதை பார்க்க முடிகிறது. வெகு குறைந்த கால நேரத்திற்குள், இந்தக் கையேட்டைத் தயாரித்தமைக்கு, பள்ளித் தலைமைக்கான தேசிய மையத்தின் (NCSL) குழுவை பாராட்டுகிறேன். மாநில அரசாங்க அதிகாரிகள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் பள்ளித் தலைமை முன்னேற்றத்தில் தொடர்பு கொண்டிருப்பவர்களுக்கும் இந்தக் கையேடு உபயோகமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

புதுடெல்லி
பிப்ரவரி 21, 2014

**R. Govinda**
Vice-chancellor

# நன்றியுரை

இந்தியாவின் ஆரம்ப மற்றும் நடுநிலைக் கல்வியின் மாற்றத்திற்கும், முன்னேற்றத்திற்கும் தேவையான பள்ளித் தலைமை ஆசிரியரின் தலைமைத் திறன்களை வளர்க்கும் பொறுப்பினைப் பள்ளித் தலைமையின் தேசிய மையம் ஏற்றுக் கொண்டுள்ளது. பள்ளித் தலைமை முன்னேற்றத்தில் கவனம் கொண்ட தேசிய நிகழ்ச்சித் திட்டம், பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் கையேடு – இவற்றைத் தயாரிப்பதில் NCSL, தொடக்க நிலையில் முக்கிய பங்கு வகித்திருக்கிறது.

பள்ளித் தலைமை முன்னேற்றம் மூலம், பாரம்பரிய பயிற்சி முறையிலிருந்து மாறுபட்ட, பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான தொழில் சார்ந்த முன்னேற்றத்திற்கு புதிய வழிகளை, மையம் அளித்திருக்கிறது.

மையத்திற்கு, மனிதவள மேம்பாட்டுத் துறை, அதன் வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையிலும் கொடுத்த உதவிக்கும், வழிகாட்டுதலிற்கும் மற்றும் ஊக்கத்திற்கும் மிக்க நன்றி.

10 நாள்களைக் கொண்ட நேருக்கு நேர் பயிற்சி, அத்துடன் நிகழ்ச்சிக்குப் பின்னும் தொடரும் கள உதவி, பயிற்சி அளித்தல் மற்றும் அறிவூட்டுதல் இவற்றை நடத்துவதற்கு – மனித வளங்கள், சிறந்த தேர்ச்சியுடைய தனிநபர்கள், ஊக்குவிப்பவர்கள் மற்றும் தொழில் சார்ந்த நிறுவனங்களுக்கு இந்தக் கையேடு வழிகாட்டுகிறது. பள்ளித் தலைமை ஆசிரியர்களுடன், ஒரு வருடத்திற்கு இடைவிடாத தொடர்பு வைத்துக் கொள்ள உதவுகிறது. நிகழ்ச்சி, தற்போதைய நிலைக்கு வர உதவிய தொழில்புரிபவர்கள் மற்றும் வெவ்வேறு மாநிலங்களின் மாநில வள குழுக்களுக்கு எங்களது நன்றி. இந்தக் கையேட்டைக் கையாளும்பொழுது, களத்திலிருந்து நிறைய கருத்தூட்டத்தை எதிர்பார்க்கிறோம்.

கையேட்டை வடிவமைக்கும் ஆலோசனைகளில் பங்கு கொண்ட, அறிவூட்டுபவர்கள் மற்றும் தேசிய வளக்குழுவிற்கும், எங்களின் சிறப்பு நன்றி. மையம் – கற்பித்தல் மற்றும் தலைமைக்கான தேசிய கல்லூரி (NCTL, UK) ஆசிரியர்கள், முக்கியமாக டாக்டர் ராபின் அட் ஃபீல்டு, டாக்டர் ராஸ்மி சின்ஹா மற்றும் தேசிய வளங்கள் குழுவின் உறுப்பினராக இருந்த பள்ளித் தலைமை முன்னேற்றத் திட்டத்திற்கு ஆலோசகர்களாக இருந்தவர்கள் ஆகியோருடன் நெருக்கமாகப் பணியாற்றியுள்ளது. நாங்கள் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் மதிப்புள்ள ஆலோசனைக்காக நன்றி சொல்கிறோம்.

NUEPA–வை சேர்ந்த மதிப்பிடுபவர் மற்றும் புத்தக வெளியீட்டாளர் குழுவிலிருக்கும் திரு. சோம்நாத் சேகர், திரு. அமிட் சின்ஹல் மற்றும் திரு. பிரமோத் ராவட் – இவர்கள் அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த நன்றி.

# பொருளடக்கம்


முன்னுரை iii

நன்றியுரை v

ஒலி–ஒளி காட்சி வளங்களின் பட்டியல் x-xi

பள்ளி உருமாற்றம் வழிகாட்டும் மனநிலை 1

பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான திறன்களை உருவாக்கும் திட்டத்திற்குத் தயாராகுதல்

முக்கிய பகுதி 1 : பள்ளித் தலைமை பற்றிய ஒரு கண்ணோட்டம் 13

- நாள் 1 17
- நாள் 2 31

முக்கிய பகுதி 2 : தன்னை வளர்த்துக் கொள்ளுதல்

- நாள் 3 39

முக்கிய பகுதி 3 : கற்பித்தல்–கற்றல் செயல்முறைகளின் நிலைமாற்றம்

- நாள் 4 51
- நாள் 5 65

முக்கிய பகுதி 4 : குழுவை உருவாக்கி–வழிநடத்துதல்

- நாள் 6 77

முக்கிய பகுதி 5 : புதுமைக் காணுதலை வழிநடத்துதல்

- நாள் 7 93

முக்கிய பகுதி 6 : பங்குதாரர்களின் பங்களிப்பை வழிநடத்துதல்

- நாள் 8 105

பள்ளிச் சூழலில் செயல்படுத்துதல்

- நாள் 9 119

பள்ளி வளர்ச்சித் திட்டம் மற்றும் முன்னேற்றப் பாதையை வகுத்தல்

- நாள் 10 129

பள்ளித் தலைவர்களுக்கான ஓர் ஆண்டு தொடர் நிகழ்ச்சிகள் 137

References 149

பிற்சேர்க்கை 1

- பள்ளித் தலைவர்களுக்கான திறமைகள் வளர்க்கும் 6 நாள் நிகழ்ச்சியின் செயல்வடிவம் 153


பிற்சேர்க்கை 2

- பள்ளித் தலைமையின் வளர்ச்சிக்கான பாடத்திட்ட கட்டமைப்பு 155

# ஒலி–ஒளி வளங்களின் பட்டியல்

| முக்கிய பகுதி | கூட்டத்தின் வளங்கள் | வளங்களின் குறியீடு |
|---|---|---|
| முக்கிய பகுதி 1 | நாள் 1 – அமர்வு 3 – செயல்பாடு 3.2. – "தலைவர் செய்யக்கூடியதைத் தலைவராக இருந்து செய்வது" – இதைப் பற்றி பவர்பாயின்ட் விளக்கவுரை | D1_S3_3.2 |
| | நாள் 1 – அமர்வு 4 – செயல்பாடு 4.1. – பள்ளித் தலைமைக்கான மாதிரி நிகழ்வுகள் | D1_S4_4.1 |
| | *கூடுதலாகப் படிக்க* | |
| | நாள் 1 – அமர்வு 3 – செயல்பாடு 3.1. – 10 மேலாண்மைப் பங்குகள் | AD1_S3_3.1 |
| | நாள் 1 – அமர்வு 4 – செயல்பாடு 4.1. – பள்ளித் தலைமைப் பண்பு வளர்ச்சிக்கான கருத்துத் தொகுப்பு | AD1_S4_4.1a |
| | நாள் 1 – அமர்வு 4 – செயல்பாடு 4.1. – பள்ளித் தலைமைப் பண்பு வளர்ச்சி – பவர்பாயின்ட் விளக்கவுரை | AD1_S4_4.1b |
| | நாள் 2 – அமர்வு 1 – செயல்பாடு 1.1. – "பள்ளியை ஒரு கற்றல் நிறுவனமாகப் பார்ப்பது" பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை | D2_S1_1.1a |
| | நாள் 2 – அமர்வு 1 – செயல்பாடு 1.1. – பீட்டர் சென்கே எழுதிய பள்ளியை ஒரு கற்றல் நிறுவனமாகப் பார்ப்பது என்ற புத்தகத்திலிருந்து சில பகுதிகள் | D2_S1_1.1b |
| முக்கிய பகுதி 2 | நாள் 3 – அமர்வு 1 – செயல்பாடு 1.1. – இந்தியாவை வழிநடத்துவது பற்றிய படக்காட்சி மற்றும் தெளிவாக்கம் | D3_S1_1.1 |
| | நாள் 3 – அமர்வு 1 – செயல்பாடு 1.2. – தலைமைப் பண்புக்கான ஆளுமைச் சோதனை | D3_S1_1.2 |
| | நாள் 3 – அமர்வு 2 – செயல்பாடு 2.1. – முக்கியத்துவத்தின் அடிப்படையில் பணிகளை வரிசைப்படுத்துவது மற்றும் நேர நிர்வாகம் | D3_S2_2.1 |
| | நாள் 3 – செயல்பாடு 2.3 – நேர நிர்வாகக் கட்டமைப்பு | D3_S2_2.3 |
| | நாள் 3 – அமர்வு 3 – செயல்பாடு 3.1. – தொடர் பணி மேம்பாடு | D3_S3_3.1 |
| முக்கிய பகுதி 3 | நாள் 4 – அமர்வு 1 – செயல்பாடு 1.1. – டோடோசானிலிருந்து சில பகுதிகள் | D4_S1_1.1a |
| | நாள் 4 – அமர்வு 1 – செயல்பாடு 1.2. – "கல்வியின் நோக்கம் பற்றிய தலைசிறந்த மனிதர்களின் கல்வி சார்ந்த மேற்கோள்கள்" – பவர்பாயின்ட் விளக்கவுரை | D4_S1_1.2a |
| | நாள் 4 – அமர்வு 1 – செயல்பாடு 1.2. – "கல்வியின் நோக்கம் பற்றிய தலைசிறந்த மனிதர்களின் கல்வி சார்ந்த மேற்கோள்கள்" பற்றிய துண்டுபிரசுரங்கள் | D4_S1_1.2b |
| | நாள் 4 – அமர்வு 2 – செயல்பாடு 2.1. – குழந்தைகளின் வளர்ச்சிக்கான தேவைகள் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை | D4_S2_2.1 |
| | நாள் 4 – அமர்வு 3 – செயல்பாடு 3.1. – "இளம் வரலாற்றாளர்கள்" பற்றிய படக்காட்சி | D4_S3_3.1 |
| | நாள் 4 – அமர்வு 3 – செயல்பாடு 3.2. – குழந்தைகளை மையமாகக் கொண்ட கற்பிக்கும் கலை பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை | D4_S3_3.2 |
| | நாள் 5 – அமர்வு 1 – செயல்பாடு 1.1. – 5 நாள் பணிப்பட்டறை பற்றிய கருத்துக்கோரல் சார்ந்த பவர்பாயின்ட் விளக்கவுரை | D5_S1_1.1 |
| | நாள் 5 – அமர்வு 2 – செயல்பாடு 2.1a – பயிற்சி அளிப்பது மற்றும் வழிகாட்டுதல் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை | D5_S2_2.1a |
| | நாள் 5 – அமர்வு 2 – செயல்பாடு 2.1b – பயிற்சி அளித்தல் மற்றும் வழிகாட்டுதலுக்கான கருத்துத் தொகுப்பு | D5_S2_2.1b |
| | நாள் 5 – அமர்வு 3 – செயல்பாடு 3.1. – கவனத்தில் கொள்ளா இந்தியா பற்றிய படக்காட்சி 1 | D5_S3_3.1a |
| | நாள் 5 – அமர்வு 3 – செயல்பாடு 3.1. – கவனத்தில் கொள்ளா இந்தியா பற்றிய படக்காட்சி 2 | D5_S3_3.1b |
| | நாள் 5 – அமர்வு 3 – செயல்பாடு 3.1. – கவனத்தில் கொள்ளா இந்தியா பற்றிய படக்காட்சி 3 | D5_S3_3.1c |

| முக்கிய பகுதி | கூட்டத்தின் வளங்கள் | வளங்களின் குறியீடு |
|---|---|---|
| முக்கிய பகுதி 4 | நாள் 6 – அமர்வு 1 – செயல்பாடு 1.1. – குழுவைப் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை | D6_S1_1.1 |
| | நாள் 6 – அமர்வு 3 – செயல்பாடு 3.1a – குழுப் பணியில் மாற்றத்தை உண்டாக்குவது பற்றிய மாதிரிப் பயிற்சி | D6_S3_3.1a |
| | நாள் 6 – அமர்வு 3 – செயல்பாடு 3.1b – குழு இயக்க வார்ப்புரு | D6_S3_3.1b |
| | நாள் 6 – அமர்வு 4 – செயல்பாடு 4.1. – என்னால் மற்றும் நம்மால் படக்காட்சி | D6_S4_4.1 |
| முக்கிய பகுதி 5 | நாள் 7 – அமர்வு 1 – செயல்பாடு 1.1. – தெரிந்த மற்றும் வாழ்க்கையின் தினப்படி சூழலிலிருந்து புதுமைக் காணலை அறிந்து கொள்ளுதல் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை | D7_S1_1.1a |
| | நாள் 7 – அமர்வு 1 – செயல்பாடு 1.2. – மாற்றம் புதுமையானதுதான் என்பதை எப்படி கண்டறிவது பற்றிய ஒலி நாடா பேச்சு | D7_S1_1.1b |
| | நாள் 7 – அமர்வு 2 – செயல்பாடு 2.1. – அரவிந்த் குப்தாவின் கற்றலுக்காகக் குப்பையிலிருந்து விளையாட்டுப் பொருட்கள் செய்வது பற்றிய படக்காட்சி (ஆங்கில உட்தலைப்புகளோடு) | D7_S2_2.1a |
| | நாள் 7 – அமர்வு 2 – செயல்பாடு 2.1. – அரவிந்த் குப்தாவின் கற்றலுக்காகக் குப்பையிலிருந்து விளையாட்டுப் பொருட்கள் செய்வது பற்றிய படக்காட்சி (ஹிந்தி உட்தலைப்புகளோடு) | D7_S2_2.1b |
| | நாள் 7 – அமர்வு 3 – செயல்பாடு 3.1. – புதுமைக் காணல் மாதிரி நிகழ்வு | D7_S3_3.1 |
| | நாள் 7 – அமர்வு 4 – செயல்பாடு 4.2. – "மாற்றத்திற்கு எழும் தடையை எவ்வாறு சமாளிப்பது" பற்றிய படக்காட்சி | D7_S4_4.2 |
| முக்கிய பகுதி 6 | நாள் 8 – அமர்வு 2 – செயல்பாடு 2.1. – இல்லம்–பள்ளி பங்களிப்பு பற்றிய தனிநபர் கண்ணோட்டம் | D8_S2_2.1 |
| | நாள் 8 – அமர்வு 2 – செயல்பாடு 2.2. – மாதிரி நிகழ்வின் அடிப்படையில் குழு விவாதம் | D8_S2_2.2 |
| | நாள் 8 – அமர்வு 3 – செயல்பாடு 3.2. – மாதிரிக் காட்சி | D8_S3_3.2 |
| | நாள் 8 – அமர்வு 4 – செயல்பாடு 4.2. – பங்குதாரர் பங்களிப்பு உருவாக்கம் செயல்முறைகளைப் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை | D8_S4_4.2 |
| பள்ளி முன்னேற்ற திட்டத்தை வரைவது மற்றும் முன்னோக்கிச் செல்வது | நாள் 10 – அமர்வு 2 – செயல்பாடு 2.1. – 1 வருட தொடர்நிகழ்ச்சிகள் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை | D10_S2_2.1 |
| | நாள் 10 – அமர்வு 3 – செயல்பாடு 3.1. – ஒற்றுமையின் பலம் – படக்காட்சி | D10_S3_3.1 |
| | கூடுதலாகப் படிக்க | |
| | நாள் 10 – அமர்வு 4 – செயல்பாடு 4.1. – பள்ளி முன்னேற்றத் திட்டம் பற்றிய கருத்துத் தொகுப்பு | AD10_S4_4.1 |



## பள்ளி உருமாற்றம்
## வழிகாட்டும் மனநிலை

பள்ளித் தலைமைக்கான தேசிய மையம் (National Centre for School Leadership – NCSL) பள்ளிகளை உருமாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. பள்ளி உருமாற்றத்திற்கான முதல் முயற்சி மற்றும் செயல்முறை முழுவதும், பள்ளிகள் தற்போது நிர்வகிக்கப்படும் மற்றும் வழிநடத்தப்படும் முறையில், மாற்று வழியை எதிர்பார்க்கிறது இது, பள்ளி சார்ந்த மாற்றம் மற்றும் முன்னேற்றத்தைத் தொடங்கவும், செயல்படுத்தவும், பள்ளித் தலைமை ஆசிரியரை முதன்மையாக நிறுத்துகிறது. பள்ளி நிர்வாகத்தில் பாரம்பரிய முறைகள், இப்போதுள்ள சூழ்நிலைக்குச் சரிவராது என்பது உணரப்பட்டுள்ளது. அதிலும் முக்கியமாகக் கடந்த காலங்களில், பள்ளிகள் மிக மெதுவாக முன்னேறுவதையும், கற்பதில் மிகவும் கீழான நிலை இருப்பதையும், பார்க்கிறோம். பள்ளித் தலைமை ஆசிரியர்கள், குழந்தைகள் கற்றலில் ஆழ்ந்த ஈடுபாடு கொள்வது மற்றும் பள்ளிகளைப் புதிய மற்றும் செறிவான பாதையில் கொண்டு செல்வது அத்தியாவசியமாகிறது.

இந்தச் சவாலைச் சமாளிப்பதற்கு, பள்ளி உருமாற்றத்தைக் கொண்டுவர, நிர்வாகத் தகுதிக்கும் மேலான தலைமைத் திறன்களை உருவாக்குவது முக்கியமாகிறது. பள்ளித் தலைவர்கள், பள்ளி முன்னேற்ற செயல்முறைகளைத் தொடங்காமல் மற்றும் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை உறுதி செய்து கொள்ளாமல், இது நடக்காது. திறன்களை உருவாக்க, பள்ளித் தலைவர்களோடு நீண்டகாலத் தொடர்பு அவசியமாகிறது. தற்போது இருக்கும் குறுகிய கால பயிற்சி முறை, பயன்பாட்டைப் புரிந்து கொள்வதில் வரையறை வகுக்கிறது. அதோடு, பள்ளி சார்ந்த உண்மைகளுக்கும், சவால்களுக்கும் தொடர்பில்லாததாக இருக்கிறது.

இதற்குத் தீர்வாகத்தான், NCSL, பள்ளித் தலைமை முன்னேற்றத் திட்டம் வழியாகப் பள்ளிகளில் உருமாற்றத்திற்காக தலைமைத் திறன்களை உருவாக்கப்படுகிறது. இந்த பள்ளித் தலைமை முன்னேற்றத் திட்டம், அரசாங்கம் மற்றும் அரசாங்க உதவி பெறும் பள்ளிகளின், பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்காக உருவாக்கப்பட்டது. பள்ளித் தலைமை ஆசிரியர்களின், தலைமைத் திறனை வலிமைபடுத்தும் முறையாகப் பள்ளித் தலைமை முன்னேற்றம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

## பள்ளித் தலைமை முன்னேற்றம் எந்த வகையில் சிறப்பு வாய்ந்தது ?

பயிற்சித் திட்டங்கள் மற்றும் பள்ளித் தலைமை முன்னேற்றத்திற்கான (SLD) வேறுபாடுகளை NCSL விளக்குகிறது. பாரம்பரிய பயிற்சி திட்டங்களுக்கு அப்பாற்பட்டது பள்ளித் தலைமை முன்னேற்றம். உண்மையான பள்ளி—உலக சவால்களுக்கு நெருக்கமாக இருக்கக்கூடிய பாடத்திட்டத்தைத் தொடர இது வழியமைக்கிறது.

**பள்ளித் தலைமை முன்னேற்றம்**

- நீண்டகால, தொடர் செயல்பாடுகளால் பள்ளி உருமாறத் தொடங்குகிறது. குறுகிய காலத்திட்டமோ ஒருமுறை பயிற்சி அளித்தால் மட்டுமோ போதாது; பள்ளித் தலைமை முன்னேற்றத்தில், களத்தில் வளர்ச்சியை கண்காணிப்பது வலிமையாக இருக்கிறது.
- தலைமையின் நிலைச்சக்தியை மெருகேற்றுகிறது, புதிய அறிவு, திறன் மற்றும் மனப்பான்மையை உறுதி செய்கிறது, பணியாளர்களை ஊக்கப்படுத்துகிறது, கற்பதற்கு ஏதுவான சூழலை ஆதரிக்கிறது மற்றும் பள்ளி உருமாற்ற செயல்முறையை வழிநடத்தும் புதிய திறன்களை உருவாக்குகிறது.
- தற்போது இருக்கும் பள்ளி அமைப்பு மற்றும் தலைமை நடைமுறைகளை உருமாற்றுவதற்கான சக்தியை உண்டுபண்ணுகிறது.

பள்ளிகளில், அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவர, பிரச்சனைகளைத் தீர்க்கும் முறை மற்றும் செயலாக்கம் சார்ந்த கற்றலை சுற்றி, பள்ளித் தலைமை முன்னேற்றத் திட்டம் உருவாக்கப்படுகிறது. இது பாரம்பரிய பயிற்சித் திட்ட முறைகளிலிருந்து மாறுபட்டது.

**பள்ளித் தலைமைப் பண்பு மேம்பாடு**
**ஒரு கட்டமைப்பான திட்டமாகும்**

◆

அறிவை உருவாக்குதல், மனப்பான்மையை மாற்றுதல் மற்றும் பள்ளி உருமாற்றத்திற்குத் தேவையான திறன்களைச் செயல்படுத்துவது

◆

இலக்குகளைக் கண்டுபிடித்தல், இடர்களைக் களைதல், பல்வேறு வழிமுறைகளை உருவாக்குவது, செயலைத் திட்டமிடுவது மற்றும் திட்டத்தைச் செயல்படுத்துவது

◆

மாற்றத்தை ஏற்படுத்த பள்ளிகளை மற்றும் மக்களை வழிநடத்துவது

◆

தொடர்ச்சியாக உதவுதல், பயிற்சி அளித்தல் மற்றும் அறிவூட்டுதல்



## NCSL–ன், பள்ளித் தலைமை முன்னேற்றத்தின் வழிமுறை, எவ்விதத்தில் தனித்தன்மை வாய்ந்தது ?

பள்ளியின் உருமாற்றத்திற்குத் தேவையான சூழல் மற்றும் வாய்ப்புகளை உருவாக்க, பள்ளித் தலைமை முன்னேற்றம், விரிவான, மாற்றத்திற்குட்பட்ட வழிமுறையைப் பின்பற்றுகிறது. ஒவ்வொரு குழந்தையும் கற்பது மற்றும் ஒவ்வொரு பள்ளியும் சிறப்புற விளங்குவது – இந்த தொலைநோக்குப் பார்வையோடு, NCSL முன்னோக்கிச் செல்கிறது. இந்த மையம், பள்ளியை, மாற்றத்திற்கான அடித்தளமாக பார்க்கிறது. குழந்தையை மையமாக வைத்துப் பள்ளியின் அனைத்து மாற்றங்களையும் குறிவைக்கிறது.

இந்தப் புரிதலின்படி, பள்ளித் தலைமை முன்னேற்றம், பல வழிகளில் மாறுபட்டுள்ளது.

- அரசாங்க மற்றும் அரசாங்க உதவியோடு நடக்கும், ஆரம்ப, நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின், தற்போதைய, புதிதாக நியமிக்கப்பட்ட மற்றும் ஆர்வமுள்ள தலைவர்களின் தலைமைத் திறன்களை உருவாக்குகிறது.
- பள்ளித் தலைமையோடு தொடர்பு கொண்ட அரசு பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், பயிற்சி நிறுவனங்கள், கல்வி, ஆசிரியர் கல்லூரிகள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் வேறுபல நிறுவனங்களோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பை உருவாக்குகிறது.
- அனுபவம் மற்றும் தொழில்சார்ந்த பிரதிபலிப்பிற்கான வாய்ப்போடு கூடிய, தத்துவ விளக்கமும் மற்றும் பயிற்சியும் ஒருங்கிணைந்த, பள்ளித் தலைமைக்கான பாடத்திட்டக் கட்டமைப்பைப் பின்பற்றுகிறது. தகவல் தொகுப்பு, பங்கு நாடகம், புத்தகங்கள், கணினி, வலைத்தளம் அல்லது ஒலி ஒளி காட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலம் வலிமையான அறிவுத் தளத்தை உருவாக்குதலைச் சுற்றி இது பின்னி பிணையப்பட்டிருக்கிறது.
- முந்தைய அனுபவங்களின் பிரதிபலிப்பு, மாற்று வழிகளை ஆராய்வது, வளர்ச்சிக்கான வாய்ப்புகளைக் கண்டு கொள்வது, வெவ்வேறு சூழலில் எந்த வகையிலான செயல் சிறந்ததாக இருக்கும் என்பதை புரிந்து கொள்வது, உருமாற்ற பள்ளி அமைப்பின் அடித்தளம், பள்ளி சார்ந்த தொலைநோக்குப் பார்வையை உண்மையான பள்ளி பயிற்சியாக மாற்றுவது – இவற்றிற்குப் போதிய வாய்ப்பை அளிக்கிறது.
- மாநில வளக்குழு, மாவட்ட வளக்குழு மற்றும் தனித்திறமை வாய்ந்த மற்றும் சிறப்பான நடத்துபவர்கள் – இவர்களை நியமிப்பதன் மூலமும் மாநிலத்தோடு நேரடி தொடர்பு கொள்வதன் மூலமும் – நிலையான செயல்பாடுகளை உறுதி செய்வது, திட்டம் மாநிலத்திற்கே சொந்தம் என்று உறுதி செய்வது மற்றும் பாடத்திட்டத்தைப் பரிவர்த்தனை செய்வது ஏதுவாகிறது.
- மாநிலத்திற்கேற்ற தனித்தன்மையோடு கூடிய தலைமை தேவைகளுக்கேற்ப, மாற்றிக் கொள்ளக் கூடிய பாடத்திட்ட கட்டமைப்பை உருவாக்கப் போதிய இடமளித்தல்.
- வெவ்வேறு சூழலுக்கேற்ப, பல்வேறு வகையான கற்றல் வளங்களின் உதவியோடு –




நடத்துபவர் வழிநடத்துவதற்கும், நேருக்கு நேர் கூட்டம் வைப்பதற்கும், பிரதிபலிக்கும் விவாதங்களுக்கும், சுயமாகக் கற்பதற்கும் ஆன வாய்ப்பை இது உருவாக்குகிறது. (உதாரணமாக – செயல்முறைக்கேற்ற கற்கும் வளங்கள், நேருக்கு நேர், இணைந்த செயல்முறைகள்)

- செயல்முறை, திறன் மற்றும் தேவை சார்ந்த திட்டத்தை வடிவமைத்தல்.
- பரவலான கற்றல் செயல்பாடுகளுக்கு உதவும் வகையில், களத்தின்கண் அறிவூட்டுவது மற்றும் முன்னேற்றத்திற்கும், கருத்துக் கூறலுக்கும் வழிவகுக்கிறது.

## பள்ளித் தலைமையின் முன்னேற்றம் – NCSL அணுகுமுறை

- தேசிய அளவில் தத்துவ விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும், அதன் அடிவேர் அனைத்து மாநிலங்களிலும், சந்தர்ப்பங்களிலும் இருக்கிறது.
- தலைமை முன்னேற்றம் மூலம் பள்ளி உருமாற்றத்திற்காகப் பள்ளித் தலைவர்களின், தலைமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வதற்குத் தயார் செய்வது.
- பள்ளி வேறுபாடுகளையும், சந்தர்ப்பங்களையும் உற்று நோக்குவது.
- பள்ளித் தலைவர்களின் தலைமைக்குத் தேவையானதை பாடத்திட்டம் கொடுக்கிறது.
- மாநிலங்களில், பள்ளித்தலைமை முன்னேற்ற பகுதியில், நிறுவன மற்றும் மக்கள் திறனை உருவாக்குவதன் மூலம் தொடர்ச்சியான செயல்பாடு உறுதி செய்யப்படுகிறது.
- அனுபவம் மற்றும் தொழில் சார்ந்த பிரதிபலிப்பிற்கான வாய்ப்புகள்.
- செயல்முறைக்கேற்ற கற்கும் வளங்கள் உதவியுடன் நடத்துபவர் வழிநடத்துவது, நேருக்கு நேர் கூட்டம் வைத்தல், பிரதிபலிக்கும் விவாதம் மற்றும் சுயமாகக் கற்பது மூலம் செயல்பாடுகள் வழங்கப்படுகிறது.





## இக்கையேட்டின் பயன்பாடு / நோக்கம் என்ன ?

வெவ்வேறு இடங்களிலும், பல்வேறு சந்தர்ப்பங்களிலும், பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தேவையான, தலைமைக்கான பல்வேறு தேவைகளை நடத்துபவர்கள் சொல்வதற்கு உதவுவதே இந்தக் கையேட்டின் நோக்கமாகும் : சிறிய பள்ளிகள், பெரிய பள்ளிகள், பழங்குடியினர் பள்ளிகள், பதற்றமான இடத்தில் இருக்கும் பள்ளிகள், சிறுபான்மையினர் பள்ளிகள், கிராமப்புற / நகர்ப்புற பிரச்சனைகளைச் சமாளிப்பது மற்றும் பல. பல்வேறு விதமான பள்ளிகளின் பள்ளித் தலைவர்களுக்குத் தேவையான, தலைமைக்கான தேவைகளில் இந்தக் கையேடு சிறப்புக் கவனம் செலுத்துகிறது. அதோடு, பள்ளிக் கல்வியின் பல்வேறு நிலைகளையும் கருத்தில் கொண்டு செயலாற்றுகிறது.

சிறந்த வளம் மற்றும் தகவல் குறிப்பான இந்த கையேடு, தற்போதைய பள்ளித் தலைவர்கள், இன்றைய பள்ளிகளை உருமாற்றவும், தங்களுக்குப் பின்வரும் தலைவர்கள் அடுத்த நூற்றாண்டு பள்ளிகளின் சவால்களைச் சமாளிக்கவும் உதவும் வகையிலும் இது வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

## யார் இந்தக் கையேட்டை உபயோகிக்கிறார்கள் ?

பள்ளித் தலைமை முன்னேற்றத் திட்டம், தேசத்தின் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் அனுபவமிக்கத் தொழில் சார்ந்த பணியாளர்களால் கொடுக்கப்படவிருக்கிறது. அவை – தொழில் நிறுவனங்கள் மற்றும் விமர்சிக்கக்கூடிய தேர்ச்சி பெற்றவர்கள், சிறப்பானவர்கள், நடத்துபவர்கள், மக்கள் வளம் – இவற்றை உள்ளடக்கியதாகும். அந்தந்த மாநிலத்தில், தலைமை முன்னேற்றத்தை, முன் கொண்டு செல்வது அவர்களின் பொறுப்பாகும். இந்தக் கையேடு உபயோகத்தில், நடத்துபவர் என்ற வார்த்தை, திறன்மிக்க மனிதவளம் என்ற பொருளில் உபயோகிக்கப்படுகிறது. இவர்கள் பள்ளித் தலைவர்களின் திறன்களை வளர்ப்பதிலும், பள்ளி உருமாற்றத்திற்கு அவர்கள் எடுக்கக்கூடிய பயணத்தில் உதவியாக இருக்கிறார்கள். முக்கியமாக, இந்தக் கையேடானது, மாநிலத்தின் மாவட்டங்களுக்குத் திட்டத்தைக் கொண்டு செல்லும் நடத்துபவர்களுக்காகத் தயாரிக்கப்பட்டது. அவர்களின் பங்கு, பள்ளித் தலைமை ஆசிரியர்கள் குழுக்கள் உருவாக்கி, பின்னர் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக மாறுவது. இவை அறிவு பரிமாற்றம் மட்டுமேயல்லாது – பிரதிபலிப்பு, விமர்சிக்கக்கூடிய யோசனைகள், செயல்களை வடிவமைப்பது போன்றவற்றை உருவாக்குவதாகும். நடத்துபவர்கள் – பள்ளித் தலைமை ஆசிரியர் குழுக்களுக்குள், விவாதங்களையும், ஒருவர் கருத்தை மற்றவர் மதிப்பதையும், பள்ளித் தலைமையின் அனைத்து நிலைகளையும் உள்ளடக்கிய சூழலையும் ஊக்குவிக்கிறார்.

பள்ளி உருமாற்றத்தின் சுழற்சியில், மனப்பான்மை, பார்வை மற்றும் செயல்முறையை உள்வாங்குவது – இவற்றில் மாற்றம் விளைவிக்க மூன்றிலிருந்து ஐந்து வருடங்கள் ஆகலாம். ஆதலால், பள்ளித் தலைமை ஆசிரியர்களோடு, ஓர் ஆண்டிற்காவது தொடர்பு வைத்துக் கொண்டு, பின்னர் மாற்றத்தை எதிர்பார்ப்பதுதான் பயனுள்ளதாக இருக்கும். திறன் வளர்க்கும் நிகழ்ச்சிக்குப் பிறகும் மாவட்ட அளவில், மறுபரிசீலனை மற்றும் கருத்துக்கூறல்கள் மூலம், பங்குபெறுபவர்களோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்கு, இந்தக் கையேடு வழிகாட்டுகிறது.

## திட்டத்தைக் கொண்டு செல்வது

திட்டத்தைக் கொண்டு செல்வதில் சிறப்பான நோக்கம் –

- பள்ளித் தலைமை ஆசிரியர்களைத் தலைவர்களாக உருவாக்கும் திட்டங்களை, வெவ்வேறு கால அளவிற்குள், திட்டம் வகுத்து, வடிவமைத்து, செயலாக்குவது மற்றும் மறுபரிசீலனையையும், கருத்துக்கூறல் சுழற்சியையும் நடத்துவது.
- பள்ளித் தலைமை ஆசிரியர்களின் தலைமை முன்னேற்றத்திற்குப் பங்களிப்பது.
- அனைத்து நிலைகளிலும் தலைமையை உருவாக்குவது.
- தொழில்மய கற்றல் சமூகத்தை, ஒவ்வொரு மாவட்டம் மற்றும் வட்டத்திலும் உருவாக்குதல்.
- ஒன்று சேர்ந்த மாற்றத்திற்கான செயல்பாட்டை வழிநடத்துவதற்குத் தேவையான பகிர்ந்து கொண்ட தொலைநோக்குப் பார்வையை உருவாக்குதல்.
- பங்கேற்பாளர்களின் நம்பிக்கையைப் பெறும் வகையில் அணிகளை உருவாக்க கூட்டுப் பங்கேற்பு முறையினைக் கையாளுதல்.
- தலைமை முன்னற்றத்தைப் பற்றி கருத்துக் கூறலைச் சொல்வது மற்றும் கேட்டுக் கொள்வது.
- செம்மைபடுத்தும் முறையின் மூலம், பள்ளி முதல்வர்களுக்கு வழிகாட்டுவது.
- சுலபமான வகையில் பாடத்திட்டத்தைச் செயலாற்றுவது; ஒவ்வொரு பள்ளி முதல்வரின் தேவைகளுக்கேற்ப இணங்குவது; கற்கும் வளங்களையும், கடினமான பகுதிகளையும் அவர்கள் புரிந்து கொள்ள உதவுவது; பயிற்சிகளை நடத்துவது மற்றும் குழுவை அறிவூட்டுவது மூலம், பின் தொடரும் செயல்பாடுகளைக் கவனிக்கவும் துணை நிற்பது.
- குழுவிற்கு உத்வேகத்தை அளிப்பது மற்றும் தனிப்பட்ட முறையிலும், தொழில் சார்ந்தும், பள்ளி முதல்வர்கள் வளருவதற்கு உதவ, நேர்மறையான மற்றும் உற்சாக சூழலை உருவாக்குதல்.
- மனநிலையையும், பணி மனப்பான்மையையும் மாற்றவும்.





## கையேடு எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது ?

பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான பள்ளித் தலைமை முன்னேற்ற திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தனிநபர்களையும், நிறுவனங்களையும் – ஊக்குவிப்பது, கூர்மையாக்குவது மற்றும் வழிநடத்துவது பற்றியது தான் இந்தக் கையேடு. இவர்கள் – நடத்தபவர்களாக, திறன் மிக்க மனித வளங்களாக, விமர்சனம் செய்யக்கூடிய தனித்திறமை வாய்ந்தவர்களாக இருக்கலாம். முதலில் நங்கூர நிறுவனமாகவும், வேர் போன்ற நிறுவனமாகவும் மாறி, பின்னர் தலைமைக்கழகமாக மாறக்கூடிய தொழில் சார்ந்த நிறுவனங்களாகவும் இருக்கலாம். 10 நாள் திட்டத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய செயல்படுத்தக்கூடிய யோசனைகளின் மூலமாக இருக்கும் கையேடு, பள்ளித் தலைமை ஆசிரியர்களின் திறன்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம், நற்பயனளிக்கும் தலைமைப் பள்ளிகள் உருமாற்றம் பெறுகின்றன.

பள்ளித் தலைமைக்கான தேசிய மையத்தினால் தயாரிக்கப்பட்ட பள்ளித் தலைமை முன்னேற்றத்தின் பாடத்திட்ட கட்டமைப்பிலிருந்து எடுக்கப்பட்ட ஆறு முக்கிய பகுதிகளைப் பற்றிய விவரங்களைக் கையேடு கொடுக்கிறது.

| முக்கிய பகுதி | கருத்து |
|---|---|
| **முக்கிய பகுதி 1** | பள்ளித் தலைமை பற்றிய கண்ணோட்டம் |
| **முக்கிய பகுதி 2** | தன்னை வளர்த்துக் கொள்ளுதல் |
| **முக்கிய பகுதி 3** | கற்பித்தல்–கற்றல் முறையை உருமாற்றுதல் |
| **முக்கிய பகுதி 4** | குழுக்களை உருவாக்கி, வழிநடத்துதல் |
| **முக்கிய பகுதி 5** | புதுமை காணலை வழிநடத்துவது |
| **முக்கிய பகுதி 6** | பங்குதாரர்கள், பங்களிப்பை வழிநடத்துவது |

ஒவ்வொரு முக்கிய பகுதியும், ஒரு தனிக் கட்டாகப் பார்க்க முடியும். ஒவ்வொரு மாநிலமும், தங்கள் பிரத்யேக தேவைகளுக்கேற்ப, ஒவ்வொரு நிகழ்ச்சியையும் எவ்வாறு வடிவமைப்பது என்று தீர்மானிக்கலாம். ஒவ்வொரு கட்டுக்குள்ளும் இருப்பது

- ஒவ்வொரு நாளுக்கான அமர்வையும் திட்டமிடுவது
- அமர்வில், செயல்பாடுகளை எடுத்துக் கொள்வது
- ஒவ்வொரு நாள் அமர்விலும் பள்ளிகளின் மாதிரி நிகழ்வுகள், திரைக்காட்சிகள், பவர்பாயின்ட் விளக்கவுரை ஆகியன உபயோகப்படுத்தப்பட வேண்டும்.

நிகழ்ச்சியின் ஒவ்வொரு முக்கிய பகுதியும் – சிறிய குழு, சுறுசுறுப்பான கற்றல் கூட்டங்களோடு, தொடர்பு கொண்டு, நடைமுறை பயிற்சிகளின் பொருத்தத்தை உறுதி செய்து கொள்வது – இவற்றுடன் தொடர்புபடுத்திக் கொள்வது. முக்கிய பகுதிகளை செயல்முறைபடுத்த – மாதிரிப் பயிற்சிகள், தொகுப்புகள், அனுபவக் கற்றல் முறைகள், திட்ட செயல்பாடுகள், ஒலி–

ஒளி காட்சிகள், பவர்பாயின்ட் விளக்கவுரை போன்ற பலவற்றைப் பயன்படுத்த ஆலோசனை கூறுகிறது. இந்தப் பகுதியில் இருக்கும் வெவ்வேறு செயல்முறைகளிலிருந்து, பள்ளித் தலைமை ஆசிரியர்களின் தேவைக்கேற்ப, நடத்துபவர்கள் தேர்வு செய்து கொள்ள முடிகிறது.

ஒரே மாதிரியான தூண்டுதலுக்கு, அனைவரும் பதிலளிக்க வாய்ப்பில்லை என்று புரிந்து கொள்ள வேண்டும். பங்குபெறுபவர்கள் வெவ்வேறு விதமாகச் செயல்படுவார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும். பலரும் வேறு வேறு வகையில் கற்பார்கள். ஒருவருக்கு உபயோகப்படும் முறை, மற்றவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்காது. ஆதலால், செயல்முறைகள், வெவ்வேறு குழுக்களுக்கு வெவ்வேறாக இருக்கலாம்.

**கையேடு 3 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன**

1. **தயாராகுதல் :** "என் பள்ளியை" புரிந்து கொள்ளுதல் : பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தங்கள் பள்ளியின் தற்போதைய நிலையை வரைபடமாக்க, இது ஒரு பிரதிபலிக்கும் பயிற்சியாகும்.
2. **வழிகாட்டும் புத்தகம் :** ஒவ்வொரு கூட்டத்திலும், NCSL தயாரித்த பள்ளித் தலைமை முன்னேற்ற பாடத்திட்ட வடிவமைப்பிலிருந்து எடுக்கப்பட்ட **6** முக்கிய பகுதிகளின் தினப்படி செயல்முறைகள்.
3. திறனை வளர்க்கக்கூடிய நிகழ்ச்சிக்குப் பிறகும், பள்ளித் தலைமை ஆசிரியர்களோடு மேலும் ஆண்டிற்கு ஒருமுறை இடைவிடாது தொடர்பு கொண்டு, அவர்கள் செயல்முறைகளையும் விவரமாகத் தெரிந்து கொள்வது.

## பள்ளித் தலைமை முன்னேற்றம் : தயாராகுதல்

பள்ளித் தலைமை ஆசிரியர்களை, பிரதிபலிக்கும் செயல்முறை மூலம், நிகழ்ச்சியின் ஒரு அங்கமாகத் தயார்படுத்துவதில் இந்த நிகழ்ச்சி தொடங்குகிறது. அவர்கள், தங்கள் பள்ளியை மறுபார்வையிடவும், தங்களைப் பற்றியும், தங்கள் பள்ளியைப் பற்றியும், பள்ளிக்கு வரும் குழந்தைகள் மற்றும் அவர்களின் சமூகத்தைப் பற்றியும் அறிந்து கொள்ள ஒரு வடிவமைப்பு கொடுக்கப்படுகிறது. கையேட்டின்படி தயாராகும் பயிற்சியில் – தங்கள் பள்ளிகளின் தனித்தன்மை, சவால்கள், எதிர்காலத்தில் தங்கள் பள்ளியில் எந்தவிதமான மாற்றத்தைப் பார்க்க நினைக்கிறார்கள் போன்றவற்றைப் பிரதிபலிக்கிறது. இந்தப் பிரதிபலிப்புகள், நேர்காணல் நிகழ்ச்சியிலிருந்து அதிகமான நன்மைகளைப் பெற தயாராக்குகிறது.

இந்த நிகழ்ச்சியிலிருந்து என்ன எதிர்பார்க்கலாம் என்று அவர்களை யோசிக்க வைக்கவும் உதவுகிறது.






## பள்ளித் தலைமை ஆசிரியர்களின் திறனை வளர்க்கும் 10 நாள் நிகழ்ச்சியின் வடிவமைப்பு :

பள்ளித் தலைமை முன்னேற்ற நிகழ்ச்சி, நேருக்கு நேராக திறன் வளர்க்கும் நிகழ்ச்சியாக 10 நாள்களுக்கு நடத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த 10 நாள்களில், கடைசி 2 நாள்கள், முந்தைய நாள்களில் கற்றதைப் பிரதிபலிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் ஒதுக்கப்படுகிறது. இது, பள்ளி சார்ந்த முன்னேற்றத் திட்டத்தை உருவாக்க உதவுகிறது. இந்த நிகழ்ச்சிக்குப் பின், பள்ளித்தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளி உருமாற்றத்திற்குத் திட்டத்தை வகுக்கவும் அதனைச் செயல்படுத்துவதற்குண்டான வழிமுறைகளை மேற்கொள்ளவும் இது உதவுகிறது.

## 10 நாள் நிகழ்ச்சி வடிவமைப்பின் உடனடி ஒளிக்காட்சி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| கருத்துக்கள் | கால அளவு (நிமிடங்கள்) |
|---|---|
| **நாள் 1 : KA1 : பள்ளித் தலைமை பற்றிய கண்ணோட்டம்** | |
| அறிமுகம் மற்றும் நிகழ்ச்சியின் வரைசட்டம் | 90 |
| பள்ளித் தலைமையைப் புரிந்து கொள்வது | 75 |
| பள்ளித்தலைமையைபுரிந்துகொள்வது:பல்வேறுவகையானபரிமாணங்களும், பொறுப்புகளும் மற்றும் குழந்தையை முதன்மையாக வைத்தல் | 75 |
| பள்ளித் தலைமையைப் புரிந்து கொள்வது : பல்வேறு சூழல்களும், முறைகளும் | 120 |
| **நாள் 2 : KA1 : பள்ளித் தலைமை பற்றிய கண்ணோட்டம்** | |
| பள்ளியைக் கற்றல் அமைப்பாகப் பார்ப்பது | 120 |
| பள்ளியைக் கற்றல் அமைப்பாகப் புரிந்து கொள்வது | 120 |
| தொலைநோக்குப் பார்வையை உருவாக்குதல் | 120 |
| **நாள் 3 : KA2 : தன்னைத் தானே வழிநடத்திக் கொள்வது** | |
| என் தலைமை பாணியைப் புரிந்து கொள்வது | 120 |
| பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் செயலைப் பட்டியலிடுவது | 150 |
| தொழில் சார்ந்த முன்னேற்றத்தை இடைவிடாது செய்வது | 90 |
| **நாள் 4 : KA3 : கற்பித்தல்—கற்றல் முறைகளை உருமாற்றுவது** | |
| பள்ளியும், கல்வியின் நோக்கமும் | 90 |
| குழந்தைகளின் முன்னேற்றத் தேவைகளை புரிந்து கொள்ளுதல் | 90 |
| குழந்தையை மையமாகக் கொண்ட கற்பிக்கும் கலையை புரிந்து கொள்ளுதல் | 90 |
| வகுப்பறையில், சுறுசுறுப்பான கற்றலை உபயோகித்தல் | 90 |
| **நாள் 5 : KA3 : கற்பித்தல்—கற்றல் முறைகளை உருமாற்றுவது** | |
| கவனித்தல் மற்றும் ஆசிரியர்களிடம் கருத்துக்கூறல் | 75 |

| | |
|---|---|
| ஆசிரியர்களுக்குப் பயிற்சியாளராகவும், அறிவூட்டுபவராகவும் இருப்பது | 120 |
| உள்ளடக்குதலைப் புரிந்து கொள்ளுதல் | 90 |
| பள்ளியிலும், வகுப்பறையிலும் உள்ளடக்கும் பாரம்பரியத்தை உருவாக்குவது | 75 |
| என் பள்ளியில், கற்பித்தல்–கற்றல் உருமாற்றத்தின் செயல்முறைகளைத் தொடங்குதல் | 30 |
| **நாள் 6 : KA4 : குழுக்களை உருவாக்கி வழிநடத்துவது** | |
| குழுக்களைப் புரிந்து கொள்ளதல் | 60 |
| பயனுள்ள கலந்துரையாடலுக்கான இடத்தை உருவாக்குவது பணியாளர்களின் கூட்டம் | 120 |
| குழுவாக இயங்குவது மற்றும் கருத்து வேறுபாடுகளைச் சரிசெய்வது | 90 |
| குழுத் தலைவராக இருந்து, குழுக்களை உருவாக்குவது | 90 |
| **நாள் 7 : KA5 : புதுமைக் காணலை வழிநடத்துவது** | |
| புதுமைக் காணல் – கற்றல் அமைப்பின் இதயம் | 90 |
| பள்ளியில் புதுமைக் காணல் பாரம்பரியத்தை உருவாக்குவது | 90 |
| புதுமைக் காணல் மூலம் பள்ளியை வேறுவிதமாகப் பார்ப்பது | 60 |
| பயிற்சி செய்வது | 120 |
| **நாள் 8 : KA6 : பங்குதாரர்களின் பங்களிப்பை வழிநடத்துவது** | |
| பங்குதாரர்களின் பங்களிப்பைப் புரிந்து கொள்ளுதல் : பங்குதாரர்களையும், அவர்கள் பங்கையும் புரிந்து கொள்வது | 75 |
| வீடு – பள்ளி பங்களிப்பு | 90 |
| சமூகத்தோடு இணைந்து செயல்படுவது | 75 |
| அமைப்போடு இணைந்து செயல்படுவது மற்றும் முடிவுறுதல் | 120 |
| **நாள் 9 : ஒருங்கிணைத்தல் மற்றும் பள்ளி சூழலுக்கேற்ப பயன்படுத்துவது** | |
| கற்றலை ஒருங்கிணைத்தல் | 45 |
| ஏதேனும் ஒரு பள்ளியின் தேவைக்கேற்ப, பள்ளி முன்னேற்றத் திட்டத்தை உருவாக்குவது | 150 |
| விளக்கவுரை மற்றும் சமமானவர்களின் விமர்சனம் | 120 |
| நல்ல SDP–க்கான நெறிமுறைகளை உருவாக்குதல் | 75 |
| **நாள் 10 : பள்ளி முன்னேற்றத் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் முன்னோக்கிச் செல்லுதல்** | |
| என் பள்ளிக்கான – பள்ளி முன்னேற்றத் திட்டம் | 120 |
| முன்னேற்றப் பாதையை விவாதித்தல் | 120 |
| பணிமனையைப் பற்றி தெளிவாக்குதல் மற்றும் கருத்துக்கூறல் | 90 |
| முடித்தல் | 30 |





**பள்ளித் தலைமை முன்னேற்றத்திற்கான 10 நாள் நிகழ்ச்சி :** பாடத்திட்ட வடிவமைப்பின் முக்கிய பகுதிகளை விரிவாகச் சொல்கிறது. ஆனால், மாநிலங்கள் 6 நாட்களுக்கு நடத்த நினைத்தால், 10 நாள் நிகழ்ச்சியை 6 நாட்களில் சொல்லும் விதமாகச் சுருக்கி நடத்தலாம். பள்ளித் தலைவர்களுக்கான 6 நாள் நிகழ்ச்சி அமைப்பு – பிற்சேர்க்கை–Iஇல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## பள்ளித் தலைமை ஆசிரியர்களோடு இடைவிடாது தொடர்பு வைத்துக் கொள்ளுதல்

பள்ளித் தலைமை ஆசிரியர்களின் திறன் வளர்க்கும் 10 நாள் நிகழ்ச்சி, அதோடு முடிவடைவதில்லை. பாரம்பரிய பயிற்சி அளிக்கும் நிகழ்ச்சி போல் இல்லாமல், பள்ளித் தலைமை முன்னேற்றம், ஒரு வருடத்திற்குப் பங்குபெறுபவர்களோடு இடைவிடாத தொடர்பு வைத்துக் கொள்வதை உறுதி செய்கிறது. இந்தக் காலகட்டத்தில், பள்ளி உருமாற்றத்திற்கு உதவக்கூடிய செயல்முறைகள், வளங்களை அளித்தல் ஆகிய உதவிகள் செய்யப்படுகின்றன. ஆதலால், இது ஒரு தொடர் செய்முறையாகும். இந்த ஒரு வருடத்தில், மறுபரிசீலனை மற்றும் கருத்துக்கூறல் பணிமனை நடத்த நேரம் ஒதுக்கப்படுகிறது. இந்தக் காலக்கட்டத்தில் தான், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தங்கள் பள்ளிக்கான மாற்றங்களைத் திட்டமிட்டுச் செல்கின்றனர்.

இவ்வேளையில் இப்பொழுது தான் அவர்களுக்குச் சமமானவர்களின் ஆதரவு மிகவும் தேவைப்படும். பள்ளித் தலைமை ஆசிரியர்களுடனான ஒரு வருட நிகழ்ச்சிகள், குறித்த பட அட்டவணையாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| **மாதங்கள்** | **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** | **11** | **12** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இடையில் புகுதல் | திறன் வளர்க்கும் பணிமனை | பள்ளித் தலைவர்களுக்கும் களத்தில் செய்வது | | மறுபரிசீலனை மற்றும் கருத்துக்கூறல் பணிமனை | கள உதவி செய்வது | | | மறுபரிசீலனை மற்றும் கருத்துக்கூறல் பணிமனை | சமமானவர்களின் வருகை | | | தனிமை |
| கால அளவு | 10 நாட்கள் | 2 மாதத்திற்கு ஒரு முறை | | 2 நாட்கள் | 3 மாதங்களில் 2 முறை | | | 2 நாட்கள் | ஒவ்வொரு பள்ளித் தலைமை ஆசிரியரும், 2 முறை வேறொரு பள்ளியினை பார்வையிடுவது | | | 2 நாட்கள் |

## இந்தக் கையேட்டை எவ்வாறு உபயோகப்படுத்துவது ?

தலைமை முன்னேற்றம் மூலம் பள்ளித் தலைவர்களை வழிநடத்தக்கூடிய செயல்முறை சார்ந்த குறிப்புதான் இந்தக் கையேடு. பள்ளித் தலைவர்களின், முன்னேற்ற செயல்முறைகளைத் தொடங்குவதற்குத் தேவையான சில இடப்பட்ட வேலைகள் பின்வருமாறு:

1. பள்ளி, குழந்தைகள், சமூகம், பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் பலவற்றை பற்றிய தேதிகளைச் சேகரிப்பதற்கான படிவத்தினைக் கொடுப்பது. இதன் மூலம், பள்ளியைப் பற்றி புரிந்து கொண்டு, பள்ளி சார்ந்த தலைமை முன்னேற்ற செயல்முறையை ஆரம்பிக்க முடியும்.

2. நிழ்ச்சியில் சேரும் ஒவ்வொரு பள்ளித் தலைமை ஆசிரியரின், தலைமைக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான பள்ளியைப் பற்றியும், பள்ளித் தலைவர் பற்றியும் புரிந்து கொள்ளுதலுக்காக, அடிப்படை செய்திகளை ஆராய்வது.

3. பள்ளித் தலைவர்களைக் கொண்டு போகக்கூடிய வழியைக் கவனத்தோடு திட்டமிட்டு, ஒவ்வொரு முக்கிய பகுதிக்கும் கூட்டம் நடத்துவது.

4. பிரத்யேக பகுதியின் ஒவ்வொரு கூட்டத்தின் நோக்கங்களை ஆராய்வது.

5. முன்னதாகவே திட்டமிடல், ஒவ்வொரு கூட்டத்தையும் எப்படி நடத்துவது என்று தயாராகுதல், ஒவ்வொரு செயல்பாடுகளின் கால அளவை நிர்ணயிப்பது, பல்வேறு செயல்பாடுகள் மற்றும் பொருட்களிலிருந்து தேவையானதை தேர்வு செய்து (மாதிரிப் பயிற்சி, ஒலி ஒளிக் காட்சிகள், ஊக்கமளிக்கும் பாட்டுகள் மற்றும் பல) மற்றும் அதற்கேற்ப உதவக்கூடிய பொருட்களைச் சேகரிப்பது.

6. எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைவதற்குப் பிரத்யேக கற்பித்தல்–கற்றல் முறைகளை விரிவாகப் பயன்படுத்துதல்.

7. நேருக்கு நேர் கலந்துரையாடல் நிகழ்ச்சியின் முடிவில் (10 அல்லது 6 நாள் நிகழ்ச்சியாய் இருக்கலாம்) தங்கள் பகுதியில் இருக்கும் பங்குபெறுபவர்களோடு ஒரு வருடத்திற்குத் தொடர்பு கொண்டு, பயிற்சி அளித்தல், அறிவூட்டவும் தயாராவது.

8. கருத்துக்கூறல் மற்றும் மறுபரிசீலனைக்காகப் பட்டறைகளை, முழுமையான இடைவெளியில் (வருடத்திற்கு இருமுறையாவது) நடத்துவது. இதன் மூலம் வளர்ச்சியை அளக்கவும், பள்ளி எப்படி மாற்றத்திற்கு எடுத்துச் செல்வது என்று தீர்மானிக்கவும் முடியும்.





## பள்ளித் தலைமை ஆசிரியர்களின் திறன்களை உருவாக்கும் திட்டத்திற்குத் தயாராகுதல்

**அன்பார்ந்த நடத்துபவர்களே!**

திறன் வளர்க்கும் திட்டத்திற்குத் தயாராகும் நிலையில், பள்ளித் தலைமை ஆசிரியர்களைத் தங்கள் பள்ளியைப் பற்றி சிந்திக்கவும், பிரதிபலிக்கவும் செய்ய வைக்க வேண்டும். அப்போது தான், வரப்போகும் பள்ளித் தலைமை முன்னேற்ற நிகழ்ச்சியோடு அவர்களால் இணைந்து செயல்பட முடியும். இதற்காகத் தயாராகும் பயிற்சியை வடிவமைத்திருக்கிறோம்.

- இந்தக் கருவி / உபகரணம், பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு 15 நாள் முன்னதாக அனுப்பப்பட வேண்டும். இந்த அவர்கள் நிகழ்ச்சிக்கு வரும்பொழுது எடுத்து வர வேண்டும். ***பள்ளித் தலைமை ஆசிரியர்கள் அதில் கொடுக்கப்பட்ட இடத்திற்கு மேலாகவும் எழுதலாம்.***
- இது ஒரு பிரதிபலிக்கும் பயிற்சியாகும். இது, நிகழ்ச்சி முழுதும், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இடத்தில் இருக்கும். இதை மதிப்பீடு செய்யும் கருவியாக எண்ணக்கூடாது.
- இந்தக் கருவி மூலம் சேகரித்த தகவல்களை, 10 நாள் நிகழ்ச்சயில் சொல்லப்பட்டிருக்கும் நிறைய செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தலாம்.

திறன்களை உருவாக்கும் நிகழ்ச்சியில், பங்குபெறுபவர்களில், கலந்துரையாடலுக்குப் போதிய நேரமும், வாய்ப்பும் கொடுக்கப்பட வேண்டும். செயல்பாடுகள், ஒலி–ஒளி காட்சிகள் மற்றும் தத்துவ யோசனைகள் இருப்பினும், இவை யாவும் பங்குபெறுபவர்களை அவர்கள் பள்ளி சூழலுடன், அர்த்தத்துடன் தொடர்பு கொள்ள வைக்கும் வழியாகக் கருத வேண்டுமே தவிர, இதையே ஒரு முடிவாக ஒரு கொள்ளக்கூடாது.

கையேட்டில் கொடுக்கப்பட்டிருக்கும் – செயல்பாடுகள், மாதிரிப் பயிற்சிகள், மேற்கோள்கள், படக்காட்சிகள், கவிதைகள், அல்லது படங்கள் யாவும் ஒரு முன்மாதிரியாக மட்டுமே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். சூழலுக்கும், பிரத்யேக பாரம்பரிய வழக்கங்களுக்கேற்பவும், மாற்றுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

மேலும், கவிதைகள், படிக்க வேண்டிய கட்டுரைகள், புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகள் பின்வரும் வகையில் உபயோகப்படுத்தப்படலாம். அ) படிக்க (நேரம் இருந்தால் விவாதிக்கவும்), ஆ) கவிதையோ, கட்டுரையோ, தங்கள் தாய்மொழியில், அதற்கு ஒப்பான செய்தியைக் கூறும் பகுதிகள் இருக்குமாயின், இவற்றை உபயோகிக்கலாம். இ) ஆக்கப்பூர்வமான பயிற்சியாகத் தாய்மொழியில், அதே கருத்தைச் சொல்லக்கூடிய கவிதையை இயற்றலாம் / கதை எழுதலாம்.

இந்தக் கையேடு, ஒரு வழிநடத்தும் ஆவணமாகவும், பள்ளித் தலைமை முன்னேற்றத்தை ஊக்குவிப்பதற்கான முதல் படியாகவும் கருதப்பட வேண்டும். இதையே ஒரு முடிவாக கருதக்கூடாது. மாநில அரசுகளைப் பிரத்யேக சூழலுக்கான கையேடுகளைத் தங்கள் மாநில மொழிகளில் உருவாக்க, நாங்கள் ஊக்கப்படுத்தி, தீவிரமாக வழிநடத்தி, உதவுகிறோம்.


## பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தயாராவதற்கான பயிற்சி

பள்ளித் தலைமை ஆசிரியர் முன்னேற்ற நிகழ்ச்சிக்கு வரவேற்கிறோம்!

திறன்களை வளர்க்கும் நிகழ்ச்சி ஆரம்பிக்கும் முன், சிறிது நேரம் எடுத்துக் கொண்டு, பள்ளியின் பணிகளையும், பள்ளித் தலைமை ஆசிரியராக, உங்கள் பங்களிப்பைப் பற்றியுமான பகிர்ந்து கொள்வோம். சில சுலபமான கேள்விகளுக்கு நீங்கள் பதில் கூற வேண்டும். இந்த விதத்தில், உங்களைப் பற்றியும், உங்கள் பள்ளியைப் பற்றியும் நாங்கள் தெரிந்து கொள்ள முடியும்.

இந்தக் கருவி – உங்கள் பள்ளியைப் பற்றிய அளவு சார்ந்த தகவல்கள், உங்களின் தனிப்பட்ட மற்றும் தொழில் சார்ந்த தகவல்கள், பள்ளியின் தனித்தன்மை பற்றிய பிரதிபலிப்பு, நீங்கள் சந்திக்கும் சவால்கள், பள்ளித் தலைமை ஆசிரியராக உங்கள் ஆசைகள், இவற்றை நாடிச் செல்கிறது. இந்தக் கருவியை பற்றிய உங்களின் பிரதிபலிப்பு உங்களோடு கூட பணியாற்றுபவர்களுடனும் நாங்கள் நடத்தப்போகும் விவாதத்தை மேலும் மெருகூட்டுகிறது. உங்களின் பள்ளியைப் பற்றிய புள்ளி விவர தகவல்கள், பள்ளித் தலைமை ஆசிரியராக நீங்கள் சந்திக்கும் பிரத்யேக சவால்களைத் தெரிந்து கொள்ள உதவுகிறது. உதாரணமாகக் குறைந்த ஆசிரியர்கள் அல்லது குறைந்த மாணவிகள் கொண்ட பள்ளிகள். நீங்கள் நிகழ்ச்சியில் பார்க்கும் சகப் பணியாளர்களும், இதே சவால்களைச் சந்திக்கலாம். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, சவால்களைத் தீர்க்கும் வழியைக் கண்டுபிடிக்கலாம்.





## என் பள்ளியைப் பற்றி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர் | |
| பள்ளியின் விலாசம் | |
| இடம் (கிராமம் / நகரம்) | |
| பள்ளிவகை –P/UP/P & UP/P, UP & HS/ வேறு ஏதாவது | |
| நிரந்தர ஆசிரியர்களின் எண்ணிக்கை | |
| தற்காலிக ஆசிரியர்களின் எண்ணிக்கை | |
| பள்ளியின், மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | |
| பள்ளியில், மாணவிகளின் எண்ணிக்கை | |
| பள்ளியில், மாணவர்களின் (Boys) எண்ணிக்கை | |
| பள்ளியில் மொத்த வகுப்பறைகள் | |

## என்னைப் பற்றி

| | |
|---|---|
| பள்ளித் தலைமை ஆசிரியரின் பெயர் | |
| தற்போதைய பள்ளியில், பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணியாற்றும் காலம் | |
| நியமனமா / பொறுப்பா | |
| வயது | |
| பால் | |
| கல்வித் தகுதி | |
| பள்ளி ஆசிரியராக, எத்தனை ஆண்டுகள் அனுபவம் | |
| தொழில் சார்ந்த சாதனை வேறு ஏதாவது | |
| அலைபேசி எண் | |
| E-mail ID | |

## என் பள்ளி மற்றும் என் பங்கு பற்றிய பார்வை

1. உங்கள் பள்ளியின் எந்த ஒரு சிறப்பம்சத்தை, மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்கள் ?

2. பள்ளித் தலைமை ஆசிரியராக நீங்கள் சந்திக்கும் சவால்களில், மூன்றைப் பற்றி விவரிக்கவும்.

3. உங்கள் பள்ளியில் எந்த விதமான மாற்றத்தைப் பார்க்க விரும்புகிறீர்கள் ? (உங்கள் ஆசிரியர்களுடன், இதை விவாதிக்க விருப்பப்படலாம்)


4. பள்ளியை நாடும் மாணவர்கள், சமூகத்தைப் பற்றி சுருக்கமாக விவாதிக்கவும்.

5. பள்ளித் தலைமை ஆசிரியராக, நீங்கள் ஒரு நாளை எவ்வாறு செலவழிக்கிறீர்கள் என்று விவரிக்கவும்.



முக்கிய பகுதி – 1

# பள்ளித் தலைமை பற்றிய ஒரு கண்ணோட்டம்




நாள்

1&2

## முக்கிய பகுதி – 1 – பள்ளித் தலைமை பற்றிய ஒரு கண்ணோட்டம் – 1 &2

## நாள் 1 மற்றும் 2–வது நாளுக்குத் தேவையானவைகளை, உதவுபவர் சரிபார்க்க வேண்டிய பட்டியல்

### நாள் 1

**கீழ்க்காணும் பொருள்களை நீங்கள் வாங்கிக் கொண்டீர்களா ?**

1. தலைவர் போல், தலைவர் செய்யக் கூடியதை செய்வது – இதை பற்றி – பவர்பாயின்ட் மூலம் வழங்கப்பட்டவை (D1_S3_3.2) ☐
2. தனியாள் ஆய்வு கையேடு (D1_S4_4.1) ☐

**கீழ்க்காண்பவை உள்ளனவா என்று உறுதி செய்து கொள்ளவும்.**

1. வரைபடங்கள் ☐
2. வரைபடப் பேனாக்கள் ☐
3. வெள்ளை காகிதங்கள் ☐
4. மடிக்கணினி / கணினி ☐
5. திரைப்படம் காட்டும் கருவி ☐
6. திரைப்படம் காட்டும் கருவி மூலம் வழங்கப்பட்டவை குறுந்தகடு வடிவில் ☐
7. ஒலிபெருக்கிகள் (ஒலி தரமானதாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்) ☐

### நாள் 2


நாள் 3

**இன்றைக்குத் தேவையான கீழ்க்காணும் வளங்களை வாங்கிக் கொண்டீர்களா ?**

1. பள்ளி என்பது கற்றலுக்கான அமைப்பு என்பது பற்றி கணினி நழுவக் காட்சி படம் (D2_S1_1.1a) ☐
2. பீட்டர் சென்ஜே எழுதிய பள்ளி என்பது கற்றலுக்கான அமைப்பு என்னும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்ட சில பகுதிகள் ☐

**கீழ்க்காண்பவை உள்ளனவா என்று உறுதி செய்து கொள்ளவும்.**

1. வரைபடங்கள் ☐
2. வரைபடப் பேனாக்கள் ☐
3. எழுதப்படாத வெள்ளை காகிதங்கள் ☐
4. மடிக்கணினி / கணினி ☐
5. திரைப்படம் காட்டும் கருவி ☐
6. பவர்பாயின்ட் விளக்கவுரை கையேடுகள் ☐
7. ஒலிபெருக்கிகள் (ஒலி தரமானதாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்) ☐





## நாள் 1

### அறிமுகம்

வழிகாட்டுதல் பற்றி புரிந்து கொள்ளுதல், பள்ளி மாற்றத்தில் அது ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல் – இவை தான் இந்த பகுதியின் முக்கிய நோக்கமாகும். பள்ளிகள் – மாணவர்களின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும், தொடர் ஆய்விற்கும், மாற்றத்திற்கும் மற்றும் அனைவரின் கற்றலுக்கு இடமாக கற்றுக் கொள்ளும் இடமாகவும் அமைகிறது. வழிகாட்டுதல் மற்றும் மாற்றத்திற்கு இடையேயான தொடர்பினையும் ஆராய்கிறது. மாற்றமானது உள்ளடக்கியதாகவும், தொடர்ச்சியானதாக இருப்பதோடு இருக்குமாறும் மற்றும் மாணவனை மையப்படுத்தியும் இருக்குமாறும் வலியுறுத்துகிறது. இந்தப் பகுதியானது, பங்குபெறுபவர்களின் பள்ளியில் தங்கள் தற்போதைய நிலையிலிருந்து, மாணவனை முழுமையான முன்னேற்றத்திற்குப் பகிர்ந்த பார்வை மற்றும் கூட்டு முயற்சி மூலம் கொண்டு செல்வது பற்றிய பள்ளி வழிகாட்டுதல் வளர்ச்சியினைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

### அன்றைய தினத்தின் ஒரு பார்வை

| நாள் – 1 | | |
|---|---|---|
| அமர்வு | பெயர் | நேரம் (நிமிடங்கள்) |
| 1. | அறிமுகம் மற்றும் நிகழ்ச்சி நிரலின் வரைசட்டம் | 90 |
| 2. | பள்ளித் தலைமைப்பண்பைப் புரிந்து கொள்ளுதல் | 75 |
| 3. | பள்ளித் தலைமைப்பண்பைப் புரிந்து கொள்ளுதல் :பன்முக பங்குகள், பொறுப்புகள் மற்றும் மாணவனை முன்னிலைப்படுத்துதல் | 75 |
| 4. | பள்ளித் தலைமைப்பண்பைப் புரிந்து கொள்ளுதல் :பன்முக அமைப்புகள் மற்றும் பயிற்சிகள் | 30 |

## அமர்வு 1 : அறிமுகம் மற்றும் நிகழ்ச்சி நிரலின் வரைசட்டம்

| அமர்வு 1 | 10.00 – 11.30 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| அறிமுகம் | 50 | பங்கேற்பவரை அறிமுகப்படுத்துதல் |
| எதிர்பார்ப்புகளை இலக்காக்கிக் கொள்வது மற்றும் 10 நாட்களுக்கான நிகழ்ச்சி நிரலைப் பகிர்ந்து கொள்வது | 40 | பணிமனையிலிருந்து எதிர்பார்க்கப்பட்டவைகளைப் பங்குபெறுபவர்கள் பகிர்ந்து கொள்ளுதல். நிகழ்ச்சி மற்றும் அதன் வழிமுறை பற்றியும், பணிமனை நடக்கும்பொழுதும், அதற்குப் பின்னும், நடத்துபவர்கள் பங்குபெறுபவர்களிடம் எதிர்ப்பார்ப்பதையும் புரிந்து கொள்ளுதல். |

## செயல்பாடு 1 : அறிமுகம் செய்தல்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

நாள்
1


**வழிமுறை 1 :** பெருங்கூட்டத்தினருக்குள் பகிர்ந்து கொள்ளுதல்

### ஆலோசனைக்குகந்த வழிமுறைகள்

- பங்குபெறுபவர்கள், தங்கள் பெயர்களை அடைமொழியோடு பகிர்ந்து கொள்ளுதல். உதாரணமாகக் "குறும்பு கமலா", "நேர்மறை நித்யா".
- நடத்துபவர், பங்குபெறுபவர்களை மேற்கூறிய முறைப்படி அறிமுகப்படுத்திக் கொள்ளச் சொல்கிறார், மற்றும் அதன் முக்கியத்துவத்தையும் கூறுகிறார்.
- நடத்துபவர், பங்குபெறுபவர்களை அடையாள அட்டையில் தங்கள் பெயர்களை எழுதி, தங்கள் தோள்பட்டைக்கருகில் அணிந்து கொள்ளச் சொல்லுதல்.

### நடத்துபவருக்கான குறிப்புகள்

- இது ஒரு அறிமுக செயல்பாடாகும். பங்குபெறுபவர்கள் தங்களை ஒருவருக்கொருவர் அறிந்து கொள்ளவும், அடையாள அட்டைகள் மூலம் பெயர்களைத் தெரிந்து கொள்ளவும் உதவுகிறது.
- நடத்துபவர்களும் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வதோடு, தங்கள் அடையாள அட்டைகளையும் தோள்பட்டையில் அணிந்து கொள்ள வேண்டும்.





## செயல்பாடு 1.2: எதிர்பார்ப்புகளை இலக்காக்கிக் கொள்வது மற்றும் நிகழ்ச்சி நிரலைப் பகிர்ந்து கொள்வது

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**வழிமுறை :** சிறிய மற்றும் பெரிய குழுக்களிடையே கலந்துரையாடல் (முழுமையான)

### ஆலோசனைக்குகந்த வழிமுறைகள்

- நடத்துபவர், பங்குபெறுபவர்களை 8–10 பேர் கொண்ட குழுக்களாகப் பிரித்து, வரைபடத்தாள்கள், வரைபட பேனாக்கள் கொடுப்பது.
- பங்குபெறுபவர்களுக்குப் பணிப்பட்டறையிலிருந்து அவர்கள் எதிர்பார்ப்புகளைப் பகிர்ந்து கொள்ள மற்றும் அவர்கள் கற்க விரும்புவதைக் கூறவும் 5 நிமிட அவகாசம் அளிப்பது.
- ஒவ்வொரு குழுவும், பெரிய குழுவோடு தங்கள் எதிர்பார்ப்புகளைப் பகிர்ந்து கொள்ளுதல்.
- பங்குபெறுபவர்களின் பங்களிப்பு பற்றிய தங்கள் எதிர்பார்ப்புகளை, நடத்துபவர் பகிர்ந்து கொள்ளுதல்.
- நடத்துபவர், நிகழ்ச்சியின் நிரல் மற்றும் பங்குபெறுபவர்களின் பங்களிப்பு, எதிர்பார்ப்புகளைப் பகிர்ந்து கொள்கிறார்.
- பங்குபெறுபவர்கள், நடத்துபவர்களோடு சேர்ந்து நிகழ்ச்சிக்கான அடிப்படை விதிமுறைகளை எடுத்து, அதன் மூலம் ஒருவருக்கொருவர் எதிர்பார்ப்புகளை இலக்காக்குகிறார்.

### நடத்துபவருக்கான குறிப்புகள்

- இது பங்குபெறுபவர்களுக்கு அடிப்படையாக அமையும் பகுதி என்பதனால், அவர்கள் கலந்துரையாடவும், கருத்துக்களைப் பகிரவும் போதிய வாய்ப்புகளைத் தருவதன் மூலம், அவர்கள் பணிப்பட்டறை பற்றி புரிந்து கொள்ள மற்றும் ஆக்கப்பூர்வமாகப் பங்கேற்கவும் உதவியாக இருக்கும்.
- பள்ளித் தலைவர்கள் பணிப்பட்டறையில் எதிர்பார்ப்பவைகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும். பகிர்ந்தளிக்கவில்லை என்றாலும் பணிப் பட்டறையில் தலைமைத்துவப் பண்புகளைப் புரிந்து வைத்திருத்தல் வேண்டும்.

### முக்கியச் செய்திகள்

- இது ஒரு வழிகாட்டுதலின் முன்னேற்றத்திற்கான நிகழ்ச்சி என்பதனால், தன்னைப் பற்றியும் தன் சுற்றுச்சூழல் பற்றியுமான பகிர்வு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும்.
- பள்ளிகளில் இருக்கும் பிரச்சனைகளுக்கு நிரந்தர அல்லது ஆயத்த தீர்வோ கிடையாது. வரும் நாட்களில், நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து, அனைத்துத் தீர்வுகளையும் அலசி ஆராய்வோம். அவற்றை பள்ளிகளில் சோதித்துப் பார்ப்பது உங்கள் பொறுப்பு

## அமர்வு 2 : பள்ளி வழிகாட்டுதலை புரிந்து கொள்ளுதல்

| அமர்வு 2 | 11.45 – 13.00 மணி | |
|---|---|---|
| **செயல்திறன்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்த்த விளைவுகள்** |
| பள்ளி வழிகாட்டுதலைப் புரிந்து கொள்ளுதல் – கலை செயல்திறன் | 30 | பள்ளி சார்ந்த வழிகாட்டுதல் பற்றி புரிதலைத் தொடங்குதல் மற்றும் வழிகாட்டுதலில் பள்ளி தலைமை ஆசிரியரின் பங்கு. |
| எது பள்ளித் தலைவரை உண்டாக்குகிறது | 45 | |

## செயல்பாடு 2.1 : பள்ளி வழிகாட்டுதலைப் புரிந்து கொள்ளுதல் : கலைத்திறன்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** தனித்தனியான பயிற்சி

### ஆலோசனைக்குகந்த வழிமுறைகள்

- பங்குபெறுபவர்களுக்கு, எழுதப்படாத வெள்ளைக் காகிதங்களும், வரைபேனாக்களும், மெழுகு பேனாக்களும் (க்ரையான்) கொடுக்கப்படுகின்றன.
- வழிகாட்டுதல் பற்றி நினைத்தவுடன், பங்குபெறுபவர்களுக்கு தோன்றும் முதல் படிவம் என்ன என்று கேட்கவும்.
- பங்குபெறுபவர் ஒவ்வொருவரும், வழிகாட்டுதல் பற்றிய தங்கள் படிவத்தை வரையச் சொல்லவும்.
- பங்குபெறுபவர்களின் படிவத்தையும், பள்ளியில் தங்களின் பங்கினைப் பற்றியும் யோசிக்கச் சொல்லவும்.
- ஒற்றுமை இருக்கிறதா, வேறுபாடு இருக்கிறதா என்று கேட்கவும். பள்ளி வழிகாட்டுதலின் மாற்று படிவத்தை உருவாக்க விரும்புகிறார்களா என வினவவும்.
- ஒவ்வொரு பங்கேற்பவரும், பள்ளி வழிகாட்டுதல் பற்றிய தங்களின் தனிப்பட்ட கருத்தினைப் படிவமாகவோ, வார்த்தை மூலமாகவோ விவரிக்கலாம்.

### நடத்துபவருக்கான குறிப்புகள்

- பங்குபெறுபவர்கள், தாங்கள் நினைத்ததை வெளிப்படுத்த – வார்த்தைகளாலோ வரைபடமாகவோ – நடத்துபவர் போதிய வாய்ப்பு கொடுக்க வேண்டும். இது தங்கள் திறனை காட்டும் பயிற்சியல்ல என்பதை அவர்களுக்கு முக்கியமாக திறனை வெளிக்கொணர வேண்டும். தங்கள் எண்ணங்கள் தான் முக்கியம்.
- பங்குபெறுபவர்களுக்கு யோசிக்கவும், யோசித்ததை வெளிப்படுத்தவும் போதிய கால அவகாசம் கொடுக்கவும்.

நாள் 1





- இந்தச் செயல்பாடுகளில், நடத்துபவரும், பங்குபெறுபவர்களோடு இணைந்து செயல்பட ஆலோசனை கூறப்படுகிறது.

## செயல்பாடு 2.2 : எது பள்ளித் தலைமையை உருவாக்குகிறது ?

### செயல்பாட்டை எவ்வாறு வழிநடத்துவது ?

**செயல்முறை :** முழு அணியுடன் சிந்தனையைத் தூண்டும்படி விவாதித்தல்

### ஆலோசனைக்கான வழிமுறைகள்

- நடத்துபவர், பங்குபெறுபவர்களைத் தங்கள் எண்ணங்கள் / சிந்தனைகள் / மனக்கருத்தின் உருவங்களைப் பகிர்ந்து கொள்ள அழைக்கிறார்.
- பங்குபெறுபவர்கள் பகிர்ந்து கொள்வதை, நடத்துபவர் கரும்பலகை / வெள்ளைப் பலகையில் எழுதுகிறார்.
- பங்குபெறுபவர்களில் பாதிக்கு மேல் பகிர்ந்து கொண்டதை எழுதியதில், தலைமைப் பண்புகள் பற்றி ஒரு நீளப் பட்டியல் உருவாகியுள்ளது. நடத்துபவர், இன்னும் ஏதாவது கருத்துகள் விடுபட்டிருக்கிறதா என்று கேட்கிறார்.
- நடத்துபவர், ஒவ்வொரு பண்பையும் விவாதித்துப் பள்ளித் தலைமை ஆசிரியராக, இவற்றை எப்படி பயன்படுத்துவது என்று புரிந்து கொள்கிறார். உதாரணமாக, நல்ல சொற்பொழிவாளராக இருப்பது, அரசியல் தலைவருக்கு ஏற்றப் பண்பாக இருக்கலாம், ஆனால் பள்ளித் தலைமை ஆசிரியருக்கு இது சரிபடுமா ?
- குழு ஒப்புதலின் அடிப்படையில், நடத்துபவர், பள்ளித் தலைமை ஆசிரியருக்கு உகந்ததாக இல்லாத பண்புகளை நீக்கி விடுகிறார்.

### எதிரொலிக்கும் கேள்விகள்

- இந்தப் பண்பு, பள்ளித் தலைமை ஆசிரியருக்குத் தேவையானதா ?
- பள்ளித் தலைமை ஆசிரியராக நீங்கள் அனைவரும், தலைமைக்கு முக்கியமாகத் தேவைப்படும் பண்பு ஏதேனும் இருக்கிறதா ?

### நடத்துபவருக்கான குறிப்புகள்

- இந்தச் செயலக்கு எந்த ஒரு சரியான பதிலும் கிடையாது. பள்ளித் தலைமைப் பண்பு பற்றி அவர்கள் கருத்தைப் பற்றி குழுவினர் சிந்திக்க ஆரம்பிக்க வைப்பதற்கே இந்தச் செயல்பாடு.
- இது, பணிப்பட்டறையில் வரும் நாட்களில், எந்தப் பண்புகளில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்பதை நடத்துபவருக்குப் புரிய வைக்கிறது. உதாரணமாக – ஒழுக்க புருஷராக இருத்தல், தொடங்குபவராக இருப்பது, கற்பித்தல்–கற்றல் பண்பில் கவனம் செலுத்துவது மற்றும் இவைபோல.
- பண்புகளின் பட்டியலை வரைபடத்தாளில் எழுதி, அடுத்த 9 நாட்களுக்கும் பயிற்சிக் கூடத்தில் காட்சியாக வைத்தல்.

### முக்கியத் தகவல்கள்

- தலைமைப் பண்பு என்பது – அறிமுகப்படுத்துவது, குழுத் தலைவராக இருப்பது, ஆதரவளிப்பது, வாய்ப்புகளை உருவாக்குவது, வலிமையை உருவாக்குவது மற்றும் புதிய கற்றலுக்குத் திறந்த மனதுடன் இருப்பது இவையேயாகும்.

- ஒவ்வொரு நாளும், நாம் கூட்டமாகச் சேர்ந்து புரிந்து கொண்டதை மறுபடியும் நினைத்துப் பார்ப்பது அவசியம். ஏனெனில், இந்த விளக்கவுரையோடு சில கருத்துக்கள் ஒத்துப் போகும், சில கருத்துகள் ஒத்துப் போகாமல் இருக்கலாம். ஆகையால், வரும் நாட்களில், ஒவ்வொன்றையும் மதிப்பீடு செய்வது மிக அவசியம்.
- பணிமனையின் முடிவில், இதை மாற்ற வேண்டும் என்று ஒன்று சேர்ந்து முடிவெடுக்கும் சந்தர்ப்பம் வரலாம். ஆகையினால், இதை நம் குழுவின் “செயல்பாட்டிற்கான விளக்கவுரை” என்று கருதலாம்.

## அமர்வு 3 : பள்ளித் தலைமையைப் புரிந்து கொள்வது : பன்முகப் பங்காற்றல், பொறுப்புகள் மற்றும் குழந்தைகளை முதன்மைப்படுத்துதல்

| அமர்வு 3 | 14.00 – 15.15 மணி | |
|---|---|---|
| **செயல்திறன்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்த்த விளைவுகள்** |
| பள்ளித் தலைமை ஆசிரியர் : பன்முகப் பங்காற்றல் மற்றும் பொறுப்புகளை வரைபடமாக்குவது | 40 | மாணவர்கள் நன்றாகக் கற்பதை உறுதி செய்து கொள்வது மற்றும் பன்முகப் பங்காற்றல் என்பனவே ஒரு தலைமையின் முக்கிய புரிதல் என்பதை உணர்தல். |
| செயல்பாடு :தலைவராக பங்காற்றுவது – கணினி நழுவக் காட்சிப் படங்கள் | 35 | |

நாள்
1

## செயல்பாடு 3.1 : பள்ளித் தலைமையாசிரியர் : பன்முகப் பங்கு மற்றும் பொறுப்புகளை வரைபடமாக்குவது

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திக் காட்டுவது ?

**செயல்முறை :** முழுமையான விவாதம்



### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- முந்தைய அமர்வில் பட்டியலிட்ட பண்புகளை உபயோகித்து, பங்குபெறுபவர்கள் ஆற்றும் பன்முக பங்கையும், பயிற்சி செய்யும் விதத்தையும், தங்கள் பள்ளிகளை மனதில் கொண்டு தலைமைப் பண்பை, நடத்துபவர் பிரதிபலிக்கச் சொல்கிறார்.
- பங்குபெறுபவர்கள், தங்களின் பல்வேறு பரிமாணங்கள் பற்றி பதில் கூறும்போது, சிலவகைகள் வெளிப்படும். அவை, படத்தில் காண்பது போல் சித்தரிக்கப்படலாம்.
- அனைத்து வகைகளும், படத்தில் கொண்டு வந்தபின், எந்த பரிமாணமாவது விடுபட்டிருக்கிறதா என்று சரிபார்க்கச் சொல்லவும்.



நாள்
1

- வேறுபல பரிமாணங்களும் இருக்கலாம். உதாரணமாக “தொடங்குபவர்”, “குழுத் தலைவர்”.
- ஒவ்வொரு பரிமாணத்திற்கும் பங்குபெறுபவர்கள், எவ்வளவு நேரம் ஒதுக்குகின்றனர் என்று கேட்கவும்.
- மாணவனின் கற்றலின் மீது, ஒவ்வொரு பரிமாணங்களுக்கும் எடுத்துக் கொள்ளப்பட்ட நேரம் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றி பிரதிபலிக்கச் செய்யவும்.
- மற்ற பரிமாணங்களிலிருந்து, தலைமையின் பங்கு எவ்வாறு வேறுபடுகிறது என்று விவாதிக்கவும்.

**பள்ளித் தலைவர் பன்முக பங்கேற்பு மற்றும் பொறுப்புகள்**

வளங்களைப் பகிர்ந்து கொடுப்பவர். நிதியை பகிர்ந்து கொடுப்பது, வளங்களைத் திரட்டுவது

குழுக்களையும், புதுமைக் காணலையும் உருவாக்குவது, திறன் சார்ந்த பணி பகிர்தல், புதுமைக்கு வாய்ப்பளிப்பது மற்றும் மாற்றத்தை ஊக்குவிப்பது ஆதரிப்பது

நிர்வகிப்பவர் – பள்ளி செயல்படுவதை உறுதிபடுத்திக் கொள்வது, பதிவேடுகளை ஒழுங்காகத் தொடர்ந்து காப்பாற்றுவது

கண்காணிப்பாளர் வகுப்பறை குறிப்புரை உள்ளேயும், வெளியேயும் கண்காணிப்பது

விளம்பரப்படுத்துபவர் – பள்ளி சார்ந்த செய்திகளை – மூத்தவர்களோடு, சகப் பணியாளர்களோடு மற்றும் பங்குதாரர்களோடு பகிர்ந்து கொள்வது

பள்ளி / சமூக முன்னேற்ற அதிகாரி – பங்குதாரர்களுடனும், அமைப்பின் வெவ்வேறு மட்ட அதிகாரிகளுடனும் தொடர்பு வைத்துக் கொள்வது

ஆசிரியர் – வகுப்பறை கற்பித்தல், கற்றல்

## எதிரொலிக்கும் கேள்விகள்

- நாளின் பெரும்பாலான நேரத்தை எப்படி செலவழிக்கிறீர்கள் ? வழிநடத்துவது ? மேற்பார்வையிடுவது ? நிர்வகிப்பது ? இணை நடத்தல் ? அல்லது வேறு ஏதாவது ?
- கொடுக்கப்பட்ட பங்காற்றலில், மாணவனின் கற்றலை, வெகுவாகத் தாக்குவது எது ?
- பல்வேறு பங்காற்றலுக்கு ஒதுக்கும் நேரத்தைச் சரியாக நிர்வகிப்பது, உங்கள் பள்ளியை சிறப்பாக வழிநடத்த உதவுமா ?
- ஒரு நாளில், நீங்கள் ஏற்றுக் கொள்ளும் பரிமாணங்களை எழுதி, ஒவ்வொன்றிற்கும் மதிப்பு கொடுக்க விரும்புகிறீர்கள் ? (1–5) 1 – “மிகுந்த திறன் வாய்ந்தவர்”, 5 – “திறனே இல்லாதவர்”. இது, எந்தப் பகுதியில், முன்னேற வேண்டும் என்பதைத் தீர்மானிக்க உதவும்.
- வழிநடத்துபவராகப் பன்முகப் பரிமாணங்களில் முன்னேற என்ன செய்ய வேண்டும் ?

## நடத்துபவருக்கான குறிப்புகள்

- கரும்பலகையில் / வெள்ளைப் பலகையில், பங்குபெறுபவர்கள் பகிர்ந்து கொள்வதை, நடத்துபவர் வரைபடமாக வரைகிறார்.
- பல்வேறு பரிமாணங்களில் பங்காற்ற தேவைப்படும் திறன்களை விவாதிக்கவும்.
- ஒவ்வொரு பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் விவாதிக்கவும்.
- பள்ளி முன்னேற்றத்தில் தலைமை ஆசிரியரின் பரிமாணம் மற்றும் மற்ற பங்களிப்புகளுக்கும் உள்ள வேறுபாடுகளைச் சிறப்புறு கூறவும்.


## முக்கியத் தகவல்கள்

- பள்ளித் தலைமை ஆசிரியராகப் பங்களிப்பதும், நிர்வகிப்பதும் மட்டுமே முக்கியமானதாகக் கொள்ளக் கூடாது. கற்றல்–கற்பித்தல், ஆசிரியர்களை வழிநடத்துவது, பெற்றோர்கள் சமூகத்தை வழிநடத்துவது, தன்னைத்தானே வழிநடத்துவதும் மிகவும் முக்கியம் என்று புரிந்து கொள்வது.
- SLDP, பல்வேறு விதமாகப் பங்களிப்போரைக் கொண்டு செல்கிறது. வரும் 8 நாட்களில், நற்பயனளிக்கும் விதத்தில் ஒவ்வொரு பங்கையும் செயலாற்றத் தேவையான அறிவு, திறன் மற்றும் மனப்பான்மையையும் கற்றுத் தருகிறது.

நாள்
1

## மேலும் படிக்க

- The school heads might want to read on multiple roles of leader / manager, adopted from Mintzberg's Ten Management Roles in his book, "Mintzberg on Management: Inside our Strange World of Organization," in 1990. (AD1_S3_3.1: Day 1 – Session 3 – Activity 3.1 – Ten Management Roles)





## செயல்பாடு 3.2 : தலைமையாசிரியர் போல் செய்யக் கூடியதை தலைமையாசிரியராகச் செய்வது

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திக் காட்டுவது ?

**செயல்முறை :** பெரிய குழு செயல்பாடு

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

நடத்துபவர், திரைப்படம் காட்டும் கருவி விளக்கவுரை கொடுத்து, கருத்துப் பரிமாற்றம் மூலம், பங்குபெறுபவர்களை வெவ்வேறு கேள்விகளுக்கும் எண்ணங்களுக்கும் எடுத்துச் செல்கிறார்.

### எதிரொலிக்கும் கேள்விகள்



- பள்ளியை வழிநடத்துபவரின் ஒட்டுமொத்த நோக்கமாக நீங்கள் எதை நினைக்கிறீர்கள் ?
- வெற்றிகரமான பள்ளி முதல்வர்கள், எதை வித்தியாசமாகச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள் ?
- பள்ளித் தலைமை ஆசிரியராக, உங்கள் பள்ளிக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் என்ன கொடுக்க விருப்பப்படுகிறீர்கள் ?

### நடத்துபவருக்கான குறிப்புகள்

- பவர்பாயின்ட் விளக்கவுரை விவாதத்திற்காகக் கொடுக்கப்படுகிறது (D1_S3_3.2 : நாள் 1 – அமர்வு 3 – செயல்பாடு 3.2 – பவர்பாயின்ட் விளக்கவுரை “தலைமை ஆசிரியர்போல் செய்யக்கூடியதை, தலைமை ஆசிரியராக செய்வது”)
- நடத்துபவர் ஒவ்வொரு ஒலி / ஒளிக் காட்சிக்குப் பிறகும் சிறிது இடைவெளி விடுவது அவசியம். ஏனெனில் இது கலந்துரையாட வேண்டிய திரைப்படம் காட்டும் கருவி வழியாக கேள்விகள் கேட்கும்போது பங்குபெறுபவர்களுக்கு சிந்திக்க நேரம் கொடுக்கப்பட வேண்டும்.

## அமர்வு 4 : பள்ளித் தலைமையைப் புரிந்து கொள்வது : பன்முகச் சந்தர்ப்பங்களும், பயிற்சிகளும்

| அமர்வு 4 | 15.30 – 17.30 மணி | |
|---|---|---|
| **செயல்திறன்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்** |
| தனியாள் ஆய்விற்குப்பின் குழுவாக வேலை செய்வது | 120 | உண்மையான மாதிரி நிகழ்வுகளைப் பயன்படுத்தி, தங்களின் வழிகாட்டுதலுக்கான கற்றலுக்குத் தூண்டுகோலை உருவாக்குதல் |

## செயல்பாடு 4.1 : தனியாள் ஆய்விற்குப் மாதிரி நிகழ்வு பின்னர் குழுவாகப் பணி செய்வது

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திச் செல்வது ?

**செயல்முறை :** சிறு சிறு குழுவாக வேலை செய்வது


### ஆலோசனைக்கான வழிமுறைகள்

- 5 மாதிரிப் பாடங்கள், பங்குபெறுபவர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறது. (D1_S4_4.1 : தினம் 1 – கூட்டம் 4 – செயல்பாடு 4.1 – (பள்ளித் தலைமைக்கான மாதிரி நிகழ்வுகள்)
- மாதிரிப் பாடங்களைப் படிக்க, பங்குபெறுபவர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டும்.
- பங்குபெறுபவர்களை 5 குழுக்களாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவையும், ஒவ்வொரு மாதிரிப் பாடத்தில் கவனம் செலுத்தச் சொல்லவும். உறுப்பினர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட மாதிரிப் பாடத்தைப் படித்து, முடிவில் கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளை விவாதிக்கச் சொல்லவும்.

நாள்
1

### எதிரொலிக்கும் கேள்விகள்

- உங்கள் பள்ளியை நீங்கள் எப்படி வழிநடத்துகிறீர்கள் ?
- உங்களுக்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்திற்கு ஏற்ப உங்கள் பள்ளியை எவ்வாறு வழிநடத்த விருப்பப்படுகிறீர்கள் ?
- தனியாள் ஆய்வின் அடிப்படையில், பள்ளித் தலைமை பற்றிய உங்கள் புரிதலை மாற்றிக் கொள்ள விருப்பப்படுகிறீர்கள் ?
- இந்த அனைத்து தனியாள் ஆய்வுகளில் இருந்து நாம் பொதுவாகக் கற்றுக் கொள்வது என்ன ?
- தனியாள் ஆய்வில் பள்ளி மாற்ற உதவியாய் இருந்த பள்ளித் தலைமையிடம் உங்களுக்கு மிகவும் பிடித்தது என்ன ?





- அவர்களுக்கான சூழலில், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உபயோகித்த வெவ்வேறு பயிற்சிகள் என்ன ?

## நடத்துபவருக்கான குறிப்புகள்

- நடத்துபவர், தற்போதைய செயல்பாட்டை, முந்தைய அமர்வுகளோடு தொடர்புபடுத்தி, சில தலைமை ஆசிரியர்கள் – தலைவர்கள் போல் செய்யக்கூடியதைத் தலைவராக எவ்வாறு செய்துள்ளனர் என்பதை மாதிரி நிகழ்வுகள் வழியாக அறியச் செய்தல்.
- அனைத்து தனியாள் ஆய்வுகளையும் பங்குபெறுபவர்களுக்குக் கொடுக்கவும். ஏனெனில், அவர்களுக்கு மற்ற குழுக்களின் மாதிரி நிகழ்வுகளையும் அறிந்து கொள்ளுதல் அவசியம்.

## முக்கியத் தகவல்கள்


- பள்ளி என்ற நிறுவனம் இடம், வளம் – மனித வளம் மற்றும் பொருள் வளம், உள்ளுக்குள் கட்டமைப்பு, எதற்காக வேலை செய்கிறோம் என்ற நோக்கம் – இவை அத்தனையும் உள்ளடக்கியது. ஆகையால், பள்ளித் தலைமை ஆசிரியர் முக்கிய செயல்புரியும் அதிகாரியாகக் கருதப்படுகிறார்.
- பள்ளித் தேவைகளுக்கும் / சவால்களுக்கும் பதிலளிக்கும் தலைமையை, ஒவ்வொரு தனியாள் ஆய்வும் விளக்கிக் கூறுகிறது.
- வெவ்வேறு சூழ்நிலைக்கு ஏற்ப, வெவ்வேறு வழிகள் கடைபிடிக்கப்பட்டதை, மாதிரி நிகழ்வுகள் கூறினாலும், எல்லா பள்ளிகளும், ஏதாவது ஒன்றை அதிகமாகவோ, வித்தியாசமாகவோ செய்திருக்கிறது.

## கூடுதலாகப் படிக்க

- The facilitator urges the school heads to write daily journals starting from today towards the end of each day on what they learnt from the day? The school heads might want to read the module on "Educational Leadership: A Conceptual Framework", by Dr. Rashmi Diwan, that is available in the resources. (AD1_S4_4.1a: Day 1 – Session 4 – Activity 4.1 – Module on School Leadership Development)
- A power-point presentation on school leadership is also included to give a consolidated idea about school leadership. (Ad1_S4_4.1b: Day 1 – Session 4 – Activity 4.1 – power point presentation on School Leadership Development)

**குறிப்புகள்**

நாள்
1





நாள்
2

## தினத்தைப் பற்றிய மேற்பார்வை

| நாள் – 2 | | |
|---|---|---|
| அமர்வு | தலைப்பு | நேரம் (நிமிடங்கள்) |
| 1 | கற்றலுக்கான அமைப்பாகப் பள்ளியை பார்ப்பது | 120 |
| 2 | கற்றலுக்கான அமைப்பாகப் பள்ளியை புரிந்து கொள்வது | 120 |
| 3 | பள்ளி தொலைநோக்குப் பார்வையை உருவாக்குவது | 120 |

### அமர்வு 1 :கற்றலுக்கான அமைப்பாக பள்ளியை பார்ப்பது

| அமர்வு 1 | 10.00 – 12.00 மணி | |
|---|---|---|
| செயல்பாடுகள் | நேரம் (நிமிடங்கள்) | எதிர்க்கப்பட்ட விளைவுகள் |
| கற்றலுக்கான அமைப்பாக பள்ளியைப் பார்ப்பது | 120 | தலைமைப் பண்பு என்பது, அமைப்பு எதிர்நோக்கும் தேவைகள் / சவால்களுக்குப் பதிலளிப்பது என்றும் அப்போது தான் சிறப்பாக நற்பயனளிக்கும் விதத்தில் செயலாற்ற முடியும் என்பதையும் புரிந்து கொள்வது. |

## செயல்பாடு 1.1: கற்றலுக்கான அமைப்பாகப் பள்ளியைப் பார்ப்பது

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திச் செல்வது ?

**செயல்முறை:** சிறு குழுக்களாகப் பயிற்சி செய்வது, பின்னர் முழு அணியும் விவாதத்தில் ஈடுபடுவது

### ஆலோசனைக்குகந்த வழிமுறைகள்

- பங்குபெறுபவர்களுக்கு "கற்றல் அமைப்பு" என்ற சொற்றொடரை நடத்துபவர் அறிமுகப்படுத்துகிறார்.
- "கற்றல் அமைப்பு" பற்றிய காணொளித் திரை விளக்கவுரையை பங்குபெறுபவர்களுக்கு வழங்குதல் (D2 – S1_1.1a: தினம் – 2 – கூட்டம் – 1.1 – பவர்பாயின்ட் விளக்கவுரை "கற்றலுக்கான அமைப்பாகப் பள்ளியைப் பார்ப்பது")
- 8–10 நபர் கொண்ட சிறிய குழுக்களாகப் பிரிந்து, இந்த சொற்றொடரைப் பற்றித் தாம் புரிந்து கொண்டதை 10 நிமிடத்திற்கு விவாதிக்கச் சொல்லவும்.
- தாள்களைக் கொடுத்து, விளக்கவுரையின் போது எழுப்பப்பட்ட பல்வேறு கேள்விகள் பற்றி தாளில் குறித்துக் கொள்ளச் சொல்லவும்.

- அவர்கள் கற்றல் நிறுவனமாகப் பள்ளியைக் காணும்போது என்ன பார்ப்பார்கள், கேட்பார்கள், உணருவார்கள் ?
- வெவ்வேறு குழுக்களிலிருந்து, சில செய்திகளை எடுத்து, வெள்ளைப் பலகையில் எழுதவும்.
- கற்றல் நிறுவனத்தின் பல்வேறு காட்சி நிலைகளை விவாதிக்கும், பவர்பாயின்ட் விளக்கவுரையை, பங்குபெறுபவர்களுக்குக் கொடுக்கவும்.
- நிறுவனம் பற்றிய கருத்துக்களை வெவ்வேறு கோணத்தில் பங்குபெறுபவர்களோடு உரையாடி விவாதிக்கவும்.
- தனிப்பட்ட வெற்றி, மனதளவில் மாதிரி உருவம் அமைத்தல், பகிர்ந்து கொள்ளப்பட்ட தொலைநோக்குப் பார்வையோடு குழுவாகச் செயலாற்றுவது மற்றும் அமைப்பாக யோசிப்பது. இவைதான் கற்றல் என்பதில் முக்கியத்துவத்தை இந்த வார்த்தைகளை உபயோகப்படுத்தாமலேயே, விவாதிக்கலாம்.

## பிரதிபலிக்கும் கேள்விகள்

- இவற்றில் எதையாவது உங்கள் பள்ளியோடு தொடர்புபடுத்த முடியுமா ?
- இந்தப் பயிற்சி, உங்கள் பள்ளியைக் கற்றல் அமைப்பாக உருமாற்ற, யோசிக்க உதவியதா ?

## நடத்துபவருக்கான குறிப்புகள்


- பீட்டர் சென்ஜி எழுதிய கற்கும் பள்ளிகள் என்ற புத்தகத்திலிருந்து சில பகுதிகளைப் பங்குபெறுபவர்களுக்கு விநியோகிக்கவும். (D2 – S1_1.1a: தினம் – 2 – கூட்டம் – 1 செயல்பாடு 1.1 – பீட்டர் சென்ஜி எழுதிய பள்ளிகளிலிருந்து கற்கப்படுவது 'கற்கும் பள்ளிகள்' என்ற புத்தகத்திலிருந்து சில பகுதிகள்)
- பவர்பாயின்ட் விளக்கவுரை கற்றல் அமைப்பின் தொகுப்பாக வழங்கப்பட்டவை மற்றும் பிரசுரங்கள் இணையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

நாள்
2

### முக்கியத் தகவல்கள்

கற்றல் அமைப்பு எப்பொழுதும் அனைவரது தனிப்பட்ட வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது. அனைவரது கருத்துகளையும் அறிந்து கொண்டு பகிர்ந்து கொள்ளப்பட்ட தொலைநோக்குப் பார்வையுடன், அணியாக பணியாற்றவும் தொடங்குகிறது. தனிப்பட்டவர்களை பற்றி சிந்திக்காமல், நிறுவனம் பற்றி அதிகமாகச் சிந்திக்கச் செய்து முழுமை பெறுகிறது.





## அமர்வு 1 :கற்றலுக்கான அமைப்பாக பள்ளியை பார்ப்பது

| அமர்வு 2 | 12.15 – 13.15 மணி (14.15 – 15.15 மணி) | |
|---|---|---|
| செயல்பாடுகள் | நேரம் (நிமிடங்கள்) | எதிர்க்கப்பட்ட விளைவுகள் |
| கற்றல் நிறுவனத்தின் பகுதிகள் மற்றும் பிரதிபலிப்புகள் | 70 | கற்றல் நிறுவனத்தின் தன்மைகளைப் புரிந்து கொள்ள முயற்சித்து, அதைப் பள்ளியின் உண்மையான சூழலோடு தொடர்புபடுத்துவது மற்றும் பிரதிபலிப்பது. |
| பகிர்ந்து கொள்ளும் பயிற்சி | 50 | |

நாள்
2

## செயல்பாடு 2.1: கற்றலுக்கான அமைப்பின் முக்கிய பகுதிகள்

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திச் செல்வது ?

**செயல்முறை:** முழு அணியாக விவாதிப்பது

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- தினம் 1, அமர்வு –4இல் அறிமுகப்படுத்தப்பட்ட தனியார் ஆய்விலிருந்து முக்கியமாக கற்றுக் கொண்ட சிலவற்றை, நடத்துபவர் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்.
- கற்றல் அமைப்பின் 5 முக்கிய தன்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவர, நடத்துபவர், தனியாள் ஆய்விலிருந்து உதாரணங்களை எடுத்துக் கொள்கிறார். இதை, முந்தைய கூட்டத்தில் செய்த பவர்பாயின்ட் விளக்கவுரையோடு தொடர்புபடுத்துகிறார்.
- இந்த முக்கிய தன்மைகளை வெளிக்கொண்டுவர, தாங்கள் தங்கள் சொந்த அனுபவங்களை நடத்துபவர், குழுவினரோடு பகிர்ந்து கொள்ளச் சொல்கிறார்.

### எதிரொலிக்கும் கேள்விகள்

- **தனிப்பட்ட வெற்றி**
  - உங்கள் பள்ளியில், சென்ற ஆண்டில், என்ன புதிய கற்றல் நடந்திருக்கிறது ?
  - புதிய கற்றலை உங்கள் பள்ளியில் கொண்டுவர, கற்றலை உபயோகிக்க மக்களை மூலதனமாகக் கொண்டுள்ளீர்களா ?
  - உதாரணமாக, உங்கள் பள்ளியில் CCE தொடங்கவிருக்கிறது. ஆனால் நீங்களும், ஆசிரியர்களும், CCE–யோ அல்லது அதன் செயலாக்கத்தையோ நம்புகிறீர்களா அல்லது CCE–ஐ முழுமையாகப் புரிந்து கொள்ள தயாராகி இருக்கிறீர்களா ?
- **மனதளவில் மாதிரி உருவம் அமைத்தல்**
  - மாற்றத்தை தடுக்கக்கூடிய எந்த மாதிரியான உங்களின் அனுபவங்களை அடையாளம் கண்டு கொண்டிருக்கிறீர்கள் ?


- உதாரணமாகப் பள்ளிக்குச் செல்வதில் ஒரு சிறப்பும் இல்லை என்று கருதுவதால், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை.
- தனியாள் ஆய்வு–4இல் கூறப்பட்டிருக்கும் பீல் (Bheel) சமூகம், மனதளவில் மாதிரி உருவம் அமைத்தல் கேள்வி கேட்கப்பட்டு, மாற்றம் ஏற்பட்டதற்கான உதாரணம்.

- **பகிர்ந்து கொள்ளப்பட்ட தொலைநோக்குப் பார்வை**
  - பள்ளி சார்ந்த பிரச்சனைகள் பற்றி, கடைசியாக, உங்கள் ஆசிரியர்களோடு எப்போது உரையாடி இருக்கிறீர்கள் ?
  - கல்வி ஆண்டின் இறுதிக்குள், பள்ளி அடைய வேண்டியதை நீங்களும் உங்கள் ஆசிரியர்களும் ஒரே மாதிரியாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்களா ?
- **குழுவாகக் கற்றுக் கொள்வது**
  - ஒவ்வொரு ஆசிரியரும், தங்கள் தனிப்பட்ட திறனை வளர்த்துக் கொள்ள உதவும் வாய்ப்புகளுக்கு ஆதரவு தரும் விதத்தில், பள்ளியை வழிநடத்துபவராக என்ன செய்கிறீர்கள் ?
  - சகப் பணியாளர்களைப் பற்றி அறிந்து கொள்ள, எப்போது கடைசியாகத் திட்டமிட்டீர்கள் ?
- **அமைப்பாக யோசிப்பது**
  - நீங்கள் இல்லாதபோது, பள்ளி நடக்க, என்ன மாற்றங்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறது ?
  - மக்களைச் சாராத மாற்றத்தில் கவனம் செலுத்தவும்.

## முக்கியத் தகவல்கள்

- கற்றல் அமைப்பு எப்பொழுதும் அனைவரது தனிப்பட்ட வளர்ச்சியில் கவனம் செலுத்துகிறது. சம்பந்தப்பட்டவரின் சிந்தனைகளைப் பரிசீலிக்கிறது, மற்றும் பகிர்ந்து கொள்ளப்பட்ட தொலைநோக்குப் பார்வையுடனும், குழுவாகப் பணியாற்றவும் தொடங்குகிறது.
- பள்ளி, கற்றல் நிறுவனமாக இருக்க வேண்டுமானால் பகிர்ந்து கொள்ளப்பட்ட இலக்குகள் கொண்டதாகவும், ஒருங்கிணைந்த கற்பித்தல் மற்றும் கற்றல் சூழலை உருவாக்குவதாகவும், துவங்குவதையும், இடருக்குட்படுவதையும் ஊக்குவிப்பதாகவும், பள்ளியில் நடக்கும் பணிகளை வழக்கமாக மதிப்பீடு செய்வதாகவும், நல்ல பணிகளை கண்டறிந்து, வலுவூட்டுவதாகவும், தங்கள் மக்களுக்குத் தொடர்ந்த தொழில் முன்னேற்றம் அடைய வாய்ப்புகளை உருவாக்குவதாகவும் இருத்தல் அவசியம்.






## செயல்பாடு 2.2: வழிநடத்தும் பயிற்சிகளைப் பகிர்ந்து கொள்ளுதல்

### செயல்பாட்டை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது ?

**செயல்முறை :** முழு அணி

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- 5 தன்மைகளில், ஏதேனும் ஒன்றின் அடிப்படையில், தங்கள் பள்ளியில் தொடங்கவிருக்கும் வழிநடத்தும் பயிற்சி பற்றி, பங்குபெறுபவர்கள் சிலரை, நடத்துபவர் பகிர்ந்து கொள்ளச் சொல்கிறார்.



- பங்குபெறுபவர்கள், தங்கள் பயிற்சிகளைப் பகிர்ந்து கொள்வதை, நடத்துபவர் 5 வெவ்வேறு வரைபடத் தாள்களில் (ஒவ்வொரு யோசனைக்கும் ஒவ்வொன்று) எனக் குறித்துக் கொள்கிறார். இவை, உருவாக்கப்படும் தொலைநோக்குப் பார்வையில் நாள் 9 மற்றும் 10இல் பயன்படும்.

## அமர்வு 3: தொலைநோக்குப் பார்வையை உருவாக்குதல்

| **அமர்வு 3** | **15.30 மணி** | **17.30 மணி** |
|---|---|---|
| **செயல்கள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்** |
| என் பள்ளிக்கான என்னுடைய தொலைநோக்குப் பார்வை | 100 | பள்ளிக்கான தொலைநோக்குப் பார்வையையும், அதைச் செயல்படுத்த, தலைவராகப் பயணிக்க உதவுதல். |
| பிரதிபலிப்பை ஒருங்கிணைப்பது | 20 | 2 நாட்களுக்கான கற்றலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருங்கிணைப்பது. |

நாள்
2

## செயல்பாடு 3.1: என் பள்ளிக்கான என்னுடைய தொலைநோக்குப் பார்வை

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** தனிநபர் பயிற்சி – சிறு குழு விவாதம் – தனிநபர் பயிற்சி

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- பங்குபெறுபவர்களுக்கு வரைபடத் தாள்கள், வரைபட பேனாக்கள், மெழுகு வரைபட பேனாக்கள் மற்றும் பள்ளியைப் பற்றி, மாற்று சிந்தனைக்குச் சுதந்திரம் கொடுக்கிறார்கள்.
- உங்கள் பள்ளியின் எதிர்காலத்தை யோசித்து, வரைபடத்தாளில் வரையவும்.
- உங்கள் வரையும் திறன் பற்றி கவலைப்பட வேண்டாம். வரைய முடியவில்லை எனில், எழுதவும்.
- பள்ளியின் பல்வேறு நிலைகளைப் பள்ளிச்சூழல், சுற்றுச்சூழல், வகுப்பறை, கற்பித்தல்–கற்றல் மற்றும் உறவுகள் போன்ற தொட்டுணர முடியாத நிலைகளை கருத்தில் கொள்ள முயற்சிக்கவும்.
- கீழ்க்கண்டவற்றை, உங்கள் குழு உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.
  - இந்த மாற்றங்களைப் புழக்கத்தில் கொண்டு வரத் தேவையான வழிமுறைகள் – அவைகளை மிக விவரமாகவும், குறிப்பாகவும் தயாரிக்கவும்.
  - குறுகிய கால மற்றும் நீண்ட கால இலக்குகள் – எவ்வளவு காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்கவும்.

- தொலைநோக்குப் பார்வையைச் செயலாக்க, அவர்கள் எந்த மாதிரியான வழிகாட்டுதலைக் கொடுக்க நினைக்கிறார்கள் என்பதைக் கற்பனை செய்து பார்க்கவும்.

## நடத்துபவருக்கான குறிப்புகள்

- **சிந்தனையைத் தூண்டக்கூடிய கேள்விகள் மூலம் நடத்துபவர் குறிப்புகள் கொடுக்கலாம்**
  - வரக்கூடிய 5 வருடங்களில், உங்கள் பள்ளியை எப்படி பார்க்க விரும்புகிறீர்கள் ?
  - பள்ளியின் எந்த பகுதிகளை உருமாற்ற விரும்புகிறீர்கள் ?
  - சமூகம், ஆசிரியர்–மாணவர், ஆசிரியர்–பள்ளித் தலைமை ஆசிரியர் – இவர்களின் உறவு, எதிர்காலத்தில் எப்படி இருக்கும் ?
  - கற்பித்தல்–கற்றல் சூழல் உங்கள் பள்ளியில் எவ்வாறு இருக்கும் ?
- இது ஒரு சிந்தனை உருவாக்க பயிற்சிதான். பங்குபெறுபவர்களைச் சுதந்திரமாக யோசிக்கவும், விவாதிக்கவும், நடத்துபவர் ஊக்குவிக்க வேண்டும்.
- இன்னும் தெளிவாகக் கீழ்க்கண்ட அட்டவணையைப் பயன்படுத்தலாம்.

| **பணியாளர்களுக்காகவும், மாணவர்களுக்காகவும், என் பள்ளியை எச்சூழலில் நல்ல இடமாக மாற்ற விரும்புகிறேன்.** | **எந்தக் குறிப்பிட்ட வழிமுறைகளைத் தேர்ந்தெடுப்பேன்** | **எப்போது** | **என் பணியாளர்களிடம் எந்தவித மாற்றத்தை எதிர்பார்க்கிறேன்.** | **மாணவர்களிடம் எந்தவித மாற்றத்தை எதிர்பார்க்கிறேன்.** |
|---|---|---|---|---|
| மாணவர்களுக்குப் பயமற்ற சூழலை உருவாக்கியது | • பணியாளர்களுடன், வகுப்பறைச் சூழலை எவ்வாறு மாற்றுவது என்று விவாதிக்கவும்.<br>• மாணவர்களுடன், வகுப்பை எவ்வாறு மேலும் தோழமையுடன் மாற்றுவது என்று விவாதிக்கவும்.<br>• அவரவர்களுக்கான தனித்தன்மையை உருவாக்குவதில், பணியாளர்களையும், மாணவர்களையும் பங்கேற்கச் செய்வது | அடுத்த பருவம் (ஜூன் மாதம் பள்ளி திறந்த பின்) | • மாணவர்களோடு குழுக்களாக உட்காருவது<br>• வகுப்பிற்கு உள்ளேயும், வெளியேயும் தொடர்பு வைத்துக் கொள்வது<br>• தோழமையோடு அவர்களுடன் விளையாடுவது<br>• மாணவர்கள் கேள்வி கேட்கவும், செயல்படவும், தொடர்பு கொள்ளவும், கற்கவும் போதிய வாய்ப்புக் கொடுப்பது<br>• மாணவர்களின் சந்தேகங்களைக் கேட்பது | |
| அணியாக செயல்படுவது | | | | |
| செயல்களில் கட்டுப்பாட்டுடன் இருப்பது | | | | |
| உள்ளடக்கிய சூழல் | | | | |
| மகிழ்ச்சியான கற்பித்தல் கற்றல் | | | | |

நாள்
2





### முக்கியக் குறிப்புகள்

- தொலைநோக்குப் பார்வை உருவாக்கம் என்பது பார்க்காததைப் பார்ப்பது மற்றும் அதைச் செயலாக்குவதே.

## செயல்பாடு 3.2: நாள் 1 மற்றும் 2இல் கற்றதைப் பிரதிபலிப்பது

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திச் செல்வது ?

**செயல்பாடு :** தனிப்பட்ட பயிற்சி

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்


- நடத்துபவர், கீழ்க்கண்ட 3 கேள்விகளைப் பலகையில் எழுதி, பங்குபெறுபவராக பதில்களை எழுதி, நடத்துபவரோடு விவாதிக்கச் சொல்கிறார்.
    - நான் என்ன கற்றுக்கொண்டேன் ?
    - என் தனிப்பட்ட செயல் குறிப்புகள் என்ன ?
    - என் பள்ளியில், வழிநடத்துவதை உருவாக்க, நான் என்ன செயல்பாடுகளை உபயோகிப்பேன்.
- நடத்துபவர், பதில்களைப் படித்துவிட்டு, பங்குபெறுபவர்களிடம் திருப்பிக் கொடுத்து விடுகிறார்.

### நடத்துபவருக்கான குறிப்புகள்

இது நடத்துபவருக்கு, கடந்த 2 நாட்களின் கருத்துக் குறிப்பே. வரும் 8 நாட்களில், எந்தப் பகுதியில் கவனம் செலுத்த வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறது.


## குறிப்புகள்

நாள்
2



## முக்கிய பகுதி – 2

# தன்னை வளர்த்துக் கொள்ளுதல்




## நாள் 3

## முக்கிய பகுதி – 2 –தன்னை வழிநடத்துதல்
## நடத்துபவர் சரிபார்க்க வேண்டிய பட்டியல்

### நாள் – 3

**கீழ்க்கண்டவற்றைப் பெற்றுக் கொண்டீர்களா ?**

1. வளத்தின் பெயர் "இந்தியாவை வழிநடத்துவது" – படக்காட்சி (D3-S1-1.1) ☐
2. பண்புகளைப் பரீட்சிக்கும் கருவிகளின் கையேடு (D3-S1-1.2) ☐
3. "முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்துதல் மற்றும் நேரத்தை திட்டமிடுதல்" (D3-S2-2.3) பற்றிய கையேடு ☐
4. "அவசரமான முக்கிய நேர திட்டமிடும் சட்டம்" (D3-S2-2.3) ☐
5. "தொழில் சார்ந்த முன்னேற்றத்தைத் தொடர்தல்" (D3-S3-3.1) பற்றிய கையேடு ☐

**கீழேத் தரப்பட்டுள்ளவை உள்ளனவா என உறுதி செய்து கொள்ளவும்.**

1. வரைபடங்கள் ☐
2. வரைபடப் பேனாக்கள் ☐
3. எழுதப்படாத தாள்கள் ☐
4. மடிக்கணினி / கணினி ☐
5. திரைப்படம் காட்டும் கருவி ☐
6. காணொளித் திரை விளக்கவுரை – கையேடாக ☐
7. ஒலிபெருக்கி (ஒலி சரியாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்) ☐

நாள்
3





## நாள்
## 3

### அறிமுகம்

பள்ளித் தலைவர்களுக்குள் – திறமை, தனித்தன்மை மற்றும் சிறப்புகள் பற்றிய நேர்மறையான சுய எண்ணத்தை உருவாக்குவதே, இந்தப் பகுதியின் கவனமாகும். தொடர்ந்து கற்றல் மற்றும் தன்னையும், மற்றவர்களையும் வளர்ச்சியடையச் செய்ய, வழிநடத்துபவரின் முக்கிய பங்கைப் புரிந்து கொள்வதன் மூலம் பிரதிபலிப்பு மற்றும் தொடர்பு கொள்வதினால், சுய முன்னேற்றத்திற்கான இடத்தை உருவாக்குவதுதான் இதில், தன்னை முன்னிறுத்தி, துடிப்பான வழிநடத்தலை விளக்கிக் கூறுவதுதான், தலைவர் முதலில் செய்ய வேண்டியது. சுயமாக கற்றலின் வழியாகப் பிரதிபலிப்பைப் பயிற்சி செய்வதன் மூலம், இதற்கான திறனை உருவாக்க முடியும். நம்பிக்கை என்னவெனில், திறன் அடிப்படையில் பிரதிபலிப்பைப் பயிற்சி செய்வதன் மூலம், இதற்கான திறனை உருவாக்க முடியும். நம்பிக்கை என்னவெனில், செயல் அடிப்படையில் பிரதிபலிப்பைப் பயிற்சி செய்வதன் மூலம், விரும்பிய மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான சக்தி, பள்ளித் தலைவருக்குக் கிடைக்கிறது. இந்த சவால்களை சந்திக்கும்போது என்னால் முடியும் என்ற மனப்பாங்கை உருவாக்குகிறது. தலைவரானவர், மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் தவிர்க்க முடியாத தன் பங்களிப்பை நிகழ்த்துகின்றார்.

### தினத்தைப் பற்றிய மேற்பார்வை

| நாள் – 3 | | |
|---|---|---|
| **அமர்வு** | **தலைப்பு** | **நேரம் (நிமிடங்கள்)** |
| 1. | என் வழிகாட்டுதல் முறையைப் புரிந்து கொள்ளுதல் | 120 |
| 2. | முக்கியமான அவசர (சட்டம்) கட்டமைப்பு | 150 |
| 3. | தொடரும் தொழில் சார்ந்த முன்னேற்றம் | 90 |

## அமர்வு 1 : என் வழிகாட்டுதல் முறையை புரிந்து கொள்ளுதல்

| அமர்வு 1 | 09.30 – 11.30 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| இந்தியாவை வழிநடத்துவது பற்றிய படக்காட்சி மற்றும் கேள்விகள் கேட்பது | 20 + 30 | உறுதியான நம்பிக்கையை உருவாக்குதல் மற்றும் பள்ளி மாற்றத்திற்கு உறுதி செய்வது |
| “நான் தற்சமயம் பள்ளித் தலைவராக செயல்படுவது” பற்றிய பிரதிபலிப்பு – பண்புகளைத் தேர்வு செய்யும் கருவிகளின் கையேடு | 35 | |
| பள்ளி மாற்றத்திற்கான செயல்முறை | 20 | |

## செயல்பாடு 1.1 : இந்தியாவை வழிநடத்துவது பற்றிய படக்காட்சி மற்றும் கேள்விகள் கேட்பது


### போன்ற செயல்பாட்டை எவ்வாறு நடத்துவது ?

**செயல்முறை :** படக்காட்சி மற்றும் அதன் பிரதிபலிப்பு

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்


நாள்
3

- கூட்டத்தை அறிமுகம் செய்து, படக்காட்சியைக் போட்டுக் காண்பிக்கவும். நடத்துபவர், பிரச்சனைகளைத் தீர்க்கும் திறன் பற்றிய குறும்படத்தை காண்பிக்கிறார். இந்த நிகழ்ச்சியில், பிரச்சனையைத் தீர்க்க சிறு பையனுடன் இணைந்து, ஒன்றாகச் செயல்பட்டு அனைவரும் பிரச்சனையைத் தீர்க்கின்றனர். மொழி தடை இருந்தாலும், படக்காட்சியின் சாராம்சத்தைக் கிரகித்துக் கொள்ள முடியும். படக்காட்சி மீண்டும் ஒரு முறை காட்டப்படுகிறது. தேவையெனில் இரண்டு முறை காட்டப்படுகிறது. ஏனெனில் ஆரம்பக் கட்டத்தில் மையக் கருத்தைக் கிரகித்துக் கொள்ள அதிக நேரம் எடுக்கலாம். (D3_S1_1.1 தினம் 3 – கூட்டம் 1 – செயல்பாடு 1.1, இந்தியாவை வழிநடத்துவது பற்றிய படக்காட்சி மற்றும் கேள்விகள் கேட்பது)
- படக்காட்சியிலிருந்து கற்றுக் கொள்வதற்குக் குழுவாகப் பிரதிபலித்தல். நடத்துபவர், குறிப்பிலுள்ள கருத்துக்களை விவாதத்தை தொடங்குவதன் மூலம் சேகரிக்கிறார். சில கருத்துக்களை அவ்வப்போது படக்காட்சியை தற்காலிகமாக நிறுத்தி, வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறார்.



### எதிரொலிப்பு கேள்விகள்

- படக்காட்சியை பற்றி என்ன நினைக்கிறீர்கள் ?
- படக்காட்சி எவ்வித உணர்ச்சியை உண்டாக்கியது ? (சிந்தனை அல்ல, ஆனால் உணர்ச்சி!)
- படக்காட்சி புரியும்படியாக இருந்ததா ?




நாள்
3

- முழுப்படக்காட்சியின் கருத்து என்ன ?
- (ஒரு அரசியல்வாதி இருப்பதை நாம் பார்க்க முடிகிறது. அவருக்குக் காவலாளி பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது). ஹிந்தியில் உரையாடல் நடந்தது. அதன் பொருள், ஐயா! மறுபக்கத்தில் உங்களுக்குக் கார் தயாராக வைக்கப்பட்டுள்ளது!
- அதேபோல், ஒரு சிறு பெண் ஆட்டோவில் உட்கார்ந்து, அலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறாள் – போக்குவரத்து நெரிசலில் மாட்டிக் கொண்டதனால், நான் இந்த நாட்டை வெறுக்கிறேன் என்று கூறிக் கொண்டிருக்கிறாள் !
- பையனுக்கு ஆதரவாக வந்தவர்கள் அனைவரும் குழந்தைகளே என்பதை கவனித்தீர்களா ! இது ஏன் நடக்கிறது என்று யோசித்தீர்களா ?
- பாட்டின் சாராம்சம் என்னவெனில் – நீங்கள் முதல் அடியை எடுத்து வையுங்கள், நாடு முழுவதும் உங்களைப் பின்பற்றி, உங்களோடு சேர்ந்து பயணம் செய்யும். அதோடு, நீங்கள் நடந்தாலொழிய, நாடு மாற்றத்திற்கானமுதல் அடியை எடுத்து வைக்காது.

## தனிப்பட்ட பிரதிபலிப்பு மற்றும் பகிர்தல்

- நடத்துபவர், பள்ளித் தலைமை ஆசிரியர்களை, இந்தக் கேள்வி பற்றி சில நிமிடங்கள் சிந்தித்து, அவர்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ள சொல்கிறார். இங்கே பகிர்தல் என்பது, ஒவ்வொருவரும் தங்கள் சிந்தனைகளை மட்டும் பகிர்ந்து கொள்ளுதல், தீர்வுகளைக் கண்டுபிடிப்பதில் கவனம் செலுத்துவதில் அல்ல. படக்காட்சியைப் பார்த்து விட்டு, கீழ்க்கண்ட கேள்விக்குத் தங்களை எவ்வாறு பார்க்கிறார்கள் என்று பங்குபெறுபவர்கள் பகிர்தல் முறையை, நடத்துதுவர் ஆரம்பித்து வைக்கிறார்.




## நடத்துபவருக்கான குறிப்புகள்

- பங்குபெறுபவர்கள் படக்காட்சியை 2–3 முறை பார்க்க வேண்டியிருக்கும். முதல் முறை பார்க்கும்பொழுது, பொதுவான கருத்து கிடைக்கும். 2வது அல்லது 3வது முறை பார்க்கும் பொழுதுதான், நுட்பமான விஷயங்கள் உள்வாங்கப்படுகிறது. ஆதலால், படக்காட்சி பார்ப்பதற்கு 6 நிமிடங்கள் ஒதுக்கப்படுகிறது.
- படக்காட்சியின் கதை பின்வருமாறு

## மர விளம்பரம்

இந்தியாவை வழிநடத்தும் பிரசார விளம்பரத்தில், ஒரு சிறு குழந்தை, போக்குவரத்து இடையூறாக இருக்கும் சாலையில் விழுந்திருக்கும் மரத்தை துணிச்சலாக அகற்ற முற்படுவது பின்னணியில் தேசிய கீதம் இசையாக ஒலிக்கிறது.

## தயார் செய்யப்பட்ட பகுதி

கூட்டம் மிகுந்த நகரத்துச் சாலை நடுவில் விழுந்து கிடக்கும் மரத்தினால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. இதுதான் காட்சி. அனைவரும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். காரில் இருப்பவர்கள் ஒலி எழுப்பி, ஒருவரையொருவர் சபித்து கொண்டிருக்கின்றனர். ஆனால் அனைவரும் ஒன்றும் செய்யாது இருந்து விட்டு, ஏதாவது நடக்கும் என்று காத்துக் கொண்டிருக்கின்றனர். சில காவலாளிகள் காரில் தூங்கிக் கொண்டிருக்கின்றனர். சிலர் மக்களைத் தள்ளிப் போகச் சொல்லி ஆணையிட்டுக் கொண்டிருக்கின்றனர். குழந்தைகள் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். காரிலிருப்பவர்கள், வெளியே வந்து நெரிசல் சீராக வெகுநேரம் ஆகும் என்பதை உணர்ந்து தாங்கள் செல்ல வேண்டிய இடத்துக்கு நடந்து செல்ல ஆரம்பிக்கின்றனர். ஒரு சிறு பையன், பேருந்தில் உட்கார்ந்து இந்தக் குழப்பத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் குழப்பமடைந்தாலும், முடிவில் கீழே இறங்கி, தீர்மானத்தோடு, காத்திருக்கும் கார்கள், பேருந்துகளை கடந்து, மரத்தை நோக்கிச் செல்கிறான். திடீரென மழை பெய்கிறது. ஒவ்வொருவரும் வண்டிகளில் ஏறிக் கொள்கின்றனர். அல்லது வீட்டினுள் சென்று விடுகின்றனர். அவன் தனியாக, மழையில் நனைந்து நிற்கிறான். ஆனால் ஏதாவது செய்ய வேண்டும் என்று தீர்மானத்தோடு, தன் வலிமை அனைத்தையும் ஒன்று திரட்டி, அம்மரத்தை நடு சாலையிலிருந்து தள்ளப் பார்க்கிறான். அவனின் தீர்மானத்தோடு கூடிய முயற்சிதான் அவனை சிலரின் பாராட்டுதலில் மையத்தில் வைக்கிறது. மெதுவாக மேலும், மேலும், மக்கள் அவனைப் பார்க்க ஆரம்பிக்கின்றனர். இறுதியில் அனைவரின் கவனமும் அவன்பால் திரும்புகிறது. குழந்தையின் முதல் முயற்சி, புரட்சியை உண்டுபண்ணுகிறது. போக்குவரத்து நெரிசலில் மாட்டிக் கொண்ட அனைவரும், மரத்தை நகர்த்தும் பணியில் இணைந்து கொள்கின்றனர். குறிப்பாகக் குழந்தைகள் தான் முதலில் சேர்க்கின்றனர். அவர்கள் சீருடை அணிந்த பள்ளி சிறுவர்கள் அல்லர். ஆனால் அவர்கள் தெரு பிள்ளைகள். உற்சாகத்தோடும், புன்சிரிப்போடும் தள்ளுகின்றனர். இது தொற்றுநோய் போல பரவி, பெரியவர்களும் சேர்ந்து கொள்கின்றனர். தயக்கமுடன் இருந்தவர்களும், குழு இயக்கத்தில் இணைகின்றனர். பலதரப்பட்ட மக்கள் ரிக்‌ஷா ஓட்டுபவர், சர்தார்ஜி, செருப்பணியாத குழந்தைகள் மற்றும் இளம் பெண் – ஒரே நோக்கத்துக்காக இணைகின்றனர். அவர்களின் ஒன்றுபட்ட முயற்சி, நோக்கத்தில், வெற்றி பெற வைக்கிறது.

சூரிய வெளிச்சம் மீண்டும் வருகிறது. புகைப்படக் கருவி மீண்டும் சரியான போக்குவரத்தைப் படம் பிடிக்கும் முன் நடக்கும் குழந்தைகளை, மிதிவண்டி, மூன்று சக்கர வாகனம் மற்றும் காரை படம் பிடிக்கிறது. அனைவரும் சந்தோஷமாக இருக்கிறார்கள். நனைந்த உடைகளை பிழிந்து அணிந்து கொள்கின்றனர். ஒருவரையொருவர் பாராட்டிக் கொள்கின்றனர். இப்போது தான் காவலாளி விழித்துக்கொண்டு என்ன நடந்தது என்று உணர்கிறார்.

செயல்பட்டவர்களின் படத்தோடு படம் முடிகிறது, ‘விளம்பரத்தின் முடிவில், ‘நாளைய தலைவர்களை, இன்று தேடுதல்’. ‘இந்தியாவை வழிநடத்தும் தேடல் தொடங்கப்பட்டு விட்டது’ என்ற வாசகம் வருகிறது.

நகர சூழலில், வித்தியாசங்கள் மேம்பட்டிருக்கும் நிலையில், ஒருங்கிணைத்தல் மற்றும் தேசிய ஒருமைப்பாடு அவசியமாகிறது.

இந்த விளம்பரம் உருமாற்றத்திற்கான பிரதிநிதியைக் காட்டுகிறது – இங்கே வழிகாட்டுபவர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஒரு சிறு பையன். தன்னைவிட கீழானவர்களில் சம வயதையொட்டியவர்கள் இவனைப் பின்பற்றுகிறார்கள். பின்னர் அனைத்து மக்களும் இவர்களை பின்தொடர்கின்றனர். மாற்றம், இளைய தலைமுறையை முதலில் தொடுகிறது, பின்னர் முதிய தலைமுறையையும் தொடுகிறது.

விளம்பரத்தின் உள்நோக்கு என்னவெனில், பெரும்பாலான மக்கள், எங்கும் வியாபித்திருக்கும் பொருளாதார அரசியல் சார்ந்த மற்றும் சமூக பிரச்சனைகள் பற்றி அறிந்திருக்கிறார்கள். ஆனால் யாரும் எதுவும் செய்ய விருப்பப்படவில்லை.

நாள்
3





## செயல்பாடு 1.2 : நான் பள்ளித் தலைமை ஆசிரியராகச் செயல்படுவது பற்றிய பிரதிபலிப்பு

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**நாள்**
**3**

**செயல்முறை :** தனிப்பட்ட பயிற்சி

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

“உங்கள் வழிநடத்தும் திறன் எவ்வளவு நன்றாக இருக்கிறது ?” என்ற பண்பை அறிந்து கொள்ளும் தேர்வை, பங்குபெறுபவர்கள் அனைவருக்கும் கொடுக்கிறார். நடத்துபவர் *(D3_S1_1.2 நாள் 3 – அமர்வு 1 – செயல்பாடு 1.2, நான் பள்ளித் தலைமை ஆசிரியராக நடிப்பது பற்றிய பிரதிபலிப்பு – வழிநடத்துதல் பண்பு தேர்வு)* நடத்துபவர், பள்ளித் தலைமை ஆசிரியர்களைச் சிறிது நேரம் எடுத்துக் கொண்டு, கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கச் செய்கிறார்.

### எதிரொலிக்கும் கேள்விகள்

- பள்ளியை நன்றாக நடத்துவதற்கு, உதவும் உங்கள் வலிமைகள் என்ன ?
- நீங்கள் கவனிக்கப்பட வேண்டிய, பள்ளியிலுள்ள பிரச்சனைகள் என்ன ? இதை உங்கள் குறைபாட்டோடு தொடர்புபடுத்தவும் மற்றும் அதையே வலிமையாக மாற்றுவது எப்படி என்று கண்டுபிடிக்கவும்.
- இந்த விவாதத்தின் அடிப்படையில், நான் தற்சமயம் பள்ளித் தலைமை ஆசிரியராக செயல்படுவதை நான் எப்படிப் பார்க்கிறேன் (மாற்றத்தை முயற்சிப்பவரா, உள்ளது உள்ளபடியே இருப்பதில் சந்தோஷப்படுபவரா, மாற்றங்கள் ஆரம்பித்து, தான் பின்பற்றுவதை விரும்புகிறவரா ? சிறப்பாக இருக்கிறது மாற்றம் வேண்டும் அல்லது வேறு ஏதாவதா ?)
- விவாதத்தின் அடிப்படையில் அந்த மாற்றங்கள் என்ன ? சிறியதா, பெரியதா – பள்ளியில் நான் முயற்சி செய்து பார்க்க விரும்புவது என்ன ?

## செயல்பாடு 1.3: பள்ளி மாற்றத்திற்கான செயல்முறை –

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திக் கொண்டு செல்வது ?

**செயல்முறை :** Reflection and Sharing by an exhibit

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- மேற்கண்ட கேள்விகளுக்கான பதில்களைச் சேகரித்த பிறகு, நடத்துபவர், ஒவ்வொரு பங்குபெறுபவருக்கும் வண்ணத் தாளைக் கொடுத்து, அதில் அவர்கள் பள்ளியில் கொண்டு வரவிருக்கும் ஒரு மாற்றத்தை எழுதச் சொல்கிறார். அது அவர்களின் பழக்கவழக்கமாக இருக்கலாம் அல்லது பள்ளியின் ஒரு செயலாக இருக்கலாம்.
- நடத்துபவர், பங்குபெறுபவர்களுக்கு சிந்திக்க நேரம் கொடுக்கிறார்.

  பங்குபெறுபவர்கள் எழுதுவது நடைமுறைப்படுத்தத் தக்கதா என உறுதி செய்து கொள்ள வேண்டும். அவை தெளிவில்லாததாகவும் இருக்கக்கூடாது. உதாரணமாக

நான் 'இப்போதிலிருந்து சரியாக சாப்பிடுவேன்'. 'இப்போது இருந்தே சத்தான உணவு சாப்பிடுவதில் அக்கறை எடுத்துக் கொள்வேன்'. இதைச் சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் இப்போதிலிருந்து, கண்டிப்பாகத் தினமும் ஒரு பழம் சாப்பிடுவேன்.

- அவரவர்களுடைய துண்டு காகிதத்தில் எழுதியதும், அதை அறிவிப்புப் பலகையில் காட்சியாக வைக்கிறார்கள்.
- பங்குபெறுபவர்கள், மற்றவர்களுடைய பதில்களைப் பார்த்து, ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டு, மற்றவர்களிடமிருந்து புதிய கருத்துக்களை எடுத்துக் கொள்ளுதல்.

## நடத்துபவருக்கான குறிப்புகள்

- மாற்றத்திற்கான – குறிக்கோள்கள் எளிமையானதாகவும், சிறியதாகவும் இருத்தல் அவசியம்.
- நோக்கங்கள், அவர்களுக்கு மிகவும் பிடித்ததாய் இருக்கலாம், அல்லது அவர்களுடைய அழுத்தத்தைக் குறைப்பதாகவும் இருத்தல் அவசியம். அது அவர்களைச் சில காலமாக தொந்தரவுக்குட்படுத்தியதாகவும் இருக்கலாம், அல்லது அவர்களுடைய அழுத்தத்தை குறைப்பதாகவும் இருக்கலாம்.
- ஒவ்வொருவரும், ஒரு வாக்குறுதியைப் பலகையில் எழுதுவதை உறுதி செய்து கொள்ளவும்.
- பலகையை வளையத்தின் நடுவில் வைப்பதை அனைவரும் பார்ப்பதனால் நிறைய ஆற்றல் உருவாகிறது. இதுதான் பயிற்சியின் முக்கிய நோக்கமும் முடிவுமாகும்.

## முக்கியத் தகவல்கள்

- பிரச்சனையைத் தீர்ப்பதற்கான கட்டமைப்பின் பயன்பாட்டை இந்தியாவை வழிநடத்துதல் படக்காட்சி வலியுறுததுகிறது.
- என் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றத்தை நான் அனுமதிக்கிறேனா? இல்லை, நான் துவங்குகிறேன் – (தலைமைப் பண்புகளைப் புரிந்து கொள்கிறேன்)
- **"உங்களுக்கு நீங்களே எடுத்துக் கொள்ளும் வாக்குறுதிதான்"** உங்களுக்கும் உங்கள் பள்ளிக்குமான மாற்றத்தின் பாதையில் – நீங்கள் எடுத்து வைக்கும் முதல் அடி.

நாள்
3

## அமர்வு 2 : பள்ளித் தலைமையாசிரியராக – முக்கியத்துவத்தின் அடிப்படையில், பணிகளை வரிசைப்படுத்துதல்

| **அமர்வு 2** | (11.45– 13.15 மணி), (14.15– 15.15 மணி) | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| தனிப்பட்ட பயிற்சி | 45 | இதை பள்ளி மாற்றத்திற்கான முயற்சிக்கு ஒரு கருவியாக உபயோகப்படுத்தவும். தங்கள் பங்கை எவ்வாறு செயல்படுத்த முடிகிறது மற்றும் தங்கள் நேரத்தை எப்படிச் செலவிடுவது என்பதையும் தெரிந்து கொள்கிறார்கள். |
| வழிநடத்துதலின் புரிதல் அடிப்படையில் கூட்டாக யோசிப்பது | 45 | |
| நேர மேலாண்மை கட்டமைப்பைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் | 60 | |





## செயல்பாடு 2.1 : நேர – மேலாண்மை பற்றி தனிப்பட்ட பயிற்சி

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** தனியாகச் செயல்படுதல்

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- இந்த செயலாக்கத் துண்டு பிரசுரங்களைப் பங்குபெறுபவர்களுக்கு விநியோகித்தல் (D3_S2_2.1: நாள் 3 – அமர்வு 2 – செயல்பாடு 2.1 – முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்தலுக்கான நேரத்தைத் திட்டமிடுதல்) முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்துதலுக்கான அச்சுவார்ப்புரு (Matrix) தனியாகத் தயாரிக்க, பங்குபெறுபவர்களுக்கு அதற்குரிய நேரம் கொடுக்கவும்.
- இங்கே, பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தாங்கள் ஈடுபடும் பணிகளையும், அவர்கள் இல்லாத போது, சக ஆசிரியர்கள் செய்யும் பணிகளையும் குறிப்பிட வேண்டும்.

**நாள்**
**3**

## செயல்பாடு 2.2: வழிநடத்துதலைப் புரிந்து கொண்டதன் அடிப்படையில் ஒன்று சேர்ந்து யோசிப்பது

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** பெரிய குழுவாக விவாதித்தல்

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

பள்ளித் தலைமையாசிரியர், பயிற்சியை முடித்த பிறகு, நடத்துபவர் விவாதத்தில் ஈடுபடுத்துகிறார்.

- நாள் 1 மற்றும் 2இல் விவாதிக்கப்பட்டது போல், வழிநடத்துபவராக, இயலச் செய்பவராக அவர் பங்காற்ற வேண்டும். இதன் மூலம், அவர்கள் பணியின் தரத்தை உயர்த்தவும் மற்றும் அவர்கள் நோக்கத்தை அடையவும் உதவுகிறார்.
- பள்ளித் தலைமை ஆசிரியராக இருப்பது, நிறைய பொறுப்புகளுடையது என்பதால், அவருக்குக் கொடுக்கப்பட்ட வேலைகள் மற்றும் செயல்பாடுகளைத் தனியாகச் செய்வது என்பது இயலாது. பள்ளித் தலைமை ஆசிரியர் பணியின் பெரும்பகுதி, மற்றவர்கள் மூலம் செயலை முடிக்க வைப்பதாகும். அப்படியெனில் – சரியான பாதை அமைப்பது நல்ல பழக்கவழக்கத்திற்கு மாதிரியாக இருப்பது, செயல்பாடுகளை நிர்வகிப்பது மற்றும் மற்றவர்கள் செயல்பட உதவுவது – இவற்றைச் செய்வதோடு – நற்பயனளிக்கும் விதத்தில் வேலையைப் பகிர்ந்து கொடுப்பது, தங்களுக்குத் தரப்பட்ட வேலைகளைத் தொழில் சார்ந்த தரத்தோடு செய்வதற்கு, தங்கள் ஆசிரியர்களை ஊக்குவிப்பது ஆகியனவும் தலைமையாசிரியரின் பொறுப்பாகும்.

## செயல்பாடு 2.3 : நேர நிர்வாகக் கட்டமைப்பைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் ஒருங்கிணைத்தல்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** இருவராக வேலை செய்வது மற்றும் பெரிய குழுவாக ஒருங்கிணைப்பது

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- பங்குபெறுபவர்களுக்கு, 2 பக்க துண்டு பிரசுரம் கொடுக்கப்படுகிறது. (D3_S2_2.3: நாள் 3 – கூட்டம் 2 – செயல்பாடு 2.3 – நேர நிர்வாகக் கட்டமைப்பைப் புரிந்து கொள்ளுதல்) இது நேர நிர்வாக கட்டமைப்பை விவரிக்கிறது.
- பங்குபெறுபவர்கள், தற்போது அமர்வு விதத்தின் அடிப்படையில் நடத்துபவர், அவர்களை இரண்டு பேர் கொண்ட குழுவாக பிரிக்கிறார்.
- குழு இரண்டிரண்டு பேராக அமர்ந்து, இந்த 2 பக்கத்தைப் படிக்கவும், இந்தக் கட்டமைப்பிற்குள், தங்கள் பணியை முயற்சிக்க வைக்கும் பயிற்சிக்கான நேரம் கொடுக்கப்படுகிறது. இந்த பயிற்சிக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கவும்.
- குழுக்கள் முயற்சி செய்த பிறகு, நடத்துபவர் ஒருங்கிணைந்த விவாதத்தை வைத்துக் கொள்ளலாம்.

### எதிரொலிக்கும் கேள்விகள்

- பயிற்சி, எவ்வளவு உபயோகமானதாக இருந்தது ?
- நேர நிர்வாகக் கட்டமைப்பு எப்படி இருக்கும் என்று அவர்கள் கற்றுக் கொண்டார்களா ?
- உங்கள் நேரம் எப்படிச் செலவிடப்படுகிறது என்பதை நிலைநாட்டுங்கள்
- உங்கள் பிரச்சனைப் பகுதிகளைக் கண்டுபிடியுங்கள்
- "அவசரமானது ஆனால் முக்கியமில்லாதது" மற்றும் "அவசரமில்லாதது மேலும் முக்கியமற்றது" – இவ்வாறு இடப்பட்ட வேலைகளைப் பகிர்ந்து கொள்வது.

நாள்
3


### நடத்துபவருக்கான குறிப்புகள்

இந்தச் செயல்பாட்டின்போது, 'கட்டமைப்பு' என்னும் மனக் கருத்தோடு போராடிக் கொண்டிருக்கும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு உதவி கொடுக்கப்பட வேண்டும்.

### முக்கியத் தகவல்கள்

- வழிநடத்துபவராகவும், தானே செய்பவராகவும் அவர் பங்காற்ற வேண்டும். இதன் மூலம் அவர்கள் பணியின் தரத்தை உயர்த்தவும் மற்றும் அவர்கள் நோக்கத்தை அடையவும் உதவுகிறார்.
- முக்கியத்துவத்தின் அடிப்படையில், இடப்பட்ட வேலைகளைப் பட்டியலிடுவது மிகுந்த சிரமம், ஏனெனில், அனைத்து வேலைகளும் முக்கியமானதே. ஆனால், பள்ளித் தலைமை ஆசிரியராக உங்களின் எந்தச் செயல்களில், மிகுந்த தாக்கம் இருக்கும். (அதாவது,





நீங்கள் மட்டுமே செய்யக்கூடிய வேலைகள், மற்றவர்கள் அதே தாக்கத்தோடு செய்யக் கூடிய வேலைகள் – இவற்றைப் பிரிப்பது)

- உங்கள் வேலைகளை மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க முயல்வது – முக்கியத்துவத்தின் அடிப்படையில் வேலையை முதன்மைப் பட்டியலிடுவது, உங்கள் நேரத்தை நிர்வகிப்பது மற்றும் நம்பத் தகுந்த தொடர்பை உருவாக்குவது – இவற்றின் ஆரம்பமாகும்.

நாள்
3

## அமர்வு3 : தொழில் சார்ந்த முன்னேற்றத்தைத் தொடர்தல்

| **அமர்வு 3** | 15.45– 17.00 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| சுய முன்னேற்றத் திட்டத்தை உருவாக்குதல் | 90 | ஒவ்வொரு பள்ளித் தலைமை ஆசிரியரும் சுய முன்னேற்ற திட்டத்தை உருவாக்குதல். |

## செயல்பாடு 3.1 : சுய முன்னேற்றத் திட்டம்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** தனிப்பட்ட பயிற்சி

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- நடத்துபவர், ஒவ்வொரு பங்கேற்பவருக்கும், கையேட்டைச் சுய கற்றலின் மூலப் பொருளாக விநியோகிக்கிறார். (D3_S3_3.1: நாள் 3 – அமர்வு 3 – செயல்பாடு 3.1 – தொழில் சார்ந்த முன்னேற்றத்தைத் தொடர்தல்).
- 90 நிமிடங்களுக்குத் தனிப்பட்ட பிரதிபலிப்பில், ஒவ்வொரு பள்ளித் தலைமை ஆசிரியரும் ஈடுபடுகிறார்.
- தங்களுக்கான சுய முன்னேற்றத் திட்டத்தை, ஒவ்வொரு பள்ளித் தலைவரும் உருவாக்குவதோடு, கூட்டம் நிறைவு பெறுகிறது.

### நடத்துபவருக்கான குறிப்புகள்

- இந்தப் பயிற்சியில், பள்ளித் தலைவர்கள் ஈடுபட்டிருக்கும்பொழுது, நடத்துபவர் சுற்றி வந்து, ஒவ்வொரு பங்குபெறுபவரிடமும் சிறிது நேரம் செலவிடுகிறார். இதன் மூலம், அவர்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதை உறுதி செய்து கொள்கிறார்.
- நடத்துபவர், பங்குகுபறுபவர் எழுதியதை மதிப்பீடு செய்கிறார். ஏதேனும் கவலைப்படும்படியாக இருப்பின், அதைப் பங்குபெறுபவரோடு விரிவாக விவாதித்தல்.


குறிப்புகள்

நாள்
3



## முக்கிய பகுதி – 3

# கற்பித்தல்–கற்றல் செயல்முறைகளின் நிலைமாற்றம்




**நாள்**

**4&5**

## முக்கிய பகுதி 3 – கற்பித்தல் கற்றல் செயல்முறைகளை நிலை மாற்றுதல் நடத்துபவர் சரிபார்க்க வேண்டிய பட்டியல் – தினம் 4&5

### நாள் 4

**கீழ்க்காணும் வளங்களை மறக்காமல் பெற்றுக் கொண்டீர்களா ?**

1. ‘டோடாசான்’–லிருந்து சில பகுதிகளின் கையேடு (D4-S1-1.1) ☐
2. பல்வேறு தத்துவ ஞானிகளின் மேற்கோள்கள் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை (D4-S1-1.2a) ☐
3. குழந்தைகளின் முன்னேற்றத் தேவைகள் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை (D4-S2-2.1) ☐
4. இளம் வரலாற்று ஆசிரியர்கள் பற்றிய படக்காட்சி (D4-S3-3.1) ☐
5. குழந்தைகளை மையமாகக் கொண்ட கற்பிக்கும் கலை பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை (D4-S3-3.2) ☐

**கீழ்க்காணும் வளங்கள் இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.**

1. வரைபடங்கள் ☐
2. வரைபடப் பேனாக்கள் ☐
3. எழுதப்படாத தாள்கள் ☐
4. மடிக்கணினி / கணினி ☐
5. திரைப்படம் காட்டும் கருவி ☐
6. பவர்பாயின்ட் விளக்கவுரை கையேடுகள் ☐
7. ஒலிபெருக்கிகள் (ஒலி பெருக்கிகள் சரியாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்) ☐

### நாள் 5

**கீழ்க்காணும் வளங்களை மறக்காமல் பெற்றுக் கொண்டீர்களா ?**

1. ஆசிரியர்களுக்குக் கருத்துக்கூறல் கொடுப்பது பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை (D5-S1-1.1) மற்றும் பயிற்றுபவர் மற்றும் அறிவுரையாளர் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை (D5-S2-2.1a) ☐
2. பயிற்றுபவர் மற்றும் அறிவுரையாளர் பற்றிய கருத்து தொகுப்பு பற்றிய துண்டு பிரசுரங்கள் (D5-S2-2.1b) ☐
3. பயன்படுத்தப்படாத இந்தியா பற்றிய படக்காட்சி துண்டுகள் (D5-S3-3.1a, D5-S3-3.1b, D5-S3-3.1c) ☐

**கீழ்க்காணும் வளங்கள் இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.**

1. வரைபடங்கள் ☐
2. வரைபடப் பேனாக்கள் ☐
3. எழுதப்படாத காகிதங்கள் ☐
4. மடிக்கணினி / கணினி ☐
5. திரைப்படம் காட்டும் கருவி ☐
6. பவர்பாயின்ட் விளக்கவுரை கையேடுகள் ☐
7. ஒலிபெருக்கிகள் (ஒலியின் தரம் சரியாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்) ☐



# நாள் 4

## அறிமுகம்

பள்ளியானது, ஆய்வு செய்யக்கூடிய இடம் மற்றும் கற்பனை வளம் மிக்க இடம் என்று புரிந்து கொள்வது மற்றும் வகுப்பறை செயல்முறைகளைக் குழந்தைகளை மையப்படுத்தி செய்வதன் மூலம், கற்பித்தல்–கற்றலை உருமாற்றுவதில் இந்தப் பகுதி கவனம் செலுத்துகிறது. இந்தப் பகுதியின் உள்நோக்கம், பள்ளித் தலைவர்களைக் கல்வியின் நோக்கத்தைப் புரிய வைப்பதாகும். மேலும், சுருக்கமாகக் குழந்தைகள் ஏன் பள்ளிக்கு வரவேண்டும் என்றும் புரிய வைப்பதாகும். இந்தப் பகுதி, குழந்தைகளின் முன்னேற்றத்திற்குத் தேவையானதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது மற்றும் பல்வேறு பரீட்சார்ந்த கற்பித்தல் செயல்முறைகள் மூலம், பள்ளித் தலைவர்களுக்குக் குழந்தைகளின் தேவை என்ன என்பதையும், உணர வைக்கிறது. குழந்தைகள் சார்ந்த கற்பிக்கும் கலை மற்றும் செயல்முறை சார்ந்த கற்றல் – இவற்றின் மீதும் கவனம் செலுத்தப்படுகிறது. வகுப்பறையைக் கவனிப்பது, ஆசிரியர்களுக்குக் கருத்துக்கூறல் சொல்வது மற்றும் அறிவுரையாளராக இருப்பது போன்ற கற்றலைக் கற்பிப்பதன் மூலம், பள்ளித் தலைவர்களின் திறனை வளர்ப்பதிலும் கவனம் செலுத்துகிறது. ஒவ்வொரு குழந்தையும், தனித்தன்மையுடனும், முக்கியமாகவும், மரியாதை கொடுக்கப்பட்டவராகவும் உணர்தல் மற்றும் தன்னைப் பற்றியும், சூழல் பற்றியும் புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வதற்காக பள்ளிக்கு வர ஊக்குவித்தல் –இவற்றை அடைய, கற்றலையும் கற்பித்தலையும் வழிநடத்த, பள்ளித் தலைவர்களை இயலச் செய்வதுதான் இந்த முக்கிய பகுதியின் இறுதியான நோக்கமாகும்.

## இன்றைய நாளின் – ஒரு மேற்பார்வை

| நாள் – 4 | | |
|---|---|---|
| அமர்வு | பெயர் | நேரம் (நிமிடங்கள்) |
| 1. | பள்ளியும் கற்றலின் நோக்கமும் | 90 |
| 2. | குழந்தைகள் முன்னேற தேவையானதைப் புரிந்து கொள்வது | 90 |
| 3. | குழந்தைகள் கற்பித்தல் கலையைப் புரிந்து கொள்வது | 90 |
| 4. | வகுப்பறையில், சுறுசுறுப்பான கற்றலை உபயோகிப்பது | 90 |

## அமர்வு 0 : இறுக்கம் தளர்த்தல்

| அமர்வு 0 | 09.30 – 10.00 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| கல்வி சார்ந்த வழிநடத்தலாகியத் தீவு | 30 | கல்வி சார்ந்த வழிநடத்துதலின் குணாதிசயங்களைக் கண்டுபிடித்தல் |

## செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?


**செயல்முறை :** இறுக்கம் தளர்த்தல் (குழுவாகச் செயல்படுதல்)

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

**5 பேர் கொண்ட குழுக்களாகப் பங்குபெறுபவர்களைப் பிரிக்கவும்.**

- வழிநடத்துதல் குணநலன்கள் பற்றிய கையேடு ஒவ்வொரு குழுவிற்கும் கொடுக்கப்படுகிறது. (அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது)
- ஒவ்வொரு குழுவும் ஒரு கற்பனை தீவில் மாட்டிக் கொண்டது போல், கற்பனை செய்து கொள்ள வேண்டும்.
- வெற்றிகரமான சகல கலைகளையும் சார்ந்த தலைவர்களாக வருவதற்கான 5 முக்கிய வழிநடத்தல் குணநலன்களைத் தேர்ந்தெடுப்பதுதான், நாகரீகத்திற்குத் திரும்பும் ஒரே வழி.
- ஒவ்வொரு குழுவும் 5 வெவ்வேறு குணநலன்களைத் தேர்ந்தெடுத்து, இவை வெற்றிகரமான கல்வி சார்ந்த தலைவர்களாக வருவதற்கு ஏன் உதவுகின்றன என்பதற்கு நம்பத்தகுந்த மாதிரியை உருவாக்குவது.
- தங்கள் வழிநடத்தும் குணநலன்கள், வெற்றிகரமாக அமைய ஏன் உதவுகின்றன என்பதற்கான நேர்மறை எண்ணங்களைக் கூற ஊக்குவிக்கவும்.
- ஒவ்வொரு குழுவும், ஒவ்வொருவரை தங்கள் நிலை பற்றி, நடத்துபவரிடம் சொல்ல தேர்ந்தெடுக்கிறது.
- அவர்களின் நம்பகத்தன்மை நடத்துபவரின் கையில்தான் உள்ளது. அவர்தான் முழுவதுமாகக் கேட்டு, குழுக்கள் இன்னும் பழமையில்தான் இருக்கிறதா அல்லது நாகரிகத்திற்குத் திரும்பி விட்டதா என்று தீர்மானிக்கிறார்.
- ஏதாவது ஒரு குழு, நம்பகத்தகுந்த முறையில் தங்கள் மாதிரியை உருவாக்கவில்லையென்று நடத்துபவர் தீர்மானம் செய்தால் அவர்கள் திரும்பவும் வழிநடத்தும் தீவிற்குச் சென்று, தங்கள் வாதத்தை வலிமைப்படுத்த வேண்டும்.
- ஒவ்வொரு குழுவிற்கும், விளக்கவுரையைத் தயாரிக்க 6 நிமிடங்கள் ஒதுக்கவும்.

நாள்
4





## எதிரொலிக்கும் கேள்விகள்

- இந்தப் பயிற்சியில் எது மிகவும் கடினமாக இருந்தது ?
- உங்கள் குழு, முதல் 5 குணநலன்களை எப்படி தேர்வு செய்தது ?
- மீதி குணநலன்களை எவ்வாறு அகற்றினீர்கள் ?
- குழு உறுப்பினர்களிடையே கலந்து பேசுதல் நடந்ததா ?
- உங்கள் தலைவரை எவ்வாறு தேர்ந்தெடுத்தீர்கள் ?

## நடத்துபவருக்கான குறிப்புகள்

இந்தப் பிரச்சனை தீர்க்கும் செயல்களில், பங்குபெறுபவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, கல்வி சார்ந்த தலைவராக இருக்க, எது முக்கியமான குணநலன் என்று தீர்மானிக்கிறார்கள். அவர்கள் தீர்வை, கலந்துரையாடல் மூலம் சரியென்று நிரூபிக்க வேண்டும்.

மாற்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய குணநலன்கள்

- **தொலைநோக்குப் பார்வை** : மாற்றத்தின் பிரதிநிதி, உற்சாகம், புதுமைக் காணல், இலக்கை உருவாக்குதல்.
- **உறவுகள்** : நன்றாகக் கேட்பவர், குழுவை உருவாக்குதல், அடுத்தவர் நிலையில் தன்னை வைத்து பார்ப்பது, மற்றவர்களைப் பாராட்டுதல், புரிந்து கொள்ளுதல், இரக்கம் காட்டுதல்.
- **அறிந்து கொள்ளுதல்** : இலக்கை அறிந்து கொள்ளுதல், தன்னைத்தானே அறிந்து கொள்ளுதல், சூழலை அறிந்து கொள்ளுதல், சமூகத்தை அறிந்து கொள்ளுதல்.
- **தொடர்ச்சியான முன்னேற்றம்** : புதுமைக் காணலை உள்ளடக்கியது
- வாழ்க்கை முழுதும் கற்றல், திறன்களை பயிற்றுவித்தல், விடாமுயற்சி
- **செயல்படுதல்** : தீர்வுகளை எடுப்பவர், விளைவுகளை மதிப்பிடுபவர், துணிந்து செயல்படுபவர், வலிமையான பணி, ஒழுக்கவியல், நற்பயனளிக்கும் விதத்தில் தொடர்பு கொள்பவர்.

கல்வி சார்ந்த தலைவருக்கு, ஏதேனும் ஒரு சரியான குணநலன் மட்டுமே இருக்க முடியாது. ஒரு பிரத்யேக குணநலன் மட்டும் ஏன் முக்கியமானதாக இருக்கிறது என்று குழுக்கள் உங்களுக்கு நம்பிக்கை வருமாறு செய்கிறதோ, அதை அடிப்படையாக வைத்துத்தான் உங்கள் தேர்வு அமையும்.

**நாள்**
**4**

### அமர்வு 1 : பள்ளியும் கல்வியின் நோக்கமும்

| அமர்வு 1 | 10.00–11.30 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்** |
| டோட்டோசான் புத்தகத்திலிருந்து சில பகுதிகளை படித்தல் (பக்கம் 1–11) | 90 | கல்வியின் நோக்கம் பற்றிப் புரிந்து கொள்ளுதல் |
| அந்தப் பகுதிகளைப் பற்றி விவாதித்தல் | | |
| கல்வியின் நோக்கம் பற்றிய பல்வேறு தத்துவ ஞானிகளின் மேற்கோள்களை விவாதித்தல் | | |
| கல்வியின் நோக்கம் பற்றிய விவாதித்து ஒரு முடிவுக்கு வருவது | | |

## செயல்பாடு 1.1 : டோட்டோசான் புத்தகத்திலிருந்து சில பகுதிகளைப் படித்தல் (பக்கம் 1–11)

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** தனியாகச் செயல்படுவது,கொடுக்கப்பட்ட டோட்டோ சான் புத்தகத்தின் பகுதிகளைப் படிப்பது

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

பங்குபெறுபவர்கள், கொடுக்கப்பட்ட டோட்டோ சான் புத்தகத்தின் பகுதிகளை மனதிற்குள் படிக்கிறார்கள். அதைத் தொடர்ந்து முழு அணி விவாதம் நடைபெறுகிறது. *(D4_S1_1.1 நாள் 4–அமர்வு 1 – செயல்பாடு 1.1 – டோட்டோ சான் புத்தகத்திலிருந்து கொடுக்கப்பட்ட பகுதிகளைப் படிப்பது)*

### எதிரொலிக்கும் கேள்விகள்

- கதையின் எந்தக் காட்சி நிலை உங்களை மிகவும் பாதித்தது ?
- டோட்டோ சான், எந்தவிதமான பெண் ?
- தாய்க்கும், மகளுக்குமான உறவு எத்தகையது ?
- குழந்தைகளைப் பற்றிய ஆசிரியர் கருத்திற்கும், தாயின் கருத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன ?
- ஆசிரியரின் எந்த எதிர்பார்ப்புகளை, டோட்டோசானால் உணர்ந்து கொள்ள முடியவில்லை ?
- குழந்தைகளின் எந்தத் தேவையை, அதன் முதல் பள்ளியால் உணரமுடியவில்லை ?
- குழந்தைகளின் தேவைகளைப் பற்றி, முதல் பள்ளியின் உணர்வுகளிலிருந்து என்ன கண்டுபிடித்தீர்கள் ?
- ஆசிரியரின் நடத்தையிலிருந்து, பள்ளியின் என்ன குணநலன்களைக் கண்டுபிடித்தீர்கள் ?
- டோட்டோசானிடம் என்ன சிறப்புக் குணநலன்களைக் கண்டீர்கள் ?
- அவளுடைய முதல் பள்ளி ஆசிரியரின் கல்வி நோக்கம் மற்றும் இரண்டாவது பள்ளித் தலைமை ஆசிரியரின் கல்வி நோக்கம் – எவ்வளவு வித்தியாசமானது.
- டோட்டோசான் போல், உங்கள் பள்ளியில் ஒரு குழந்தை இருந்தால், எவ்வாறு அக்குழந்தையுடன் தொடர்பு கொள்வீர்கள் ?

நாள்
4




### நடத்துபவருக்கான குறிப்புகள்

**கீழ்க்காணும் கருத்துக்களைப் பற்றி விவாதிப்பதில் கவனம் செலுத்தவும்.**

- ஆசிரியர் எப்போதும் சரியாகவே சொல்வார்.
- நல்ல மாணவன் என்றால், நிறைய செய்திகளை ஞாபகம் வைத்துக் கொண்டு திரும்பவும் சொல்வது.



- பாடப்புத்தகங்கள் மட்டுமே, குழந்தைகளுக்கு நிறைய அறிவைத் தரும் முக்கிய மூலக்கருவியாகும்.
- சிறந்த ஆசிரியர் என்பவர், வகுப்பில் மாணவர்களை விட அதிகம் பேசுபவர்.

## செயல்பாடு 1.2 : மேன்மையான மனிதர்கள் கூறிய கல்வி பற்றிய மேற்கோள்கள் பற்றி விவாதித்தல்

**செயல்பாடுகளை எவ்வாறு கொண்டு செல்வது ?**

**நாள்**
**4**

**செயல்முறை :** சிறிய மற்றும் முழு அணி செயல்பாடுகள்

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- பங்குபெறுபவர்களைச் சிறு குழுக்களாகப் பிரிக்கவும்.
- வெவ்வேறு மேற்கோள்களின் துண்டு பிரசுரம், ஒவ்வொரு குழுவிற்கும் விநியோகிக்கவும். *(D4_S$_1$_1.2a, D4_S$_1$_1.2b : நாள் 4 – அமர்வு 1 – செயல்பாடு 1.2 – கல்வி பற்றிய வெவ்வேறு தத்துவ ஞானிகளின் மேற்கோள்கள் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை மற்றும் கையேடுகள்)*
- பங்குபெறுபவர்களை மேற்கோள்களின் மையக்கருத்தை விவாதிக்கச் சொல்லவும்.
- பள்ளிக் கல்வியின் நோக்கத்தோடு மேற்கோள்கள் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்று விவாதிக்கப்படும்.
- மொத்த குழுவிற்கும் பிடித்த ஒரு மேற்கோளைத் தீர்மானிக்கச் சொல்லவும்.
- பள்ளியின், எந்த ஒரு தொலைநோக்குப் பார்வையை, மேற்கோளில் கண்டு, அதை தேர்ந்தெடுத்தார்கள் ?
- குறிப்பிடப்பட்ட கல்வியைத் தர, உங்கள் பள்ளியில் ஏதேனும் மாற்றம் செய்ய விரும்புகிறீர்கள் ?

### எதிரொலிக்கும் கேள்விகள்

- மேற்கோள்கள் உண்மையானதாகவும், செயலாக்கக் கூடியதாகவும் இருப்பதாக நினைக்கிறீர்களா ?
- உங்கள் பள்ளிக்கும், அது கொடுக்கும் கல்விக்கும் – நோக்கத்தை முதன் முதலாக அறிமுகம் செய்ய, ஏதேனும் வழிமுறைகளைக் கண்டுபிடிக்க முடியுமா ?

### நடத்துபவருக்கான குறிப்புகள்

கொடுக்கப்பட்டுள்ள மேற்கோள்கள், ஒரு சிலவே. மற்ற சிந்தனையாளர்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற மனிதர்களிடமிருந்தும் மேற்கோள்கள் வரலாம். இந்த மேற்கோள்கள் அனைத்தும், குழந்தைகளையும், அவர்களின் கல்வியையும் மையமாக வைத்து சொல்லப்பட்டதால்தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவை, கல்வியின் முழு பரிமாணத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்க முடியாது.

## முக்கியக் கருத்துக்கள்

கல்வியானது, அறிவை மட்டுமே வளர்க்கக்கூடியது மட்டுமல்ல; அக்கல்வி ஒருவரின் முழுமையான முன்னேற்றத்திலும் பங்காற்ற வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## அமர்வு 2 : குழந்தைகளின் முன்னேற்றத் தேவைகளைப் புரிந்து கொள்ளுதல்

| **அமர்வு 2** | **11.45–13.00 மணி** | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்** |
| குழந்தைகளின் முன்னேற்றத் தேவைகள் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை | 90 | குழந்தைகளின் தேவைகளை உணர்ந்து கொள்ளுதல் மற்றும் பள்ளிக்குள் நட்பான, பாதுகாப்பான, அக்கறையான சூழலை உருவாக்குதல். |
| குழு செயல்கள் – குழந்தைகளின் முன்னேற்றத் தேவைகள் | | |
| செயல் திட்டத்தை உருவாக்குதல் | | |

## செயல்பாடு 2.1 : குழந்தைகளின் முன்னேற்றத் தேவைகள் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**நாள்**
**4**

**செயல்முறை :** பவர்பாயின்ட் விளக்கவுரை

### ஆலோசனைக்குகந்த வழிமுறைகள்

பங்குபெறுபவர்களுக்குக் குழந்தைகளின் முன்னேற்ற தேவைகள் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரையைக் கொடுத்து, அதைப் பற்றிய விவாதத்தைத் தொடங்கி வைக்கவும். *(D4_$S_2$_2.1 : நாள் 4 – அமர்வு 2 – செயல் 2.1 – குழந்தைகளின் முன்னேற்றப் பாதை பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை)*

### எதிரொலிக்கும் கேள்விகள்

- இந்த தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லையெனில், என்னவாகும் ?
- குழந்தைகள் தங்கள் வாழ்க்கையில் ஒரு தருணத்தில், தங்களைத் தகுதி உள்ளவர்களாக உணர, அவர்கள் தேவைகள் பூர்த்தியாவதை தலைமை ஆசிரியர் எவ்வாறு உறுதி செய்து கொள்வார் ?
- கற்றல்–கற்பித்தல் செயலின் போது ஆசிரியர் குழந்தைகளின் தேவைகள் பற்றி அக்கறை கொள்வதை உறுதி செய்துகொள்ள வகுப்பறையில் என்ன செய்ய வேண்டும் ?





## செயல்பாடு 2.2 : குழந்தைகளின் முன்னேற்ற தேவைகள்

### செயல்பாடுகளை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** குழுவாகச் செயல்படுதல்

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- பங்குபெறுபவர்களை 4 குழுக்களாக தங்களைப் பிரித்துக் கொள்ளச் சொல்லவும்.
- ஒவ்வொருகுழுவையும், கீழே கொடுக்கப்பட்டதிலிருந்து ஏதேனும் ஒன்றை தேர்வு செய்து கொள்ளப் பணிக்கவும்.
    - ஊட்டச்சத்து இல்லாத உணவு கற்றலைப் பாதிக்கும்
    - பிரிவு / மனவேதனை கற்றலைப் பாதிக்கும்
    - குடும்பமற்ற நிலை / இல்லம் / பிரிந்த குடும்பம் கற்றலைப் பாதிக்கும்
    - மரியாதை மற்றும் மதிப்பு இல்லா நிலை (சாதி / அடிப்படை / பாலின பாகுபாடு) கற்றலைப் பாதிக்கும்.
    - கற்பதில் இயலாமை
    - மெதுவாகக் கற்பது
- அவரவர்கள் பள்ளியில், எந்த ஒரு குழந்தையின் முன்னேற்ற பாதையின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லையோ, அதையே சூழலாகக் கொண்டு உண்மையான நிகழ்வு ஆய்வை உருவாக்கவும்.
- ஒவ்வொரு குழுவின் நிகழ்வு ஆய்வையும் விவாதிக்கவும்.
- செயல்திட்ட உதவியோடு, இதே சூழலை இன்னும் சிறப்பாக எவ்வாறு கையாண்டிருக்க முடியும் என்பது பற்றிய விவாதங்களை வெளிக்கொண்டு வரவும்.

### எதிரொலிக்கும் கேள்விகள்

- வகுப்பறையில் குழந்தைகளைக் கவனிப்பது எவ்வளவு முக்கியம் ?
- உங்கள் குழந்தைகளின் நலவாழ்வு பற்றிய செய்திகள் கிடைக்க, யார் மீது நம்பிக்கை வைப்பீர்கள் ?
- எந்தவிதமான உதவியும், வளங்களும், குழந்தைக்கு உதவ தேவைப்படும் ?
- உங்கள் பள்ளியின் குழந்தைகள் மீது தனிப்பட்ட கவனம் செலுத்துவதைத் தடுக்கும் சவால்கள் என்ன ?
- உங்கள் பள்ளியின் குழந்தைகளைப் புரிந்து கொள்வதில், சமூகம் மற்றும் பெற்றோர்களின் பங்கு என்ன ?
- இந்தக் கடினமான முயற்சியில், உங்கள் ஆசிரியர்களின் உதவியை எவ்வாறு மதிப்பிடுவீர்கள் ?

### நடத்துபவருக்கான குறிப்புகள்

மற்ற ஏதாவது ஒரு முன்னேற்ற தேவைகளைப் பற்றிய தனியாள் ஆய்வும் இடம்பெறலாம்.

## முக்கியச் செய்திகள்

தலைமையாசிரியர்கள், குழந்தைகளின் முன்னேற்ற தேவைகளை உணர்ந்து, அதற்கேற்ப, வகுப்பறையில், கற்பிப்பதில், கற்றல் செயல்முறைகளுக்கு உதவக் கூடிய சௌகரியங்களைச் செய்து தர வேண்டும்.

## அமர்வு 3 : குழந்தை சார்ந்த கற்பிக்கும் கலை பற்றிப் புரிந்து கொள்வது

| அமர்வு 3 | 14.00– 15.30 மணி | |
|---|---|---|
| செயல்பாடுகள் | நேரம் (நிமிடங்கள்) | எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் |
| இளம் வரலாற்றாளர் பற்றிய படக்காட்சி | 90 | வகுப்பறையில் குழந்தை சார்ந்த கற்பிக்கும் கலையையும், குழந்தைகளின் முன்னேற்ற தேவைகளில் அதன் தாக்கத்தையும் புரிந்து கொள்ளுதல். வகுப்பறையில் புதுமையான கற்பிக்கும் முறையின் உபயோகத்தைப் புரிந்து கொள்வது மற்றும் பாராட்டுவது |
| குழந்தை சார்ந்த கற்பிக்கும் கலை பற்றி பவர்பாயின்ட் விளக்கவுரை | | |
| புதுமையான கற்பிக்கும் முறை (குழுவாகச் செயல்படுதல்) | | |

## அமர்வு 3.1 : இளம் வரலாற்றாளர் பற்றிய படக்காட்சி

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** படக்காட்சி

நாள்
4

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- இளம் வரலாற்றாளர் பற்றிய படக்காட்சியைப் பங்குபெறுபவர்களுக்குக் காண்பிக்கவும். *(D4_$S_3$_3.1 : நாள் 4 – அமர்வு 3 – செயல் 3.1 – இளம் வரலாற்று ஆசிரியர்கள் பற்றிய படக்காட்சி)*
- புதுமையான கற்பித்தல் முறை, குழந்தைகளின் ஆர்வம், குழந்தைகளிடம் உயர்ந்த சிந்தனையை வெளிக்கொணர்வதில் ஆசிரியரின் பங்கு – இவற்றின் அடிப்படையில், படக்காட்சியை விவாதிக்கவும்.

### எதிரொலிக்கும் கேள்விகள்

- இந்தக் குறிப்பிட்ட கற்பித்தல் முறையில், ஆசிரியர் என்ன வழிமுறைகளைப் பின்பற்றினார் ?
- இந்த வகை கற்பிக்கும் முறையில், ஆசிரியரின் பங்கு என்ன ?
- மாணவர் பேச்சோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஆசிரியரின் பேச்சு எவ்வளவு கவனிக்கப்பட்டது ?
- உங்கள் பள்ளியில், உங்கள் ஆசிரியர்களைப் புதுமையான கற்பித்தல் முறையைப் பயன்படுத்த ஊக்குவிக்கிறீர்களா ?
- குழந்தைகளின் கவனிக்கப்பட வேண்டிய தேவைகளுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் ?





- நீங்கள் படக்காட்சியில் பார்த்த, இந்தக் குறிப்பிட்ட முறையில், குழந்தைகளின் எந்த கவனிக்கப்பட வேண்டிய தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன ?

## செயல்பாடு 3.2 : குழந்தையை மையமாகக் கொண்ட கற்பிக்கும் கலை

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :**பவர்பாயின்ட் விளக்கவுரை

### பிரதிபலிக்கும் கேள்விகள்

6–14 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் கவனிக்கப்பட வேண்டிய தேவைகள் என்னென்ன ?

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- பவர்பாயின்ட் விளக்கவுரையின் துண்டுபிரசுரங்களைப் பங்குபெறுபவர்களுக்கு விநியோகிக்கவும். *(D4_$S_3$_3.2 : நாள் 4 – அமர்வு 3 – செயல் 3.2 – குழந்தை சார்ந்த கற்பிக்கும் கலை பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை)*
- வகுப்பறையில், குழந்தைகள் எந்தவிதமான கற்பித்தலை வரவேற்கிறார்கள் ?
- செயல்முறை சார்ந்த கற்பிக்கும் கலை பற்றி நீங்கள் என்ன புரிந்து கொண்டீர்கள் ?
- வகுப்பறையில், செயல்முறை சார்ந்த கற்பிக்கும் கலையை ஊக்குவிக்கும் அறிவூட்டுகின்ற முறைகள் என்ன ?
- செயல்முறை சார்ந்த கற்பிக்கும் கலையின் வழிமுறை பட்டியலில், நீங்கள் எதை ஏற்கெனவே கடைபிடிக்கிறீர்கள் ?
- பட்டியலில், எது உங்களுக்கும், உங்கள் ஆசிரியருக்கும் புதியது ?
- செயல்முறை சார்ந்த கற்பிக்கும் கலையின் நன்மைகள் என்னென்ன ?

## செயல்பாடு 3.3 : புதுமையான கற்பிக்கும் முறைகள்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** குழுவாகச் செயல்படுவது

### ஆலோசனைக்கு உகந்த செயல்முறைகள்

- 8–10 நபர் கொண்ட குழுக்களாகப் பங்குபெறுபவர்களைப் பிரிக்கவும்.
- பங்குபெறுபவர்களை, அவர்கள் விருப்பத்திற்கேற்ப, ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுக்கச் சொல்லவும்.
- குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டக்கூடிய, இரண்டு விதமான கற்பிக்கும் முறையை அடையாளம் காணச் சொல்லவும்.
- செயல்முறை சார்ந்த கற்றல் கொள்கையின் வழிமுறைகளை, மற்ற குழுவிலிருக்கும் உறுப்பினர்களை ஆராயச் சொல்லவும்.
- மாணவனின் தக்க வைத்துக் கொள்ளும் திறன் மற்றும் கற்றலின் அடிப்படையில், வகுப்பறையில் செயல்முறை சார்ந்த கற்றலின் நன்மைகளைக் கண்டறியவும்.

### எதிரொலிக்கும் கேள்விகள்

- கற்பிக்கும் நேரத்தை புதுமையாக ஆக்க முயற்சிக்கிறீர்களா ?
- கற்பிப்பதைப் புதுமையாகச் செய்ய, ஆசிரியர்களை எவ்வாறு ஊக்கப்படுத்துகிறீர்கள் ? சவால்கள் என்னென்ன ?
- வகுப்பறையில், செயல்முறை சார்ந்த கற்றலின் நன்மைகள் என்ன ?

### நடத்துபவருக்கான குறிப்புகள்

பங்குபெறுபவர்களுடன் கலந்துரையாடி, புதுமையாகக் கற்பித்தலின் மாதிரிகள் கொண்ட வங்கியை உருவாக்கவும்.

### முக்கியச் செய்திகள்

குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு, அக்குழந்தையை மையமாகக் கொண்ட கற்பித்தல் மிக முக்கியம், மற்றும் செயல்முறை சார்ந்த கற்றல் கொள்கையைப் புரிந்து கொள்ளுதல்.

## அமர்வு 4 : வகுப்பறையில், செயல்முறை சார்ந்த கற்றலை உபயோகப்படுத்துவது

| **அமர்வு 4** | **15.45 – 17.15 மணி** | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்** |
| செயல்முறை சார்ந்த கற்றல் கொள்கையின் அடிப்படையில் பாடத்திட்டத்தை உருவாக்குதல் | 30 | பாடத்திட்டத்தை உருவாக்க, செயல்முறை சார்ந்த கற்றல் கொள்கையை உபயோகப்படுத்த முடிதல். செயல்முறை சார்ந்த கற்பிக்கும் கலையை ஊக்குவிக்கும் அறிவூட்டுகின்ற முறைகளை கண்டுபிடிக்க முடிவது. வகுப்பறையில், செயல்முறை சார்ந்த கற்றலின் நன்மைகளைக் கண்டறிதல். |
| பாடத்திட்டத்தைப் பற்றி விவாதித்தல் | 60 | |

நாள்
4





## செயல்பாடு 4.1 : செயல்முறை சார்ந்த கற்றல் கொள்கையின் அடிப்படையில் பாடத்திட்டத்தை உருவாக்குதல்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** குழுவாக விவாதித்தல் மற்றும் விளக்கிக் கூறுதல்

### ஆலோசனைக்கான வழிமுறைகள்

- 8–10 நபர் கொண்ட குழுக்களாகப் பங்குபெறுபவர்களைப் பிரிக்கவும்.
- பங்குபெறுபவர்களை, அவர்களுக்கு விருப்பமான தலைப்பில், செயல்முறை சார்ந்த கற்றல் கொள்கையின் அடிப்படையில், பாடத்திட்டத்தை உருவாக்க சொல்லவும்.



- கற்பிக்கும் முறை, பின்வருவனவற்றில் எதுவாகவேனும் இருக்கலாம் – பங்கு நாடகம், கதை சொல்வது, விவாதித்தல், யோசித்தல், ஜோடி சேர்ந்து பகிர்ந்து கொள்ளல், படக்காட்சியோடு சேர்ந்த விவாதம், வகுப்பறை விளையாட்டுகள் (புதிர் விளையாட்டு, குறுக்கெழுத்து விளையாட்டு) வகுப்பறை விவாதங்கள், கற்பித்தல் மூலம் கற்றல்
- கற்பித்தல் முறைகளைப் பற்றி தொடர்ச்சியாக விவாதித்தல். மாணவர்களின் திருப்தி மற்றும் வெற்றியின் அடிப்படையில், இந்த முறைகளில் உள்ள செயல்முறை கொள்கைகள் மற்றும் அதன் நன்மைகளை மறுபரிசீலனை செய்வது

**கீழ்க்கண்ட அறிவூட்டும் முறைகள் (செயல்முறை கற்றலை ஊக்கப்படுத்துவது) உபயோகப்படுத்தப்படலாம்.**

- பங்கு நாடகம்
- கதை சொல்வது மற்றும் விவாதித்தல்
- யோசித்தல், ஜோடி சேர்ந்து பகிர்ந்து கொள்ளுதல்
- படக்காட்சியோடு சேர்ந்து விவாதித்தல்
- வகுப்பறை விளையாட்டுகள் (புதிர் விளையாட்டு மற்றும் குறுக்கெழுத்து விளையாட்டு)
- வகுப்பறை விவாதங்கள்
- கற்பித்தல் மூலம் கற்றல்

**நாள்**
**4**

## எதிரொலிக்கும் கேள்விகள்

- வகுப்பறையில் பங்கு கொள்ளும் அளவு எவ்வளவு இருக்கிறது ?
- ஆசிரியர் மற்றும் மாணவர் பேச்சு எந்த அளவிற்கு நடைமுறையில் இருக்கிறது ?
- வகுப்பில் உற்று நோக்கல் எந்த அளவு இருக்கிறது ?
- ஈடுபாட்டுடன் கூடிய கற்றல் நடக்கும் வகுப்பிற்கும் ஈடுபாடற்ற முறையில் கற்கும் வகுப்பிற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது ?
- வகுப்பறையில், ஈடுபாட்டுடன் கூடிய கற்றலில் உள்ள தடைகள் என்னென்ன ?
- குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு ஈடுபாட்டு கற்றல் எந்த விதத்தில் பங்காற்றுகிறது – எண்ணம், திறன், கற்பதில் நாட்டம், தனிப்பட்ட குணநலன்கள் ?

## நடத்துபவருக்கான குறிப்புகள்


இங்குத் தரப்பட்ட, முறை பட்டியல் யோசனைகளே. பங்குபெறுபவர்கள் வேறுபல ஈடுபாட்டு கற்றல் முறைகளைக் கற்பிக்க உபயோகப்படுத்தலாம்.


## முக்கியத் தகவல்கள்

நற்பயனளிக்கும் விதத்தில் கற்றலை கற்பிப்பதிலும், குழந்தையை மகிழ்ச்சியாக வைத்திருப்பதிலும், ஈடுபாட்டு கற்றல் முக்கிய பங்காற்றுகிறது.

## குறிப்புகள்







நாள்
5

### தினத்தைப் பற்றிய ஒரு மேற்பார்வை

| நாள் – 5 | | |
|---|---|---|
| அமர்வு | பெயர் | நேரம் (நிமிடங்கள்) |
| 1 | உற்றுநோக்கல் மற்றும் ஆசிரியர்களிடம் பின்னூட்டம் கூறல் | 75 |
| 2 | ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பவராகவும், அறிவூட்டுபவராகவும் இருத்தல் | 120 |
| 3 | உள்ளடக்கலை புரிந்து கொள்ளுதல் | 90 |
| 4 | பள்ளியிலும், வகுப்பறையிலும், உள்ளடக்கும் வழக்கத்தை உருவாக்குவது | 75 |
| 5 | என் பள்ளியில், கற்பித்தல்–கற்றல் முறையில் உருமாற்றும் செயலை ஆரம்பித்தல் | 30 |

## அமர்வு 1 : கவனிப்பு மற்றும் ஆசிரியர்களிடம் கருத்துக்கோரல்

| அமர்வு 1 | 09.30 – 10.45 மணி | |
|---|---|---|
| செயல்பாடுகள் | நேரம் (நிமிடங்கள்) | எதிர்பார்க்கப்படும் விளைவுகள் |
| மாதிரி வகுப்பறை | 20 | கவனிப்பு முறையையும், ஆசிரியர்களிடம் நேர்மறை கருத்துக்கூறல் செய்வதைப் புரிந்து கொள்ள இயல்வது. |
| சிறிய குழுவின் கருத்துக்கூறல் மற்றும் பெரிய குழுவில் தெளிவாக்குதல். | 55 | |

## செயல் 1.1 : பொய்யான வகுப்பறை மற்றும் கருத்துக்கூறல் வழிமுறை

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செய்முறை :** பொய்யான வகுப்பறையை நடத்துவது. பின்னர் சிறிய குழுவின் கருத்துக்கூறல் மற்றும் பெரிய குழுவின் விவாதம்.

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- 10–12 பங்குபெறுபவர்கள் கொண்ட 3 குழுக்களை உருவாக்கவும்.
- ஒரு குழு, பொய்யான வகுப்பறையை, ஆரம்ப வகுப்புகள் ஒன்றிற்கான பாடத்திட்டத்தின் அடிப்படையில், நடத்துவதற்குத் தயார் செய்கிறது. இதில் ஒருவர் ஆசிரியராகவும், மற்றவர்கள் மாணவர்களாகவும் நடிக்கின்றனர்.

- மாணவர்களாக நடிப்பதில் பங்குபெறுபவர்கள், தங்கள் வகுப்பின் / பள்ளியின் மாணவர்கள் கேட்கும் கேள்விகளை மனதில் கொண்டு, கேள்விகள் கேட்கின்றனர்.
- இடண்டாவது குழு (பார்வையாளர்களாக நடிக்கும் குழு) கற்பித்தல்–கற்றல் முறை பற்றிய கருத்துக்கூறல் கொடுக்கிறார்கள்.
- மூன்றாவது குழு, கற்பித்தல்–கற்றல் மற்றும் இரண்டாவது குழுவின் கருத்துக்கூறலை கவனித்து, இரண்டை பற்றியும் தங்கள் கருத்துக்கூறலை கொடுக்கின்றனர்.
- பெரிய குழுவை நடத்துபவர், முழு செயல்முறையையும் தெளிவாகக் கூறி, விவாதத்திற்கான குறிப்புகள் மூலம் வழிகாட்டுகிறார்.
- கருத்துக்கூறலைப் பற்றி பவர்பாயிண்ட் விளக்கவுரையை, நடத்துபவர் காண்பிக்கிறார். *(D5_S1_1.1 நாள் 5–அமர்வு 1 – செயல்பாடு 1.1 – ஆசிரியருக்குக் கொடுக்கும் கருத்துக்கூறல் பற்றிய பவர்பாயிண்ட் விளக்கவுரை)*


## மாதிரிப் பயிற்சி வகுப்பறையில் பிரதிபலிக்கும் கேள்விகள்

- ஆசிரியரின் அறிவூட்டும் முறைத்திறன், பாடத்திட்டத்தின் பொருளடக்கத்திற்கு ஏற்ப இருந்தது என்று நினைக்கிறீர்களா ?
- ஆசிரியர், தன் கற்பித்தலை முந்தைய பாடத்தோடு தொடர்புபடுத்தினாரா ? முந்தைய பாடத்தோடு தொடர்புபடுத்துவது ஏன் முக்கியம் ?
- ஆசிரியர், மாணவர்களை எந்த மாதிரியான கேள்விகள் கேட்டார் ?
- வகுப்பறையில் கலந்துரையாடல் இருந்ததா ? கலந்துரையாடல், கற்பிக்கும் பாடத்தின் கருத்தை மேலும் வளர்க்க உதவியதா ?
- கற்பிக்கும்பொழுது, கற்பிக்க வேண்டிய கால நேரத்திற்குள், மாணவர்களின் கேள்விகளுக்கு ஆசிரியர் எவ்வாறு பதிலளித்தார். மாணவர்கள் பாடத்தின் பொருளடக்கத்திற்குத் தொடர்பு அல்லாத கேள்விகள் கேட்பதற்கு அனுமதித்தாரா ?
- வகுப்பறையில் இருக்கும் பல்வேறு குரல்களையும், சத்தங்களையும் ஆசிரியர் எவ்வாறு சமாளித்தார் ?
- வகுப்பின் முடிவில், மாணவர்கள் என்னென்ன கற்றுக் கொள்ள முடியும் என்று ஆசிரியர் கூறினாரா ? மாணவர்கள் கருத்தைப் புரிந்து கொண்டதற்குப் பாராட்டு தெரிவித்தாரா ?



## ஆசிரியர்களிடம் கருத்துக்கூறல் பற்றிய பிரதிபலிக்கும் கேள்விகள்

- இரண்டாவது குழு, கருத்துக்கூறல் கொடுக்கும்போது, தொனி எவ்வாறு இருந்தது ?
- எந்த முக்கியமான விஷயங்களுக்கு, இரண்டாவது குழு, முதல் குழுவிற்குக் கருத்துக் கூறல் கொடுத்தது ?
- எவ்வளவு முக்கிய விஷயங்கள் ஊக்கப்படுத்துவதாகவும், எவ்வளவு ஊக்கத்தைக் குறைப்பதாகவும் இருந்தது ?
- ஆசிரியர்களுக்கு, நேர்மறை கருத்துக்கூறல் கொடுப்பது எவ்வளவு முக்கியம் ?
- கருத்துக்கூறல் முறையை நாம் எவ்வாறு மாற்றி அமைக்க முடியும் ?





### முக்கியச் செய்திகள்

- கற்பித்தல்–கற்றல் முறைகள் மேம்பட, வகுப்பறையைக் கவனிப்பது ஒரு முக்கியமான கருவியாக இருக்கலாம்.
- ஆசிரியர்களுக்குக் கருத்துக்கூறல், முக்கியமாக நேர்மறை கருத்துக்கூறல், அவர்களின் தன்னம்பிக்கை மற்றும் நற்பயனளிக்கும் செயல்களை அதிகரிக்கும்.

## அமர்வு 2 : ஆசிரியர்களுக்குப் பயிற்சியாளராக மற்றும் அறிவுரை கூறுபவராக இருத்தல்

| அமர்வு 2 | 11.00–13.00 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்** |
| பயிற்சி அளித்தல் மற்றும் அறிவுரை கூறல் பற்றிய விளக்கவுரை | 20 | ஆசிரியர்கள் மற்றும் பள்ளி பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் மற்றும் அறிவூட்டும் முறைகளைப் புரிந்து கொள்ள முடிதல். |
| 4/5 எடுத்துக்காட்டுகள் அடிப்படையில் பொய்யான பயிற்சி / அறிவூட்டும் கூட்டம் நடத்த படிப்பது மற்றும் தயார் செய்வது | 20 | |
| பங்கு நாடகம் | 40 (1 ஜோடிக்கு 10 நிமிடங்கள்) | |
| முழு அணி விவாதம் மற்றும் தெளிவாக்குதல் | 40 | |

நாள்
5

## செயல்பாடு 2.1 : பயிற்சி அளித்தல் மற்றும் அறிவூட்டுதலுக்கான பங்கு நாடகம்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** ஜோடியாக பங்கு நாடகம் போடுவது. பின்னர் முழு அணியாக விவாதிப்பது.

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- பயிற்சி அளித்தல் மற்றும் அறிவூட்டுதல் முறையைப் புரிந்து கொள்ளுதல் பற்றிய காணொளி விளக்கவுரையை நடத்துபவர் காட்டுகிறார் *(D5_$S_2$_2.1aநாள்5–அமர்வு2–செயல்பாடு 2.1a–பயிற்சி அளித்தல் மற்றும் அறிவூட்டுதல்)*
- ‘நடமாடும் நாடகம்’ என்ற தலைப்பில், பள்ளித் தலைமைக்கும், ஆசிரியருக்கும் நடக்கும் உரையாடலை, நடத்துபவர், பங்குபெறுபவர்களுக்குப் படித்து காட்டுகிறார்.
- பங்குபெறுபவர்களில், 6 பேர் ஜோடியாக மாதிரிப் பயிற்சி அளித்தல் மற்றும் அறிவூட்டுதல் கூட்டத்தை நடத்த முன் வருகின்றனர். மற்ற பங்குபெறுபவர்கள், இந்த பங்கு நாடகத்திற்கு, உதவுகிறார்கள்.

- ஜோடியில் ஒருவர், பள்ளித் தலைமை ஆசிரியராகவும், மற்றொருவர் ஆசிரியராகவும் பங்கேற்று, கற்றல்–கற்பித்தலைப் பாதிக்கும், ஆசிரியரின் குடும்ப பிரச்சனைகளை விவாதிக்கிறார்கள்.
- மற்றொரு ஜோடி, பள்ளித் தலைமையின் பார்வையில், நன்றாகச் செயல்படாத தலைமை ஆசிரியராகவும், ஆசிரியராகவும் பங்கு நாடகம் நடத்துகின்றனர்.
- மூன்றாவது ஜோடி, தலைமை ஆசிரியராகவும், பணியாளர்களாகவும் (உதாரணம் :பள்ளியில் உதவி செய்பவர் / பள்ளிக்கு புதிதாக வந்திருக்கும் ஆசிரியர்) பங்கு நாடகம் நடத்துகின்றனர்.
- முதல் ஜோடி, அறிவூட்டுபவராகப் பங்கேற்கலாம், மற்ற இரண்டு ஜோடிகள் பயிற்சி அளிப்பவராகவும், அறிவூட்டுபவராகவும் பங்கேற்கலாம். பங்கு நாடகம் போடுவதற்கான சில யோசனைகள், பவர்பாயின்ட் விளக்கவுரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## எதிரொலிக்கும் கேள்விகள்

- ஜோடிகளின் உரையாடலின், முக்கிய கருத்துக்கள் என்ன ?
- ஜோடிகளின் உரையாடல் தன்மை எவ்வாறு இருந்தது ?
- ஆசிரியர்களும், பள்ளி பணியாளர்களும் எதிர்கொண்ட பிரச்சனைகளைப் பள்ளித் தலைமையால் தீர்க்க முடிந்ததா ?
- அதே பிரச்சனையைச் சமாளிக்க, மாற்று வழியைக் காண்பித்தல் மூலம், பள்ளித் தலைமை, உதவியாக இருந்தாரா ?


## நடத்துபவருக்கான குறிப்புகள்

பயிற்சி அளித்தல் மற்றும் அறிவூட்டுதல் – இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளைப் புரிந்து கொள்வதை மையமாகக் கொண்டு, முழு அணி விவாதம் நடக்கிறது. இரண்டு முறைகளும் – பயிற்சியாளர் / அறிவூட்டுபவர் மற்றும் பயிற்சி பெறுபவர் / அறிவூட்டுபவர் – இவர்களிடையே நம்பிக்கையை உருவாக்கும் கொள்கையின் அடிப்படையில் செயல்படுகிறது. செவிமடுத்துக் கேட்பது மற்றும் கேள்விகள் கேட்பதன் மூலம், அவர்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியும். பயிற்சியாளர் பாடத்தில் தேர்ச்சி பெற்றவராக இல்லாமலிருக்கலாம், ஆனால் ஆசிரியர்களுக்குப் பிரச்சனையைப் புரிய வைத்து, அதைத் தீர்க்க உதவி செய்யலாம், ஆறிவூட்டுபவரின் வாய்ப்பு, பயிற்சியாளரைவிட பெரியது. அவர்களுக்குள்ள உறவு, நம்பிக்கையை உருவாவது மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களின் தினசரி வாழ்க்கையில் நடக்கும் (பணி சம்பந்தப்படாததாகவும் இருக்கலாம்). விஷயங்களைக் கேட்பதற்கு நேரம் ஒதுக்குவதையும் பொறுத்திருக்கிறது. பயிற்சி அளித்தல் மற்றும் அறிவூட்டுதல் பற்றிய கையேடு, பங்குபெறுபவர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. *(D5_$S_2$_2.1b : நாள் 5 – அமர்வு 2 – செயல்பாடு 2.1b பயிற்சியளித்தல் மற்றும் அறிவூட்டுதல்)*

## முக்கியச் செய்திகள்

- பள்ளித்தலைமைக்கும், பணியாளர்களுக்குமிடையே நம்பகமான உறவை உருவாக்குவதுதான், பயிற்சியளித்தல் மற்றும் அறிவூட்டுதலின் நோக்கமாகும்.
- மற்ற ஆசிரியர்களையும், மாணவர்களையும் அவர்கள் பிரச்சனைகளை அவர்களே தீர்த்துக் கொள்ள, அவர்களே வழி கண்டுபிடிக்கவும் அந்த செயல்முறையில் வழிகாட்டுபவராகவும் இருப்பதில் பயிற்சி அளிப்பது கவனம் செலுத்துகிறது.

நாள்
5





## அமர்வு 3 : உள்ளடங்கலைப் புரிந்து கொள்வது

| அமர்வு 3 | 14.00– 15.30 மணி | |
|---|---|---|
| செயல்பாடுகள் | நேரம் (நிமிடங்கள்) | எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் |
| “தொடப்படாத இந்தியா” பற்றிய படக்காட்சிகள் (www.youtube.com/watch?v39_UnVZTo_ok) பின்னர் முழு அணி விவாதம் | 90 | பள்ளி ஒரு உள்ளடக்கிய இடமாக இருப்பதின் முக்கியத்துவத்தைப் பங்குபெறுபவர்கள் புரிந்து கொள்ள முடிகிறது. |

நாள்
5

## செயல்பாடு 3.1 : “தொடப்படாத இந்தியா” பற்றிய படக்காட்சிகள்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** “தொடப்படாத இந்தியா” பற்றிய படக்காட்சியை 3 பகுதிகளாகக் காண்பிப்பது மற்றும் முழு அணியையும் விசாரணை செய்வது.

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- உள்ளடக்கிய அமைப்பின் அடிப்படையில் இந்தக் கூட்டம் நடத்தப்படுகிறது.
- தொடப்படாத இந்தியா பற்றிய படக்காட்சி மூன்று பிரிவுகளாகக் காட்டப்படுகிறது. இதில் பிள்ளைகள், பள்ளியிலிருதும், வகுப்பிலிருந்தும் ஒதுக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டு, உண்மையான சம்பவங்களைப் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது.
- ஒதுக்கப்படுவது, பள்ளி செல்லாத பிள்ளைகளின் வேறுபாடுகளை அரவணைத்து செல்வதில் பள்ளித் தலைவரின் பங்கு மற்றும் ஒவ்வொரு குழந்தைக்கும் கற்பதற்கான உரிமை இருக்கிறது என்று நம்புவது பற்றிக் கேள்விகளை வரவழைக்கத் திட்டமிடுகிறது.
- பள்ளிக்குள்ளும், பள்ளியைச் சுற்றிலும் மற்றும் வகுப்பறைக்குள்ளும் நடைமுறையில் இருக்கும் ஒதுக்கப்படுதலைப் பள்ளித் தலைவர்கள் அறிந்து கொள்ள உதவுவதுதான், கூட்டத்தின் நோக்கமாகும்.
- இந்த கூட்டத்தில், பங்குபெறுபவர்களுக்கு, படக்காட்சி மூன்று பிரிவுகளாக காட்டப்படுகிறது.
- படக்காட்சியின் ஒவ்வொரு பகுதியும் காட்டப்பட்ட பிறகு, நடத்துபவர், முழு அணியையும், சில சோதனைக்குரிய கேள்விகளின் விசாரணைக்கு அழைத்துச் செல்கிறார்.
- நடத்துபவர், பங்குபெறுபவர்களின் பதில்களை, வெள்ளைப் பலகையில் எழுதிக் கொண்டே வருகிறார். அதை விவாதத்திற்கும், விசாரணைக்கும் வழிநடத்த உபயோகிக்கிறார்.

**படக்காட்சியின் முதல் பகுதி** : படக்காட்சியின் முதல் பகுதி – பள்ளிக்குச் செல்லும் சில குழந்தைகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் இருக்கும் குழந்தைகள். நடத்தப்படும் விதத்தைக் காட்டுகிறது. பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் இருக்கும் குழந்தை பள்ளியிலிருந்தும் பள்ளி செயல்பாட்டிலிருந்தும் ஒதுக்கப்படுகிறது, முக்கியமாக மதிய உணவு பரிமாறப்படும் பொழுது *(D5_$S_3$_3.1a)*

## எதிரொலிக்கும் கேள்விகள்

- ஏன் அந்த குழந்தை, மதிய உணவின்பொழுது, மற்ற குழந்தைகளுடன் உட்காருவதில்லை ?
- குழந்தைகள் வெளியில் இருப்பதற்கான நிர்ப்பந்தத்திற்குச் சாதியைத் தவிர வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா ? வேறு காரணங்கள் என்னவாக இருக்கலாம் ?
- படக்காட்சியில் காட்டப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு, அவர்கள் கிராமத்தில் இதுபோன்ற குழந்தைகள் பற்றித் தெரியும் என்று நினைக்கிறீர்களா ?
- படக்காட்சியில் காட்டப்படும் பள்ளியில், என்ன வேறு பல பயிற்சிகள் நடக்கிறது ?
- பல்வேறு சமூகத்திலிருந்து வரும் பிள்ளைகள், பள்ளிக்குச் சிறப்பு சேர்ப்பதாக நினைக்கிறீர்களா ? எப்படி ?
- ஒதுக்கப்பட்ட சமூகத்திலிருக்கும் குழந்தைகள், பள்ளியில் சகஜமாகவும், சுதந்திரமாகவும் இருக்க பள்ளித் தலைமை என்ன செய்ய வேண்டும் ?

**படக்காட்சியின் இரண்டாவது பகுதி :** படக்காட்சியின் இரண்டாவது பகுதி, பெண்கள் எவ்வாறு வேலை வாங்கப்படுகிறார்கள் என்பதைக் காட்டுகிறது. டீ போடுவதிலிருந்து, பள்ளி மைதானம் மற்றும் பள்ளி கழிவறைகளைச் சுத்தம் செய்வது வரை, அனைத்து வேலைகளையும் செய்திட வைக்கப்படுகிறாள். படக்காட்சியில் காட்டியிருக்கும் பெண், ஒதுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவள் *(D5_$S_3$_3.1b)*

## எதிரொலிக்கும் கேள்விகள்


- பள்ளியின் செயல்முறைகளில், பெண்கள் ஒதுக்கப்படுகிறார்கள் என்று நினைக்கிறீர்களா ? ஆம் என்றால் எப்படி ? இல்லையென்றால், ஏன் இருக்கக்கூடாது ?
- பெண்கள், பள்ளியில் என்ன படிப்பதைப் பார்க்கிறீர்கள் ? படிப்பதற்கும், வகுப்பிற்குச் செல்வதற்கும் போதிய நேரம் செலவிடுகிறார்களா ?
- கற்கும் திறன் மற்றும் பல்வேறு இடப்பட்ட வேலைகள் செய்வதில், மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் வேறுபாடு இருப்பதாக நினைக்கிறீர்களா ?
- கற்கும் வழிமுறைகளில், பெண்கள் ஒதுக்கப்படுவதைப் பள்ளித் தலைமையை உணர வைக்க, எவ்வாறு முயற்சிப்பீர்கள் ?
- மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் பொறுப்புகளை பகிர்ந்து கொடுப்பதைப் பள்ளித் தலைமை எவ்வாறு வித்தியாசமாகச் செய்யலாம் ?


**நாள்**
**5**

**படக்காட்சியின் மூன்றாவது பகுதி :**படக்காட்சியின் மூன்றாவது பகுதி, வகுப்பறையில் குழந்தைகளை உட்கார வைப்பதில், ஆசிரியர் வெவ்வேறு சமூகத்திலிருந்து வரும் குழந்தைகளிடம் பாகுபாடு காட்டுவதை, பார்க்க முடிகிறது. இந்தப் படக்காட்சியில், ஆசிரியருக்கும், சமூக உறுப்பினர்களுக்குமிடையே நடந்த உரையாடலையும் காணலாம் *(D5_$S_3$_3.1c)*

## எதிரொலிக்கும் கேள்விகள்

- இந்தப் படக்காட்சியின் நீங்கள் பார்ப்பது என்ன ? வகுப்பறைக்குள், ஆசிரியர் மாணவர்களிடையே எந்த வகையான வேறுபாட்டை உருவாக்குகிறார் ?
- இந்த வகையான வகுப்பறை வேறுபதடு, மாணவர்களிடையே எவ்வகையான மாற்றத்தை உருவாக்கும் என நினைக்கிறீர்கள் ?





- இந்த வகையான வகுப்பறையில் நடக்கும் வேறுபாடு மாணவர்களிடையே எந்தவிதமான மனநிலையை உருவாக்கிக் கொள்வார்கள் என்று நினைக்கிறீர்கள்? அவர்கள் நலனை இது எவ்வாறு பாதிக்கும்?
- சமூக உறுப்பினர்கள், பள்ளி ஆசிரியர்களின் செயல்களை எவ்வாறு எடுத்துக் கொண்டு எதிரிடையான செயலை மேற்கொள்கின்றனர்.
- காட்டப்பட்ட படக்காட்சியில், வேறு என்ன செயல்கள் நடக்கும் என்று நினைக்கிறீர்கள்?
- ஆசிரியர் வேறுபடுத்தியதைப் பார்த்ததும், பள்ளித் தலைமை ஆசிரியரின் பங்கீடு எந்த வகையில் அமைதல் வேண்டும்?
- இந்தத் தருணத்தில், சமூக உறுப்பினர்களுக்குப் பள்ளித் தலைமை ஆசிரியர் எவ்வாறு பதிலளிக்க வேண்டும்?

நாள்
5

## நடத்துபவருக்கான குறிப்புகள்

இந்தக் கூட்டம், மிகவும் உணர்வுபூர்வமானது, ஏனெனில் சாதி மற்றும் பாலினப் பாகுபாடு போன்றவற்றையும் அலசுகிறது. படக்காட்சியில் காட்டப்படும் பெண்கள் கூட, தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான். சாதி மற்றும் பாலினப் பாகுபாடு மட்டுமல்லாது, வகுப்பு, இனம், மனித இயல்பு இவற்றின் அடிப்படையிலும் ஒதுக்கப்படுவது நடக்கிறது என்பதை. படக்காட்சியில் காட்டியது மட்டுமல்லாது, வேறுபல காரணங்களையும் சேர்க்கலாம்.

(D5_S$_3$_3.1a, D5_S$_3$_3.1b, D5_S$_3$_3.1c நாள் **5**–அமர்வு **3** செயல்பாடு **3.1**– “பயன்படுத்தப்படாத இந்தியா”பற்றிய படக்காட்சி)

## முக்கிய செய்திகள்

- பள்ளிக்குள்ளும், பள்ளியைச் சுற்றிலும், ஒதுக்கப்படுதல் இருக்கிறது. இதை அறிந்து கொள்வது தான், பள்ளிகளை உள்ளடக்கியதாக ஆக்குவதற்கான முதல்படி
- உள்ளடக்குவது, பள்ளிக்கு ஒரு சொத்தாகும். ஒவ்வொரு குழந்தையும், எந்த சமூகம், ஜாதி, வகுப்பு, பாலினப் பாகுபாடு இருந்தாலும், கல்வி கற்க முழு உரிமை உள்ளது

## அமர்வு 4 : உள்ளடக்கும் பாரம்பரியத்தைப் பள்ளியிலும் வகுப்பிலும் உருவாக்குவது

| **அமர்வு 4** | **15.45–17.00 மணி** | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்** |
| உள்ளடக்குதலுக்கான முறைதிறன்களை உருவாக்க, குழுவாகச் செயல்படுவது | 30 | அவர்கள் பள்ளியையும், வகுப்பையும் உள்ளடக்குவதாக ஆக்க, முறைதிறன்களை உருவாக்க இயல்கிறது. பள்ளி அனுபவங்களை மேலும் மெருகூட்ட சமூக வளங்களையும் சேர்த்துக் கொள்வது |
| குழுக்கள் விளக்கவுரை அளிப்பது | 45 | |

## செயல்பாடு 4.1 : உள்ளடக்குதலுக்கான முறைதிறன்களை உருவாக்குவது

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** குழுவாகச் செயல்படுதல். பின்னர் விளக்கவுரை

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- முந்தைய கூட்டத்தில் நடந்த விவாதத்தின் அடிப்படையில், பங்குபெறுபவர்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்படுகிறார்கள்.
- இந்த மூன்று குழுக்களும் பள்ளியை உள்ளடக்கிய இடமாக மாற்றவும், அனைத்து மாணவர்களும் பங்குபெறுவதை உறுதிசெய்து கொள்ளவும், உள்ளடக்குதலை மேலும் மெருகேற்ற, சமூக வளங்களை உபயோகப்படுத்தவும் – முறைதிறன்களை உருவாக்குகிறார்கள்.
- இந்த மூன்று குழுக்களும், முந்தைய விவாதங்களைப் பிரதிபலித்து, இதன் மூலம், பள்ளியிலும், வகுப்பிலும் இருக்கும் வெவ்வேறு ஒதுக்கப்படும் படிவங்களைப் புரிந்து கொண்டு, பள்ளி எவ்வாறு சமூகத்தை மாற்றலாம் என்று யோசிப்பது
- உள்ளடக்கம் நடப்பதற்கான முறைதிறன்களைப் பற்றி குழுக்கள் யோசிக்கின்றன. பின்னர், மூன்று குழுக்களும், முழு அணிக்கும், தங்கள் முறைதிறன்களை விளக்குகின்றனர். நடத்துபவர், உள்ளடக்கும் முறைகள் பற்றிய விவாதத்தை வழிநடத்துகிறார்.

### நடத்துபவருக்கான குறிப்புகள்

உள்ளடக்குதலுக்குச் சிறப்பு முக்கியத்துவம் கொடுக்கும் முறைதிறன்களை உருவாக்க, நடத்துபவர் உதவுதல் அவசியம். அவை பின்வருமாறு:


நாள்
5

**பள்ளி**

- பள்ளியில் எந்தெந்த இடத்தில் மற்றும் தினமும் நடக்கும் நிகழ்ச்சிகளில், குழந்தைகளை ஒதுக்குதல் நடைபெற வாய்ப்பிருக்கிறது ? (பள்ளி வருகைப் பதிவேடு, காலை கூட்டம், பள்ளி வேலைகள் – வாளிகளில் தண்ணீர் நிரப்புவது, விளையாட்டு மைதானத்தில், சில அறைகளுக்கு மட்டும் செல்வது, சில புத்தகங்களை மட்டும் படிக்க அனுமதிக்கப்படுவது – நூலகத்தில் உள்ள புத்தகங்கள் அனைத்தும், குழந்தைகள் அனைவருக்கும் படிக்க கிடைக்கிறதா; மாற்றுத் திறனாளிகள் நகர, பாடத்திட்டத்தில் அல்லாத செயல்பாடுகள், பள்ளியின் ஆண்டு விழாக்கள், மற்றும் பல)
- மேலே கூறப்பட்டவைகளில், உள்ளடக்கலைக் கொண்டு வர, பள்ளித் தலைவர் எந்தவிதமான செயல்முறைகளைக் கவனித்துத் துவங்க வேண்டும் ?

**வகுப்பறை**

- வகுப்பில், மாணவர்கள் எவ்வாறு உட்கார வைக்கப்படுகிறார்கள் ?
- வெவ்வேறு சாதி மாணவர்களுக்கிடையேயான இடைவெளியை, வகுப்பறையில் எவ்வாறு குறைப்பீர்கள் ? நிலைச் சக்தியான முறைதிறன்கள் என்னவாக இருக்கலாம் ?
- மாணவர்களின் கற்கும் மற்றும் புரிந்து கொள்ளுதல் திறனின் அளவில் வித்தியாசம்





இருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. தனிப்பட்ட கற்கும் திறனில் தேவைகளில், ஆசிரியர் கவனம் செலுத்தாமல் இருக்கலாம். இந்த மாதிரியான பிரச்சனைகளை எவ்வாறு அணுகுவீர்கள்?

**சமூகம்**

- பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளின் சமூகத்தோடு எவ்வாறு தொடர்பு உருவாக்குவீர்கள்?
- பள்ளியில் நடக்கும் பாகுபாடு, எந்தெந்த வகையில், சமூகத்தில் பேசப்படுகிறது? இந்த பிரச்சனையை எவ்வாறு அணுகி, சமூகத்திற்கு உறுதி கொடுப்பீர்கள்?
- குழந்தைகளுக்கான நலத்திட்டம் பற்றி சமூகத்திற்குத் தெரிந்திருக்கிறதா?
- குழந்தைகளின் கற்பிக்கும்–கற்கும் அனுபவத்தை மேலும் மெருகூட்ட, எவ்வாறு சமூக வளங்களைப் பயன்படுத்தலாம்? (முந்தின தினம் காட்டப்பட்ட "இளம் வரலாற்றாசிரியர்களின் படக்காட்சியைத் தொடர்புபடுத்திக் கொள்ளலாம்")

## முக்கிய செய்திகள்

நாள் 5

- பள்ளித் தலைமை ஆசிரியர், தங்கள் பள்ளியிலும், வகுப்பறையிலும், உள்ளடக்கலை உருவாக்க முடியும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்
- ஒரு பள்ளித் தலைவராக, உள்ளடக்கலுக்கான இடத்தையும், செயல்முறையையும் உருவாக்குவது உங்கள் கட்டுப்பாட்டில்தான் உள்ளது.
- பள்ளியின் ஒவ்வொரு குழந்தைக்கும் மற்றும் பணியாளருக்கும் உள்ளடக்கலுக்கான இடம் என்பது, பல்வேறு விதமான வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது. எனவே இது ஒரு பள்ளிச் செயல்முறைகளில் ஒரு மூலதனமாகும்.

### அமர்வு 5 : எனது பள்ளியின் கற்றல்–கற்பித்தலில் நிலைமாற்றச் செயல்முறைகளுக்கான ஆரம்பம்

| **அமர்வு 5** | **17.00–17.30 மணி** | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்** |
| தனிநபர் எழுத்துப் பயிற்சி | 10 | இந்த முக்கியப் பகுதியில் கற்றலை ஒருங்கிணைக்க முடிகிறதா? |
| பெரிய குழுவில் பயிற்சி | 20 | |

## செயல்பாடு 5.1 : ஒருங்கிணைத்தல்

### செயல்பாட்டை எவ்வாறு மேற்கொள்வது ?

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- இந்த அமர்வின் முக்கிய நோக்கமானது, பங்கேற்பாளர்கள் கற்றல்–கற்பித்தலின் நிலைமாற்றச் செயல்முறைகளில் கற்றுக் கொண்ட கருத்துக்களைத் தொகுக்க உதவும்.
- பங்கேற்பாளர்கள் தனித்தனியாகத் தங்கள் பள்ளியில் இந்த நிலைமாற்றத்தை ஆரம்பிக்க மேற்கொள்ளும் செயல்முறைகளை எழுதுதல்.
- பங்கேற்பாளர்கள் தங்கள் கருத்துக்களை பெரிய குழுவில் பகிர்ந்து கொள்ள ஊக்கமளித்தல்.

### நடத்துபவருக்கான குறிப்புகள்

நடத்துபவர் முக்கியமான கருத்துக்களை வெள்ளைப் பலகையில் எழுதுகிறார். அதே சமயம், பங்குபெறுபவர்கள், தாங்கள் தனித்தனியே எழுதியதை அனைவரின் நலனுக்காகப் பகிர்ந்து கொள்கிறார். பங்குபெறுபவர்கள், தாங்கள் பள்ளியில் செய்யப்போவதை பகிர்ந்து கொள்ளும்பொழுது, காலநேரம் மற்றும் எத்தனை முறைகள் அதைச் செய்வார்கள் என்று குறிப்பிடப்படுவதை மனதில் கொள்ள வேண்டும். உதாரணமாக, ஒரு பங்குபெறுபவர், வகுப்பறையைத் தொடர்ந்து கவனிக்க போவதாக சொல்லும்பொழுது, அது மாதத்திற்கு இரு முறையோ, மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ என்று குறிப்பிட வேண்டும். கற்பித்தல்–கற்றல் உருமாற்ற செயல்முறையின் முக்கியத்துவத்திற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள உதவுவது தான் இதன் முக்கிய நோக்கமாகும்.








நாள்
5

## குறிப்புகள்

## குறிப்புகள்

நாள்
5



## முக்கிய பகுதி – 4

# குழுவை உருவாக்கி–வழிநடத்துதல்




# நாள் 6

அனுசரனையாளர் / நெறியாளர் சரிபார்க்க வேண்டிய பட்டியல்
(பிரத்யேக பகுதி 4 – குழுவை உருவாக்கி, வழிநடத்துதல்)

## நாள் 6

**கீழ்க்காணும் வளங்களை நீங்கள் மறக்காமல் வாங்கிக் கொண்டீர்களா ?**

1. குழுவைப் பற்றி காணொளித் திரை மூலம் விளக்குவது (D6_S1_1.1) ☐
2. தனியாள் ஆய்வு கையேடு (D6–S3–3.1a) ☐
3. வலிமை மிக்க குழு வார்ப்ருவின் துண்டுபிரசுரம் (D6–S3–3.16) ☐
4. “என்னால் – நம்மால்” படக்காட்சி (D6–S4–4.1) ☐

**கீழ்க்காண்பவை தயார் நிலையில் உள்ளனவா என்று உறுதி செய்து கொள்ளவும்.**

1. வரைபடங்கள் ☐
2. வரைபடப் பேனாக்கள் ☐
3. எழுதப்படாத வெள்ளைத்தாள்கள் ☐
4. மடிக்கணினி / கணினி ☐
5. திரைப்படம் காட்டும் கருவி ☐
6. காணொலி திரை மூலம் வழங்கப்பட்டவை குறுந்தகடு வடிவில் ☐
7. ஒலிபெருக்கிகள் (ஒலி தரமானதாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவும் ☐



## அறிமுகம்

பள்ளி என்பது அனைத்து உறுப்பினர்களும் ஒன்றாக சேர்ந்து தீவிரமான செயல் திறனோடு, வரையறுக்கப்பட்ட இலக்கை நோக்கி செயல்படும் நிறுவனம் ஆகும். இது நற்பயனளிக்கும் விதத்தில் நடக்க வேண்டுமெனில், குழுக்களை உருவாக்கி, வழிநடத்துதல், பள்ளித் தலைமை ஆசிரியரின் தலையாய கடமையாகிறது. குழு முயற்சி, பள்ளி நன்றாக இயங்க உதவுவதோடு மட்டுமல்லாமல், குழுவின் ஒவ்வொரு அங்கத்தினரின் தகுதிகளையும், திறன்களையும் வளரச் செய்கிறது. இது, கருத்து பரிமாற்றத்தினாலும், பிரச்சினைகளையும், சவால்களையும் சமாளிக்க புது வழிகளை கடைபிடிப்பதன் மூலமும் சாத்தியமாகிறது. நற்பயனளிக்கும் குழுக்களை உருவாக்கி, தக்க வைத்துக் கொள்ள தேவையான மதிப்புகளையும், திறனையும் இந்த வழக்கமான பகுதி கருத்தில் கொள்கிறது. இதன் மூலம் பள்ளித் தலைமையாசிரியர் குழு உருவாவதின் போக்கு, ஒன்று கூடி வேலை செய்தல், வலிமைமிக்க குழுக்கள், கருத்து வேறுபாடுகளை சரி செய்தல், நற்பயனளிக்கும் விதத்தில் தொடர்பு கொள்ளுதல், இதன் மூலம் குழு அங்கத்தினர்களின் தொழில் சார்ந்த வளர்ச்சிக்கு வழிவகுத்தல். இவற்றை பற்றி புரிந்து கொள்ள உதவுகிறது.

# நாள் 6

## இன்றைய தினத்தின் ஒரு பார்வை

| நாள் – 6 | | |
|---|---|---|
| அமர்வு | பெயர் | நேரம் (நிமிடங்கள்) |
| 1. | குழுவை புரிந்து கொள்ளுதல் | 75 |
| 2. | பயனுள்ள கருத்து பரிமாற்றத்திற்கு இடம் கொடுப்பது – ஆசிரியர்களோடு கூட்டம் நடத்துவது | 120 |
| 3. | வலிமை மிக்க குழுக்கள் மற்றும் கருத்து வேறுபாடுகளை சரிசெய்தல் | 90 |
| 4. | குழுவின் தலைவராய் இருத்தல் மற்றும் குழுக்களை உருவாக்குதல் | 90 |

### கூட்டம் 1 : அணியை புரிந்து கொள்ளுதல்

| அமர்வு 1 | 09.30 – 10.45 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| குழுவை புரிந்து கொள்ளுதல் | 40 | பங்குபெறுபவர்கள் குழுவின் அர்த்தத்தையும், நோக்கத்தையும் புரிந்து கொள்ள முடியும் |
| குழுவின் சின்னம் உருவாக்குதல் | 35 | |

## செயல்பாடு 1.1 : குழுவைப் புரிந்து கொள்ளுதல்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** பெரிய குழுவிற்குள் கலந்துரையாடல் (முழுமையான) மற்றும் சிறிய குழு செயல்பாடு


### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- பங்குபெறுபவர்கள், தாங்கள் குழு உறுப்பினர்களாக இருந்து பெற்ற அனுபவத்தையும் (பள்ளிக்கு வெளியே தங்கள் வாழ்க்கை அனுபவத்திலிருந்தும் இருக்கலாம்) மற்றும் ஏன் அந்த குழு வெற்றி பெற்றது அல்லது தோல்வி அடைந்தது என்றும் நெறியாளர் வினவுகிறார்.
- கேட்கப்படும் கேள்விகளுக்கு கிடைக்கும் பதில்களை, நெறியாளர் வெள்ளைப் பலகையில் குறித்துக் கொள்கிறார். பின்னர் பெரிய குழுவின், அனைத்து பதில்களையும் ஒருங்கிணைத்து, எந்தெந்த காரணிகள் குழுவின் வெற்றியை அல்லது தோல்வியை நிர்ணயிக்கின்றன என்று தீர்மானிக்கச் சொல்கிறார்.
- கீழ்க்கொடுக்கப்பட்ட மேலும் சில கேள்விகளை குழுவை பரிசீலிக்கச் சொல்லி, வெள்ளைப்பலகையில் குறித்துக் கொள்ளச் சொல்கிறார். நெறியாளர், குழுப் பணியை ஆதரித்து, காணொளித் திரை மூலம் விளக்குகிறார். அந்தக் குறுந்தகடு பங்குபெறுபவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது *(D6_S1_1.1 நாள் 6 – அமர்வு 1 – செயல்திறன் 1.1 – குழுவைப் பற்றி காணொளித் திரை மூலம் விளக்குதல்)*
- குழுவைப் பற்றிய காணொளித் திரை விளக்கத்தை, சிறு குறிப்புகளாக பங்கு பெறுபவர்களுக்கு விநியோகித்தல்.

### எதிரொலிக்கும் கேள்விகள்

- பணிமனையில் நாம், சிறிய குழுக்களாக செயல்பட்டோம். சிறிய குழுக்களாக வேலை செய்வதும், அணியாக வேலை செய்வதும் ஒன்றுதானா ? குழுவிற்கும், அணிக்கும் என்ன வித்தியாசம் ?
- பள்ளித் தலைமை ஆசிரியர்களின் பங்கினை பற்றி சிந்திக்கவும். எந்தெந்த செயல்களை தனியாக செய்யலாம், எந்தவிதமான செயல்களுக்குப் பிறர் உதவி தேவைப்படும் ?
- நாம் ஒன்றாக சேர்ந்து பணியாற்றக்கூடிய அவசர கால சூழ்நிலை பள்ளிகளில்







நாள்
6

உருவாகிறதா ? அவசர கால சூழ்நிலையை கையாள, நாம் எவ்வாறு குழு அமைக்கிறோம் ? பள்ளித் தலைவர்களாக பங்குபெறுபவர்கள் தங்கள் அனுபவங்களைக் கூறலாம்.

- உங்களைப் பொறுத்தவரை, சேர்ந்து வேலை செய்வதினால் ஏற்படும் சாதக, பாதங்கள் என்னென்ன ?
- நல்ல குழுப்பணியில், பரிமாற்றத்தின் முக்கியத்துவம் என்ன ? குழு அங்கத்தினர்களுக்கு எவ்வாறு அவரவர் பங்குகள் பிரித்தளிக்கப்படுகிறது ?
- குழுக்களின் தனிச்சிறப்புகளை நாம் ஒருங்கிணைக்கலாம். அதற்கு பயன் அல்லது இலக்கு இருக்கிறதா ? குழுக்களுக்கு பகிர்ந்து கொள்ளப்பட்ட விளைவுகள் கிடைக்கிறதா ?
- குழுத் தலைவரின் குணாதிசயங்கள் என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள் ?

## நெறியாளருக்கான குறிப்புகள்

பங்குபெறுபவர்களின் அனுபவங்களை (சிறிய குழுவாகவோ, அணியாகவோ பணி செய்த) திறமையாக வெளிக்கொணர்வதே முதல் கூட்டத்தின் முக்கிய பணியாகும். சிறிய குழுவிற்கும், அணிக்குமான வேறுபாடு என்னவெனில் – குழுவானது திட்டமிடப்படாமலும், வரையறுக்கப்பட்ட இலக்குகள் இல்லாமலும், தற்காலிக அமைப்பு கொண்டு, நீண்டகால இலக்கு இல்லாமலும் செயல்படுவதாகும். இதற்கு நேர்மாறாக, அணியானது ஒழுங்கமைக்கப்பட்ட, திட்டமிட்ட இலக்கினை மற்றும் ஒவ்வொரு அணி உறுப்பினர்களுக்கும் தெளிவான பங்கினை நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகும். அணி உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளுக்கு அவர்கள் பொறுப்பாவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்க வேண்டும். கட்டமைப்போடு, ஒரு பயன்பாட்டை நோக்கி செயல்பட்டு, எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை / முடிவுகளை நோக்கி, அனைவரும் சேர்ந்து செயல்படுவதுதான் ஒரு அணியின் தனிச்சிறப்பு என்பதை பங்குபெறுபவர்களுக்கு எடுத்துரைப்பதுதான் ஊக்குவிப்பவரின் கடமையாகும். பள்ளிகள் வழக்கமாக நடைபெறவும், எதிர்பாராமல் வரும் சவால்களை சந்திக்கவும் அணி உதவி செய்கிறது. படங்களோடு கூடிய நழுவங்களை கொண்டு, ஊக்குவிப்பவர் இதைச் செய்கிறார்.

## முக்கியச் செய்திகள்

- பகிர்ந்து கொள்ளப்பட்ட இலக்கு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை மனதில் கொண்டு குழு உருவாக்க வேண்டும்.
- பள்ளி நற்பயனளிக்கும் விதத்தில் நடைபெற ஏதுவாக பள்ளித் தலைவரின் பணிகளை பகிர்ந்தளிக்க அணி உதவுகிறது.
- அணியானது தனிநபரின் திறமைகளை வளர்க்கவும் உறுதுணையாக இருக்கிறது.

## செயல்பாடு 1.2: அணிக்கான குறியீட்டினை உருவாக்குவது

**செயல்முறை : குழுவின் செயல்பாடு மற்றும் விளக்கங்கள் ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்**

பங்குபெறுபவர்கள், தங்களை 5 அல்லது 6 நபர் கொண்ட குழுக்களாகப் பிரித்துக் கொண்டு, தங்கள் அணிகளுக்கு ஒரு அடையாளத்தை உருவாக்குகின்றனர். அனைத்து உறுப்பினர்களும், இணைந்து யோசித்து தங்கள் அணிக்கான அடையாளத்தையும்,

மேற்கோள் வாசகத்தையும் உருவாக்குகின்றனர். பாடத்திட்டம் சார்ந்தோ அல்லது பாடத்திட்டம் சாராமலும், குழுக்கள் அமைப்பதை பற்றி யோசிக்கலாம். குழு அடையாளத்தை அமைத்த பிறகு, அதை அணித்தலைவரிடம் சமர்ப்பிக்கின்றனர். அணித்தலைவர், ஒவ்வொரு குழுவும், ஏன் அந்தந்த அடையாளத்தை தேர்ந்தெடுத்தது மற்றும் அவை எதை சுட்டிக்காட்டுகிறது என்றும் கலந்துரையாடுகிறார்.


## நெறியாளருக்கான குறிப்புகள்

சேர்ந்து யோசிப்பதற்கும், பகிர்ந்த எண்ணத்தோடு எடுக்கப்பட்ட முடிவுக்கான அனுபவம், பகிர்ந்து கொள்ளப்பட்ட இலக்கை நோக்கி பயணிப்பது மற்றும் ஒருவரையொருவர் புரிந்து கொள்வது – இவற்றை அடைய ஒரு வழியாக சிறிய குழுக்களின் செயல்கள் நடத்தப்பட்டது.

**அமர்வு 2: பயனுள்ள உரையாடலுக்கான இடத்தை உருவாக்குவது :பணியாளர்களுடன் கூட்டம் நடத்துவது**

| அமர்வு 2 | 11.00 – 13.00 மணி | |
|---|---|---|
| **செயல்கள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்** |
| ஆசிரியர்களுடன் கூட்டம் நடத்துவது : ஏற்றுக்கொண்ட பங்கினை போல் பாவனை செய்து நடிப்பது | 60 | நிகழ்ச்சி நிரல் சார்ந்த கூட்டம் நடத்துவதின் முக்கியத்துவம், கூட்டம் நடத்தும் முறை மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகளின் பலன்களை மறு ஆய்வு செய்வது – இவற்றை பற்றி பங்கு பெறுபவர்கள் புரிந்து கொள்கிறார்கள். குழுக் கூட்டத்தில், தலைமையின் பழக்கவழக்கம் ஏற்படுத்தும் தாக்கத்தை பிரதிபலிக்கிறார்கள். |
| மொத்த குழுவுடன் விவாதித்து ஆசிரியர்கள் கூட்டம் நடத்தும் முறையை தயாரித்தல் | 60 | |

நாள்
6



## செயல்பாடு 2.1: ஆசிரியர்களுடன் கூட்டம் நடத்துவது

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** ஏற்றுக்கொண்ட பங்கினைபோல் பாவனை செய்து நடிப்பது. பின்னர் அணியோடு கலந்துரையாடுவது, விவரிப்பது.

## ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

நெறியாளர், இரண்டு முற்றிலும் மாறுபட்ட பங்கு பாவனைகளை 8–12 நபர் கொண்ட குழுக்களுக்கு நடிக்க கொடுக்கிறார். பங்குபெறுபவர் ஒருவரை, காட்சி–1இல் முதல்வராக நடிக்கச் சொல்கிறார். (கீழே கொடுக்கப்பட்டது) நற்பயனளிக்கும் ஆசிரியர் கூட்டத்தில் நெறியாளர் பங்கேற்று நடிக்க வேண்டும்.



- இந்த 8–12 நபர்கள் கொண்ட குழு ஒரு பள்ளியை குறிக்கிறது. மற்ற பங்கேற்பவர்கள், பார்வையாளர்களாக இருக்கிறார்கள். ஆசிரியர்களாக நடிப்பவர்கள், எந்த ஒரு பாத்திரத்தையும் ஏற்பதில்லை. அவர்கள் தலைவராக நடிக்கும் நடத்துபவர் சொல்வதை மட்டும் கேட்கிறார்கள். பார்வையாளர்களாக நடிக்கும் பங்கேற்பாளர்கள், தலைவரின் பழக்கவழக்கத்தையும், ஆசிரியர்களிடம் அது ஏற்படுத்தும் தாக்கத்தையும் கூர்ந்து கவனிக்கச் சொல்லப்படுகிறார்கள்.
- இந்த செயல்பாடு 2 அல்லது 3 முறை செய்யப்படுகிறது. ஒவ்வொரு முறையும் தலைவர் வெவ்வேறு வகையான தலைமைப் பழக்கத்தை கடைபிடிக்கிறார். தலைவர், தான் கடைபிடிக்கப் போகும் பழக்கத்தை, முன்கூட்டி விவரிப்பதில்லை. ஒவ்வொரு பங்கு பாவனையும் 5–6 நிமிடத்திற்கு மேல் இருத்தல் கூடாது. இருப்பினும், விவாதங்கள் இருக்கக்கூடிய நற்பயனளிக்கும் கூட்டமாகிய காட்சி 2 மட்டும் 8–10 நிமிடத்திற்கு நீடிக்கலாம்.
- அனைத்து காட்சிகளிலும் தலைவராக நடிக்கும் நெறியாளர் வகுப்பறைகளை சுற்றிப் பார்த்துவிட்டு, ஆசிரியர்கள் கலந்துரையாடல் மூலம் கற்பித்தல் நடக்க வேண்டும் என்று விவாதிப்பது தான் பின்புலமாக அமைகிறது.
- ஒவ்வொரு பங்குபாவனையின் முடிவிலும், நெறியாளர் பார்வையாளர்களின் பிரதிபலிப்பை பெற முடிவு செய்கிறார். பழக்கவழக்கம், தனிப்பண்பு, பணியாளர் கூட்டத்தில் நடத்தலை மற்றும் அதன் தாக்கம் – இவற்றை வெள்ளைப் பலகையில் பட்டியலிடுகிறார்.

நாள்
6

### காட்சி 1 –நெறியாளர் / பங்குபெறுபவர் பங்கு பாவனைக்கான எழுத்தாக்கம்

தலைவர் திடீரென்று, விரைப்பான அங்க அசைவுகளோடும், குரலோடும் வருகிறார். அவர் வகுப்பறைகளை சுற்றி வந்ததாகவும், போதிய அளவு கலந்துரையாடல் மூலம் கற்பித்தல் நடக்கவில்லை என்பதால் தான் மகிழ்ச்சியாக இல்லையென்று கூறுகிறார். இது சீக்கிரம் மாற வேண்டும், ஏனெனில் மாவட்ட அதிகாரிகள் மேற்பார்வைக்காக விரைவில் வரவிருப்பதாக கூறுகிறார்.

தலைமை ஆசிரியர் – ஏன் எதுவும் சரியாக இல்லை, தன் பதவி ஆட்டத்தில் இருப்பது மற்றும் மாவட்டக் கல்வி அதிகாரி பள்ளியைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் ஒரு பெரிய விரிவுரையாற்றுகிறார். எந்த ஒரு தருணத்திலும், தலைமை ஆசிரியர் எந்த ஒரு விவாதத்திற்கும் இடமளிக்கவில்லை, ஏன் மாற்றம் வேண்டும், எவ்வாறு மாற்றம் நிகழும் என்றும் கூறவில்லை.

தலைமை ஆசிரியர் பேசும்பொழுது, வேறு யாரும் பேச அனுமதிக்கப்படவில்லை. யாரேனும் பேச முற்பட்டால், தற்போது கேட்க மட்டுமே செய்ய வேண்டும் என்று உடனடியாக அமைதிபடுத்தப்படுவார்கள். கலந்துரையாடல் மூலம் கற்பித்தல் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற ஆணையோடு ‘‘கூட்டம்’’ முடிகிறது. கூட்டம் முழுக்க தலைவர் ‘‘நான்’’, ‘‘நான் எதிர்பார்ப்பது’’ ‘‘எனக்கு வேண்டியது’’ என்ற சொற்றொடர்களையே பயன்படுத்துகிறார்.

## காட்சி 2 –நெறியாளரின் பங்கு பாவனைக்கான எழுத்தாக்கம்

தலைமை ஆசிரியர் அறையில் நுழைந்து, அனைவரையும் வரவேற்கிறார். தான் இல்லாதபோது அவர்கள் செய்த பணிக்கு நன்றி தெரிவிக்கிறார். கலந்துரையாடல் மூலம் கற்பித்தல் முறை பற்றிய பட்டறைக்கு சென்றதாகவும், அதை எவ்வாறு தங்கள் பள்ளியில் நடைமுறைப்படுத்தலாம் என்று சக ஆசிரியர்களின் கருத்துக்களை கேட்க விரும்புவதாகவும் கூறுகிறார்.

தான் பார்த்த சில திரைக் காட்சிகள், இந்த முறை எவ்வளவு நன்றாக வேலை செய்ததாகவும், மாணவர்கள் மிக அருமையாக, நேர்மறையாக செயல்பட்டனர் என்றும் கூறுகிறார்.


கலந்துரையாடல் முறையின் கற்பித்தல் பற்றிய சக ஆசிரியர்களின் கருத்துக்களை கேட்டறிந்தார். தங்கள் பள்ளியிலும் மாணவர்களின் நலனுக்காக இந்த முறையை கடைப்பிடிக்க விரும்புகிறார். பணியாளர்களும் இதனை வசதியாக கடைபிடிக்க வேண்டும் என்று நினைக்கிறார். தலைமை ஆசிரியர் – இதை எவ்வாறு செயல்படுத்தலாம் என்று கேட்கிறார். பதில்களே இல்லை என்றாலும், பதில்கள் செய்யப்பட கூடியவையாக இல்லாதிருப்பினும், தலைவர் சிறு குழுக்களாகப் பிரித்து, எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்று கலந்துரையாட சொல்கிறார்.

தலைமை ஆசிரியர் செயல்களை சுருக்கமாக விவரிக்கிறார். இதனால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், ஆசிரியர்களின் மறுமொழி பற்றியும் நேர்மறை எண்ணங்களே கொண்டுள்ளார். அனைவருக்கும் அடுத்து நடக்கப்போவது என்ன, கால அளவு எவ்வளவு என்றும் தெரியும். சிறிய குழுக்களுக்கு, தங்கள் கருத்துக்களை கூற ஒரு மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டது. அடுத்த கூட்டத்தில் இதுபற்றி விவாதிக்கப்படும். கலந்துரையாடலுக்கு ஏற்ற, சிறப்பான பாடத்தை எடுத்து, ஒரு ஆசிரியரை மாதிரி பாடமாக நடத்தச் சொல்லி, மற்றவர்களை கவனிக்கச் சொல்கிறார் தலைமை ஆசிரியர். கூட்டம் முழுவதும், தலைமை ஆசிரியர் “நாம்” என்ற சொற்றொடரையே உபயோகிக்கிறார். அணி சார்ந்த வழிமுறையையே வலியுறுத்துகிறார்.

நாள்
6

## காட்சி 3 – (கட்டாயமில்லை)

தேவையெனில் மூன்றாவது காட்சியை அரங்கேற்றலாம். இதில் நெறியாளர், மாணவர் கற்பித்தலை ஊக்குவிக்கும் வகையிலான பங்கினை எடுத்துக் கொள்ளலாம். தலைவர் இதற்கும் ஒருபடி மேலே சென்று, 5–6 நிமிடத்திற்கு, மாதிரி வகுப்பறையில், கலந்துரையாடல் மூலம் கற்பித்தலை நடத்தி காட்டலாம். எதிரொலிக்கும் கேள்விகள் – பங்குபாவனை முடிந்த பிறகு, நெறியாளர், தலைமை ஆசிரியரின் பழக்கவழக்கம், தனிப்பண்பு மற்றும் ஆசிரியர் கூட்டம் நடத்தப்பட்ட விதம் பற்றிய பார்வையாளர்கள் (ஆசிரியர்கள் அல்லாத பங்குபெறுவோர்) கருத்துக்களை கேட்டறிந்தார். அதன்பின் தலைமை ஆசிரியர் காட்சிகளுக்குள் இருக்கும் வேறுபாடுகளை, வெள்ளைப் பலகையில் பட்டியலிடுகிறார். நற்பயனளிக்கும் ஆசிரியர் கூட்டம் என்பது உறுப்பினர் ஒவ்வொருவரும் குழுவின் அங்கத்தினராக கருதுவது, அவர்கள் கருத்து கேட்கப்படுவது, ஒவ்வொருவருடைய அறிவையும், திறனையும் பயன்படுத்தி மாணவர்கள் திறனை வெளிக்கொணர்வது இவைகளேயாகும்.







## நற்பயனளிக்கும் ஆசிரியர்கள் கூட்டத்தை நடத்துவதற்கு வழிகாட்டுதல் முறைகள்

### ஒரு கல்வியாண்டில் நடத்தப்பட வேண்டிய பணியாளர்கள் கூட்டங்களுக்கான கால நிர்ணயம்

- ஆசிரியர் கூட்டம் எப்போது வைக்கப்பட வேண்டும் என்று நாம் எப்படி தீர்மானிக்கிறோம்? அவை காலத்தின் அடிப்படையிலா (வருட ஆரம்பம் அல்லது 3 மாதத்திற்கு ஒருமுறை அல்லது மாதத்திற்கு ஒருமுறை) அல்லது ஏதாவது ஒரு பிரச்சனைக்காக கூட்டப்படுவதா?

### ஆசிரியர் கூட்டத்தின் நோக்கம்

- பணியாளர் கூட்டத்தை நடத்த பல காரணங்கள் இருக்கலாம் – கல்வியாண்டிற்கு திட்டமிடல், கால அட்டவணை செய்ய, அரசாங்க ஆணை பற்றி விவாதிக்க, உபகாரச் சம்பளம், புத்தகம், சீருடை இவைகளை விநியோகிக்க – இப்படி பல நோக்கங்கள் இருக்கலாம்.
- ஆசிரியர்களின் கூட்டம் கூட்ட வேறு என்ன காரணங்கள் இருக்க முடியும்? பாடத்தை புரிந்து கொள்வதில் மாணவர்கள் சந்திக்கும் பிரச்சனைகள், மாணவர் கற்றலின் முன்னேற்றத்தை மறுபரிசீலனை செய்வது, ஆசிரியர்களின் வளர்ச்சியை மறுபரிசீலனை செய்வது, ஆசிரியர்களின் தொழில் சார்ந்த முன்னேற்றத்தை கலந்தாலோசிப்பது, ஆசிரியர்களுக்கிடையே வரும் தகராறுகளை சமாளிப்பது, சமூகத்தின் உதவியை நாடுவது – போன்ற காரணங்கள் ஆசிரியர்கள் கூட்டத்தில் இடம் பெற வேண்டுமா? இவை முக்கியமான பிரச்சனைகளா?

### ஆசிரியர்கள் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் தயாரித்தல்

- முன்னதாக, ஆசிரியர் கூட்டத்தை எவ்வாறு திட்டமிடுவது?
- ஆசிரியர்களின் 4–5 பிரச்சனைகளை கொண்ட ஆசிரியர்கள் கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரலை தயாரித்தல். ஆசிரியர்கள் கூட்டத்தின் நேரம் மற்றும் இடத்தை, முன்னதாகவே தகவல் அளிப்பதை பள்ளித் தலைமையாசிரியர் எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்கிறார்.
- முன்னதாக தகவல் தெரிவிப்பதின் நன்மைகள் யாவை?
- உதாரணமாக, கூட்டத்திற்கு தயார் செய்து கொள்ள ஆசிரியர்களுக்கு நேரம் கிடைக்கிறது. அதோடு, தேவையான தகவல்களையும் சேகரித்து கொண்டு வரமுடியும்.
- தனிநபர்களுக்கு பணியை பகிர்ந்து கொடுப்பது அல்லது அணிகளை உருவாக்குவது.
- கூட்டத்தின் உறுப்பினர் ஒருவர், கூட்டத்தில் நடந்ததை குறிப்பெடுத்தல் அவசியமா? இதனால் கிடைக்கும் நன்மைகள் என்ன?
- ஒரு குறிப்பிட்ட பணியை ஒரு தனிநபரிடம் எவ்வாறு ஒப்படைக்கிறீர்கள் அல்லது பணியை முடிக்க எவ்வாறு அணியை உருவாக்குகிறீர்கள்?
- கூட்டத்தில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு பிரச்சனைக்குமான செயல்பாடுகளையும் அதன் விளைவுகளையும் குறிப்பிட முயற்சி செய்யவும் உதாரணமாக, மூன்றாம் வகுப்பு மாணவர்கள் ஆங்கிலம் படிப்பதில் பிரச்சனை இருப்பது தெரிய வருகிறது. இந்தப் பிரச்சனையை, எவ்வாறு, எந்த காலகட்டத்துக்குள், குழுவாக செயல்பட்டு தீர்க்க முடியும். குறிப்பு எடுக்கும் அங்கத்தினரை, விவரங்களை குறித்துக் கொள்ளச் சொல்லவும்.

### நிகழ்ச்சி நிரலின் பாதையை கண்காணிப்பது மற்றும் ஆசிரியர் கூட்டத்தை மறுபரிசீலனை செய்வது

- ஒவ்வொரு கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலும் அடுத்த கூட்டத்தில் மறுபரிசீலனை செய்யப்படும். அப்பொழுதுதான் எந்தெந்த முடிவுகள் சாதிக்க முடிந்தது என்று தெரியவரும்.

## முக்கியச் செய்திகள்

- பள்ளியை மையமாகக் கொண்ட பிரச்சனைகளை கண்டுபிடிக்கவும், அவற்றை விவாதிக்கவும், ஆசிரியர் கூட்டம் மிக அவசியம். பள்ளி செயல்பாட்டின் வளர்ச்சிக்கு, இது ஒரு நற்பயனளிக்கும் கருவியாகிறது.
- ஒவ்வொரு கூட்டத்திற்கும் வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் மிக முக்கியம். இந்த நிகழ்ச்சிநிரல், முடிவெடுப்பதில் வளர்ச்சி காண, அவ்வப்பொழுது கவனிக்கப்பட வேண்டும்.

**அமர்வு 3 : வலிமை மிக்க குழுக்கள் மற்றும் கருத்து வேறுபாடுகளை சரிசெய்தல்**

| அமர்வு 3 | 14.00 – 15.30 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்** |
| குழுக்களின் வலிமை : சிறு குழுவின் செயல்பாடுகள் | 10 | பங்கு பெறுபவர்கள், மக்கள் எவ்வாறு செயல்படுகிறார்கள், ஒருவரோடொருவர் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்று புரிந்து கொள்வது மூலம் குழுக்களின் வலிமையை தெரிந்து கொள்கிறார்கள். அணியில் வரும் கருத்து வேறுபாடுகளை எவ்வாறு சரிசெய்வது என்றும் தெரிந்து கொள்கிறார்கள். |
| தனியாள் ஆய்வைப் படிப்பது | 20 | |
| மொத்த குழு விவாதம் மற்றும் குழுக்களின் வலிமை பற்றி விவாதித்தல் | 30 | |
| குழுக்களுக்குள் கருத்து வேறுபாடுகள் | 30 | |

நாள்

6

## செயல்பாடு 3.1 : குழுக்களின் வலிமை


**செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?**

**செயல்முறை :** சிறிய குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் மொத்த குழு விவாதம்

## ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

10–12 உறுப்பினர் கொண்ட நான்கு குழுக்களாக, பங்குபெறுபவர்கள் பிரிக்கப்படுகிறார்கள். பங்குபெறுபவர்கள் யோசிக்காமல், ஏதேனும் ஒரு குழுவில் உட்காரலாம் அல்லது அவர்கள் விருப்பத்திற்கேற்ப குழுக்களை உருவாக்கலாம். ஒவ்வொருவரிடம், ஒரு துண்டு காகிதம் கொடுத்து, மற்றொரு பங்குபெறுபவரின் பெயரை எழுதச் சொல்லவும். கூட்டத்தில், யாரோடு இணை சேர விரும்புகிறார்கள் என்று பங்குபெறுபவர்களைக் கேட்கலாம்.

- துண்டு காகிதத்தில், தங்கள் பெயரையும், யாரோடு இணை சேர்க்கிறார்கள் என்பதையும் எழுத வேண்டும். இது இரகசியமாக வைக்கப்படும்.
- காகிதம் மடிக்கப்பட்டு, நெறிப்படுத்துபவரிடம் கொடுக்கப்படுகிறது.





- நெறியாளர், காகிதத் துண்டுகளை பார்வையிடும் பொழுது பங்குபெறுபவர்களுக்கு மாதிரி பாடம் (Case study) கொடுத்து, தனித்தனியே படிக்கச் சொல்லப்படுகிறார்கள். படிக்க 20 நிமிடங்கள் கொடுக்கப்படுகிறது. மாதிரி பாடம் (D6–3.1a நாள் 6 – அமர்வு 3 செயல்பாடு 3.1a– குழுப் பணியில் மாற்றத்தை உண்டாக்குவது) முன்பே பங்குபெறுபவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. (நற்பயனளிக்கும் கூட்டத்தை நடத்துவது மற்றும் தொடர்ச்சி) பங்குபெறுபவர்கள் மாதிரி பாடம் படிக்கும் பொழுது, நெறியாளர் உறவு தொடர்பான அச்சு வார்ப்புரு தயாரிக்கிறார் (D6-S3–3.6 : நாள் 6 – அமர்வு 3 செயல் 3.1b குழுவலிமையின் வார்ப்புரு). இது இரண்டு குழுக்களுக்கு வரைபடமாக கொடுக்கப்படுகிறது.
- இந்த செயல்பாட்டில், நெறியாளர் சக நெறியாளரின் உதவியை நாடுகிறார். இரண்டு நடத்துனரும், ஒவ்வொரு துண்டு காகிதத்தையும் பிரித்து, 4 தனித்தனி வரைபட காகிதத்தில் படமாக வரைகிறார். 2 நெறியாளர்களும் 2 தனித்தனி வரைபடம் காகிதத்தில் செயல்படுகின்றனர்.
- எண்ணிக்கையின் அடிப்படையில், பங்கேற்பாளர்களில் யார் பெயர் அதிகமாக எழுதப்பட்டிருக்கிறது என்று வரிசைப்படுத்தி வரைபட காகிதத்தில் அழகுபட காண்பிக்கிறார். அதிகமாக எழுதப்பட்ட பெயருக்கு ‘‘நட்சத்திரம்’’; ஒருவருக்கொருவர் பெயர் எழுதிக் கொண்டால் சரிவிகித ‘‘புரிதலுள்ளவர்களின் விருப்பம்’’; ஒருவராலும் எழுதப்படாதவருக்கு ‘‘தனிமைப்படுத்துதல்’’ என்று ஒவ்வொன்றையும் அழகுபட பிரித்துக் காட்டுகிறார். ‘‘உட்பிரிவு’’ வர வாய்ப்பில்லை. ஏனெனில், பங்கேற்பவர் ஒருவருக்கு மேல் தேர்வு செய்ய வேண்டும். கால அவகாசம் இருப்பின், நடத்துபவர், கூட்டத்தின் துவக்கத்தில், பங்கு பெறுபவரை இதைச் செய்யச் சொல்லலாம்.
- வரைபடம் தயாரிக்கப்பட்டபின், மொத்த அணியுடன் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ஏன் இந்தச் செயல் செய்யப்பட்டது என்பதன் பின்னணி கூறப்படுகிறது. பட்டறை தொடங்கி 5 நாட்களுக்குப் பிறகு, மக்கள் எவ்வாறு குழு அமைக்கின்றனர் அல்லது எப்படி மற்றவரைவிட ஒருவரையே சார்ந்து இருக்க தொடங்குகின்றனர் என்று புரிந்து கொள்வதற்காக இந்த செயல் செய்யப்பட்டது.

நாள்

6

## எதிரொலிக்கும் கேள்விகள்

- முடிவுகளை பார்த்து, பங்குபெறுபவர்கள் ஆச்சரியப்படுவர். அவர்கள் தேர்ந்தெடுத்த ‘‘நட்சத்திரங்கள்’’, ‘‘சரிவிகித புரிதலுள்ள விருப்பமுடையவர்கள்’’, ‘‘தனிமைப்படுத்தப்பட்டவர்கள்’’ பற்றி அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கேட்கவும்.
- ‘‘நட்சத்திரங்கள்’’, ‘‘தனிமைப்படுத்தப்பட்டவர்கள்’’ என்ற பகுதியில் அல்லது ‘‘சரிவிகித புரிதலுள்ள விருப்பமுடையவர்கள்’’, என தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் ?
- அவர்கள் பள்ளி அமைப்பில், இவ்வித குழுக்கள் இருக்கிறதா ?
- ‘‘நட்சத்திரங்கள்’’, ‘‘தனிமைப்படுத்தப்பட்டவர்கள்’’, ‘‘உட்பிரிவுக்குட்பட்டவர்’’ குழுவிலோ, அணியிலோ எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகிறார்.
- இந்த புதிய விதமான புரிதலை அல்லது மனிதர்களுக்கிடையே ஒருவரை ஒருவர் சார்ந்த செயல் – இவற்றை எவ்வாறு உங்கள் பள்ளியில் அணிகளாக உருவாக்கும்பொழுது உள்ளடக்குவீர்கள் ?

## நெறியாளருக்கான குறிப்புகள்

- மக்கள் ஒருவரோடு ஒருவர், நம்பிக்கை, செயல்படும் விதத்தில், காணப்படும் ஒற்றுமை, வேற்றுமையின் அடிப்படையில் எவ்வாறு சேர்ந்து செயல்படுகிறார்கள் என்று நுண்ணறிய, மேற்படி கூட்டம் உதவுகிறது. இதில் முக்கியமான செய்தி என்னவெனில், பள்ளித் தலைமையாசிரியருக்கும் தன்பால் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடம் இருக்கும் சரிவிகித புரிதலோடு கூடிய செயல்பாட்டை தெரிந்து கொண்டவுடன், அதன் அடிப்படையில் அணி நற்பயனளிக்கும் விதத்தில் செயல்பட வைக்க "நட்சத்திரம்", "சரிவிகித புரிதலோடு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்", "தனிமைப்படுத்தப்பட்டவர்கள்" – இவர்களை பயன்படுத்தும் திறனை உருவாக்குகிறார். உதாரணமாக, பள்ளித் தலைமையாசிரியர், தனிமைப்பபடுத்தப்பட்டவர்களை உள்ளடக்கிய குழுவை உருவாக்கலாம். இதன் மூலம் அவர்களின் மதிப்பை உயர்த்தலாம். அவர்களின் திறனையும் உருவாக்கலாம்.

## செயல்பாடு 3.2: அணியில் கருத்து வேறுபாடுகள்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?


**செயல்முறை :** பெரிய குழு (முழுவதுமாக) ஆலோசனைக்குகந்த வழிமுறைகள்


கடந்த 5 நாட்களாக, பங்குபெறுபவர்கள் சிறு குழுக்களாக செயல்பட்டதை, முழு அணியில், விவாதத்திற்கு நெறியாளர் வழிவகுக்கிறார். பங்குபெறுபவர்கள் குழுவாக செயல்படும்பொழுது, கருத்து வேறுபாட்டிற்குட்பட்டார்களா என்று கேட்டறிகிறார். பங்குபெறுபவர்கள், தங்கள் பள்ளிகளில், குழுத் தலைவராகவோ, குழு உறுப்பினராகவோ இருந்தபொழுது ஏற்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொள்ளலாம்.

நாள்
6

## எதிரொலிக்கும் கேள்விகள்

- குழுவில் பணியாற்றும் பொழுது, யாராவது தாங்கள் சொல்வது எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று கருதி இருக்கிறார்களா ?
- சில உறுப்பினர்கள் தங்கள் கருத்துதான் சரி என்றும், அடுத்தவர் கருத்தை கேட்க மறுத்த சந்தர்ப்பங்கள் ஏதேனும் பங்கு பெறுபவர் சந்தித்ததுண்டா ?
- இந்த கருத்து வேறுபாடுகள் யாருக்கிடையே உருவாகிறது ? பள்ளித் தலைமையாசிரியருக்கும், ஆசிரியர்களுக்கிடையிலா, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமா, ஆசிரியர்களுக்கும் சமூகத்திற்குமா அல்லது வேறு ஏதாவதா ?
- அணியில் எந்தவிதமான கருத்து வேறுபாடுகள் வருகிறது ?
- கருத்து வேறுபாடுகள் பயனுள்ளதா ? அணியின் செயல்பாட்டிற்கு கருத்து வேறுபாடுகள் உதவி செய்கிறதா அல்லது உதவாமல் இருக்கிறதா ?
- அணியின் நோக்கத்தை பூர்த்தி செய்ய, கருத்து வேறுபாடுகளை எவ்வாறு ஒழுங்குபடுத்தலாம் ?





- கருத்து வேறுபாடுள்ள சூழ்நிலை எவ்வாறு ஆக்கபூர்வ செயல்பாடாக மாற்றப்பட்டது அல்லது பிரச்சனையைத் தீர்க்க புதிய வழிமுறை கண்டுபிடிக்கப்பட்டது போன்ற உங்கள் அனுபவங்களை எங்களிடம் பகிர்ந்து கொள்ளவும்.
- பள்ளிச் சூழலில், கருத்து வேறுபாடுகளை எவ்வாறு தீர்க்கலாம்.

## நெறியாளருக்கான குறிப்புகள்

அடிப்படை தேவைகள் கிடைக்காத பொழுது தனிப்பட்ட நபரோ அல்லது குழுவோ மற்றொரு தனிப்பட்டவரின் / குழுவின் பாதையில் இடராக வரும்பொழுது கருத்து வேறுபாடு வருகிறது. கருத்து மாறுபடுவது சரியே. உண்மையில் இதன் மூலம் புதிய அல்லது மேலும் சிறந்த கருத்துக்கள் கிடைக்கும் வாய்ப்புள்ளது. அனைவரும் ஒன்றை ஏற்றுக் கொள்ளும்போது, புதிய சிந்தனைக்கு வழியில்லை. நமக்குள் கருத்து வேறுபாடுகள் வருமாயின், விமர்சனத்தோடு கூடிய சிந்தனை உருவாகி, திருப்திகரமான முடிவுகள் எடுக்க வழி பிறக்கும். ஆனால் சில சமயங்களில் வலுவான / கடுமையான கருத்து வேறுபாடுகள் (அ) நம்பிக்கைகள் சண்டையில் முடிந்து ஒருவருக்கொருவர் பேசாமல், குழுவினருக்கிடையே நம்பகத்தன்மை போய்விடுகிறது. தலைமையாசிரியரின் வலிமையே, இத்தகு வேறுபாடுகளை தீர்த்து, நற்பயனளிக்கும் தொடர்பை ஏற்படுத்தி, குழுவிற்குள் ஒட்டுத்தன்மையை உருவாக்குவதுதான்.

நாள்
6

## முக்கியச் செய்திகள்

- உறுப்பினர்களுக்குள் ஏற்படும் கருத்து வேறுபாட்டிற்கும், முரண்பாட்டிற்கும் வித்தியாசம் உள்ளது. அணி நற்பயனளிக்கும் விதத்தில் செயல்பட, இரண்டையும் நல்ல வழியில் கொண்டு செல்ல முடியும்.
- பள்ளித்தலைமையாசிரியரின் பணியானது, பள்ளியில் உள்ள ஆசிரியர்களுக்கிடையிலான முரண்பாடு மற்றும் மன உளைச்சலை திறம்பட ஒன்றும் இல்லாமல் செய்து, தனி நபரையும், அணியையும் செயல்பட வைப்பது தான்.

### அமர்வு 4: அணித் தலைவராக இருப்பது மற்றும் அணியை உருவாக்குவது

| அமர்வு 4 | 15.30 – 17.00 மணி | |
|---|---|---|
| செயல்பாடுகள் | நேரம் (நிமிடங்கள்) | எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் |
| பள்ளிக்கு ஒரு சாலை வரைபடம் தயாரித்தல் | 35 | இன்று கற்றுக் கொண்டதிலிருந்து பங்கு பெறுபவர்கள், செயலாக்க திட்டத்தை அணிக்காக உருவாக்குவது |
| செயலாக்க திட்டங்களை குழுக்கள் அணிகளுக்கு வழங்குதல் | 50 | |
| நான் எதுவாக இருந்தால், நாம் எதுவாக இருந்தால் என்பதைப் பொறுத்து முடித்தல் | 05 | |

## செயல்பாடு 4.1 : பள்ளிக்கு ஒரு சாலை வரைபடம் தயாரித்தல்

### செயல்முறையை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செய்முறை :** சிறு குழுக்களாக செயல்பட்டு வழங்குதல்

### ஆலோசனைக்கான வழிமுறைகள்

இந்த கூட்டத்தில், பங்கு பெறுபவர்கள் சிறு குழுக்களை உருவாக்க கோரப்படுகிறார்கள். குழுக்கள் ஒரு அணியாகப் பணியாற்றும். அணியானது ஏதேனும் ஒரு கருத்தை கொண்டு இருக்கலாம். குழுக்கள் அணியின் நிகழ்ச்சி நிரல், செயலாக்க முறை, எதிர்பார்க்கப்படும் முடிவுகள், காலக்கெடு பற்றி விவாதிக்கும். பின்வருபவை பற்றி விளக்கி, குழுக்கள் வழித்தட வரைபடம் உருவாக்க வேண்டும்.

- அணியின் நிகழ்ச்சி நிரல்
- நிகழ்ச்சி நிரலை செயலாக்கும் முறை
- எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை வரையறுப்பது
- குழு உறுப்பினர் ஒவ்வொருவரின் பணியையும் நிர்ணயிப்பது
- ஏன் அந்தப் பணி, அந்த நபருக்கு நிர்ணயிக்கப்பட்டதற்கான காரணம்
- திட்டம் செயல்படுத்தும் பொழுது வரக்கூடிய முரண்பாடுகள்
- கருத்து வேறுபாடுகள் வருமெனில், அதை தீர்க்க என்ன செய்வீர்கள் ? பள்ளித் தலைமையாசிரியராக அல்லது அணி உறுப்பினராக என்ன செய்வீர்கள் ?

### நெறியாளருக்கான குறிப்புகள்

தங்கள் பள்ளிகளில் எந்தெந்த அணிகளை உருவாக்கலாம் என்று பட்டியலிடுமாறு, நெறியாளர் குழுக்களுக்குப் பணியிடுகிறார். (உதாரணமாக கல்வி சம்பந்தமாக, இணைப்பாடத் திட்டம், கட்டமைப்பு முதலியன) ஒவ்வொரு குழுவும், ஒவ்வொரு துறையை எடுக்கும் விதத்தில் நெறியாளர் கவனம் கொள்கிறார். உதாரணமாக, ஆசிரியர் கூட்டம் நடத்துவது, மாணவர் கற்கும் பிரச்சனைகளை கண்டறிவது, ஆசிரியர்களிடம் தொழில் சார்ந்த முன்னேற்றம் போன்றவை. சிறு குழுக்களின் செயல்பாட்டை வழங்கிய பின், நெறியாளர் ஒவ்வொரு குழுவின் அனுபவத்தினையும் ஒருங்கிணைக்கிறார்.







## முக்கியச் செய்திகள்

- அணி உருவாக்குவது, பள்ளித் தலைவரின் முக்கிய கடமையாகும். இது தனிநபரின் திறனை வளர்ப்பதற்கும், புதிய சிந்தனைகளாலும், புதிய வழிமுறைகளாலும் சிறந்த விளைவுகள் உருவாகவும் உதவுகிறது.

**கூட்டம் திரைகாட்சியோடு முடிவடைகிறது**




*(D6_S4_4.1 நாள் **6** – அமர்வு **4 –** செயல்பாடு **4.1** – என்னால் மற்றும் நம்மால் என்ற திரைக்காட்சி)*

**குறிப்புகள்**

நாள்
6



முக்கிய பகுதி – 5

# புதுமைக் காணுதலை வழிநடத்துதல்



## நாள் 7

## நெறியாளருக்கான சரிபார்க்கப்பட வேண்டிய பட்டியல் – நாள் 7
## முக்கியமான பகுதி – 5 புதுமை காணுதலை வழிநடத்துவது

### நாள் 7

**இன்றைக்குத் தேவையான கீழ்க்காணும் பொருட்களை வாங்கிவிட்டீர்களா ?**

1. பழக்கமான, தினசரி இருக்கும் சூழலில் இருந்து புதுமைகளை கண்டறிதல் பற்றிய காணொளித் திரை மூலம் விளக்கம் (D7-S1-1.1a) ☐
2. வளத்தின் பெயர் பேராசிரியர் ஷெர்ரி சாந்த் – ஒலி பேச்சு ஒளிக் காட்சி (D7-S1-1.1b) ☐
3. வளத்தின் பெயர் கற்றலுக்காக குப்பைகளை பொம்மைகளாக்குவது – அரவிந்த் குப்தா ஒளிகாட்சி (D7-S2-2.1a, D7-S2-2.1b) ☐
4. மாதிரி பயிற்சியின் (Case Study) கையேடு (D7-S3-4.2) ☐
5. வளத்தின் பெயர் மாற்றத்திற்கான தடையை எவ்வாறு வெல்வது ஒளிக்காட்சி (D7-S4-4.2) ☐

**கீழ்க்காண்பவை உள்ளனவா என்று உறுதிபடுத்திக் கொள்ளவும்.**

1. வரைபடம் ☐
2. வரைபடப் பேனாக்கள் ☐
3. எழுதப்படாத் தாள்கள் ☐
4. மடிக்கணினி / கணினி ☐
5. திரைப்படம் காட்டும் கருவி ☐
6. காணொளித் திரை விளக்கத்தின் குறுந்தகடுகள் ☐
7. ஒலிபெருக்கிகள் (ஒலி நன்றாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்) ☐



## அறிமுகம்

எந்த ஒரு அமைப்பிலும், புதுமை (காணுதல்) கண்டறிதல், பிரச்சனைகளைத் தீர்த்து மாற்றத்தை கொண்டு வரும் நிலைச்சக்தி வழிமுறையாக கருதப்படுகிறது. புதுமைகள் பிரச்சனைகளைத் தீர்க்க மட்டுமே பயன்படுத்தப்படாமல், அனைவரும் பங்கேற்க வைக்க இடம் கொடுப்பதாகவும், பள்ளிகளில் உள்ளடக்கிய பயிற்சியை ஊக்குவிப்பதாகவும் அமைக்கப்பட்ட வேண்டும். புதுமை காணுதல், மக்களை துன்பத்துக்குட்பட்டவர்களாகவும், சிந்திப்பதை ரசிப்பவர்களாகவும், தீர்மானத்தோடு செயல்படுபவர்களாகவும் உருமாற்றுகிறது. என்னால் முடியும் என்ற மனப்பான்மையோடு, நம்பிக்கையுடன் செயல்பட வைக்கிறது. புதுமை காணுதல் மூலம் கற்றல் பள்ளிகளில் வெகு இயல்பாக நடக்கிறது. ஆதலால், புதுமை காணுதல் கலாச்சாரத்தை பள்ளிகளில் உருவாக்குவது மிக அவசியம். இதில் பள்ளிகளை கற்கும் அமைப்புகளாக மாற்றுவதில், பள்ளித் தலைமையாசிரியரின் பங்கு மிக முக்கியமானதாகும். ஆதலால், இந்த முக்கிய பகுதியின் நோக்கம் – “புதுமை காணல் செயல்கள் மூலம் பள்ளிகள் உருமாறுதலை ஊக்குவிப்பது”. மாணவர்களுக்கு மட்டுமல்லாது, இந்த முறையின் கற்றல், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகம் அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாக அமைகிறது. பள்ளியும் கற்கும் அமைப்பாக உருமாறுகிறது.

# நாள் 7

### நாளின் பொதுப் பார்வை

| நாள் – 7 | | |
|---|---|---|
| அமர்வு | பெயர் | நேரம் (நிமிடங்கள்) |
| 1. | புதுமை காணல் – கற்றல் அமைப்பின் இதயம் | 90 |
| 2. | புதுமை காணல் பாரம்பரியத்தை பள்ளிகளில் உருவாக்குவது | 90 |
| 3. | புதுமை காணல் மூலம் பள்ளியை வேறு கண்ணோட்டத்தில் பார்ப்பது | 60 |
| 4. | பயிற்சி | 120 |

## அமர்வு 1 : புதுமை காணல் – கற்றல் அமைப்பின் இதயம்

| அமர்வு 1 | 10.00 – 11.30 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| பழக்கமான, தினசரி இருக்கும் சூழலிலிருந்து புதுமைகளைக் கண்டறிதல் | 15 | பங்கு பெறுபவர்கள், பழக்கமான சூழ்நிலைகளை பின்னோட்டமாக நினைத்து பார்த்து, அதையே புதிய கோணத்தில் பார்க்கின்றனர். பங்கு பெறுபவர்கள், தங்கள் பள்ளிகளில் இருக்கும் யோசிக்கும் முறைகளை கேள்விக் குறியுடன் பார்க்கின்றனர். |
| மாற்றம் புதுமையானது தானா என்று எவ்வாறு அறிவது | 30 | |
| பின்னோட்டமாக, பள்ளியில் செய்த மாற்றத்தை வெளிக்கொணர்தல் | 45 | |

## செயல்பாடு 1.1 : பழக்கமான, தினசரி இருக்கும் சூழலில் இருந்து புதுமைகளைக் கண்டறிதல்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

நாள் 7


**செயல்முறை :** தனித்தனியாக படித்து, அதன் மூலம் புரிந்து கொண்டதை, பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் குழுவாக விவாதிப்பது

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- காணொளித் திரை விளக்கத்தை காண்பித்து, அதன் கையேட்டை விநியோகிக்கவும் (D4_S1_1.1a: நாள் 7 – அமர்வு 1 – செயல்பாடு 1.1 – பழக்கமான, தினசரி இருக்கும் சூழலில் இருந்து புதுமைகளை கண்டறிதல்)
- மொத்த குழுவின் பிரதிபலிப்பிற்கு 10 நிமிடங்கள் கொடுக்கவும். நம் பள்ளியிலும் நாம் புதுமை காணலாமா ?
- புதுமை காணலை புரிந்து கொள்ள, மொத்த குழுவின் கலந்துரையாடல்

### எதிரொலிக்கும் கேள்விகள்

- புதுமைகள் பள்ளிகளிலும் நடக்கிறதா ? உங்கள் பள்ளிகளில் இம்மாதிரி புதுமைகள் நடந்ததை நினைவுகூர்ந்து பார்க்கமுடியுமா ?
- பள்ளிகளில் எதைப் புதுமை என்று கூறுவீர்கள் ? எந்தெந்த பகுதிகளில் புதுமையைப் புகுத்தலாம் ?





- இந்தப் புதுமைகள் எந்த விதத்தில் பள்ளிகளை மாற்றி இருக்கிறது ?
    - நான், ஒரு பள்ளியின் தலைவராக, புதுமை காணலில் தலைவராக எவ்வாறு இயங்க முடியும் ?

### நெறியாளருக்கான குறிப்புகள்

கற்றல் அமைப்பாக பள்ளிகள் உருவாக, புதுமை காணல் மையமாக அமைவதை புரிந்து கொள்ள, பங்கு பெறுபவர்களை விவாதத்தில் ஈடுபட வைக்கவும்.

- சாதாரணத்திற்கு அப்பாற்பட்டு சிந்திப்பது
- புதுமை நடப்பதற்கு வளைந்து கொடுத்தலும், ஓரளவு நிலையற்ற தன்மையும் இருக்கத்தான் செய்யும் என்று வலியுறுத்தவும்.
- பள்ளியிலுள்ள அனைவரும் – ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள் – புதுமைகளை செய்ய தூண்டுகோலாக பள்ளித் தலைமையாசிரியர் முக்கிய பங்கு வகிக்கிறார்.
- ‘மாற்றம் மட்டுமே புதுமையாகாது. ஆனால் புதுமை மாற்றத்தை உள்ளடக்கியது’ என்பதை வலியுறுத்தல் – செயல்பாடு 1.2



## செயல்பாடு 1.2 : பின்னோட்டமாக, பள்ளியில் செய்த மாற்றத்தை பிரதிபலித்தல்

### செயல்பாடுகளை எவ்வாறு கொண்டு செல்வது ?


**செயல்முறை :** மொத்த குழுவும் கலந்துரையாடுவது

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்


- அவர்கள் பள்ளியில் கொண்டு வந்த தனிச்சிறப்பு வாய்ந்த மாற்றத்தை தேர்ந்தெடுத்து, பகிர்ந்து கொள்ளவும்.
- முன்பு ஒரே கூட்டத்தில் செய்த 2 செயல்பாடுகளின் மூலம் கற்றதை வைத்து, பங்கு பெறுபவர்களை கலந்துரையாட வைத்து, விவாதிப்பது.
- இந்தக் கலந்துரையாடலின் அடிப்படையில், புதுமை காணல் மாற்றத்தை உள்ளடக்கியதா அல்லது மாற்றம் புதுமை காணலை உள்ளடக்கியதா என்று விவாதிக்கச் சொல்லவும்.

## எதிரொலிக்கும் கேள்விகள்


- மாற்றமும், புதுமை காணலும் ஒன்றுதானா ? இவை இரண்டும் வெவ்வேறு எனில், புதுமை காணல் மற்றும் மாற்றத்திற்குள்ள வேறுபாட்டை எவ்வாறு கண்டறிவீர்கள் ? உங்கள் பள்ளியில் மாற்றத்தை உண்டாக்கிய அனுபவத்தின் அடிப்படையில் விவாதிக்கவும்.




படம் – 1




படம் – 2




படம் – 3

## நெறியாளருக்கான குறிப்புகள்


நாள்


7

- கற்றல் அமைப்பாக பள்ளிகள் உருவாக, புதுமை காணல் மையமாக அமைவதை புரிந்து கொள்ள, பங்குபெறுபவர்களை விவாதத்தில் ஈடுபட வைக்கவும்.
- இயல்பு முறைக்கு அப்பாற்பட்டு சிந்திப்பது
- புதுமை நடப்பதற்கு – வளைந்து கொடுத்தலும், ஓரளவு நிலையற்ற தன்மையும் இருக்கத்தான் செய்யும் என்று வலியுறுத்தவும்.
- பள்ளியிலுள்ள அனைவரும் – ஆசிரியர்கள், மாணவர்கள், பணியாளர்கள் – புதுமைகளை செய்ய தூண்டுகோலாக பள்ளித் தலைவர் முக்கிய பங்கு வகிக்கிறார்.

## முக்கியச் செய்திகள்

- புலப்பாடு எப்பொழுதும் உண்மையாகாது. திறந்த மனது மட்டுமே உண்மையை புரிந்து கொள்ள உதவுகிறது.
- ஒவ்வொரு சிறிய அல்லது சிறப்பற்ற சூழ்நிலையிலும், புதுமை செய்ய வாய்ப்பிருக்கிறது.





## அமர்வு2: புதுமை காணல் –கலாச்சாரத்தை பள்ளிகளில் உருவாக்குவது

| அமர்வு 1 | 10.00 – 11.30 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| கற்றலுக்காக குப்பைகளை பொம்மைகளாக்குவது – அரவிந்த குப்தா – ஒளிக்காட்சி | 45 | புதுமை காணல் தேடலை, பங்குபெறுபவர்கள், மகிழ்ச்சியோடு செய்யத் துவங்குகின்றனர். சுவால்கள், புதுமை காணலுக்கு நிலையான வாய்ப்பாக அமைகிறது என்று பங்குபெறுபவர்கள் ஒத்துக் கொள்ள துவங்குகின்றனர். புதுமை காணல் முறைத்திறனை வடிவமைக்க துவங்குகின்றனர். |
| நடப்புச் சூழலில் பள்ளிகளில் உள்ள 1 அல்லது 2 பிரச்சனைகளுக்கு புதுமை காணல் | 45 | |

நாள்
7

## செயல்பாடு 2.1 : திரைக் காட்சியை பார்ப்பது :கற்றலுக்காக குப்பைகளை பொம்மைகளாக்குவது

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** திரைக்காட்சி மூலம் விளக்கவுரை மற்றும் குழு செயல்பாடு, தனியாக சிந்தித்தல் மற்றும் எழுதுதல், சிறு சிறு குழுக்களில் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் விளக்கவுரை நிகழ்த்துதல்.

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- திரைப்பட விளக்கவுரை விநியோகிக்கப்பட்டிருக்கிறது (D7_S2_2.1: தினம் 7 – கூட்டம் 2 – செயல்பாடு 2.1 – திரைக்காட்சியை பார்வையிடுதல் – கற்றலுக்காக குப்பைகளாக்குவது – அரவிந்த் குப்தா) – 15 நிமிடங்கள்
- சோதிக்கும் கேள்விகள் மூலம், திரைக்காட்சியை பற்றி திறந்தவெளி விவாதம் நடத்துவது – 30 நிமிடங்கள்

### எதிரொலிக்கும் கேள்விகள்

**திரைக்காட்சி :கற்றலுக்காக, குப்பைகளை பொம்மைகளாக்குவது**

- இந்தத் திரைக்காட்சியில், உங்களை மிகவும் ஆர்வமுறச் செய்தது எது ? ஏன் ?
- திரைக்காட்சியில் பார்த்தது போல், உங்கள் பள்ளிகளில், புதுமை காணலை சோதனை அடிப்படையில் செய்ய, எவ்வாறு வாய்ப்பினை உருவாக்குவீர்கள் ?
- பள்ளியில் கிடைக்கக்கூடிய வளங்களை எவ்வாறு விதவிதமாக பயன்படுத்தினீர்கள் என்று பகிர்ந்து கொள்ளவும்.

- பள்ளித் தலைமையாசிரியராக, நீங்கள் உங்கள் பள்ளியில், புதுமை காணல் செயல்களில் – ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பணியாளர்களை ஈடுபடுத்தி இருக்கிறீர்களா ? அவர்கள் புதுமையாக ஏதும் செய்திருப்பின், பள்ளி நலனுக்காக அதைப் பயன்படுத்தி இருக்கிறீர்களா ?
- சில ஆசிரியர்களும், மாணவர்களும் இயல்பிலேயே புதுமைகள் செய்யக்கூடியவர்களாக இருப்பர். அவர்களை கண்டறிந்து, பாராட்டி இருக்கிறீர்களா ? (பரிசளிப்பது, ஏற்றுக் கொள்வது, உற்சாகப்படுத்துவது, வாய்ப்பளிப்பது, வசதிகள் ஏற்படுத்தி தருவது, குழுக் கூட்டங்களில் பகிர்ந்து கொள்வது)
- ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பள்ளிகளில் சுதந்திரமாக யோசிக்க செயலாற்ற, புதுமைகள் காண எந்தவிதத்தில் உங்களால் இடமளிக்க முடியும் ? நீங்கள் ஏற்கெனவே இதை செய்து கொண்டிருக்கிறீர்கள் எனில், எங்களோடு பகிர்ந்து கொள்ளவும்.

## நெறியாளருக்கான குறிப்புகள்

குப்பைகளிலிருந்து, கற்பித்தலுக்கான உபகரணங்களை செய்ய, திரைக்காட்சியை, அப்படியே உதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. புதுமையாக சிந்திக்க மட்டுமே என்று செய்தியை உள்வாங்கிக் கொள்வது மிக அவசியம்.

## செயல்பாடு 2.2: பள்ளிகளில் தற்பொழுது உள்ள ஒன்று அல்லது இரண்டு பிரச்சனைகளுக்குப் புதுமை காணல்

### செயல்பாட்டை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது ?

நாள்
7

**செயல்முறை :** குழுவாக செயல்படுத்துதல் மற்றும் பகிர்ந்து கொள்ளுதல் பள்ளிகளில் தினசரி இருக்கக்கூடிய பகுதியை, குழுவாகச் செயல்பட்டு கண்டறிவது மற்றும் புதுமை காணல் முறைதிறனை வகுப்பது.


முழு அணியுடன் பகிர்தல் மற்றும் கலந்துரையாடல்


## எதிரொலிக்கும் கேள்விகள்

- புதுமை காணலை உபயோகப்படுத்தி, சவால்களை நமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ள முடியுமா ? எவ்வாறு ?
- பள்ளி நடைமுறையை வடிவமைக்க, புதுமை காணல் எவ்வாறு உதவுகிறது ?

## நெறிப்படுத்துபவருக்கான குறிப்புகள்

பங்குபெறுபவர்களுக்கு, புதுமை காணலை பற்றி ஆழ்ந்த வெளிப்படுத்தலை கொடுக்கவும் மற்றும் பள்ளி முன்னேற்றத்திற்கான அதன் நிலைச் சக்தியை உணரவும், போதிய வாய்ப்பையும், இடத்தையும் கொடுக்கவும் பங்கு பெறுபவர்கள் – பள்ளி வெவ்வேறு நிலைகளிலும் முன்னேறுவதற்கு திரைக் காட்சிக்கு அப்பாற்பட்டு சிந்திக்கவும் மற்றும் இயல்பான கட்டமைப்பு உருவாக்கவும் நெறியாளர், அவர்களின் சிந்தனையை தூண்ட வேண்டும்.





நாள்
7

## முக்கியச் செய்திகள்

- என்னால் புதுமை காண முடியும் – நாம் சேர்ந்து புதுமை காணுவோம்
- சவால்கள் பயமுறுத்தல்கள் அல்ல மாறாக வாய்ப்புகளே

## அமர்வு 3 :புதுமைக் காணல் மூலம் பள்ளியை வேறு கண்ணோட்டத்தில் பார்ப்பது

| அமர்வு 1 | 14.30 – 15.30 மணி | |
|---|---|---|
| செயல்பாடுகள் | நேரம் (நிமிடங்கள்) | எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் |
| மாதிரி பாடத்தை (Case Study) படிப்பது, ஆராய்வது மற்றும் முழு அணி விளக்கவுரை | 60 | முந்தைய மூன்று கூட்டத்தின் கூட்டு பயனாக, பங்குபெறுபவர்கள் வித்தியாசமாக சிந்தித்து, புதுமை காணல் முறையை வடிவமைக்கவும், திட்டமிடவும் முயல்வார்கள் |

## செயல்பாடு 3.1 : புதுமைக் காணலில் மாதிரிப் பாடம் (Case Study)

### செயல்பாட்டை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது ?

**செயல்முறை :** தனித்தனியாக படிப்பது, சிறு குழுக்களில் கலந்துரையாடுவது மற்றும் மாதிரிப் பாட ஆய்வு மற்றும் பெரிய அணியின் விளக்கவுரை / முழுமையான விவாதம் மாதிரிப் பாடத்தை பின்வருபனவற்றின் கண்ணோட்டத்தில் பார்க்கவும்.

- பள்ளி அமைப்பு
- மாதிரிப் பாடத்தில் சொல்லப்பட்டிருக்கும் பிரச்சனை / சவால்
- தேர்ந்தெடுக்கப்பட்ட செய்முறை
- வழங்கப்பட்ட மாதிரிப் பாடம், அமர்வு–1இல் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட புதுமை காணலுக்கான நெறிமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட புதுமைக் காணல் தானா என்று தீர்மானித்துக் கொள்ளவும்
- முழுமையான விளக்கவுரையும், கலந்துரையாடலும்

## ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- பங்குபெறுபவர்கள், சிறு குழுக்களாகத் தங்களை பிரித்துக் கொள்கின்றனர்.
- அனைத்து மாதிரிப் பாடங்களும் ஒவ்வொருவருக்கும், தனித்தனியே படிக்கவும், பிரதிபலிக்கவும் விநியோகிக்கப்படுகிறது. *(D7_S3_3.1: நாள் 7 – அமர்வு 3 – செயல்பாடு 3.1 – மாதிரிப் பாடம்)*
- ஒவ்வொரு குழுவும், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஒன்று அல்லது அனைத்து மாதிரிப் பாடங்களையும் விவாதிக்கிறார்கள் – புதுமை காணல், செய்முறை, வழிமுறை சவால்கள், தீர்வுகள் இவற்றை அடையாளம் காண்கிறார்கள்.
- முழுமையான விளக்கவுரை மற்றும் கலந்துரையாடல்

## எதிரொலிக்கும் கேள்விகள்

மூன்று கூட்டங்களிலும் கற்றதிலிருந்து, புதுமை காணலை அடையாளம் காணக்கூடிய நெறிமுறைகளைப் போதுமானதா என்று தீர்மானித்துக் கொள்ளவும். இல்லையெனில், கூடுதல் செய்திகளைக் குறிப்பிடவும்.

## நெறியாளருக்கான குறிப்புகள்

கூட்டத்தை நடத்தும்பொழுது, மாதிரிப் பாடங்களை, பங்குபெறுபவர்கள், விமர்சன கண்ணோட்டத்தோடு ஆய்வு செய்ய வழிகாட்டவும், தேவையெனில் வழிமுறைகளை கொடுக்கவும். சுருக்கமாக, மாதிரிப் பாடங்களின் ஆய்வு நற்பயனளிக்கும் விதத்தில் உபயோகப்படுத்த, பங்குபெறுபவர்கள் நன்றாக புரிந்து கொள்ளுதல் மிக அவசியம்.

## முக்கியச் செய்திகள்

- புதுமைக் காணல் எளிதில் அறிந்து கொள்ள முடியாதது. எவர் வேண்டுமாயினும் புதுமை காண முடியும்.
- புதுமைக் காணலுக்கு, மகிழ்ச்சியின் நோக்கம் கொண்ட மனது மட்டுமல்லாது, ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையும் தேவை.

### அமர்வு 4 :பயிற்சி

| அமர்வு 4 | 15.45– 17.45 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்களில்)** | **எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள்** |
| பள்ளி முன்னேற்றத்திற்கு, புதுமை காணலை மையமாக வைத்து, பள்ளி வளர்ச்சி திட்டத்தின் வரைவுச் சட்டத்தை உருவாக்கவும். | 110 | யார் வேண்டுமாயின், புதுமை காணல் செய்யலாம் என்ற நம்பிக்கை, பங்கு பெறுபவர்களுக்கு உருவாகிறது. பள்ளி வளர்ச்சி திட்டத்திற்கு புதுமை காணலை மனதில் கொண்டு, புதிய வழிகளை வகுக்கின்றனர். |
| தடைகளை வெல்லுதல் | 10 | |

நாள் 7




## செயல்பாடு 4.1 : பள்ளி முன்னேற்றத்திற்கு, புதுமை காணலை மையமாக வைத்து, பள்ளி வளர்ச்சி திட்டத்தை உருவாக்குதல்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை** : குழுவாக பணியாற்றுவது மற்றும் முழுமையான விளக்கவுரை ஆலோசனைக்குட்பட்ட வழிமுறைகள்

## ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- கூட்டத்தின் நோக்கத்தை முதலில் தெளிவுபடுத்தவும்.



நாள்
7

- முன்னர் நடந்த மூன்று கூட்டத்தில் கலந்துரையாடியது மற்றும் மேற்கொண்ட செயல்முறைகளை வைத்து, பள்ளி வளர்ச்சிக்கு எந்தெந்த பகுதிகளுக்கு, புதுமை காணல் ஒழுங்குமுறையோடு திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது என்று கண்டுபிடிக்கவும்.
- 5–6 உறுப்பினர் கொண்ட குழுக்களாக, பங்குபெற்றவர்களை பிரிக்கவும்.
- முழு அணியின் விளக்கவுரை மற்றும் கலந்துரையாடல்

## நெறியாளருக்கான குறிப்புகள்

- பள்ளி வளர்ச்சித் திட்ட செயல்பாடு, 9, 10 தினங்களில் ஒருங்கிணைப்பு நடக்கும்பொழுது விரிவாக எடுத்துக் கொள்ளப்படும்.
- கூட்டத்தின் வெற்றிக்கு, நெறியாளர், பள்ளி வளர்ச்சி திட்ட எண்ணத்தை நன்கு புரிந்து கொண்டிருக்க வேண்டும்.
- புதுமை காணலை, செயல்முறைக்கு மையமாக வைக்கும்போது, பள்ளி வளர்ச்சி திட்டத்தின் மைய கருத்து மேலோங்கி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.
- செயல்பாட்டை காண்பிக்கும் பொழுதும், கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் பொழுதும், பங்குபெறுபவர்களோடு இணைந்து, புதுமையான முறையில் வழங்க திட்டமிடவும்.

## முக்கியச் செய்திகள்

- “சிந்தித்தல் விளையாட்டாகவும், மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதாகவும் இருக்கும்”.
- ஆம், என்னால் முடியும், நான் புதுமை காண செய்தேன்; நம்மாலும் சேர்ந்து செய்ய முடியும், நாமும் புதுமை காணல் செய்தோம்.

## செயல்பாடு 4.2: “மாற்றத்திற்கான எதிர்ப்பை எவ்வாறு வெற்றி கொள்வது” பற்றிய படக்காட்சி

ஆழ்ந்த வெளிப்பாட்டிற்கும், உண்மையான வாழ்க்கைச் சூழலில் புதுமை காணுதலை பற்றி சிந்திப்பதற்கு ஏதுவாக படக்காட்சியோடு நாளினை நிறைவு செய்யவும்.

## எதிரொலிக்கும் கேள்விகள்

- நான் கூட்டத்தை நடத்தும் பொழுது, புதுமை காணுதலை பற்றி புதிதாகவோ அல்லது வித்தியாசமாகவோ நினைத்தேனா ?
- அது, எந்த அளவிற்கு, பங்கு பெறுபவர்களுக்கு பயனுள்ளதாக இருந்தது ?
- நான் இன்றைய கூட்டத்திலிருந்து / பங்கு பெறுபவர்களிடமிருந்து என்ன புதிதாக கற்றுக் கொண்டேன் ?
- நடத்துபவராக, என்னுடைய பாதையில், புதுமை காணலை எண்ணத்திலிருந்து முன்னோக்கி எப்படி கொண்டு செல்ல விருப்பப்படுகிறேன்.

*(D7_S4_4.2: நாள் 7 – அமர்வு 4 – செயல்பாடு 4.2 – படக்காட்சி “மாற்றத்திற்கோ எதிர்ப்பை எவ்வாறு கொள்வது”)*


**குறிப்புகள்**

நாள்
7



## முக்கிய பகுதி – 6

# பங்குதாரர்களின் பங்களிப்பை வழிநடத்துதல்



'बच्चों की पढाई'

बच्चों की पढाई पर विचार होना चाहिए
जिम्मेदारी जिसकी उससे बात होनी चाहिए
कुछ ऐसे स्कूल है जहाँ बच्चे नहीं आते है
माँ-बाप उनसे घर के काम करवाते है
ऐसे अभिभावकों से बात होनी चाहिए
जिम्मेदारी....
बच्चों .......
कुछ ऐसे स्कूल है जहाँ बच्चे कभी आते है
खाना खाए, बसता लिए घर भाग जाते है
शिक्षक उन पर ज्यादा ध्यान दे नहीं पाते हैं
ऐसे समुदाय से सीधे बात होनी चाहिए
जिम्मेदारी......
बच्चों .......
कुछ ऐसे स्कूल है जहाँ बच्चे रोज आते है
बिना कुछ पढ़े-लिखे घर चले जाते है
ऐसे शिक्षकों से सीधे बात होनी चाहिए
जिम्मेदारी ....
बच्चों......
कुछ ऐसे स्कूल है जहाँ बच्चे रोज आते है
शिक्षक उन्हें रोज-रोज अच्छा पढ़ाते है
स्कूल में समान अवसर सबको दिए जाते हैं
ऐसे स्कूल नेत्रत्व को बधाई मिलनी चाहिए
जिम्मेदारी .....
बच्चों..........

– गायत्री यादव, प्राथमिक विद्यालय

## நாள் 8

## நடத்துபவர் சரிபார்க்க வேண்டியவை – நாள் 8

## முக்கியமான பகுதி – பங்குதாரர்களின் பங்களிப்பை வழிநடத்துதல் : 6

### நாள் 8

**நீங்கள் கீழ்க்காணும் பொருட்களை பெற்றுக் கொண்டீர்களா ?**

1. தன்னைப் பற்றிய பிரதிபலிப்பிற்கான கருத்துரை (D8–S2–2.1) ☐
2. மாதிரி பாடத்தின் (Case Study) கையேடு (D8–S2–2.2) ☐
3. கற்பனை செய்யப்பட்ட காட்சிகளின் தொடர் வரிசை (D8–S2–2.1) ☐
4. கூட்டாளித்துவத்தை உருவாக்கும் வழிமுறை பற்றி காணொலி திரை (PPT) மூலம் வழங்குதல் (D8–S4–4.2) ☐

**கீழ்க்காண்பவை உள்ளனவா என்று உறுதிபடுத்திக் கொள்ளவும்.**

1. வரைபடம் ☐
2. வரைபடப் பேனாக்கள் ☐
3. எழுதப்படாத் தாள்கள் ☐
4. மடிக்கணினி / கணினி ☐
5. திரைப்படம் காட்டும் கருவி ☐
6. பவர்பாயின்ட் விளக்கவுரையின் கையேடு ☐
7. ஒலிபெருக்கிகள் (ஒலி நன்றாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்) ☐



## அறிமுகம்

பலவகையான சமூகப் பொருளாதார பின்னணியில் இருந்து வெவ்வேறு அனுபவங்களோடு,குழந்தைகள்பள்ளிக்குவருகின்றார்கள்.மாணவர்களின் சமூக மற்றும் மனம் சார்ந்த தேவைகள் பூர்த்தி செய்யப்படும்பொழுது, அவர்கள் பள்ளியோடு நல்ல முறையில் தொடர்புபடுத்திக் கொண்டு, நன்றாக கற்க முடிகிறது. பெற்றோர்கள், சமூகம் மற்றும் பங்குதாரர்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதன் மூலம், பள்ளிகளுக்கு, மாணவர்களின் வாழ்க்கையை வளமாக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது. இந்த முக்கியமான பகுதி பள்ளித் தலைவர்கள் – பெற்றோர்களோடும், சமூகத்தோடும், பிற தலைவர்களோடும் கூட்டமைப்பை உருவாக்க உதவுகிறது.

# நாள்
# 8

### நாளின் பொது பார்வை

| நாள் – 8 | | |
|---|---|---|
| அமர்வு | பெயர் | நேரம் (நிமிடங்கள்) |
| 1. | கூட்டாளித்துவத்தைப் புரிந்து கொள்வது : பங்குதாரர்களையும் அவர்களின் ஈடுபாட்டையும் கண்டறிதல் | 75 |
| 2. | வீடு – பள்ளி கூட்டமைப்பு | 90 |
| 3. | சமூகத்தோடு சேர்ந்து பணி செய்வது | 75 |
| 4. | அமைப்போடு இணைந்து வேலை செய்வது | 120 |

## அமர்வு 1 : கூட்டாளித்துவத்தை புரிந்து கொள்வது : பங்குதாரர்களையும் அவர்களின் ஈடுபாட்டையும் கண்டறிதல்

| அமர்வு 1 | 10.00 – 11.15 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| பின்கோ பயிற்சி : பங்குபெறுபவர்கள் கூட்டமைப்பு தேவை என்பதற்கான காரணங்களைக் கண்டறியவும். | 75 | ஒவ்வொரு மாணவனின் கற்றலின் மாற்றத்தில், வெவ்வேறு பங்குதாரர்களின் பங்களிப்பு |

## செயல்பாடு 1.1 : பின்கோ பயிற்சி : பங்குதாரர்களுடனான கூட்டமைப்பின் தேவையைக் கண்டறிதல்.

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திக் காட்டுவது ?

**செயல்முறை :** குழுவாகச் செயல்படுவது


### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

பள்ளியின் பங்குதாரர்களுக்கு பல்வேறுபட்ட ஆர்வங்கள் இருக்கலாம் என உணர்த்துதல்

**நாள் 8**

- பின்வரும் பலதரப்பட்ட ஆர்வங்கள் இருக்கலாம் என்று நெறியாளர் கூறுகிறார்.
    - பெற்றோர்களுக்கு – பள்ளிகள் நடக்க வேண்டும், ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும், மாணவர்கள் கற்க வேண்டும் என்ற ஆசை உள்ளது.
    - ஆசிரியர்களுக்கு – சுய முன்னேற்றம் மற்றும் மாணவர்கள் கற்க வைப்பதில் வெற்றி காண வேண்டும் என்ற ஆர்வம் அதிகம் உள்ளது.
    - சமூகத்திற்கு, தன் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் அக்கறை உள்ளது.
    - நிர்வாகம் – உண்மையான நிலவரத்தைத் தெரிந்து கொண்டு, செயலாக்கத் திட்டத்தை நிறைவு செய்து கொள்ள அல்லது உடனடியாக வேலையை முடிக்க வேண்டும் என்று ஆசைப்படும்.
    - பள்ளி நிர்வாகக் குழு – ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களை பதில் சொல்ல வைக்கும்படி செய்ய விருப்பப்படும்.
- நடத்துபவர் 5 குழுக்களை உருவாக்குகிறார்
- நடத்துபவர் கீழ்க்காணும் வரைபடம் / ஸ்லைடுகளை காட்டி, எந்த உறுப்பினர் கீழ்க்காணும் பிரச்சனைகளில் ஈடுபட பொருத்த மாணவர் என மற்ற உறுப்பினர்களை கண்டுபிடிக்க சொல்கிறார்.





| | | |
|---|---|---|
| மதிய உணவின் தரத்தைப் பற்றி பெற்றோர்கள் புகார் செய்கின்றனர். | பள்ளிக்கும், SMC–க்கும் இடையேயான வாக்குவாதம் நடைபெறுகின்றது. | வகுப்பறையில் அளவுக்கு அதிகமான மாணவர் எண்ணிக்கை மற்றும் போதிய அளவு ஆசிரியர்கள் இல்லாமை. |
| குடிநீரும், கழிப்பறைகளும் பள்ளிகளில் இல்லாதது பற்றி ஊடகங்களின் கவனிப்பு. | சில மாணவர்கள், மிக நிதானமாக கற்றுக் கொள்கிறார்கள். | மாணவர்கள், பள்ளிக்கு வரும் பொழுது, நிந்தனை செய்யப்படுகிறார்கள். |
| மாணவர்கள் தங்கள் சிறிய சகோதர, சகோதரிகளை, (பெற்றோர்கள் வேலைக்கு செல்லும்போது), கவனித்துக் கொள்வதற்காக வீட்டிலேயே தங்கி விடுகின்றனர் | பள்ளிக்கு கட்டிடம் இல்லை. ஆனால் ஆசிரியர்களும், மாணவர்களும் இருக்கிறார்கள். | ஆண் பிள்ளைகளை, தனியார் பள்ளிகளுக்கு அனுப்புவது. |



## நெறியாளருக்கான குறிப்புகள்

மேற்கூறிய சவால்கள் ஒவ்வொன்றிற்கும், அதற்குத் தகுந்த உறுப்பினர்களை வைத்து, பிரச்சனைகளைத் தீர்க்க அவர்களுக்கான பங்கினை விளக்க 15 நிமிடங்கள் கொடுக்கப்படுகிறது. நடத்துபவர், ஒவ்வொரு குழுவையும் 5 நிமிடத்திற்கு விளக்கவுரை கொடுக்கச் சொல்லி, விவாதத்தை நடத்துகிறார்.

## எதிரொலிக்கும் கேள்விகள்

பிரச்சனைகளைத் தீர்க்க, சரியான உறுப்பினர்களைத் தேர்வு செய்து (வரைபடம் தயாரிக்கவும்)

- எந்தப் பங்குதாரர் பட்டியலிடப்பட்ட பிரச்சனைகளைத் தீர்க்க உதவுவார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் ?
- மேற்கூறிய பிரச்சனைகளைத் தீர்க்க, எவ்வாறு உறுப்பினர்களை ஈடுபடச் செய்வீர்கள் ?

## முக்கியக் குறிப்புகள்

- பள்ளிக்கு பல்வேறு தரப்பு பங்குதாரர்கள் உள்ளனர்
- ஒவ்வொரு தரப்பினரும் பங்காற்ற ஒரு பொறுப்பு பள்ளியில் இருக்கிறது.
- ஒவ்வொரு பங்காளருடனும் கூட்டமைப்பு வைத்துக் கொள்வது மிக அவசியம்.

## அமர்வு 2 : வீடு – பள்ளி கூட்டமைப்பு

| அமர்வு 2 | 11.15 – 12.45 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| தனிநபர் பற்றிய பிரதிபலிப்பு | 30 | பெற்றோர்களோடு சம்பந்தப்படுத்தி கொள்ள வழிசெய்வது |
| மாதிரிப் பாடத்தின் (Case Study) அடிப்படையில் விவாதம் / ஒவ்வொரு குழுவும் இரண்டு மாதிரி பாடத்தை எடுத்துக் கொண்டு கொடுக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்கள் | 60 | வீடு பள்ளி கூட்டமைப்பில் உள்ள சவால்கள், வலிமை மற்றும் சாத்தியக் கூறுகளைப் பற்றி பங்குதாரர்கள் அறிந்து கொள்கின்றனர். |

## செயல்திறன் 2.1: தன்னைப் பற்றிய பிரதிபலிப்பு

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** தன்னைப் பற்றிய பிரதிபலிப்பு

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- கொடுக்கப்பட்ட பகுதியை படித்துவிட்டு, கொடுக்கப்பட்ட ஒவ்வொரு கேள்விக்கும், ஒவ்வொரு உறுப்பினர் பதிலளிக்கும்படி, நெறியாளர் கூறுகிறார் (D8–S2–2.1: நாள் 8 – அமர்வு 2 – செயல்திறன் 2.1 – தன்னைப் பற்றிய பிரதிபலிப்பதற்கான பகுதி)
- பங்குபெறுபவர்கள் எழுதிக் கொடுத்ததை, சேகரித்து, வீடு–பள்ளி கூட்டமைப்பு பற்றி நெறியாளர் விவரிக்கிறார்.

நாள்
8

### நெறியாளருக்கான குறிப்புகள்


நடத்துபவர் அனைவருக்குமான விவாதத்தை நடத்தி, அதன் மூலம் வெளிவந்த முக்கிய செய்திகளை தருகிறார்.

## செயல்திறன் 2.2: மாதிரிப் பாடம் – அடிப்படையில் குழுவாக விவாதித்தல்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** சிறுகுழு செயல்திறன்கள்





நாள்
8

**தேவையானவை :** மாதிரிப் பாடத்தாள்கள் (Case Study Sheets), வரைபடங்கள், வரைபட எழுதுகோல்கள், வெள்ளைப் பலகை, குறியீடு எழுதுகோல்கள்.

## ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- நெறியாளர், பங்கு பெறுபவர்களை, 4 குழுக்களாகப் பிரித்து, என்ன செய்ய வேண்டும் என்று விளக்குகிறார்.
- ஒவ்வொரு குழுவும் முடிவில் கொடுக்கப்பட்ட கேள்விகளின் அடிப்படையில் தீர்வு காண, தங்களுக்குக் கொடுக்கப்பட்ட மாதிரிப் பாடத்தை படிக்கின்றனர் (ஒவ்வொரு குழுவிற்கும் 2 மாதிரிப் பாடங்கள்) படிக்கவும், விவாதிக்கவும் 35 நிமிடங்கள் கொடுக்கப்படுகிறது. மாதிரிப் பாடங்கள் விநியோகப்பட்டுள்ளது *(D8_S2_2.2: நாள் 8 – அமர்வு 2 – செயல்திறன் 2.2 – மாதிரிப் பாட அடிப்படையில் குழுவாக விவாதிப்பது)*
- ஒவ்வொரு குழுவும், தங்கள் தீர்வுகளை, 10 நிமிடத்திற்குள் முழு அணிக்கும் படைத்தளிக்கிறது.

## முழு விவாதத்திற்கான பிரதிபலிக்கும் கேள்விகள்

- பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கற்றலுக்கும், வளர்ச்சிக்கும் எவ்வாறு பங்களிக்கின்றனர் ?
- பெற்றோர்களோடு தொடர்பு ஏற்படுத்தும்பொழுது ஏற்படும் சவால்கள் என்னென்ன ?
- பெற்றோர்கள், பள்ளிகளுக்கு வளங்களாக எந்தெந்த வகையில் உபயோகப்படலாம் ?
- வீடு – பள்ளி கூட்டமைப்பை உருவாக்க தற்போது பள்ளித் தலைமையாசிரியருக்கு எது தடையாக உள்ளது ?
- பெற்றோர்களுக்கு, எவ்வாறான வாய்ப்புகளை உங்களால் உருவாக்கி தர முடியும் ?
- பள்ளி செயல்பாடுகளை எவ்வாறு பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்துவீர்கள் ?
- பெற்றோர்கள், பள்ளிகளில் ஈடுபாடு கொள்ள எவ்வாறு ஊக்குவிப்பீர்கள் ?

## நெறியாளருக்கான குறிப்புகள்

அனைத்து மாதிரிப் பாடங்களும், பங்கு பெறும் அனைவருக்கும் அளிக்கப்படுகிறது. ஏனெனில், பங்கு பெறுபவர்களுக்கு, மற்ற குழுவின் மாதிரிப் பாடங்களும் தெரிந்திருத்தல் அவசியம்.

## முக்கியச் செய்திகள்

- குழந்தையின் கற்றலையும் வளர்ச்சியையும், பற்றிப் பெற்றோர்களின் அறிதலையும் உருவாக்குவது.
- மாணவர் நலனுக்காக, ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் நெருங்க வைப்பதில், பள்ளித் தலைமையாசிரியரின் பங்கு.

## அமர்வு 3 : சமூகத்தோடு இணைந்து பணியாற்றுவது

| அமர்வு 3 | 13.30 – 14.45 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| சமூகத்திற்கும், பள்ளிகளுக்கும் இடையே உண்டான எதிர்பார்ப்பை பற்றி குழுவின் பிரதிபலிப்பு | 20 | சமூகத்திலிருந்து பள்ளிக்கும், பள்ளியிலிருந்து சமூகத்திற்குமான பரஸ்பர எதிர்பார்ப்பை புரிந்து கொள்வது. |
| பள்ளி வளர்ச்சியில் SMC–இன் ஈடுபாட்டை, செய்முறைப் பயிற்சியாக செய்தல் | 55 | பள்ளி வளர்ச்சியில், SMC–ஐ எவ்வாறு ஈடுபடுத்தலாம். |

## செயல்திறன் 3.1: சமூகத்திற்கும், பள்ளிக்கும் இடையே உண்டான எதிர்பார்ப்பை பற்றி குழுவின் வெளிப்பாடு

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திச் செல்வது ?

**செயல்முறை :** குழுவின் செயல்திறன்

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

நாள்
8

- இரண்டு வரைபட காகிதங்களை எதிரெதிர் சுவர்களில் ஒட்டவும் பங்குபெறுபவர்களை இரண்டு குழுவாக பிரிக்கவும் – சமூகம் மற்றும் தலைமையாசிரியர்களை, ஒருவர் மற்றொருவரிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை, எழுதவும் வரையவும் சொல்லுங்கள்.
- அதாவது சமூகம் தலைமையாசிரியரிடம் எதை எதிர்பார்க்கிறது ? இதேபோல் தலைமையாசிரியர் சமூகத்திடம் எதை எதிர்பார்க்கிறார் எனக் கேட்டு எழுதச் செய்தல்.
- இந்த செயலுக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கவும் பின்னர், இடம் மாற்றி எழுதியிருப்பதை படிக்கச் சொல்லவும்.



## செயல்திறன் 3.2: பள்ளி வளர்ச்சியில், SMC–இன் ஈடுபாட்டை, செய்முறைப் பயிற்சியாக செய்தல்

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திச் செல்வது ?

**செயல்முறை :** செய்முறைப் பயிற்சியைத் தொடர்ந்து முழு அணியின் விவாதம்




## ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

பங்குபெறுபவர்களை, பல்வேறு குழுக்களாகப் பிரித்து, 2 செய்முறைப் பயிற்சியைப் படிக்கச் சொல்லவும். செய்முறைக் காட்சி வளமாக கொடுக்கப்படுகிறது. (D8_S3_3.2: நாள் 8 – அமர்வு 3 – செயல்திறன் 3.2 – பாவனை காட்சி)

## முழு அணியின் விவாதத்திற்கான பிரதிபலிக்கும் காட்சிகள்

- உங்கள் பள்ளியில் SMC உறுப்பினர்கள் யார்? அவர்களின் 3 முக்கிய நேர்மறையான மனப்பான்மையைக் கூறவும்.
- SMC உறுப்பினர்களுக்கு அவர்களின் பங்கு பற்றி தெரியுமா? அவர்களின் பங்கையும் பள்ளிக்கு அவர்கள் பங்காற்றக் கூடிய வெவ்வேறு வழிகளையும், அவர்களுக்கு உணர்த்தியிருக்கிறீர்களா?
- உங்கள் பள்ளியின் SMC உறுப்பினர்களுடனான தொடர்பை எவ்வாறு விவரிப்பீர்கள்?
- SMC பள்ளிக்கும், பள்ளி SMC–க்கும் ஆற்ற வேண்டிய மிக முக்கியமான பணி யாது என்பது பற்றிய தங்கள் கருத்து என்ன?
- SMC-ஐ பள்ளி வளர்ச்சிக்கு உபயோகப்படுத்த முடியுமா என்று நினைக்கிறீர்களா? எப்படி?
- உங்களின் பள்ளியில் SMC–இன் பங்கை எவ்வாறு வலிமை ஆக்கலாம்? நீங்கள் என்ன செய்வீர்கள்?

நாள்
8

## நெறியாளருக்கான குறிப்புகள்

செய்முறைக் காட்சியை பிரதி எடுத்து, பங்குபெறுபவர்களுக்கு, நடத்துபவர் விநியோகிக்கிறார். குழுவிற்குள் நடக்கும் கலந்துரையாடலுக்குப் பிறகு, பாவனை காட்சியை பற்றிய முழு அணி விவாதத்தை, நடத்துபவர் முன்னின்று நடத்துகிறார்.

## முக்கியச் செய்திகள்

- மாணவனின் கற்றலுக்கும், வளர்ச்சிக்கும், சமூகத்தை பற்றிய செய்தியும், அறிவும் மிக முக்கியம் ஆகும்.
- சமூகம் ஒரு மிகச் சிறந்த வளமாகும். பள்ளி வளர்ச்சிக்குப் பல்வேறு வழிகளில் பங்காற்றலாம்.
- சமூக வலிமையை உபயோகப்படுத்திக் கொள்ள இரண்டு வழி கருத்து பரிமாற்றம் அவசியம்.

## அமர்வு 4 :அமைப்போடு சேர்ந்து பணியாற்றுவது

| அமர்வு 4 | 15.00 – 16.30 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| குழு நாடகம் (Role Play): அமைப்புகளோடும் பள்ளித் தலைமையாசிரியர்களோடு இணைந்து பணியாற்றுவது | 60 | கல்விப் பணியகங்கள் பல்வேறு நிலைகளுடனும் தொடர்பு வைப்பதின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வது<br>மற்ற பள்ளித் தலைமையாசிரியர்களோடு இணைந்து வேலை செய்வதின் சிறப்பை புரிந்து கொண்டு, அம்மாதிரியான தொடர்பிற்கு இடமளிப்பது |
| முடிப்பது மற்றும் வட்ட நேரம் | 30 | |


## செயல்திறன் 4: துறை சார்ந்த அமைப்புகளோடும், பள்ளித் தலைமையாசிரியர்களோடு இணைந்து பணியாற்றுவது

### செயல்பாட்டை எவ்வாறு வழிநடத்துவது ?

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

நாள்
8

1. 4 அல்லது 5 குழுக்களை உருவாக்கவும்.
   - அ. குழு 1 – PRI தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் போல் செயல்படுதல்
   - ஆ. குழு 2 – BEO, தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் போல் செயல்படுதல்
   - இ. குழு 3 – BRC/CRC, தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் போல் செயல்படுதல்
   - ஈ. குழு 4 – பல்வேறு பள்ளிகளின் பள்ளித் தலைமையாசிரியர்கள் போல் செயல்படுதல்
2. ஒவ்வொரு குழுவிலும் BEO, BRC,CRC, PRI மற்றும் கல்வி அமைப்பு துறைகளோடு தொடர்பு கொள்ளும்போது, பள்ளித் தலைமையாசிரியர்கள் சந்திக்கும் இடர்பாடுகளைப் பற்றி பங்குபெறுபவர்கள் விவாதிப்பர். மேற்கூறிய உறுப்பினர்களிடமிருந்து, தங்களுடைய எதிர்பார்ப்பு என்ன என்பதையும் அவர்கள் கண்டுபிடிக்கலாம். குழு–4இல் பங்குபெறுபவர்கள், தங்கள் பள்ளிகள் ஒவ்வொன்றும் எதிர்கொள்ளும் சவால்களை கண்டுபிடிக்கிறார்கள். ஏதேனும் ஒரு பள்ளியின் பிரச்சனைகளுக்கு, அந்த குழுவிலிருக்கும் மற்ற பள்ளித் தலைவர்கள் கொடுக்கும் தீர்வுகளை அல்லது ஆலோசனைகளை வரைபடமாக இதை செய்கின்றனர். இதன் மூலம், உறுப்பினர்கள் பிரச்சனைகளையும் மேற்கூறிய உறுப்பினர்களோடு தொடர்பு வைத்துக் கொள்வது அவசியம் என்ற பட்டியலை, பங்குபெறுபவர்கள் பிரச்சனைகளை பட்டியலாகத் தயார் செய்து கொள்ள முடிகிறது.
3. செயல்முறை–2இல் கண்டுபிடிக்கப்பட்ட அவரவர்களுடைய உறுப்பினர்களோடு எவ்வாறு தொடர்பு வைத்துக் கொண்டு, பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ள முடியும்





என்பதை 4/5 குழுக்கள் தனித்தனியாக நாடகமாக செய்து காண்பிக்கின்றனர். குழுக்கள், கீழ்க்கண்ட சுட்டிக்காட்டுதல்கள் அடிப்படையில் நடக்க வேண்டும்.

உ. எந்த சவால்கள் எந்த உறுப்பினரை, அவர்கள் குழுவில் தேர்ந்தெடுக்க வைத்தது ?

ஊ. அவரவருக்கான உறுப்பினரோடு, பிரச்சனையை எவ்வாறு பகிர்ந்த கொள்வர் ?

எ. உறுப்பினர், எதிர்ப்பு தெரிவிக்கும்பொழுது (உதாரணமாக, பஞ்சாயத்து உறுப்பினர், உறுப்பினராக இருக்கும் பட்சத்தில், அவர் எதிர்ப்பு தெரிவிக்கலாம்) மற்றவர்கள் கேட்கும் விதத்தில் எவ்வாறு எடுத்துரைப்பது ?

ஏ. செயல்பாடாக நடிக்கும்பொழுது, பங்குபெறுபவர்கள் மனதில் கொள்ள வேண்டியது என்னவெனில், பள்ளித் தலைவர்களாக நடிப்பவர்களுக்கும், பங்குதாரர்களாக / மற்ற பள்ளித் தலைவர்களாக நடிப்பவர்களுக்கும் இடையே தீர்வு கிடைக்குமாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதாகும்.

- ஒவ்வொரு குழுவும், பங்குபெறுபவர்கள் அனைவர் முன்னிலையிலும் நடித்து காட்டுவர்.

நாள்
8

## நெறியாளருக்கான குறிப்புகள்

ஒவ்வொரு பங்கு நடிப்பிற்கு பிறகும், நெறியாளர், மொத்த அணி கலந்துரையாடலை வழிநடத்தி, அதன் மூலம் கிடைக்கும் முக்கியச் செய்திகளைக் கூறுகிறார்.

## எதிரொலிக்கும் கேள்விகள்

- குழுக்கள் கண்டுபிடித்த சவால்கள், பங்குதாரர்களின் அதிகாரத்தோடு உடன்படிக்கை உடையதாக இருந்ததா என்று நினைக்கிறீர்களா ? கண்டுபிடிக்கப்பட்ட சவால்களுக்கு, குழுவின் பங்குதாரர்கள் சரியான நபர்கள் இல்லையென்று நினைக்கிறீர்களா ? உங்கள் கருத்து என்ன ?
- உறுப்பினர்களிடம் பிரச்சனைகளை வேறு விதத்தில் குழு சொல்லி இருக்கலாம் என்று நினைக்கிறீர்களா ? எப்படி ?
- எதிர்ப்பு தெரிவித்த உறுப்பினர்களை சந்தித்த பொழுது மற்ற குழு உறுப்பினர்கள் என்ன செய்தனர் ? இந்த இறுக்கமான சூழலை, வேறு விதத்தில் கையாண்டிருக்கலாம் என்று நினைக்கிறீர்களா ?
- பிரச்சனையை சமாளித்த பொழுது, குழுக்கள் எந்தவிதமான திறனை வெளிப்படுத்தியது ?
- உறுப்பினர்களின் முழு வலிமையையும், குழுவால் வெளிக்கொணர முடிந்ததா ? வேறு எந்த விதத்தில், உறுப்பினர்களின் அறிவையும், திறனையும் பயன்படுத்தி கொண்டிருக்க முடியும் என்று நினைக்கிறீர்கள் ?

### முக்கியச் செய்திகள்

- தற்போது இருக்கும் ஆதரிக்கும் கட்டமைப்புகள் மற்றும் கல்வித் துறைகளின் பங்கு பற்றி புரிந்து கொள்ளுதல்.
- தன்னோடு பணிபுரியும் மற்ற ஆசிரியகளிடமிருந்தும், மற்ற கல்வித் துறைகளிடமிருந்தும் கற்க வழி செய்வது.

## செயல்திறன் 4.2 : முடிப்பது மற்றும் வட்ட நேரம்

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை:** நெறியாளர் வழங்குதல் மற்றும் தன்னைப் பற்றிய பிரதிபலிப்பு

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

- கூட்டமைப்பு வைத்துக் கொள்ளும் முறையைப் பற்றிய காணொளித் திரை விளக்கக் கையேட்டை, பங்கு பெறுபவர்களுக்கு விநியோகிப்பது.
- கூட்டமைப்பு வைத்துக் கொள்ளும் முறையைப் பற்றிய விளக்கம், வளமாக கொடுக்கப்படுகிறது. (D8_S4_4.2: நாள் 8 – அமர்வு 4 – செயல்திறன் 4.2 – கூட்டமைப்பு வைத்துக் கொள்ளும் முறை பற்றிய காணொளித் திரை விளக்கம்)
- அன்றைக்கு நடந்ததை தொகுத்துப் பார்க்கவும். அதாவது – உறுப்பினர்களை பட்டியலிடுவது, உறுப்பினர்களின் தேவையைக் கண்டறிவது, பொதுவான ஆர்வத்தை கண்டறிவது, இருவழியில் ஈடுபாடு செய்து கொள்வது போன்றவை.

### எதிரொலிக்கும் கேள்விகள்

- அன்றைய நாளின் செயல்களை பிரதிபலிக்கவும்.
- உங்கள் பள்ளியில் எந்த கற்றலை செய்து பார்க்க முடியும் ?

நாள்
8

### முக்கியச் செய்திகள்

- தற்போது இருக்கும் ஆதரிக்கும் கட்டமைப்புகள் மற்றும் கல்வித் துறைகளின் பங்கு பற்றி புரிந்து கொள்ளுதல்.
- தன்னோடு பணிபுரியும் மற்ற ஆசிரியர்களிடமிருந்தும் மற்றும் கல்வித் துறைகளிடமிருந்தும் கற்க வழி செய்வது





நாள்

8

## குறிப்புகள்


குறிப்புகள்

நாள்
8



# பள்ளிச் சூழலில் செயல்படுத்துதல்

## நாள் 9



*बस चंद कदम*

बस चंद कदम, बस चंद कदम, बस चंद कदम की बात है
हर तरफ उजाला फ़ैल गया, बस कहीं कहीं अब रात है
बस चंद कदम............

कुछ किया था पिछली पीढ़ी ने, कुछ काम अधूरा छोड़ा है
जो काम अधूरा छोड़ा है, वह पूरा हम ही को करना है
बस चंद कदम............

यह विश्वास हमारा है, हम इसे पूरा कर लेंगे
लोग हमारे है, परिवार हमारा है, इनके लिए हम जी लेंगे
*'हर बच्चा सीखे, हर विद्यालय उज्जवल हो'*
बस आज से यह मूलमंत्र हो
आओं पढ़ें और पढ़ाए, शिक्षा का अधिकार दिलाये
बस चंद कदम, बस चंद कदम, बस चंद कदम की बात है

कश्यपी अवस्थी

## நெறியாளருக்கான சரிபார்க்கப்பட வேண்டிய பட்டியல் – நாள் 9
## ஒருங்கிணைத்தல்

### நாள் 9

**கீழ்க்கண்டவை கிடைக்குமாறு உறுதி செய்து கொள்ளவும்.**

1. வரைபடங்கள் ☐
2. வரைபடப் பேனாக்கள் ☐
3. எழுதப்படாத வெள்ளைத்தாள்கள் ☐
4. மடிக்கணினி / கணினி ☐
5. திரைப்படம் காட்டும் கருவி ☐
6. காணொளித் திரை விளக்கவுரை கையேடுகளாக ☐
7. ஒலிபெருக்கிகள் (ஒலியின் தரத்தை உறுதி செய்து கொள்ளவும்) ☐



## நாள் 9

### அறிமுகம்

பள்ளித் தலைமையாசிரியர் தகுதியை வளர்த்துக் கொள்வதற்கான இறுதி 2 நாட்கள், கடந்த எட்டு நாட்களில் கற்றுக் கொண்டதை ஒருங்கிணைக்க வழிவகை செய்கிறது. தங்கள் பள்ளிகள், இலட்சிய பள்ளியாக உருமாறவும், மற்ற பள்ளித் தலைமையாசிரியர்களின் கற்றுக் கொண்டதை வைத்து, தங்கள் பள்ளிக்கு பள்ளி வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கவும் வழி செய்கிறது.

புதுப்பிக்கப்பட்ட பங்கினை ஆற்றும் பள்ளித் தலைமையாசிரியராக, பள்ளி உருமாற்றத்திற்கு உதவும் உறுதியான, மெய்மையான திட்டத்தை உருவாக்க வைப்பதுதான் கூட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவாகும். இந்த இரண்டு நாட்கள் தங்கள் பள்ளியைப் பற்றி பிரதிபலிக்கவும், மற்ற தலைமையாசிரியர்களை வளமாக கண்டறியவும், அதிகாரிகள் இதுதான் தீர்வு என்று கொடுப்பதை விட, மற்ற தலைமையாசிரியர்களின் அனுபவங்களை கொண்டு, தங்கள் பள்ளிகளுக்குத் தீர்வுகளை காணும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒன்பதாவது நாள், பள்ளித் தலைமையாசிரியர்கள், கடந்த நாட்களில் தாங்கள் கற்றுக் கொண்டதை பிரதிபலிக்கிறார்கள். உருமாறிய பள்ளியைப் பற்றி தாங்கள் புரிந்து கொண்டதை, குழுவாக நடித்து காட்டுகிறார்கள். இதற்குப் பிறகு 'உருமாறிய பள்ளி'க்கான புதிய வழிகளை உள்ளடக்கிய திட்டங்களை தீட்டுவார்கள். குழுக்கள் தாங்கள் செய்த பணிகளை, ஒருவர் செய்ததை மற்றொருவர் மறுபரிசீலனை செய்து, முழு அணியும், சிறந்த பள்ளி உருவாக்க திட்டத்திற்கான பொது கருத்துக்களை உருவாக்குகின்றனர்.

10–வது நாள், குழு விவாதங்களின் அடிப்படையில், பள்ளித் தலைமையாசிரியர்கள், தங்கள் பள்ளிகளுக்கு, பள்ளி உருவாக்க திட்டத்தை தயாரிக்கிறார். வரும் சில மாதங்களில் பள்ளி உருமாற்றத்தின் பாதையில், என்ன செய்ய வேண்டும், எவ்வாறு மற்றவர் ஆதரவை சேகரிக்க முடியும் என்று, குழுவாக சேர்ந்து, பள்ளித் தலைமையாசிரியர் திட்டமிடுகிறார். இதன் மூலம் நம்மைச் சுற்றி வாழ்பவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளும் பாரம்பரியத்திற்கான விதை விதைக்கப்படுகிறது.

### இன்றையத் தினத்தின் பற்றிய ஒரு பார்வை

| நாள் – 9 | | |
|---|---|---|
| அமர்வு | பெயர் | நேரம் (நிமிடங்கள்) |
| 1. | கற்றலை ஒருங்கிணைப்பது | 45 |
| 2. | பள்ளித் தன்மையின் அடிப்படையில், பள்ளி உருவாக்க திட்டத்தை தயாரிப்பது | 150 |
| 3. | விளக்கவுரை மற்றும் சமமாக இருப்பவர்களின் மதிப்பீடு | 90 |
| 4. | நல்ல பள்ளி உருவாக்க திட்டத்திற்கான நெறிமுறைகள் | 75 |

## அமர்வு 1 : கற்றலை ஒருங்கிணைப்பது

| அமர்வு 1 | 09.30 – 10.15 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| கடந்த 8 நாட்களின் தொகுப்பு : படக் கதையின் மூலம் சொல்வது / குழு பிரதிபலிப்பு கருவி மற்றும் பகிர்தல் | 25 | கடந்த 8 நாட்களில் நடந்ததை மதிப்பீடு செய்வது (மக்கள் மற்றும் பொருட்கள்) |
| தனிப்பட்ட பிரதிபலிப்பு | 20 | ஒவ்வொரு முக்கிய பகுதியையும் தெளிவாக கற்க முடிகிறது |

## செயல்பாடு 1.1 : கடந்த 8 நாட்களின் தொகுப்பு


### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** குழுவாகச் செயல்படுவது மற்றும் தன்னைப் பற்றிய பிரதிபலிப்பு

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

**படக்கதை :** பணிமனை நெறியாளர் குழு, முன்னதாகவே படக்கதையை தயாரித்து, திரைப்படம் காட்டும் கருவி மூலம் திரையிடுகிறார். (படக்கதையானது காணொலித் திரை மூலம் காட்டப்படும் படங்களின் தொகுப்பாகும்) இது, ஒவ்வொரு நாளும், 4 கூட்டங்களில் நடந்ததை முதன்மைப்படுத்தி காட்டுகிறது. எங்கெங்கு தேவையோ, அங்கங்கு தலைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால், பங்குபெறுபவர்கள், கடந்த நாட்களில் நடந்ததை ஞாபகத்திற்குக் கொண்டு வர முடிகிறது. நல்ல மகிழ்ச்சியான சூழலில், குழுவில் தாங்களும் ஒரு முக்கிய நபர் என்ற உணர்வோடு, “தொகுப்பு” நடைபெற உதவுகிறது.

நாள்
9




**குழு கருவி :** 5/6 நபர் கொண்டு, 6 குழுக்களாக, பங்குபெறுபவர்கள் தங்களை பிரித்துக் கொள்கிறார்கள். 6 குழுக்களும், தனித்தனியாக பாடத்திட்டத்தின் முக்கிய பகுதியிலிருந்து ஒவ்வொன்றை எடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் எடுத்துக் கொண்டுள்ள பகுதியைப் பற்றி பிரதிபலிக்கவும், முக்கிய செய்திகளை கொடுக்கவும் வேண்டும். தங்கள் தனிப்பட்ட குறிப்புகளையும் பார்த்து அவர்கள் வரைபடமாக தரலாம். கணினி இருக்குமாயின், நல்ல நிறங்களோடு கூடிய கவரத்தக்க விளக்கவுரை கொடுத்தால் மிக நன்றாக இருக்கும். மேலும் பல படங்கள், எழுத்துக்களை உபயோகப்படுத்தி, மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடிய விளக்கவுரை கொடுக்கலாம். ஒவ்வொரு குழுவின் விளக்கவுரையில், ஒரு மையக் கருத்து இருத்தல் அவசியம். முழு அணி முன்பு, குழுக்கள் விளக்கவுரையை வழங்கலாம்.

**தனிப்பட்ட வழிமுறைகள்:** ஒவ்வொரு குழு விவாதத்திற்குப்பின், பங்குபெறும் ஒவ்வொருவரும் “கடந்த 8 நாட்களில் நான் கற்றவை” என்பது பற்றி ஒரு சிறு குறிப்பு எழுத வேண்டும். இது



ஒவ்வொரு முக்கிய பகுதியைப் பற்றிய தன் பிரதிபலிப்புகளை உள்ளடக்கியதாக அது இருக்க வேண்டும்.

### எதிரொலிக்கும் கேள்விகள்

- கடந்த 8 நாட்களில், நீங்கள் முக்கியமாக கற்றுக் கொண்டவற்றுள் எதை உடனே ஞாபகத்திற்கு கொண்டு வர முடிகிறது ?
- ஒவ்வொரு நாளிலும் நீங்கள் கற்றுக் கொண்டதை ஞாபகத்திற்கு கொண்டு வரமுடியுமா/ எதைக் கொண்டு செல்வீர்கள் / எந்த புது கருத்து உங்களை கவர்ந்தது ?
- யாரேனும் இந்த கற்றலோடு, வேறு ஏதாவது சேர்க்க விரும்புகிறீர்களா ?

### நெறியாளருக்கான குறிப்புகள்

- புகைப்படக் கருவி (அலைபேசி / புகைப்படக்கருவி) இருக்குமாயின், பங்குபெறுபவர் ஒருவரிடம், பங்குபெறுபவர்களை முதல் தினத்திலிருந்து புகைப்படம் எடுக்கும் பொறுப்பை கொடுக்கலாம்.
- ஒவ்வொரு கூட்டத்திலும், கற்றல் என்பது ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமாக இருக்கும். அதனால் கற்றலைப் பற்றி உடன்பாடு வருவதற்கு நேரம் செலவிடுவது சிறப்பான செயலாகாது.



## அமர்வு 2: பள்ளித் தன்மையின் அடிப்படையில், பள்ளி உருவாக்க திட்டத்தை தயாரிப்பது

| அமர்வு 2 | 10.30 – 13.00 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| குழுக்களை உருவாக்குதல், எண்ணங்களைக் கூறுதல், பள்ளி உருவாக்க திட்டத்தை, குழுவாக சேர்ந்து தயாரிப்பது | 150 | பள்ளித் தலைமையாசிரியர்கள், ஒரே சமூகமாக சேர்ந்து நிலைமாறிய பள்ளி பற்றிய தங்கள் கருத்தினை யோசித்து, பள்ளி உருவாக்க திட்டத்தை தயாரிக்கின்றனர். |

## செயல்பாடு 2.1: பள்ளி உருவாக்க திட்டத்தை, குழுவாக சேர்ந்து தயாரிப்பது

**செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?**

**செயல்முறை :** குழுவாக செயல்படுவது

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

இந்த அமர்வு, முந்தைய அமர்வில் கற்றதை, ஒரு படி மேலே கொண்டு செல்கிறது. நெறியாளர், குழுக்கள், பள்ளி உருவாக்க திட்டத்தை, தயாரிக்க பணிக்கிறார்.

குழுக்கள் ஒன்றாக சேர்ந்து வேலை செய்து, முந்தைய செயல்பாடுகளின் குறிப்புகளையும் அதன் மூலம் கற்றதையும், ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்கிறார்கள். ஒவ்வொரு முக்கிய பகுதி மற்றும் பணி பயிற்சி பட்டறையின் ஒவ்வொரு தினத்திலும் கற்றதின் அடிப்படையில், பள்ளி தலைமையாசிரியர்கள் ஒன்றுகூடி அமர்ந்து, தங்கள் பள்ளிகள் நிலைமாறிய பிறகு, எவ்வாறு இருக்கலாம் என்று கற்பனை செய்து பார்க்கிறார்கள். பங்குபெறுபவர்களும் தங்கள் பள்ளிகளில் மாற்றம் எவ்வாறு நிகழ்த்தப்படும் என்பதை தங்கள் விளக்கவுரையில் உள்ளடக்க ஆர்வம் ஊட்டப்படுகிறார்கள். இக்குழுவினால் செயல்படுத்தப்படும் உருமாற்றப்பட்ட பள்ளி– இலக்கை, நடைமுறைக்கு ஏற்றவாறு பள்ளி உருவாக திட்டமாக மாற்ற குழுக்கள் உறுதியாக செயல்படுகின்றன. பட்டறையின் முந்தைய நாட்களின் எண்ணங்களை சுற்றி, பள்ளி உருவாக்க திட்டம் தயாரிக்கப்படுகிறது. முக்கிய நோக்கம் என்னவெனில், எல்லாவிதத்திலும் இடர்களையும், சவால்களையும் சந்தித்து கொண்டிருக்கும் பள்ளிகளுக்கேற்றவாறு, பள்ளி உருவாக்க திட்டத்தைத் தயாரிப்பதாகும்.

இதைச் செய்வதற்கு, குழுவிலிருக்கும் ஒரு உறுப்பினரின் பள்ளியை மாதிரியாக எடுத்துக் கொண்டு, அதன் உண்மையான நிலை மாற்றத்தை பற்றி ஆராய்கின்றனர். அது எப்படி இருக்கும் ? இதற்கு, பள்ளித் தலைமையாசிரியர் கொண்டு வந்திருக்கும் பள்ளியைப் பற்றிய தகவல்களை, குழு உபயோகித்துக் கொள்கிறது. பள்ளி வளர்ச்சித் திட்டத்தை தயாரிக்க, குறுகிய மற்றும் நீண்ட கால திட்டங்களை கருத்தில் கொள்ள வேண்டும். (வடிவமைக்கப்பட்ட பள்ளி வளர்ச்சித் திட்டத்தை கருதாமல்) மற்ற முக்கியமான பகுதிகளிலிருந்து கிடைக்கக் கூடியதை, தங்கள் திட்டத்தில் உபயோகப்படுத்தி கொள்ள வேண்டும். கீழ்க்கண்டதை மனதில் கொண்டு, குழுக்கள், பள்ளி வளர்ச்சித் திட்டத்தை தயாரிக்கிறார்கள்.

- பணிபட்டறையில், பள்ளிக்காக அவர்கள் உருவாக்கிய தொலைநோக்குப் பார்வை
- இந்த ஒரு பள்ளி எதிர்கொள்ளவிருக்கும் சவால்களை அவர்கள் எவ்வாறு சமாளிப்பார்கள் ?
- ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள் மற்றும் நிலைமாறிய பள்ளியைப் பற்றிய கூட்டு தொலைநோக்குப் பார்வை.


நாள்
9

## எதிரொலிக்கும் கேள்விகள்

- ஒவ்வொரு சவாலுக்கும் உங்கள் இலக்கு என்னவாயிருக்கும் ? (இலக்குகள் குறிப்பிடத்தக்கதாகவும் இருக்க வேண்டும்)
- ஒவ்வொரு சவாலுக்கும், தீர்வுகள் உருவாக்கும் வழிகளை நீங்கள் யோசிக்கவும் (கையிலிருக்கும் பிரச்சனை தொடர்பாக, முந்தைய எட்டு நாட்களில் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வளங்களை உபயோகப்படுத்தவும்)
- குறிப்பிட்ட தீர்வின் முன்னேற்றத்தை எவ்வாறு கண்காணிப்பீர்கள் ? 3–4 வழிமுறைகளை பட்டியலிடவும்.
- உங்களுக்கு எந்த மாதிரி உதவி தேவைப்படும் ? எவ்வகையான வளங்கள் தேவைப்படும் ?

## நெறியாளருக்கான குறிப்புகள்

- கூட்டத்தின் வெளிப்பாடாக, வரைபடங்கள் / குறிப்புகள் சுவரில் மாட்டப்படும். குழுக்கள், அவர்களின் நாடகத்திற்குத் தேவையான வழிகளை அவற்றிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.
- திட்டத்தின் மூலம், இலட்சிய பள்ளியாக மாற்றக்கூடிய பாதைக்கு மிகவும் முக்கியமானதும், அவசரமானதும் என கருதும் 6–8 முக்கிய கருத்துக்களை எவ்வாறு செயல்பாட்டுக்கு கொண்டு வருவீர்கள் என்று காட்சியாக விளக்கவும். முடிந்தால், இந்த கூட்டத்தை படம் பிடித்து, பங்குபெறுபவர்களுக்குக் கொடுக்கலாம்.





- குழு எடுத்துக் கொள்ளும் விவரங்கள், குழு உறுப்பினர்களில் ஒருவருடையதாக இருக்க பரிந்துரை செய்யப்படுகிறது.

### முக்கியச் செய்திகள்

- நீங்கள் எங்கு செல்ல வேண்டும் என்பதை, பள்ளி வளர்ச்சித் திட்டம் சிறப்புற கூற வேண்டும்.
- மற்றும் அதை அடைய எவ்வாறு திட்டமிடுகிறீர்கள் என்பதையும் சிறப்புற கூற வேண்டும்.

## அமர்வு 3 : விளக்கவுரை மற்றும் சம மாணவர்களின் மதிப்பீடு

| அமர்வு 3 | 14.00 – 16.00 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| பள்ளி உருவாக்க திட்டத்தை விளக்குவது மற்றும் சமமானவர்களின் மதிப்பீடு | 120 | ஒவ்வொரு குழுவும் தயாரித்த பள்ளி உருவாக்க திட்டத்தை பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் ஒவ்வொரு பள்ளி உருவாக்க திட்டத்தின் கருத்து கூறுதலை பெறுதல். |

நாள்
9

## செயல்பாடு 3.1 : பள்ளி உருவாக்க திட்டத்தை விளக்குவது மற்றும் சமமானவர்களின் மதிப்பீடு

**செயல்பாட்டை எவ்வாறு நடத்திச் செல்வது ?**

**செயல்முறை :** மொத்த குழுக்களிடம் கலந்துரையாடல்

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

குழுக்கள் முறையாக ஒருவர் பின் ஒருவராக பள்ளி வளர்ச்சித் திட்டத்தை வழங்குகிறார்கள். ஒவ்வொரு விளக்கவுரைக்கு அடுத்தும், நடத்துபவர் விவாதம் நடத்தி, மற்ற குழுக்களின் கருத்துக்களை கேட்டறிந்தார். மற்றவர்கள் கூறும் கருத்துக்கள், விளக்கவுரையிலிருந்து கற்றுக் கொண்ட ஒரு செய்தியையும், மேலும் சிறப்பாக அமைய ஒரு ஆலோசனையையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு குழு, பகிர்ந்தளித்தபின், நெறியாளர், பங்குபெறுபவர்களுக்கு கீழ்க்கண்டவை பற்றி தொகுத்து வழங்குகிறார்.

### எதிரொலிக்கும் கேள்விகள்

- இந்த திட்டம் பயனளிக்கும் என்று நினைக்கிறீர்களா ? ஏன் நடக்கும், ஏன் நடக்காது ?
- பள்ளி உருவாக்க திட்டம் எப்படி இருக்க வேண்டும் என்பதிலிருந்து எதை கற்றுக் கொள்ள வேண்டும் / எதை உள்ளடக்க வேண்டும் ?

- நீங்கள், விளக்கவுரையில் இருந்து கற்றுக் கொண்டதில், எதை, உங்கள் குழு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விருப்பப்படுகிறீர்கள் ?
- இந்த குழுவிற்கு என்ன ஆலோசனை வழங்கப் போகிறீர்கள் ?
- இந்தத் தகவல்களை, நாம் கற்றதை, ஒவ்வொரு முக்கிய பகுதிகளுக்குக் கீழ் வகைப்படுத்த பயன்படுத்தலாம்.
- பள்ளிகளின் மாற்றத்திற்காக, குழுக்கள் சிறப்பாக கூறிய வழிகளை புரிந்து கொள்ள முயற்சிக்கலாம்.
- பரிந்துரைக்கப்படும் வழிமுறைகள் என்ன ?
- இலட்சிய பள்ளியின் கற்பனை படம் எவ்வாறு இருக்க வேண்டும் ? (6 முக்கிய பகுதிகளில் சொல்லப்படாத ஏதேனும் கருத்துக்கள் இருக்குமாயின், அவை தனியாக எழுதப்படலாம்)
- வேறு ஏதேனும் கருத்துக்களை குழுக்கள் கூற தவறிவிட்டார்களா ?

## நெறியாளருக்கான குறிப்புகள்

- இது விமர்சன கூட்டமாக மாறாமல் பார்த்துக் கொள்ளவும். ஒருவரிடம் இருந்து மற்றவர் கற்றுக் கொள்ளும் ஆக்கப்பூர்வமான அமர்வாக அமைய வேண்டும்.
- உருமாறிய பள்ளியைப் பற்றி வெளிவரும் கருத்துக்களை, நெறியாளர் எழுதிக் கொண்டு வருகிறார்.
- பள்ளி உருவாக்க திட்டத்தின் விளக்கவுரையில் உங்களுக்குப் பிடித்தது மற்றும் அதிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டியதில் கவனம் செலுத்தவும்.

## முக்கியச் செய்திகள்

- நிகழ்ந்த மாற்றத்தில் கவனம் செலுத்தவும்.
- மாற்றம் “எவ்வாறு” நிகழ்ந்தது என்பதிலும் கவனம் செலுத்தவும்.

நாள்
9

## அமர்வு 4: நல்ல பள்ளி உருவாக்க திட்டத்திற்கான நெறிமுறைகளை தயாரித்தல்

| அமர்வு 4 | 16.15 – 17.30 மணி | |
|---|---|---|
| செயல்பாடுகள் | நேரம் (நிமிடங்கள்) | எதிர்பார்க்கப்படும் விளைவுகள் |
| பள்ளித் தலைவர்கள் ஓர் உண்மையான பள்ளி வளர்ச்சித் திட்டத்தை தயாரிப்பது | 120 | நல்ல பள்ளி உருவாக்க திட்டத்திற்கான நெறிமுறைகளை தயாரித்தல் |





## செயல்பாடு 4.1 : இலட்சிய “உருமாறிய” பள்ளியின் தொலைநோக்குப் பார்வையை பற்றிய பள்ளி வளர்ச்சித் திட்டத்திற்கான நிபந்தனைகள்

**விவாதத்தை எவ்வாறு மேற்கொள்வது ?**

நாள்
9

**செய்முறை :** முழு அணி விவாதம்

### ஆலோசனைக்கான வழிமுறைகள்

குழுக்கள், பள்ளி உருவாக்க திட்டத்தை தயாரித்த பின், அதை விளக்குகிறார்கள். விளக்கவுரையில், சவால்கள் மற்றும் செய்யக்கூடிய தீர்வுகளை விரிவாக சொல்கிறார். குழுவில் பங்குபெறுபவர், விளக்கவுரை வழங்கும்போது, மற்றவர்கள் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். கீழ்க்கண்டவற்றின் அடிப்படையில், பங்குபெறுபவர்கள், வழங்கப்பட்ட பள்ளி உருவாக்க திட்டத்தினை மதிப்பீடு செய்ய வேண்டும்.

- திட்டத்தின் பலங்களும், இரண்டு பலவீனங்களும் என்னென்ன ?
- திட்டத்தில் கூறப்பட்ட தெளிவான இலக்குகள் பள்ளியின் தொலைநோக்குப் பார்வையோடு ஒத்துப் போகிறதா ?
- குழுக்கள் கொடுக்கும் தீர்வுகள், திட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சவால்களோடு ஒத்துப் போகிறதா ? ஆம் எனில் எப்படி ? இல்லையெனில், தீர்வுகளை உருவாக்கும்போது, எதை கருத்தில் கொள்ள வேண்டும் ?

குழுக்கள், பள்ளி உருவாக்க திட்டத்தை வழங்கிய பின், அதில் எது இடம் பெற வேண்டும், எது இடம் பெறக்கூடாது என்ற பதில்களை சேகரிக்கிறார். இவை, மேற்கூறப்பட்ட கேள்விகளுக்கான விவாதத்தின் மூலம் கிடைத்த பதில்களின் தொகுப்பாகும். ஆகையால், பதில்களை நடத்துபவர் வெள்ளை / கருப்பு பலகையில் எழுத வேண்டும்.

பங்குபெறுபவர்கள், முழு அணி தயாரித்து, பள்ளிகளை உருமாற்றக்கூடிய நல்ல பள்ளி உருவாக்க திட்டத்தை, நேரம் எடுத்துக் கொண்டு மதிப்பீடு செய்கின்றனர். அவர்கள் எதையாவது தவற விட்டுவிட்டார்களா என்றும் அலசி ஆராய்கிறார்கள்.

### மேலும் படிக்க.


திவான் .R மற்றும் பாண்டா .B (2013) பள்ளி வளர்ச்சி திட்டம் தயாரிப்பதில் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு வழிகாட்டுதல் (ADIO_S4_4.1 : நாள் 10 – அமர்வு 4 செயல்பாடு 4.1 – பள்ளி வளர்ச்சித் திட்டம்)

## குறிப்புகள்

நாள்
9



# பள்ளி வளர்ச்சித் திட்டம் மற்றும் முன்னேற்றப் பாதையை வகுத்தல்




## நாள் 10

## நெறியாளருக்கான சரிபார்க்கப்பட வேண்டிய பட்டியல் – நாள் 10

## பள்ளி வளர்ச்சித் திட்டம்


### நாள் 10

**கீழ்க்கண்டவற்றை வாங்கிக் கொண்டீர்களா ?**

1. ஓராண்டு நிகழ்ச்சி பற்றிய காணொளித் திரை மூலம் விளக்கவுரை (D10-S2-2.1) ☐
2. ஒற்றுமையின் வலிமை – படக்காட்சி (D10-S3-3.1) ☐

**கீழ்க்கண்டவை கிடைப்பதை உறுதி செய்து கொள்ளவும்.**

1. வரைபடம் ☐
2. வரைபடப் பேனாக்கள் ☐
3. எழுதப்படாத காகிதங்கள் ☐
4. மடிக்கணினி / கணினி ☐
5. திரைப்படம் காட்டும் கருவி ☐
6. காணொளித் திரையில் கண்டவாறு விளக்கவுரையின் கையேடு ☐
7. ஒலிபெருக்கிகள் (ஒலிபெருக்கி சரியாக வேலை செய்வதை உறுதி செய்து கொள்ளவும்) ☐



நாள்
10

**நாளை பற்றி ஒரு பார்வை**

| நாள் – 10 | | |
|---|---|---|
| அமர்வு | பெயர் | நேரம் (நிமிடங்கள்) |
| 1. | என்னுடைய பள்ளிக்கான பள்ளி வளர்ச்சித் திட்டம் | 120 |
| 2. | முன்னேற்ற பாதையை விவாதித்தல் | 120 |
| 3. | பணிபட்டறைப் பற்றிய கருத்துக் கூறல் மற்றும் தெளிவாக்குதல் | 90 |
| 4. | முடிவுக்குக் கொண்டு வருதல் | 30 |

## அமர்வு 1: என்னுடைய பள்ளிக்கான பள்ளி வளர்ச்சித் திட்டம்

| அமர்வு 1 | 03.30 – 11.30 மணி | |
|---|---|---|
| செயல்பாடுகள் | நேரம் (நிமிடங்கள்) | எதிர்பார்க்கப்படும் விளைவுகள் |
| அவர்களுடைய பள்ளிக்கான பள்ளி வளர்ச்சித் திட்டத்தை தயாரித்தல் | 120 | அவர்கள் பள்ளிக்கு, தனித்தனியாக பள்ளி வளர்ச்சித் திட்டத்தை தயாரித்தல் |

## செயல்பாடு 1.1 : என்னுடைய பள்ளிக்கான பள்ளி வளர்ச்சித் திட்டம்

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திச் செல்வது ?

**செயல்முறை :** தனித்தனியாக எழுதும் பயிற்சி

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

முந்தைய நாளில் விவாதிக்கப்பட்ட ‘நல்ல’ பள்ளி வளர்ச்சித் திட்டத்தின் வழிமுறையை பயன்படுத்தி, தங்கள் பள்ளிகளின் குறிப்பிட்ட சவால்களை மனதில் கொண்டு, தங்கள் பள்ளிக்கான, பள்ளி வளர்ச்சித் திட்டத்தை தயாரிக்கின்றனர்.

பள்ளித் தலைவர்கள், தங்கள் பள்ளிகளுக்கு, பள்ளி வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் பொழுது, முந்தைய 9 நாட்களில், தாங்கள் எடுத்த குறிப்புகளை தொடர்புபடுத்தி கொள்ள பரிந்துரை செய்யப்படுகிறது.

- அவர்களுடைய நாள் பிரதிபலிப்பு குறிப்பேடு (தினமும் எழுதப்பட்டது)
- தங்கள் பள்ளியைப் பற்றிய குறிப்புகள் – முக்கியமாக தங்களின் பிரத்யேக சவால்கள், தாங்கள் வெளிப்படுத்திய, பகிர்ந்து கொண்ட பள்ளி சார்ந்த குறிப்புகள்.

ஒவ்வொருவரும் தயாரித்த பள்ளி வளர்ச்சித் திட்டங்கள், பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்களுக்கு தேவைப்படும் முறைகளை பகிர்ந்து கொள்ளும் பொழுது, மதிப்பீடு செய்வதற்கும், கருத்து கூறுவதற்கும் பயன்படும். பின்னர், பங்குபெறுபவர்கள், தங்கள் பள்ளி வளர்ச்சித் திட்டத்தை முடிவு செய்து நெறியாளரிடம் கொடுக்கிறார்கள். நெறியாளர் அவற்றை பிரதி எடுத்து, பதிவேட்டிற்காக வைத்துக் கொள்கிறார். அசல், பங்குபெறுபவர்களிடம் கொடுக்கப்படுகிறது.

### நெறியாளருக்கான குறிப்புகள்

- பங்குபெறுபவர்கள், பள்ளி வளர்ச்சித் திட்டத்தை தயார் செய்து கொண்டிருக்கும்போது, கூட்டத்தை நெறியாளர் வகுப்பறையைச் சுற்றி வரவேண்டும். அப்பொழுது தான், பள்ளித் தலைவர்கள் தங்கள் பிரச்சனைகள் பற்றி பேசவோ, விவாதிக்கவோ முடியும்.
- பங்குபெறுபவர்கள், தங்கள் பள்ளிகளில் செயல்படுத்தப்போகும், புதுமை காணல் திட்டத்தை, காலக்கெடுவோடு சொல்ல தூண்டப்படுகிறார்கள்.


### முக்கியச் செய்திகள்

- இது உங்கள் பள்ளிக்காக, பள்ளி உருமாறுவதற்காக
- இது, பணிமனையில் கற்றது அனைத்தையும் பிரதிபலிப்பதாய் இருக்க வேண்டும். நல்ல பள்ளி உருவாக்க திட்டத்தின் வழிகளை கொண்டுள்ளதாகவும் இருக்க வேண்டும்.
- அதைச் செயலாக்குங்கள் (செயலாக்கம் செய்ய எவ்வாறு முயற்சிக்கலாம் என சிந்தியுங்கள்)

## அமர்வு 2: முன்னோக்கி செல்லும் பாதையை விவாதித்தல்

| அமர்வு 2 | 12.00 – 14.00 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| முன்னோக்கி செல்லும் பாதை | 120 | வரும் வருடத்தில், திட்டத்தில் என்ன எதிர்பார்க்கலாம் என்று பங்குதாரர்களுக்குத் தெரியும் ? PLC பாரம்பரியத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாக, திட்டத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் |






## செயல்பாடு 2.1: முன்னோக்கி செல்லும் பாதை

### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்முறை :** விளக்கவுரை மற்றும் கேள்வி பதில் நேரம்

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

ஒரு வருடத்திற்கான, பள்ளித் தலைவர்களோடு கூடிய முன்னேற்ற பாதையின் நிகழ்ச்சிகளை, உறுப்பினர்களுக்கு இந்த கூட்டத்தில் நடத்துபவர் வழங்குகிறார். காணொளித் திரை





நழுவங்கள், மூன்றும் வளங்களாக கொடுக்கப்படுகிறது. *(D10_S2_2.1 : நாள் 10 – அமர்வு 2 – செயல்பாடு 2.1 முன்னோக்கி செல்லும் பாதை (ஒரு வருட நிகழ்ச்சிகள் பற்றிய பவர்பாயின்ட் விளக்கவுரை)*

ஒவ்வொரு இடைவெளியிலும் (காணொலித் திரையில் கண்டதுபோல் விளக்கவுரையில் சொல்லப்பட்டது) விவேகம் மற்றும் நியாயத்தையும், அதற்காகும் நேரம், பள்ளி விவரிக்க நெறியாளர் நேரம் ஒதுக்குகிறார்.

நெறியாளர் விளக்கவுரை வழங்கும்போது, பங்குதாரர்களிடையே நிறைய கேள்விகள் எழலாம். கேள்விகளுக்கு உடனுக்குடன் பதிலளிப்பதோ அல்லது விளக்கவுரை முடிந்த பின் பதிலளிப்பதா என்று நெறிப்படுத்துபவரே தீர்மானிக்கிறார்.

- ஒரு வருடத்திற்கான நிகழ்ச்சியை பற்றிய காணொலித் திரையில் கண்ட செய்திகள் விளக்கவுரை கையேடாக உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

## நெறியாளருக்கான குறிப்புகள்

- ஒவ்வொரு பள்ளித் தலைமையாசிரியருக்கும், அட்டவணை மற்றும் காணொலித் திரை விளக்கவுரையின் கையேடு கொடுக்கப்படுகிறது.
- ஒவ்வொரு இடையூறையும், விவரமாக பார்க்கவும். இடையூறின் விவரத்தை அதன் நியாயத்தின் மீது கவனம் செலுத்துவது அவசியம்.
- எண்ணங்களை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்று விவாதங்கள் இருக்குமாயின், அதை ஊக்குவிக்கவும். உங்கள் எண்ணங்களை SRGs / NCSLகுழுக்களுக்குக் கொடுக்கவும். அருகாமையில் இருக்கும் பள்ளிகளில் உள்ள பள்ளித் தலைமையாசிரியரின் உறுதிமொழியின் அடிப்படையில், நெறியாளர், சமமானவர்களிடமிருந்து கற்கும் பாரம்பரியத்தை உருவாக்குகிறார். இதன் முன்னேற்றம் பற்றியும் கலந்துரையாடுகிறார்.
- நான்கில் மூன்று பங்கு பள்ளித் தலைமையாசிரியர்களோடு, சமமானவர்களிடமிருந்து கற்கும் பாரம்பரியத்தை உருவாக்கிய பிறகு ஆறில் ஐந்து பங்கு செயலாக்க புள்ளிகளை வடிவமைத்து கொடுத்து, மதிப்பீடு மற்றும் கருத்து கூறல் பற்றி விவரிக்க வேண்டும்.

## முக்கியச் செய்திகள்

- இது ஒரு நேர நிகழ்ச்சியாக இல்லாத வகையில் கவனமுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பள்ளித் தலைமையாசிரியர்களின், செயல் பாதைக்கு இது ஆதரவாக இருக்கும். தொடர்ந்து இருக்கக்கூடிய பள்ளி உருமாற்ற வளர்ச்சிக்குத் தேவையான, திறன்களை தக்க வைத்துக் கொள்ள, இது உதவுகிறது.

## அமர்வு 3 : பணிமனையைப் பற்றிய கருத்துக் கூறல் மற்றும் விசாரணை

| அமர்வு 3 | 15.00 – 16.30 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| தொலைநோக்குப் பார்வை மற்றும் செயல்பாடுகள் பற்றிய படக்காட்சி மூலம் பணிமனையை ஒருங்கிணைப்பது | 10 | எந்த NCSL ஆதாரத்தின் அடிப்படையில், பள்ளி உருமாற்றம் எதிர்பார்க்கப்படுகிறதோ, அதைப் பற்றிய சிறிய செய்தியை கொடுக்கும் படக்காட்சி. |
| NIEPA படிவத்தைப் பற்றிய கருத்துக் கூறல் | 30 | பணிமனை, பொருளடக்கம், நெறியாளர்கள் மற்றும் பணிமனையிலிருந்து கற்றது பற்றிய கருத்து கூறல் மற்றும் மேலும் சிறப்பாக செய்வதற்கான ஆலோசனைகளைப் பெறுவது |
| பணிமனை பற்றிய விசாரணை | 50 | கற்றல் – ஒவ்வொரு பங்குபெறுபவர்களுக்கிடையில் பகிர்ந்து கொள்ளப்பட்டு, இன்பமான, மனதிற்கினிய சக்தியான சூழலில் முடிகிறது. |

## செயல்பாடு 3.1 : ஒருங்கிணைத்தல்


### செயல்பாட்டை எவ்வாறு கொண்டு செல்வது ?

**செயல்பாடு :** படக்காட்சியை காட்டுவது

நாள்
10

### ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்

நெறியாளர், இதுஇறுதிகட்டம்என்றும், படக்காட்சிக்கான குறுந்தகடுவளமாககொடுக்கப்படும் என்றும் அறிவிக்கிறார். (படக்காட்சி : ஒன்றாக செயல்படுவதினால் கிடைக்கும் வலிமை) நாம், படக்காட்சியை பற்றி விவாதிக்கப் போவதில்லை, ஏனெனில், ஒவ்வொருவரும், வெவ்வேறு விதமாக அர்த்தம் செய்து கொள்வார்கள். பள்ளித் தலைமையாசிரியராக, உங்கள் தொழில் சார்ந்த பயணத்தில், கூடவே இருக்கட்டும் என நம்புவோம்.




## செயல்பாடு 3.2 : கருத்துக் கூறல்

### செயல்பாட்டை எவ்வாறு நடத்திச் செல்வது ?

**செயல்முறை :** தனித்தனியாக பயிற்சி செய்வது, இதைத் தொடர்ந்து பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் முடிவுக்கு கொண்டு வருதல்

### ஆலோசனைக்கான வழிமுறைகள்

நெறியாளர், மூன்று வெவ்வேறு நிறத் தாள்களை (உதாரணமாக – நீலம், பச்சை, ரோஜா நிறம்) விநியோகித்து, பங்குபெறுபவர்களின் பிரதிபலிப்புகளை தனித்தனியே எழுதச் சொல்கிறார்.



மூன்று நிறங்களும், மூன்று விதமான கருத்துக் கூறல்களை குறிப்பிடுகிறது.

- நிறம் 1 (உதாரணம் நீலம்) : பட்டறை முழுமையிலிருந்தும், பங்குபெறுபவர்கள் கற்றுக் கொண்ட முக்கியமானதை நாடுகிறது.
- நிறம் 2 (உதாரணம் ரோஜா கலர்) : பங்குபெறுபவர்களின் பட்டறைப்பற்றிய ஆலோசனைகள் / கருத்துக்கூறல் – பட்டறையை மேலும் பயனுள்ளதாகவும், அவர்களுக்கு ஏற்றவாறு ஆக்குவதற்காக நாடுகிறது.
- நிறம் 3 (உதாரணம் பச்சை) : நடத்துபவர் பற்றியும், கொடுக்கப்பட்ட பொருளடக்கம் பொருத்தமாக இருந்ததா என்பது பற்றிய கருத்துக்கூறலை நாடுகிறது. பங்குபெறுவர்கள், படிவத்தை முடித்தவுடன், சிறிது நேரம் எடுத்துக் கொண்டு, முழு அணியோடு, கீழ்க்கண்ட கேள்விகளைப் பற்றி சிந்திக்கவும்.



## எதிரொலிக்கும் கேள்விகள்

- பணிமனையிலிருந்து நான் முக்கியமாக கற்றுக் கொண்டது / பெற்றுக் கொண்ட செய்தி
- பணிமனையில் நான் மிகவும் ரசித்தது.

நாள்
10

## நெறியாளருக்கான குறிப்புகள்

- சில பங்குபெறுபவர்கள், கூட்டத்திலிருந்து கிடைத்த தொழில்நுட்ப அறிவைப் பகிர்ந்து கொள்ளாமல், தனிப்பட்ட முறையிலும் கற்றுக் கொள்கிறார்கள். இதையும் ஊக்குவிக்க வேண்டும்.

## அமர்வு 4: முடிவுக்கு கொண்டு வருதல்

| அமர்வு 1 | 17.00 – 17.30 மணி | |
|---|---|---|
| **செயல்பாடுகள்** | **நேரம் (நிமிடங்கள்)** | **எதிர்பார்க்கப்படும் விளைவுகள்** |
| நன்றி கூறுதல் மற்றும் முடிவுக்கு கொண்டு வருதல் | 30 | நன்றி கூறுதல் மற்றும் முடிவுக்கு கொண்டு வருதல் |

## செயல்பாடு 4.1 : முடிவுக்கு கொண்டு வருதல்


**செயல்முறை :** முழு அணி பேச்சு

## ஆலோசனைக்கு உகந்த வழிமுறைகள்


நெறியாளர், மாநிலத்திற்கும், உதவியும், ஆதரவு நல்கிய மக்களுக்கும் நன்றி கூறுகிறார். பங்குபெறுபவர்களுக்கும் நன்றி கூறுகிறார்.

## குறிப்புகள்

நாள்
10



# பள்ளித் தலைவர்களுக்கான ஓர் ஆண்டு தொடர் நிகழ்ச்சிகள்





ಕರ್ನಾಟಕ ಸರ್ಕಾರ



## அறிமுகம்

திறன் வளர் பயிற்சியை உருவாக்கும் பட்டறையில் ஆரம்பிக்கப்பட்ட உரையாடலை தொடர்வதற்கான ஆக்கப்பூர்வ இடமாக கருதும் சக்தியை உருவாக்கும் பட்டறைக்குப் பின்வரும் நிகழ்ச்சியாக இது கருதப்படுகிறது. பள்ளித் தலைமையாசிரியர்களின் இடையேயான தொடர்பு நேருக்கு நேர் இருக்கும் இடமாகவும் மற்றும் தொழில் சார்ந்த தகவல்களை கற்றுக் கொள்ளும் இடமாகவும் இது இருக்கும். கருதும் சக்தியை உருவாக்கும் பட்டறையாக இல்லாமல், கற்றல் பாதையில் சவாலான சமயத்தில் (தங்கள் பள்ளிகளில் மாற்றத்தை முயற்சிக்கும் நேரத்தில்) ஆதரவு தரும் பணிமனையாக, பின்னர் வரக்கூடியதாக கருதும் சக்தியை உருவாக்கும் திட்டமாகவும் இது கருதப்படுகிறது. இந்த காரணத்திற்காகத்தான் பின்னர் வரக்கூடிய கருதும் சக்தியை உருவாக்கும் நிகழ்ச்சிகள், 6 வேலை வாரங்களுக்குப் பின் தொடங்கப்பட்டு, ஒரு வருடத்திற்கு தொடர்கிறது. இந்த ஓராண்டிற்குப் பின் ஒரு தலைமையாசிரியர் புதுமை காணலுக்கும் பள்ளியின் உருமாற்றத்திற்கும் எவ்வித ஆதரவுத் தேவையுமின்றி சுவமாகச் செயல்பட முடியும்.




**திறன் கட்டமைப்பிற்கு முன்**

- பள்ளித் தலைமை உருவாக்க திட்டத்திற்கான (SLDP) பாடத்திட்டம் மூலம் பொருள் மற்றும் கையேடு தயாரித்தல்
- SRGs மற்றும் DRGs–ஐ உருவாக்கி, பள்ளித் தலைமை உருவாக்க திட்டத்தின் பாதையில் வழிநடத்துவது

**திறன் கட்டமைப்பு பணிமனை**

- பள்ளித் தலைமையாசிரியர்களை ஆறு முதல் பத்து நாட்கள் வரை பங்குபெற வைப்பதன் மூலம், உறைவிடப் பயிற்சி உருவாக்க திட்டத்தின் வழியாக தலைமை ஆசிரியர்களாக ஆக்குவது.
- பள்ளியில் வருடம் முழுவதும் புதுமையை காணச் செய்தல்

**தொடரும் நிகழ்ச்சிகள்**

- வட்டம் மற்றும் தொகுப்பு நிலைகளிடமிருந்து, களத்தில் ஆதரவு பெறுதல்
- ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்களிடமிருந்து அறிவுரை மற்றும் வகைப்படுத்தும் ஆதரவு பெறுதல்
- சமமானவர்களான பள்ளித் தலைமை ஆசிரியர்களிடமிருந்து உதவி பெறுதல்
- சமமானவர்களான பள்ளித் தலைமை ஆசிரியர்களிடமிருந்து அறிவுரை பெறுதல்

## தொடரும் நிகழ்ச்சி என்பதன் பொருள்

NCSL மற்றும் SRG உறுப்பினர்கள் அல்லது SRG உறுப்பினர்கள் மட்டுமே, பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ஒரு வருடத்திற்கு ஆதரவு கொடுப்பார்கள். மதிப்பீடு மற்றும் கருத்துக் கூறல் பணிமனைகள் (Review and Feedback Workshop - RFW) வெவ்வேறு இடைவெளியில் நடத்தப்படும். இதற்கு NCSL மற்றும் SRG உறுப்பினர்கள் அல்லது SRG உறுப்பினர் மட்டுமே உதவுவர். மதிப்பீடு மற்றும் கருத்துக் கூறல் பணிப் பட்டறை, தொகுப்பு நிலையிலும், கணினித் தொடர்பு மூலம் நடத்தப்படும்.

## நோக்கம்

தன்னைத் தானே மதிப்பீடு செய்வதற்கு சமமானவர்கள் செய்வதை அறிந்து கொண்டு, அதன் மூலம் ஊக்கமடைந்து மற்றும் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்குவது தான் மதிப்பீடு மற்றும் கருத்துக்கூறல் பணிமனையின் நோக்கமாகும். பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தாங்கள் கற்றுக் கொண்டதை, செயலாக்கும்பொழுது சந்தித்த சவால்களை பகிர்ந்து கொள்ள, மதிப்பீடு மற்றும் கருத்துக்கூறல் பணிமனை வாய்ப்பளிக்கிறது. பள்ளித் தலைமை ஆசிரியர்களுடனான தொடரும் நிகழ்ச்சிகள், இரண்டு முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. இந்நோக்கம் எந்த ஒரு மீளாய்வு (Review) மற்றும் பின்னூட்டம் (Feedback) பட்டறைக்கு பொதுவானதாகும். அந்த இரண்டு நோக்கங்கள் பின்வருமாறு :

- ***தங்கள் பள்ளிகளில் மாற்றத்தின் பயணத்தை கொண்டாடுவதற்கு, பள்ளித் தலைமையாசிரியர்கள், ஒரு மன்றத்தை உருவாக்குவது.***

  பள்ளித் தலைமை ஆசிரியரின் ‘கொண்டாட்டமே’ இங்கு மையக் கருத்தாகும். எதைக் கொண்டாடுவது என்று கேட்கலாம் ? ஆறு வாரத்தில், புதுமை காணல் மூலம், மாற்றத்திற்கு முயற்சி செய்ததையே கொண்டாடுவதாகும். சில தலைமை ஆசிரியர்கள், வெற்றி கண்டிருக்கலாம், சிலர் தோல்வி அடைந்திருக்கலாம். எதற்கு தோல்வியை கொண்டாடுவது என்று நீங்கள் ஆச்சரியப்படலாம். இங்குதான், தலைமைப் பண்பின் வேகம் பிரதிபலிக்கிறது.


  நிறைய சமயங்களில் தோல்வியிருந்து தான் புதுமை காணல் வெளிப்படுகிறது. ஒரு சூழலில், எது சரியாக இருக்காது என்பதை கற்றுக் கொள்ளும் வாய்ப்பாக, தோல்வி மாறுகிறது. ஒரு தலைமை ஆசிரியர், மாற்றத்திற்காக முயற்சிக்கும்பொழுது, இயற்கையாக அவர் ஏதாவது ஒரு புதிய முயற்சியை கையாள வேண்டி வரும். புதிய முயற்சியை கையாளும்போது, முதல் முறையே, அனைத்தும் சரியாக நடக்கும் என்று கூற முடியாது. பள்ளியை உருமாற்றும் முயற்சி செய்யும் மனநிலைதான் இங்கு முக்கியமானதாகவும், சிறப்பானதாகவும் கருதப்படுகிறது.

- ***சமமானவர்களோடு இணைந்து கற்றுக் கொள்ளும் பயிற்சியை துவங்குதல் மற்றும் தொழில் சார்ந்த கற்றல் சமூகத்தை உருவாக்குதல்.***

  தொழில் சார்ந்த கற்றல் சமூகத்தை உருவாக்கும்பொழுது கற்பித்தலைவிட கற்றலில்தான் அதிக கவனம் இருக்க வேண்டும். அனைவரும் இணைந்து செயல்பட்டு, சரிவிகித பகிர்தலோடு கற்றல் நடக்க வேண்டும். தொழில் சார்ந்த உரையாடலை வளர்க்கவும், தக்க வைத்துக் கொள்ளவும், பள்ளிச் சமூகம் உதவி செய்கிறது.

  இத்தகைய சமூகத்தினால் கிடைக்கும் நன்மை என்னவெனில் செயல்படுவதற்கு யாரும் வெளியிலிருந்து வரும் கட்டளைகளையோ / உரிமையோடு கோரப்படுவதையோ





சார்ந்திருக்க வேண்டியதில்லை. (உதாரணம் : அரசாங்க நிறுவனங்கள் வடிவமைத்து கொடுக்கும் பயிற்சிகள்) இரண்டாவதாக, பள்ளித் தலைமை ஆசிரியர், தங்கள் பள்ளியில் புதியதாக ஏதும் முயற்சி செய்யும்போது, மேலும் தொடர முடியாத நிலை வரும்பொழுது, இந்த சமூகம் உதவும் இயந்திரமாக இருக்கிறது. தங்களின் சமமானவர்கள் இதுபோன்ற பிரச்சனைகளை எவ்வாறு சமாளித்தனர், அல்லது விடை கண்டறிந்தனர் என்பது பற்றிய அனுபவ அறிவை நேராக பெற முடிகிறது.

## தொழில் மய கற்றல் சமூகத்தை உருவாக்கும் படிகள்

- பின்னூட்டம் உருவாக்கும் திட்டத்தில், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சந்திப்பது
- காரியத் திட்டத்தின்பொழுது, ஒருவரோடொருவர் தொடர்பு கொள்வது.
- திட்டம் முடிந்த பிறகு, மதிப்பீடு மற்றும் கலந்துரையாடல் பணிமனையின்போது மீண்டும் சந்திக்க வாய்ப்பு கிடைக்கிறது.
- இடைப்பட்ட காலத்தில், கூட்டங்களை கூட்டி, அவர்கள் எதிர்கொண்டிருக்கும் பிரச்சனைகளைப் பற்றி விவாதிக்கலாம். வளங்களையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வது பற்றியும் கலந்துரையாடலாம்.
- தொழில் மய கற்றல் சமூகமானது, பணிமனையில் கலந்து கொண்டவர்களுக்கு மட்டுமல்லாது, கலந்து கொள்ளாதவர்களையும் இணைத்து, அவர்களது அனுபவங்களையும் கேட்டறியலாம்.

## தொடரும் நிகழ்ச்சிக்கான மதிப்பீடு மற்றும் கருத்துக்கூறல்

ஒரு வருட கள உதவி மற்றும் மதிப்பீடு செய்யப்படுவதாக, மதிப்பீடு மற்றும் பின்னூட்டம் மீளாய்வு செய்யப்படுகிறது. இது, பின்வருமாறு திட்டமிடப்படுகிறது.

- இந்த திட்டமானது, 6 நாள் சரியான புரிந்து கொள்ளும் சக்தியை உருவாக்கும் திட்டமாக ஆரம்பிக்கப்படுகிறது. நேருக்கு நேர் தொடர்பு கொள்ளப்படுகிறது. (மாதம் 1)
- பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு, களத்திலிருந்து கல்வி மற்றும் அனுபவ உதவி, SRG மற்றும் NCSL உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கிறது (மாதம் 2, 3)
- 3 மாதத்திற்கு பிறகு, NCSL மற்றும் SRG உறுப்பினர்கள், முதல் மதிப்பீடு மற்றும் கருத்துக்கூறல் பணிமனையை நடத்துவார்கள். இதில், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், முதல் மூன்று மாதத்தில் அவர்கள் எதிர்நோக்கிய சவால்களையும் அவர்களின் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வார்கள். (மாதம் 4)
- முதல், மதிப்பீடு மற்றும் கருத்துக்கூறல் பட்டறைக்கு பிறகு, பள்ளித் தலைவர்கள் தங்கள் பள்ளிகளுக்குச் சென்று, அடுத்த மூன்று மாதங்கள் கற்றலை செய்கிறார்கள் (மாதம் 5–7)
- பங்குபெறுபவர்கள், தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள, இரண்டாவது மதிப்பீடு மற்றும் கருத்துக்கூறல் பட்டறையில் சந்திக்கிறார்கள். (மாதம் 8)
- இரண்டாவது சந்திப்பிற்கு பிறகு, SRG உறுப்பினர்களிடமிருந்து கள உதவி பெற்று, இறுதி சந்திப்பிற்காக ஒன்று கூடுகிறார்கள். (மாதம் 12)

## ஒரு வருட காலத்திற்கான பள்ளித் தலைமையாசிரியர்களோடு தொடரும் நிகழ்ச்சிகளின் அட்டவணை

| மாதம் | 1 | 2, 3 | 4 | 5, 6, 7 | 8 | 9, 10, 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|
| **தலையிடுதல்** | **CB பட்டறை** | **கள உதவி செய்தல்** | **மதிப்பீடு மற்றும் கருத்துக் கூறல் பட்டறை 1** | **கள உதவி செய்தல்** | **மதிப்பீடு மற்றும் கருத்துக்கூறல் பட்டறை 2** | **சமமானவர்களின் வருகை** | **ஓய்விடம்** |
| கால அளவு | 5–6 நாட்கள் | 2 மாதத்திற்கு ஒரு முறையாவது | 2 நாட்கள் | 3 மாதத்திற்கு 2 முறை | 2 நாட்கள் | PLC பள்ளிகளில் 2 முறை பார்வையிடுதல் | 2 நாட்கள் |
| நடத்துபவர் | NCSL | உருவாக்கி நடத்துவது NCSL, SRG | 2 நாட்கள் | SRG மற்றும் DRG | உருவாக்கி, நடத்துவது SRG | DRGs மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் | ஒருவரையொருவர் பாராட்டிக் கொள்ளவும் கற்றுக் கொள்ளவும் |
| நோக்கம் | | பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தங்கள் பள்ளிகளில் உருமாற்ற நிகழ்ச்சியை நடத்தும்போது உதவுவது | | பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தங்கள் பள்ளிகளில் உருமாற்ற நிகழ்ச்சியை நடத்தும்போது உதவுவது | | PLC–ஐ பயன்படுத்தி, பள்ளித் தலைமை ஆசிரியர்கள், சமமானவர்களிடமிருந்து கற்றலை துவங்குகிறார்கள் | NCSL மற்றும் SRG –ஆல் வடிவமைக்கப்பட்டு நடத்தப்படுகிறது |
| விளைவு | பள்ளி முதல்வர்களின் திறன் கட்டமைப்பு | 1. பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தங்கள் பள்ளிகளில் மாற்றத்தை முயற்சிக்கும்போது, கைகோர்த்துக் கொள்வது, 2. பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வெளிப்படும் பழக்க தகுதியை வெளிகாட்டுவது, 3. தங்களுடையது உருவாக்க, SRG மற்றும் DRG–க்களுக்கு வாய்ப்பை உருவாக்குவது, 4. சமமானவர்களிடமிருந்து கற்கும் வழிமுறையை துவங்குவது. இதுவே PLC உருவாக காரணமாகிறது. | | | | பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் DRG's புரிந்து கொள்ளும் சக்தியை உருவாக்கும், உறுதியான ஒன்றாக மாறி, PLC செயல்பாடுகளை நடத்திச் செல்லக்கூடியதற்காக நடக்கிறது. | |

### மாதிரிப் படிவம்
### கள உதவி அமைப்பதற்கான மாற்று படிவம்

**மாதிரி 1 : பள்ளிகளுக்கு, வட்டம் மற்றும் தொகுப்பு நிலைகளிலிருந்து கள உதவி**

SRG, DRG மற்றும் NCSL உறுப்பினர்களின் குழு, கீழ்க்கண்ட செயல்களை செய்யும்.

அ) கடந்த 3 மாதத்தில், பள்ளி, தொகுப்பு மற்றும் வட்டம் நிலைகளில் வைக்கப்பட்ட மீளாய்வு கூட்டத்தின் அறிக்கையை ஆராய்வது.

ஆ) மீளாய்வு அறிக்கையின் ஆராய்ச்சி மூலம் கிடைத்த புரிதலை உறுதி செய்து கொள்ளவும், பின்னர் செய்யக்கூடிய செயல்களுக்கு ஆலோசனைகளை சிறப்பாக்கவும், குறைவான அளவில் அவ்வப்போது ஒன்றிய பள்ளிகளை சென்று பார்ப்பது.

இ) கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதலை வேறுபடுத்த, மாவட்டம் / வட்டம் / தொகுப்பு மற்றும் பள்ளிகளை, பார்வையிடுவது கட்டாயப்படுத்தப்பட வேண்டும், மற்றும் அந்த ஒன்றியத்திலுள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களோடு நேரடியாக தொடர்பு வைத்துக்





கொள்வது மற்றும் சிறந்த கேள்வி பதில் பகுதியை வலியுறுத்த வேண்டும். சரியான உள்ளுணர்வோடு, திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஏற்றவாறு கேள்வி பதில் பகுதியை வடிவமைக்க வேண்டும்.

மையக் கருத்தாளர்கள், தங்கள் தொகுப்பிலுள்ள அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுடன் இணைந்து செயல்படுவர், அதோடு கள உதவியையும் கீழ்க்கண்ட முறையில் வழங்குவர்.

அ) ஒவ்வொரு வாரமும் பள்ளிகளைப் பார்வையிடுவது மற்றும் மைய அளவில் மாத கூட்டங்களை நடத்துதல் வேண்டும்.

ஆ) மாதக் கூட்டங்கள், பள்ளி உருமாற்றத்தை மற்றும் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் பங்கு பற்றி சிறந்த கவனம் செலுத்துகிறது. இது தொகுப்பிலுள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களின் பணியை மதிப்பீடு செய்வதன் மூலம் சாத்தியமாகிறது. இந்த மதிப்பீடு கூட்டங்கள், பள்ளித் தலைமை ஆசிரியர்களோடு இணைந்து, அனைவரும் பங்கு கொள்ளும் விதத்தில் நடத்தப்படுகிறது. இந்த முறை, சில பள்ளித் தலைமை ஆசிரியர்களோடு இணைந்து வடிவமைக்கப்படுகிறது.

இ) பொருளடக்க அறிவுத்திறன் மற்றும் தொகுப்பிலிருக்கும் ஆசிரியர்களின் கற்பிக்கும் கலைப் பாதையையும் வலிமையுடையதாக்க, பல்வேறு பாடத்தில் தனிச்சிறப்பு வாய்ந்தவர்களின் ஆதரவை, கருத்தரங்கு மற்றும் விவாத மன்றங்கள் ஏற்பாடு செய்வதன் மூலம் பெறுகின்றனர்.

ஈ) மைய பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களை வெவ்வேறு பாட வல்லுநர்களை உருவாக்குவதை கவனத்தில் கொண்டு, பள்ளித் தலைமை ஆசிரியரின் கற்பிக்கும் திறனை வருடம் முழுவதும் தொடர்ந்து பெறுவதற்கு ஏற்றவாறு வழிமுறையை உருவாக்குகின்றனர்.

உ) அந்தந்த பாடத்தில் சிறப்புற விளங்குபவர்கள், தங்களின் சிறந்த அறிவுத்திறனை பகிர்ந்து கொள்ளுகிறவர்கள் மற்றும் தங்கள் ஆதரவை சமமானவர்களுக்குத் தருகிறார்கள்.

ஊ) அதேபோல், தலைமையின் ஆற்றல், திறன் மற்றும் அறிவின் வலிமையை உடைய பள்ளித் தலைவர்கள், சிறப்புற விளங்க தயார்படுத்தப்படுகிறார்கள். இதன் மூலம், தன்னோடு உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்கள் நற்பயனளிக்கும் தலைமை ஆசிரியர்களாக விளங்க, ஆதரவு தருகிறார்கள்.

**மாதிரி 2 :** பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சமமானவர்களுக்கு ஆதரவு அளிப்பது பதினைந்து நாட்களுகொருமுறை, தொகுப்பிலுள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கிடையே கேள்வி பதில் பகுதி, தங்கள் பள்ளிகளில் ஏற்பட்ட அனுபவங்களையும், பிரச்சனைகளையும், விவாதிக்கவும் பகிர்ந்து கொள்ளவும் நடைபெறுகிறது.

குழுவில் ஒருவரான, பள்ளித் தலைமை ஆசிரியர் இதை முன்னின்று நடத்துகிறார். இதேபோல் ஒவ்வொரு முறை ஒரு பள்ளித் தலைமை ஆசிரியருக்கு வாய்ப்பு கிடைக்குமாறு உறுதி செய்து கொள்ளப்படுகிறது. இந்த கூட்டத்தை, நற்பயனளிக்கும் விதத்தில் வடிவமைப்பதும், வழிநடத்துவதும், அதை நடத்தும் பள்ளித் தலைவரின் பொறுப்பில்தான் உள்ளது. சமமானவர்கள், இறுதியில், வடிவமைப்பு மற்றும் செயலாக்கப்பட்ட விதம் பற்றி கருத்துக்கூறல் தருகிறார்கள்.

**மாதிரி 3 : சமமானவர்களின் அறிவுரைகள்**

15 அல்லது 20 நாட்களுக்கொரு முறை சந்தித்து, பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்வது மற்றும் தங்கள் பிரச்சனைகள் சவால்களை விவாதிப்பதன் மூலம், ஒருவருக்கொருவர் ஆதரவு அளித்து கொள்வது மற்றும் அறிவுரை கூறிக் கொள்வதை செய்கின்றனர். முடிவில், இந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் இணைந்து, மையத்திலுள்ள அனைத்து பள்ளிகளும் உருமாற, மாணவர் கற்றலை மையமாகக் கொண்டு, திட்டத்தை வடிவமைத்து செயலாற்றுகிறார்கள்.

**மாதிரி 4 : ஓய்வு பெற்ற பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்கள் / அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் / தன்னார்வ தொண்டர்கள் மூலம் வெளியிலிருந்து அறிவுரை மற்றும் வகைப்படுத்தப்பட்ட ஆதரவை கள ஆதரவாக பெறுதல்**


சிறப்பு மிக்க, திறன் வாய்ந்த ஆசிரியர்களாக, பணியின் போது தங்கள் திறமையை நிலைநாட்டிய ஓய்வு பெற்ற பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்களை உள்கொண்டு வருவது. அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டர்களும், பள்ளிகளுக்கு சேவை செய்யலாம். ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் மற்றும் பிற தொழில் சார்ந்த பணியாளர்களும், தொகுப்பிலிருந்து 2 அல்லது 3 பள்ளிகளை வருடம் முழுதும் தங்களுடன் பணியாற்ற தத்தெடுத்து கொள்கிறார்கள். இவர்கள், வாரம் ஒரு முறை இந்தப் பள்ளிகளை பார்வையிட்டு, அறிவுரை கூறுகிறார்கள். இந்த அறிவுரையாளர்கள், தொகுப்பு வள மனிதர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, பள்ளித் தலைமை முன்னேற்ற திட்டத்தை செயலாக முனைகிறார்கள். இதன் மூலம் பள்ளி உருமாற்றம் நிகழ்கிறது.

**உருப்படிவம் 5 : கள ஆதரவை அளிக்கக் கூடிய ஒன்றுபட்ட உருப்படிவம்**

கூகுள், அலைபேசி தொடர்பு, ஸ்கைப், படக்காட்சி மூலம், கலந்துரையாடல் மூலம் கள ஆதரவைத் தருவது.








## மதிப்பீடு மற்றும் கருத்துக்கூறல் பற்றிய ஆலோசனைக்கு உகந்த அட்டவணை

இரண்டு நாள் மதிப்பீடு பணிமனை மற்றும் தனிமை கூட்டம், புதிய தொழில் சார்ந்த அறிவை பெறுவதில் கவனம் செலுத்தாது, சமமானவர்களின் அனுபவத்திலிருந்து கற்பதில் கவனம் செலுத்துகிறது. இதற்காக, கீழ்க்கண்ட அட்டவணை வடிவமைக்கப்பட்டுள்ளது.

| தினம் கூட்டம் | தலைப்பு | நோக்கம் | விளைவு | நேரம் |
|---|---|---|---|---|
| 1.1. | தனிமைக்கான வரவேற்பு மற்றும் அறிமுகம் | பணிமனைக்கான பாலத்தை அமைக்க, நோக்கத்தை பகிர்ந்து கொள்ளவும். | பள்ளித் தலைமை ஆசிரியர்கள், 2 நாட்களில் என்ன எதிர்பார்க்கலாம் என்று தெரிந்து வைத்திருக்கிறார்கள். நோக்கத்தோடு ஒன்றி, பணிமனைக்குத் தயாராக இருக்கிறார்கள். | 9.30–10.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1.2. | "6 வாரத்தில், என் பள்ளியோடு என்னுடைய பயணம்" – தனிப்பட்ட பிரதிபலிப்பு | என்னுடைய வெற்றிகள், தோல்விகள் மற்றும் கற்றலை பள்ளித் தலைமையாசிரியர்களின் தனிப்பட்ட பிரதிபலிப்பிற்கான இடத்தை உருவாக்கி தருவது | ஒவ்வொரு முக்கிய பகுதிக்கு ஒதுக்கப்பட்ட சுவர்களில், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், தங்கள் பயணத்தின் படக்காட்சிகளை சமமானவர்களோடு, பகிர்ந்து கொள்ள மாட்டி வைக்கிறார். | 10.00 – 1.00 |
| 1.3. | சமமானவர்களின் படக்காட்சிகளை படிப்பது | சமமானவர்கள் பகிர்ந்து கொள்வதை துவக்கி, அதன் மூலம் அவர்கள் கற்க வாய்ப்பை உருவாக்குவது | பள்ளித் தலைமை ஆசிரியர்கள், சுற்றி பார்த்து, சமமானவர்களின் பயணத்தை படித்து, கேள்விகள் கேட்கிறார், மற்றும் பாராட்டவும் செய்கிறார். | 2.00 – 4.30 |
| 1.4. | தனியானவர் யோசிக்க வேண்டும். நான் மற்றவர்களிடமிருந்து என்ன கற்றுக் கொண்டேன் ? என் பள்ளிக் கூடத்திற்காக | தலைமை ஆசிரியர் மற்றவரிடமிருந்து புதிய சிந்தனைகளை தெரிந்து கொள்வது. சமமானவர்களிடமிருந்து பெற்ற தீர்வுகளை பிரதிபலிப்பது | ஒவ்வொரு தலைமை ஆசிரியரும் சமமானவரிடம் கற்றுக் கொண்டதை தன்னுடைய பள்ளியில் நடைமுறைப்படுத்துவது என முடிவு செய்கிறார். | 4.30 – 5.00 |
| 2.1. | குழுக்கள் உருவாக்குவது, பிரச்சனைகளைத் தீர்ப்பது + கூடுதல் மூலங்கள் (சுருக்கமாக படித்தல் / மாதிரிப் பயிற்சி / படக்காட்சி) | இன்னும் சிறந்த வழிமுறையில், சரியான வளங்களைக் கண்டுபிடித்தது (அதாவது இதேபோன்ற பிரச்சனைகளைப் பார்ப்பது) பிரச்சனைகளைத் தீர்ப்பது | ஒவ்வொரு முக்கிய பகுதியிலும், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஒன்றாக உட்கார்ந்து, ஒவ்வொன்றும் எதிர்நோக்கும் பிரச்சனைகளை தீர்ப்பது தேவைப்பட்டால், புதிய மூலங்களை குறிப்பிடுகிறார்கள். | 9.30 – 1.00 |
| 2.2. | செயல்திட்டத்தை தனித்தனியாக ஒருங்கிணைப்பது | தனிமையை முடிவுக்கு கொண்டு வருவது | முக்கியமான பகுதிகளுக்கு, அடுத்த 6 மாதத்தில், யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கிறார் மற்றும் மற்ற முக்கிய பகுதி கூட்டத்திற்கு தேதி குறித்து, திட்டமிடுகிறார். | 4.00 – 5.00 |
| 2.3. | முன்னேற்ற வழி | தலைமையாசிரியருக்கு எதிர்கால முன்னேற்ற வழிகளை தொடர் நிகழ்ச்சி | தலைமையாசிரியர் சரியான மக்களைத் தேர்ந்தெடுத்து அடுத்த 6 மாதங்களுக்குத் தொடர்பு வைத்துக் கொண்டு சந்தித்தல் | 4.00–5.00 |





# முடிவுரை

NCSL-NIEPA-வின் பள்ளித் தலைமைப் பண்பு மேம்பாட்டுத் திட்டத்தின் அழுத்தமான குறிக்கோள் என்பது பள்ளிகளை மாற்றியமைப்பதாகும். அதாவது பள்ளித் தலைமையாசிரியர்களை நிர்வாகிகளிலிருந்து தலைவர்களாக மாற்றும் நோக்கமாகும். இந்நோக்கத்தினை அடைவதற்கு ஒரு முழுமையான முறைமாற்றம் தேவைப்படுகிறது. அது தலைமையாசிரியர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகளில் ஒரு ஆழமான–விரிவான ஈடுபாட்டை வலியுறுத்தும் வகையில் அமைவதால் சாத்தியமாகும். இன்றைய உலகியல் நிலையில் தலைமையாசிரியர் பல்வேறுபட்ட பள்ளியின் சவால்களைச் சந்திக்க தலைமைப் பண்பால் வலிமையுடையவராக மாறுவதற்கு இக்கையேடு ஒரு வளநூலாக உள்ளது.

தற்போதைய பள்ளித் தலைமையாசிரியர்களை நாளைய பள்ளிச் சவால்களை சந்திக்கவல்ல வன்மையுடைவர்களாக மாற்றுவதற்கு இவ்வளநூல் வழிகோளுகிறது. NCSL–இன் கலைத்திட்டத்தின் அடிப்படையில் கருத்துரு மற்றும் செயல்முறை கலப்பில் வடிவமைக்கப்பட்ட இவ்வளநூல் பள்ளித் தலைமையாசிரியர்களை புதிய உத்திகளை, திறன்களை தங்கள் பள்ளிகளில் அமல்படுத்த ஏற்றவர்களாக மாற்றுகிறது. பள்ளித் தலைமையாசிரியர்கள் குழு விவாதம், மாதிரி செயல்வடிவம், ஒளி–ஒலி உதவிப் பொருட்கள் மற்றும் பட்டறிவு ஆகியவற்றின் உதவியோடு பிரச்சினைகள் மற்றும் சவால்களை அணுகுவதற்கு இக்கையேடு (வளநூல்) பெரிதும் உதவுவதாக அமைகிறது. NCSL–இன் நோக்கமான 'ஒவ்வொரு குழந்தையும் கற்கிறது – ஒவ்வொரு குழந்தையும் உயர்கிறது' என்பதை உண்மை நிலைக்கு மாற்றும் விதமாக ஒரு வழிகாட்டும் ஆவணமாக இக்கையேடு அமைகிறது.

மாநிலங்களின் செயல்பாட்டு அமைப்பை NCSL–இன் நோக்கோடு இணைந்து செயல்பட வைக்கும் வகையில் 10 மற்றும் 6 நாள் திறன் வலிமையூட்டும் நிகழ்வுகளை வடிவமைக்க இக்கையேடு வழிகாட்டுகிறது. பள்ளித் தலைமைகளை ஓராண்டிற்குள் மாற்றியமைக்கும் முனைப்பிற்கு இக்கையேடு ஒத்திசைக்கிறது.

தலைமையாசிரியர்களுக்கான ஓராண்டுத் திட்டத்தில் கையாள வேண்டிய முன் தயாரிப்பு வேலைகள், கலைத்திட்டத்தின் கற்றல் வளம் சார்ந்த 6 முக்கிய பகுதிகளின் செயல்முறைகளை வடிவமைத்தல் மற்றும் ஓராண்டு தொடர் நிகழ்வின் குறிப்பிடத்தகுந்தவற்றைக் கருத்தில் கொள்ளுதல் ஆகியவற்றை இவ்வளநூல் இதன் பாடப்பொருளில் கொண்டுள்ளது. NCSL–இன் கலைத்திட்டத்தை, மாநிலங்கள் தங்களின் தேவைகளுக்கு ஏற்ப, மாநிலம் சார்ந்த தலைமைப் பண்பை வடிவமைத்துக் கொள்ள போதிய வசதிகளையும், நெகிழ்வுத் தன்மையையும் கொண்டதாக இக்கையேடு (வளநூல்) அமைகிறது.

நாட்டின் ஊரகப்புறங்களில் பணியாற்றும் தலைமையாசிரியர்களுக்கும் NCSL–இன் நோக்கில் பள்ளித் தலைமைப் பண்பை உருவாக்கித் தரும் வகையில் இவ்வளநூல் (கையேடு) வடிவமைக்கப்பட்டுள்ளது. இதற்கென தனிப்பட்ட பயற்சி எதுவுமின்றியும், பள்ளித் தலைமைப் பண்பை தலைமையாசிரியர்கள் பெறுகின்ற வகையில் இவ்வளநூல் (கையேடு) வழிகாட்டுவதோடு ஒரு வளம் நிறைந்த ஆவணமாக அமைகிறது.

ஒரு உன்னத வழிகாட்டியாகவும் NCSL–இன் நோக்கங்களை இந்த நாட்டில் பரந்து கிடக்கும் ஆயிரக்கணக்கான பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு கொண்டு சேர்க்கவும், பள்ளிகளை மாற்றியமைக்கும் பள்ளித் தலைமை மேம்பாடுடையவர்களாக தம்மையே மாற்றிக் கொள்வதற்கும் பேருதவி புரியும் ஆவணமாக இவ்வளநூல்–கையேடு அமைகிறது.

‘शिक्षक से सीधी बात’

क्या आप कक्षा में जा रहे है?

## तो ठहरिये

आप अपने आप से पूछिये

- किसको पढ़ाना है?
- क्या पढ़ाना है?
- क्या आप प्रसन्नचित है?
- कल के कार्य का शुद्धिकरण कर लिया है?
- सहायक सामग्री तथा पथ योजना लेकर जा रहे हैं?

यदि हाँ तो

जाइये

## भावी राष्ट्र आपकी प्रतीक्षा कर रहा है.........

**क्या आप कक्षा से लौट रहे हैं?**


- क्या आपने बच्चों को नया ज्ञान दिया?
- क्या छात्रों की आपके प्रति श्रद्धा और गहरी हुई?
- क्या आपके मन में छात्रों के प्रति प्रेम जगा?
- क्या आपने अपने छात्रों को किताबी ज्ञान के अतिरिक्त व्यावहारिक ज्ञान भी दिया?

यदि हाँ तो

## “आप गर्व से कह सकते हैं, कि आपने राष्ट्र के प्रति अपना दायित्व पूरा किया”

लोकेन्द्र शर्मा (स.अ)
उ.प्रा.वि. अलीपुर खुर्द, बघरा,
मुज्ज़फर्नगर







# REFERENCES

| | | |
|---|---|---|
| Key Area 1 | Day 1 - Session 4 - Activity 4.1 - Case studies for School Leadership<br>Reference: Awasthi, K. (2008). Community Participation in Elementary Education, unpublished Ph.D. Thesis, The Maharaja Sayajirao University of Baroda, retrieved from www.msubaroda.ac.in on 15th November, 2013 | D1_S4_4.1 |
| | Day 2 - Session 1- Activity 1.1 - Excerpts from School that Learn<br>Reference: Senge, P. (2005). Schools that learn from 'The fifth discipline', retrieved from http://www.integral-focus.com/pdf/Senge.pdf on 15th December, 2013 | D2_S1_1.1b |
| | Diwan, R. (2013). Educational Leadership: A Conceptual Framework, retrieved from http://www.nuepaeduplan.nic.in on 10th February 2014 | Additional Reading |
| | Mintzberg, M.(1990).Ten management roles of managers in Mintzberg on Management: Inside our Strange World of Organizations, retrieved from http://management.atworknetwork.com/2008/04/15/mintzberg%E2%80%99s-io-managerial-roles/on 13th February, 2014 | Additional Reading |
| Key Area 2 | Day 3-Session 1-Activity 1.1-Lead India Video and De-Brief<br>Reference: https://www.youtube.com/watch?v=kk_oT7lYnqw, accessed on 23rd November 2013 | D3_S1_1.1 |
| | Day 3- Session 1-Activity 1.2- A Leadership personality test<br>Reference: Adapted by Shreya Tiwari, sourced from http://www.mindtools.com/pages/article/newLDR 50.htm accessed on 12th January 2014 | D3_S1_1.2 |
| | Day 3- Session 2-Activity 2.1- Module on 'Prioritizing your work and managing your time effectively'<br>Reference: Extracted from TESS-India Leadership Development Unit 2 Managing and Developing Self http://www.tess-india.edu.in/learning-materials/leadership accessed on 10th October 2013 | D3_S2_2.1 |
| | Day 3-Session 2-Activity 2.3-Time Management Grid<br>Reference: Extracted from TESS-India Leadership Development Unit 2 Managing and Developing Self http://www.tess-india.edu.in/learning-materials/leadership accessed on 10th October 2013 | D3_S2_2.3 |
| | Day 3- Session 3-Activity 3.1- Continued Professional Development<br>Reference: Extracted from TESS-India Leadership Development Unit 2 Managing and Developing Self http://www.tess-india.edu.in/learning-materials/leadership accessed on 10th October 2013 | D3_S3_3.1 |

| | | |
|---|---|---|
| Key Area 3 | Day 4-Session 1- Activity 1.1-Excerpts from Tottochan Reference: http://www.arvindguptatoys.com/arvindgupta/ Tottochan.pdf (english) http://www.arvindguptatoys.com/arvindgupta/totto-h.pdf (Hindi) accessed on 15th December 2013 | D4_S1_1.1 |
| | Day 4-Session 3-Activity 3.1-Video on 'Young Historians' Reference: https://www.youtube.com/watch?v=VAwfZbrdAiQ accessed on 15th November 2013 | D4_S3_3.1 |
| | Day 5-Session2-Activity 2.1a- Power point presentation on Coaching and Mentoring Reference: Adapted from TESS-India Leadership Development Unit 9:Coaching and Mentoring (http://www.tess-india.edu.in/learning-materials/leadership) accessed on 15th November 2013 | D5_S2_2.1a |
| | Day 5-Session2-Activity 2.1b- Module on Coaching and Mentoring Reference: TESS-India Leadership Development Unit 9: Coaching and Mentoring (http://www.tess-india.edu.in/learning-materials/leadership) accessed on 10th October 2013 | D5_S2_2.1b |
| | Day 5-Session 3-Activity 3.1-Video Clips 1 of the film 'India Untouched' Reference: https://www.youtube.com/watch?v=lgDG-mYdhZvU accessed on 19th January 2014 | D5_S3_3.1a |
| | Day 5-Session 3-Activity 3.1-Video Clips 2 of the film 'India Un-touched' Reference: https://www.youtube.com/watch?v=lgDGmYdhZvU accessed on 19th January 2014 | D5_S3_3.1b |
| | Day 5-Session 3-Activity 3.1-Video Clips 3 of the film 'India Un-touched' Reference: https://www.youtube.com/watch?v=lgDGmYdhZvU accessed on 19th January 2014 | D5_S3_3.1c |
| Key Area 4 | Day 6-Session 3- Activity 3.1 a-Case Study Making a Change to Teamwork Reference: TESS-India Leadership Development Unit 3: Leading Change, pg 13-14 (http://www.tess-india.edu.in/learning-materials/leadership) accessed on 19th January 2014 | D6_S3_3.1a |
| | Day 6-Session 3-Activity 3.1 b-Group Dynamics-Relationship Matrix Reference: http://books.google.co.in/books | D6_S3_3.1b |
| | Day 6-Session 4-Activity 4.1-Video on What if I and What if We Reference: https://www.youtube.com/watch?v=s46M7AGG391 accessed on 20th January 2014 | D6_S4_4.1 |






| | | |
|---|---|---|
| Key Area 5 | Day 7-Session 1-Activity 1.1-Knowing about innovations from familiar and everyday situations in life<br>Reference: Dhbholkar, Vinay and Rishikesh T.Krishnan (2013).8 Steps to lnnovation:Going from Juggard to Excellence. lndia:Collins | D7_S1_1.1 |
| | Day 7-Session 1-Activity 1.2- How to recognize whether the change is an innovation<br>Reference: 130919_vijayasherrychand-mp3-for-audio-podcasting accessed on 15th December 2013 | D7_S1_1.2 |
| | Day 7- Session 3- Activity 3.1-Case Study reading, analysis and whole group presentation<br>Reference: https://www.ted.com/speakers/arvind gupta.html<br>www.youtube.com/watch?v=KnCqR2yUXoU accessed on 15th December 2013 | D7_S2_2.1 |
| | Day 7-Session 1-Activity 1.2- How to recognize whether the change is an innovation Reference: http://www.nextbigwhat.com/bihar-school-with-wifi- skype-chaitanya-trust-297 accessed on 15th November 2013 | D7_S3_3.1 |
| | Day 7- Session 4-Activity 4.2-Video on 'How to overcome resistance to change'<br>Reference: http://www.youtube.com/watch?v=wll3bTkqHoXc accessed on 20th November 2013 | D7_S4_4.2 |
| Key Area 6 | Day 8- Session 2-Activity 2.1-Text for Individual Reflection on Home School Partnership<br>Reference: http://www.state.nj.us/educati0n/title1/ tech/module4/epstein.pdf accessed on 5th February 2014 | D8_S2_2.2 |
| | Day 8- Session 3-Activity 3.2- Simulation Scenario<br>Reference: Self Learning Material on 'Enhancement of SMC Participation', Kaivalya Education Foundation | D8_S3_3.2 |
| | Dayaram. (2on).School Management Committee and the Right to Education 2009.Resource material for SMC training. Book One, American India Foundation, New Delhi.(Available in both English and Hindi) | Additional Reading |
| Drawing SDP and Way Forward | Day io-Session3-Activity3.iVideo 'The power of One' - Sourced from https://www.youtube.com/watch?v=wMmaEdCjdi8 as on 5th January 2014 | D10_S3_3.1 |
| | Diwan, R. and Panda, B. (2013).Guiding through the preparation of School Development Plan: A handbook for school heads, retrieved from http://www.nuepaeduplan.nic.in/on 10th February 2014 | Additional Reading |


## Photographs

| Courtesy | Location/source | Used in |
|---|---|---|
| Dr. B.K Panda | Tribal School in Odisa | Day 1 |
| Mr. Mammohan Singh | Govt Primary School in Reiek, Mizoram | Introduction Day 1,2,3 |
| Kaivalya Education Foundation | www.kefindia.org/kaivalya- education | Day 4, 5 |
| Prof. K. Sujatha | Govt Nursery School, Goragunte Palya, Karnataka | Introduction Day 4,5,7 one year engagement |
| Prof.K.Sujatha | Govt P/S School, Bagalaguntea, Karnataka | Day 3,9 |
| Prof. K. Sujatha | Govt High School, Goragunte Palya, Karnataka | One year engagement |
| Mr. Salman U Khan | Capacity Building Programme for School Heads, Dist. Allahabad (23th to 29th December 2013), NCSL | Day 6, |
| Mr. Vishnu Pareek | Capacity Building Programme for School Heads,dist Allahabad (23th to 29th December 2013), NCSL | Key Area 5 Separator |
| Naya kadam Nahi kahani | http://www.facebook.com/photo.php?fbid=606471542766998&set=t.100000661276648&type=3&theater | Day 8 |
| Dr. Rashmi Diwan & Dr. B.K. Panda | Workshop on School development plan in Raichur, Karnataka | Day 1,2 |

## Illustration of Poems

| No | Courtesy | Poems |
|---|---|---|
| 1 | Dr. N. Mythili | Jawab do |
| 2 | Dr. Kashayapi Awasthi | Kar lo jo chaho |
| 3 | Dr. N. Mythili | Kitabein kuch kehti hein |
| 4 | Dr. N. Mythili | Bachhon ki padhai |
| 5 | Dr. Kashayapi Awasthi | Bas chan kadam |
| 6 | Dr. Kashayapi Awasthi | Shikshak se seedhi baat |





பிற்சேர்க்கை – 1

## பள்ளித் தலைமையாசிரியரின் திறன் / சக்தி கட்டமைப்பு உருவாக்குவதற்கான 6 நாள் நிகழ்ச்சி அமைப்பு

| | |
|---|---|
| **தயார்படுத்திக் கொள்ளும் செயல்பாடு : பள்ளித் தலைமை முன்னேற்றத்திற்கான நிகழ்ச்சி** | |
| திறமைகள் வளர்க்கும் நிகழ்ச்சிக்கு வருமுன், தயார்படுத்திக் கொள்ளும் செயல்பாடு படிவத்தை பள்ளித் தலைமையாசிரியர்கள் நிரப்புதல் | |
| **கருத்துக்கள்** | **நேரம் (நிமிடங்கள்)** |
| **நாள் 1 :** KA : பள்ளித் தலைமையாசிரியர் பற்றிய ஒரு கண்ணோட்டம் | |
| அறிமுகம் மற்றும் நிகழ்ச்சி வரை சட்டம் | 90 நிமிடங்கள் |
| பள்ளித் தலைமையை புரிந்து கொள்ளுதல் பன்முக பங்குகள், பொறுப்புகள் மற்றும் குழந்தைகளை முன்னிறுத்துவது | 90 நிமிடங்கள் |
| பள்ளியை, கற்றல் அமைப்பாக கருதுவது | 90 நிமிடங்கள் |
| பள்ளியை, கற்றல் அமைப்பாக புரிந்து கொள்வது | 90 நிமிடங்கள் |
| **நாள் 2 :** KA2 மற்றும் KA3 : தன்னை வளர்த்துக் கொள்ளுதல் மற்றும் கற்பித்தல்–கற்றல் செயல்பாடுகளை நிலைமாற்றுவது | |
| என்னுடைய தலைமை முறையை புரிந்து கொள்ளுதல் | 90 நிமிடங்கள் |
| பள்ளித் தலைவராக, பணியின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்துவது | 90 நிமிடங்கள் |
| பள்ளியும், கல்வியின் நோக்கமும் | 90 நிமிடங்கள் |
| குழந்தைகள் முன்னேற்ற தேவைகளைப் புரிந்து கொள்ளுதல் | 90 நிமிடங்கள் |
| **நாள்3 :** KA3 மற்றும் KA4 : கற்பித்தல்–கற்றல் செயல்முறைகளை நிலைமாற்றுதல் மற்றும் குழுக்களை உருவாக்கி, வழிநடத்துதல் | |
| கவனித்தல் மற்றும் ஆசிரியர்களிடம் கருத்துக்கூறச் செய்தல் | 90 நிமிடங்கள் |
| ஆசிரியர்களுக்குப் பயிற்சியாளராகவும், அறிவூட்டுபவராகவும் இருத்தல் | 90 நிமிடங்கள் |
| குழுக்களை புரிந்துக் கொள்ளுதல் | 90 நிமிடங்கள் |
| நோக்கத்தோடு கூடிய கலந்துரையாடலுக்கு நேரம் ஒதுக்குதல்! ஆசிரியர்களுக்குக் கூட்டம் நடத்துதல் | 90 நிமிடங்கள் |

| | |
|---|---|
| **நாள்4 :** KA6 மற்றும் KA5 : வழிநடத்தும் பங்குதாரர்கள் மற்றும் புதுமைக் காணலை வழிநடத்துதல் | |
| உறுப்பினர்களை புரிந்து கொள்ளுதல் : உறுப்பினர்களையும் அவர்களின் பங்களிப்பையும் கண்டுகொள்ளுதல். | 75 நிமிடங்கள் |
| வீடு—பள்ளி உறுப்பினரர்கள் | 90 நிமிடங்கள் |
| புதுமைக் காணல் என்பது கற்றல் அமைப்பின் இதயம் | 90 நிமிடங்கள் |
| புதுமைக் காணல் வழியாக, பள்ளியை வேறு விதமாக பார்ப்பது | 90 நிமிடங்கள் |
| **நாள்5 :** ஒருங்கிணைத்தல் மற்றும் பள்ளி சூழலுக்கேற்ப பயன்படுத்துதல் | |
| கற்றலை ஒருங்கிணைத்தல் | 45 நிமிடங்கள் |
| ஏதேனும் ஒரு பள்ளியின் வரைச்சட்டத்தின் அடிப்படையில், பள்ளி முன்னேற்ற திட்டங்களை உருவாக்குதல் | 150 நிமிடங்கள் |
| விளக்கவுரை மற்றும் சமநிலையிலுள்ளவர்களின் மறு ஆய்வு | 120 நிமிடங்கள் |
| ‘நல்ல’ பள்ளி முன்னேற்றத் திட்டத்திற்கான நெறிமுறைகளை உருவாக்குதல் | 75 நிமிடங்கள் |
| **நாள்6 :** பள்ளி முன்னேற்றத் திட்டத்தை வரைவது மற்றும் முன்னோக்கி எடுத்துச் செல்வது | |
| என் பள்ளிக்கான பள்ளி முன்னேற்ற திட்டம் | 120 நிமிடங்கள் |
| முன்னோக்கி எடுத்துச் செல்வது பற்றி விவாதிப்பது | 120 நிமிடங்கள் |
| பணிமனையை பற்றிய விசாரணை மற்றும் கருத்துக்கூறல் | 90 நிமிடங்கள் |
| முடிவு செய்தல் | 30 நிமிடங்கள் |








# பள்ளித் தலைமைப் பண்பு மேம்பாட்டிற்கான பாடத்திட்டத்தின் வடிவமைப்பு

ஆரம்ப பள்ளிகளில், பள்ளித் தலைமைப் பண்பு மேம்பாட்டு நோக்கத்தை அடைய தேவையான பல்வேறு பகுதிகளின் அடிப்படையில், பாடத்திட்ட வடிவமைப்பு 6 முக்கிய பகுதிகளை வரையறுக்கிறது. பள்ளி உருமாற்றத்திற்கும், பள்ளித் தலைமையாசிரியர்களின் தொழில் சார்ந்த வளர்ச்சிக்கும் தேவையான நோக்கங்களையும், பொருளடக்கத்தையும், முக்கிய பகுதிகள் தெளிவாக வரையறுத்துள்ளது.




பள்ளி நிலைமாற்றத்தை முழுமையான கண்ணோட்டத்தோடும், இலக்கை அடைவதற்காக பள்ளித் தலைமை ஆசிரியரின் முக்கிய பகுதியையும் உருவாக்கும் எண்ணத்தோடு, இந்த 6 முக்கிய பகுதிகளும் அடங்கியுள்ளன. பள்ளிகள், குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு உதவும் கற்றல் அமைப்பாக, இந்த வடிவமைப்பு பார்க்கிறது. பள்ளித் தலைமை ஆசிரியர்களிடம் நேர்மறை சுய மனஉருவை உண்டாக்குவதையும், பாகுபாடற்ற, சமநோக்கு கொள்கையோடு கூடிய பிரதிபலிக்கும் பயிற்சியாளர்களாக ஆவதை ஊக்குவிப்பதையும், மையமாகக் கொண்டு பாடத்திட்டம் வடிவமைக்கப்படுகிறது. இந்தியாவில் இருக்கக்கூடிய பள்ளி வேற்றுமைகளுக்கிடையே, இந்த மாதிரியான வடிவமைப்பு, சிறப்பாக கவனிக்கப்பட வேண்டிய பகுதிகளை கண்டுபிடித்து, புரிந்து கொள்ள போதிய இடமளிக்கிறது – மலைப் பிரதேசங்கள், பாலைவனங்கள் மற்றும் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளிலிருக்கக்கூடிய இடங்கள் அல்லது சமூக முரண்பாடுகள் வரக்கூடிய பகுதிகள் அல்லது இயற்கை

அல்லது மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரிழப்பு பகுதிகளை புரிந்து கொண்டு, அதைக் களைவதற்கு முயல்வது இதற்கு சமமாக சிறிய மற்றும் பல்வேறு தரத்திலுள்ள பள்ளிகளின் பிரத்யேக சவால்களும், சிறப்பாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

## முக்கிய பகுதி 1 : பள்ளித் தலைமையாசிரியர் பற்றிய ஒரு கண்ணோட்டம்

இந்தப் பகுதி, தலைமையாசிரியர் பற்றிய புரிந்து கொள்ளுதலைப் பற்றியும், பள்ளி உருமாற்றத்தில் அதன் தாக்கத்தையும் தேடுகிறது. இது பள்ளியை – கற்கும் அமைப்பாக, குழந்தைகளின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்குமான இடமாக, இடைவிடாத முயற்சி மற்றும் மாற்றத்திற்கான இடமாகவும் இருப்பதை புரிய வைக்கிறது. மாற்றத்திற்கும், உருமாற்றத்திற்குமான தொலைநோக்குப் பார்வையை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

### நோக்கம்

- பள்ளித் தலைமையை புரிந்துக் கொள்ளுதல் மற்றும் மாற்றத்திற்கும், மேம்பட்ட நிலைக்கு வருவதற்குமான தொலைநோக்குப் பார்வையை உருவாக்குவது.

### பிரிவு 1 : பள்ளியை கற்கும் அமைப்பாக கருதுவது

- பள்ளியை, சமூக நிறுவனமாக பார்ப்பது.
- ஒரு அமைப்பாக, பள்ளியின் இயக்க இயல்பு.
- பள்ளியில் கருத்து பரிமாற்ற செயல்முறைகள்.
- கற்றலுக்கும், முன்னேற்றத்திற்கும் பள்ளியை அடித்தளமாக கொள்வது.

### பிரிவு 2: பள்ளித் தலைமையாசிரியரின் பன்முக பங்குகள் மற்றும் அடையாளங்கள்

- தொலைநோக்குப் பார்வையாளராக வழிநடத்துபவர் இருப்பது.
- மாற்றத்தை துவக்குபவராக வழிநடத்துபவர் இருப்பது
- வழிநடத்துபவர் – ஊக்குவிப்பவராகவும், உறுதியானவராகவும், மக்களை மையப்படுத்துபவராகவும், வாழ்நாள் முழுவதும் கற்பவராகவும் இருத்தல்.
- நற்பயனளிக்கும் விதத்தில் பள்ளியை மேலும் மெருகூட்ட, தலைமையின் முக்கியத்துவம்.

### பிரிவு 3: பள்ளிக்கான தொலைநோக்குப் பார்வையை உருவாக்குதல்

- பள்ளி உருமாற்றத்திற்கான தொலைநோக்குப் பார்வை.
- சந்தர்ப்ப சூழலையும், கட்டுப்பாட்டையும், கணித்து புரிந்து கொள்வது.
- பள்ளி முன்னேற்ற திட்டம் மூலம் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றுதல்.
- மறு ஆய்வு மற்றும் மறுபரிசீலனை மூலம் மாற்றத்தை கண்காணிப்பது.






### பிரிவு 4: உருமாற்றத்தை புரிந்து கொள்ளுதல்

- பள்ளி உருமாற்றத்திற்கான கொள்கைகளை வழிகாட்டுவது. உள்ளடக்கல், சமமாக பார்த்தல் மற்றும் தரம்.
- பள்ளி ஒரு கூட்டமைப்பாக பார்ப்பது. பள்ளி மாற்றத்திற்கான திறமைகள் மற்றும் நோக்கங்கள்.
- தன்னை உருமாற்றிக் கொள்வது : மனப்பான்மை மற்றும் செயல்கள்; யோசித்தல் மற்றும் பிரதிபலித்தல் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமூக உறுப்பினர்களோடு தொடர்பு கொள்ளுதல்.
- மாற்றத்தோடு சமாளிப்பது : எதிர்ப்பை எதிர்கொள்வது மற்றும் வாய்ப்புகளை உருவாக்குவது.

### பிரிவு 5: குழந்தையை முதலிடத்தில் வைப்பது

- குழந்தை பருவத்தை புரிந்து கொள்வது.
- குழந்தைகளின் முழுமையான வளர்ச்சி.
- பள்ளியில் குழந்தைகளின் உரிமைகள்.
- சமத்துவம், பாகுபாடு இல்லாதிருத்தல் மற்றும் அனைவருக்கும் மரியாதை தருவதை கடைப்பிடிப்பது.
- பள்ளிகள், பாதுகாப்பான இடமாக இருப்பது.

### பிரிவு 6: செயல் ஒழுக்கவியலை உருமாற்றுவது

- நோக்கத்தை கருத்தில் கொண்டு, அதை நோக்கி நகர்வது.
- பல்வேறு கண்ணோட்டங்களை ஒப்புக் கொண்டு அவற்றிற்கும் இடமளிப்பது.
- அர்த்தமுள்ள கருத்து பரிமாற்றத்திற்கான செயல்முறையை உருவாக்குதல்.
- திருத்தலுக்கும், மாற்றத்திற்கும், திறந்த மனதோடு தயாராகுதல்.
- பொறுப்புணர்ச்சி பகிர்ந்து கொள்ளப்படுவதை ஆதரிப்பது.

## முக்கிய பகுதி2: தங்களை வளர்த்துக் கொள்வது

திறமைகள், மனப்பான்மை மற்றும் கொள்கைகள் இவற்றின் அடிப்படையில் நேர்மறை சுயமன உருவை உருவாக்குவது, பிரதிபலிக்கும் கலந்துரையாடல் மூலம் தன்னை வளர்த்துக் கொள்வது, தன்னையும், மற்றவர்களையும் வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்குவதில், வழிநடத்துபவரின் முக்கிய பங்கு – இவற்றை உருவாக்குவதில் இந்தப் பகுதி கவனம் செலுத்துகிறது.

### நோக்கம்

- தன்னைப் பற்றியும், பிறருடனும், பள்ளியுடனும் தன்னுடைய உறவை புரிந்து கொள்வது மற்றும் தன்னை வளர்த்துக் கொள்வது.

### பிரிவு 1: தன்னை புரிந்துக் கொள்ளுதல்

- தன்னை புரிந்து கொள்ளுதல் : தனிநபராகவும், பள்ளியில் தொழில்முறையிலும்.
- பணி வாழ்க்கையின் அர்த்தத்தையும், நோக்கத்தையும் புரிந்துக் கொள்ளுதல்.

- நேர்மறை சுயமன உரு மற்றும் சுய மதிப்பை உருவாக்குவது.

### பிரிவு 2: மற்றவர்களோடு தன்னை தொடர்புபடுத்திக் கொள்வது

- பள்ளி சமூகத்தின் ஒரு பகுதியாக தன்னை வைப்பது.
- எதிரெதிரான எதிர்பார்ப்புகள் மற்றும் பன்முக பங்கு கண்ணோட்டங்களை சமாளித்தல்.
- செல்வாக்கு வட்டம் மற்றும் அக்கறை வட்டம்.

### பிரிவு 3: பள்ளிச் சூழலில் தான்

- சுய முன்னேற்ற மற்றும் ஸ்தாபன நோக்கங்களை ஒருங்கிணைத்தல்.
- பள்ளி செயல்பாட்டிற்கு தொடர்புடைய பன்முக பங்குகள்.
- தொழில் சார்ந்த இலக்குகள் மற்றும் முயற்சிகளை, சமமாக கொண்டு செல்வது பற்றிய பிரதிபலிப்புகள்.

### பிரிவு 4: தொழில் முறையில் தன்னை வளர்த்துக் கொள்ளுதல்

- மக்களோடு இணைந்து செயல்படுவது மற்றும் தொடர்பு கொள்வது.
- பள்ளியை – சமூக கற்றல் மற்றும் இணைந்து வளர்த்தலுக்கான இடமாக பார்ப்பது.
- கூட்டு பொறுப்புணர்வை உண்டாக்குவது – சமூகம், நீதி மற்றும் ஒழுக்கம்.

## முக்கிய பகுதி 3: கற்பித்தல்–கற்றல் செயல்முறைகளை உருமாற்றுதல்

பள்ளியானது ஆராய்ச்சி செய்யும் மற்றும் புதியவற்றை செய்யும் இடமாக புரிந்து கொண்டு, கற்பித்தல்–கற்றல் செயல்முறைளை உருமாற்ற, வழிநடத்துபவர் தன் திறமைகளை உருவாக்குவதை இந்த பகுதி கையாள்கிறது. இதன் மூலம் வகுப்பறை செயல்முறைகள் ஆக்கபூர்வமாகவும், குழந்தைகளை மையமாகக் கொண்டதாகவும் ஆக்கப்படுகிறது. இதன் முடிவில், பள்ளித் தலைமை ஆசிரியர்கள், அவர்கள் பள்ளிகளில், கற்பித்தல்–கற்றல் செயல்முறைகளை உருமாற்ற, தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்வதுதான் இப்பகுதியின் நோக்கமாகும்.

### நோக்கம்

- கற்பித்தல்–கற்றல் செயல்முறைகளை, குழந்தையை மையமாக வைத்து ஆக்கப்பூர்வ நடவடிக்கையில் ஈடுபடுத்துவதாக உருமாற்றுவது.


### பிரிவு 1: பள்ளியும், கல்வியின் நோக்கமும்

- விசாரணை மனநிலையை வளர்த்தல்
- தீர்வுக்குரிய சிந்தனைகளுக்கான கல்வி
- ஆற்றலளிப்பதற்கான கல்வி
- பொறுப்புகள் குடிமகன்களாக உருவாக்குதல்

### பிரிவு 2: குழந்தையை மையமாகக் கொண்ட கற்பிக்கும் கலையை புரிந்து கொள்ளுதல்

- வளரும் குழந்தையின் கற்றல் மற்றும் முன்னேறுவதற்கான தேவைகள்
- குழந்தையை – சுறுசுறுப்பாக கற்பவராகவும், அறிவுத் திறனை வளர்ப்பவராகவும் உருவாக்குவது





- ஆசிரியருக்கும், மாணவருக்கும் – கற்றலை ஒரு சந்தோஷமான, ஆக்கப்பூர்வமான அனுபவமாக ஆக்குவது
- சமூக–பாரம்பரிய வேறுபாடுகளுக்கிடையே, கற்றலை, உள்ளடக்கும் சூழலில் செய்வது

### பிரிவு 3: கற்பித்தல்–கற்றலுக்கு சாதகமான சூழலை உருவாக்குதல்

- ஈர்க்கக்கூடிய, மகிழ்ச்சியான பள்ளி மற்றும் வகுப்புச் சூழல்
- வகுப்பறையையும், பொருட்களையும், ஆக்கபூர்வமாக அமைப்பது
- சுறுசுறுப்பாக கற்றலுக்கான வாய்ப்பை வலிமைப்படுத்துவது
- வகுப்பறையில் இதமான, பாதுகாப்பான, அக்கறையான சூழலை உருவாக்குவது

### பிரிவு 4: நற்பயனளிக்கும் வகுப்பறை செயல்முறைகளை மேலும் மெருகூட்டுவது

- கவனித்தல், கருத்துக்கூறல், மேற்பார்வை செய்தல்
- குழந்தைகளோடு நேரடித் தொடர்பு வைத்துக் கொள்வது மற்றும் ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சியையும் கண்காணிப்பது.
- வகுப்பறை செயல்களை, சீர்படுத்த, கூட்டு முயற்சி செய்தல்
- பயிற்சி அளித்தல் மற்றும் அறிவூட்டுதல்
- கற்பித்தல்–கற்றல் செயல்முறைகளில் தொழில்நுட்பத்தை உபயோகித்தல்
- ஆசிரியர்களின் தொழில் சார்ந்த வளர்ச்சியை ஊக்குவித்தல்

### பிரிவு 5: தொழில் முறையில் ஆசிரியரை உருவாக்குவது

- ஆசிரியர் : பள்ளி உருமாற்றத்திற்கு முக்கியமானவர்
- ஆசிரியர் தலைமையை உயர்த்துவது
- பிரதிபலிக்கும் பயிற்சியாளராக ஆசிரியர் இருப்பது
- ஆசிரியர்–மாணவர் கலந்துரையாடலை, வகுப்பிற்கு உள்ளேயும், வெளியேயும் செய்ய உதவுவது
- ஆசிரியர் பிரச்சனைகளையும், தொடர்பையும் கவனிப்பது
- ஆசிரியர்களின் தொழில்முறை வளர்ச்சியை ஊக்குவிப்பது

### பிரிவு 6: கற்பித்தல்–கற்றல் செயல்முறைகளை மேலும் வளமாக்குவது : வகுப்பறையைத் தாண்டி நோக்குதல்

- ஒரு பெற்றோராக குழந்தைகளை புரிந்து கொள்வது
- குழந்தை கற்றலுக்கு, வீட்டிலிருந்து உதவி
- சமூக அறிவு மற்றும் ஆக்கபூர்வ சிந்தனை மூலம், கற்றல் அனுபவத்தை வளமாக்குவது
- பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையேயான கருத்துக்கூறல் சுழற்சியை வலிமைப்படுத்துதல் :பள்ளி அனுபவம் மற்றும் கற்றல்
- சுற்றுப்புறத்தையும் கற்கும் இடமாக பார்ப்பது.

## முக்கிய பகுதி 4: குழுக்களை உருவாக்கி வழிநடத்துவது

நற்பயனளிக்கும் குழுக்களை உருவாக்கி, தக்க வைத்துக் கொள்வதற்கு தேவையான திறனை இந்தப் பகுதி கவனிக்கிறது. குழுவாக இயங்குவது, இணைந்து செயல்படுவது, குழுப்பணி, கருத்து வேறுபாடுகளை சரி செய்தல், குழு உறுப்பினர்களுக்கு, தொழில் சார்ந்த வளர்ச்சிக்கு வாய்ப்பளிப்பது – இவற்றை புரிந்து கொள்வதில் கவனம் செலுத்துகிறது.

### நோக்கம்

- ஒருங்கிணைத்தலையும், குழுவாக பணியாற்றுவதையும் ஊக்குவிப்பது

### பிரிவு 1: குழுக்களை உருவாக்குவது

- குழு உறுப்பினர்களின் வலிமையையும், திறனையும் புரிந்து கொள்ளுதல்
- குழு இயக்கத்தை கற்றல்
- கூட்டுறவாக, இணைந்து செயல்படும் முறையை உருவாக்குதல்
- பொறுப்புகளையும், திறன்களையும் ஒன்றாக பொருத்துவது

### பிரிவு 2: குழுப் பணியை வளர்ப்பது

- ஒன்று சேர்ந்து திட்டமிடுவது
- தொழில் சார்ந்த விவரத்தையும், கலந்துரையாடலையும் ஆதரிப்பது
- இணைந்து செயல்படுவது
- வளமான எண்ணங்களை மேடையாக, பணியாளர்கள் கூட்டம் நடத்துவது
- மறுபரிசீலனை மற்றும் கருத்துக்கூறலை தொடங்குவது

### பிரிவு 3: குழுத் தலைவராக இருப்பது

- நற்பயனளிக்கும் குழுப் பணிக்கான வாய்ப்பை உருவாக்குவது
- குழுவில், நற்பயனளிக்கும் விதத்தில் தொடர்பு கொள்ளும் முறையை உருவாக்குவது
- குழுவாகத் தீர்மானிப்பது
- பணியை, குழு மூலம் செயல்படுத்துவது
- கருத்து வேறுபாடுகளை தீர்ப்பது





## பிரிவு 5: புதுமைக் காணலை வழிநடத்துவது

தடையில்லாத மாற்றம் மற்றும் புதுமைக் காணல் மூலம் பள்ளியின் கட்டமைப்பு மற்றும் நிகழ்ச்சிகளை உருமாற்றம் செல்வது. ஒருங்கிணைந்த முயற்சி மற்றும் புதுமைக் காணல் பாரம்பரியத்தை உருவாக்குவதன் மூலம், புது சிந்தனைகளை ஆதரிக்கும் – சந்தர்ப்பங்கள், அமைப்புகள், கட்டமைப்புகள் மற்றும் செயல்முறைகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.

### நோக்கம்

- புதுமைக் காணல் செயல்கள் மூலம் உருமாற்றத்திற்கு உதவுவது

### பிரிவு 1: புதுமை காணல் – கற்றல் அமைப்பின் இதயம்

- பள்ளித் தலைமை ஆசிரியர் : புதுமைக் காணலுக்கு உந்துதலாக இருப்பவர்
- புதிய சிந்தனைகளை தேடுவது கலந்துரையாடல்
- புதுமைக் காணல் : பள்ளி முன்னேற்றத்திற்கு முக்கியமானது
- எப்போதும் இருக்கும் கட்டமைப்பை தாண்டி புதுமையைக் காண்பது

### பிரிவு 2: பள்ளியில், புதுமை காணல் பாரம்பரியத்தை உருவாக்குவது

- புதுமைக் காணலை வளர்ப்பது : ஆராய்ச்சிக்கும், ஆய்வுக்கும் போதிய வாய்ப்பை உருவாக்குவது
- போதிய வளங்கள் மற்றும் கல்வி சார்ந்த உதவி கிடைப்பதை உறுதி செய்து கொள்வது
- தனித்துவத்திற்கு மதிப்பு கொடுப்பது மற்றும் பல்வேறு கண்ணோட்டத்திற்கும் இடம் கொடுப்பது
- மாற்றத்திற்கான எதிர்ப்பை புரிந்துக் கொண்டு சமாளிப்பது
- புதிய சிந்தனைகளுக்கும், செயல்களுக்கும், அங்கீகாரமும், பரிசும் கொடுப்பது
- பள்ளியில் புதுமை காணலை கண்டுபிடித்து ஆவணப்படுத்துதல்

### பிரிவு 3: புதுமை காணல் மூலம், பள்ளியை வேறு விதமாகச் சிந்திப்பது

- பள்ளி நிலையில் புதுமைக் காணல் : பாடத்திட்டத்தின் அமைப்பை மாற்றுவது, வருடாந்திர நாட்காட்டி, வேலைகளை பகிர்ந்து கொள்ளுதல், வரவு–செலவு கணக்கு, மதிய உணவு, பொருளாதார நிர்வாகம் மற்றும் நிதி திரட்டுவது, வருடாந்திர விழாக்களை கொண்டாடுவது, சமூக மற்றும் பணியாளர்கள் கூட்டத்தை நடத்துவது
- வகுப்பறை நிலையில் புதுமைக் காணல் : கற்பித்தல்–கற்றல் முறைகளில், வகுப்பறை அமைப்பு, அட்டவணை உருவாக்குதல், வகுப்பறையை நிர்வகித்தல் – இவற்றில் புதுமை செய்வது
- மாணவர்கள், ஆசிரியர்கள், சமூகம் – இவர்கள் புதுமை காண்பவர்களாக இருத்தல்

## முக்கிய பகுதி 6: பங்களிப்புத் தன்மையை வழிநடத்துவது

பள்ளி உருமாற்றத்தை வழிநடத்துவது என்பது, பள்ளிக்கு உள்ளேயும், வெளியிலும் இருக்கும் மக்களுடன் பங்களிப்பாளர் ஒப்பந்தத்தை உள்ளடக்கியதாகும். பள்ளிக்கும்–பெற்றோர்கள், சமூக உறுப்பினர்கள், கல்வித் துறையில் இருக்கும் அதிகாரிகள் மற்றும் அக்கம் பக்கத்திலிருக்கும் பள்ளிகளுடன் புரிந்துணர்வுள்ள உறவை உருவாக்குவதில் இந்த பகுதி கவனம் செலுத்துகிறது. பள்ளித் தலைமை ஆசிரியர்கள், உறுப்பினர்களோடு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை திறம்பட உருவாக்க, வைப்பது தான் நோக்கமாகும்.

### நோக்கம்

- பள்ளி உருமாற்றத்திற்காக பெற்றோர்கள், சமூகம் மற்றும் கல்வித் துறை அதிகாரிகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ள ஊக்குவிப்பது

### பிரிவு 1: வீடு–பள்ளி பங்கு பற்றிய உடன்படிக்கை


- வீடு–பள்ளி நேரடித் தொடர்புக்கு இடம் உருவாக்குவது
- ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் இணைந்த பொறுப்பை உருவாக்குவது
- பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கண்ணோட்டத்தையும், எதிர்பார்ப்பையும் சமாளிப்பது
- பள்ளி நிர்வாகத்தில், பெற்றோர்கள் பங்கை ஊக்குவிப்பது
- பெற்றோர்கள் கற்க, பள்ளியை ஒரு மேடையாகக் கொள்வது

### பிரிவு 2: சமூகத்தோடு இணைந்து பணி செய்வது

- பள்ளி–சமூக உறவை புரிந்து கொள்வது
- பள்ளியில், சமூக பங்களிப்பிற்கு இடம் கொடுப்பது
- பள்ளி நிர்வாக குழு மூலம், சமூக பங்களிப்பை நிறுவுவது
- பள்ளி முன்னேற்ற திட்டத்தில், சமூகத்தின் பங்களிப்பு
- சமூகத்திற்கு கற்கும் இடமாக பள்ளி அமைவது
- அந்தப் பகுதியின் தலைமையாசிரியர்களை சரிவிகிதமாக புரிந்துக் கொண்டும் மற்றும் மரியாதையோடு செயல்படுவது

### பிரிவு 3: அமைப்போடு இணைந்து பணியாற்றுவது

- கல்வி அமைப்பின் ஒரு அங்கமாக பள்ளி இருப்பது
- கல்வித் துறை அதிகாரிகளுடன், நற்பயனளிக்கும் விதத்தில் தொடர்பு கொள்வது
- அமைப்பு நிலை தேவை, பள்ளி முன்னேற்ற கோரிக்கைகள் – இரண்டையும் சமமாக சீர்தூக்கி பார்ப்பது
- அருகிலிருக்கும் உதவக்கூடிய நிறுவனங்களோடு ஒன்று சேர்வது
- மற்ற பள்ளிகளுடன் – பகிர்தல், பொருத்திக் கொள்ளல், பங்கு பெறுதல் மற்றும் சிறந்த செயல்முறைகளை மாற்றிக் கொள்ளுதல்



# பள்ளித் தலைமைக்கான தேசிய மையம் – NIEPA

பள்ளிகளை தரமான கல்வி கொடுக்கக்கூடிய இடமாக உருமாற்றம் செய்வதற்கு, மாற்றம் மற்றும் புதுமை காணல் செயல்முறையில் ஈடுபடக்கூடிய திறன் வாய்ந்த, வலிமையான மற்றும் தகவல் அறிந்த தலைமை இருக்க வேண்டியது அவசியமாகிறது. இதற்கென NIEPA–பள்ளி தலைவர்களையும், நிர்வாகிகளையும், அவ்வப்போது ஒன்று சேர்த்து, அனுபவங்களை பகிர்ந்து கொள்ளச் செய்கிறது. எனினும், இன்னும் பெரிதாக செய்யப்பட வேண்டிய முயற்சிகள் நிறைய உள்ளன என்று கருதப்படுகிறது. இது தொடர்ந்து நடப்பதற்கான முதல்படியாகத்தான் NIEPA–இன் ஒரு அமைப்பாக பள்ளித் தலைமைக்கான தேசிய மையம் (NCSL) உருவாக்கப்பட்டுள்ளது.

பள்ளியில் மாற்றத்தையும், உருமாற்றத்தையும் கொண்டுவர பள்ளித் தலைமைகளுக்குச் சிறப்பான திறன் கட்டமைப்புப் பயிற்சிகளை வடிவமைக்க வேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்கு தேசிய மையம் மாநிலங்களின் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைத்திருக்கும் பாடத்திட்டத்திற்கு இணங்க பள்ளித் தலைமைகளுக்கான திறன் கட்டமைப்பு பயிற்சிகளைதொடர்ந்து நடத்துதல் வேண்டும். பள்ளிகளுக்கிடையேயான வலைதள பிணைப்பின் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள தேசிய மையம் ஊக்கப்படுத்த வேண்டும். நிறுவனங்களின் நிலையில் பள்ளிகளை நிர்வகித்தல், தலைமைப் பண்பில் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் ஆகிய செயல்பாடுகளில் நிறுவனங்கள் ஈடுபட தேசிய மையம் ஊக்கப்படுத்த வேண்டும். பள்ளித் தலைமையின் திறன் மேம்பாட்டிற்கும், பள்ளி நிர்வாகத்திற்கும் தேவைப்படும் தகவல்களைத் தரக்கூடிய தகவல் மையமாகவும் தேசிய மையம் செயல்பட வேண்டும்.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் ஏற்கெனவே பணியில் உள்ள தலைமையாசிரியர்கள் மற்றும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தலைமை ஆசிரியர்கள், தொடக்கக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் மூத்த ஆசிரியர்கள் என அனைவரையும் ஒருங்கிணைத்துப் பள்ளித் தலைமைப் பண்பிற்கான பயிற்சிகளைத் தருதல் வேண்டும். இதன் முக்கிய சாரம்சம் என்னவெனில் கல்வி நிறுவனங்கள், கிராமங்கள், மாவட்டங்கள், மாநிலம் மற்றும் தேசியம் எனப்படும் எல்லா நிலைகளிலும் பள்ளிகள் மற்றும் பள்ளியின் முறைகளை மேம்படுத்தவும், வழிநடத்தவும் உகந்த நிலையில் தலைமைப் பண்பாளர்களை உருவாக்குவதேயாகும்.

“हर बच्चा सीखे,

हर विद्यालय उज्ज्वल हो”

**National Centre for School Leadership**
National Institute of Educational Planning and Administration
17-B, Sri Aurobindo Marg, New Delhi-110016 (INDIA)
EPABX Nos. : 26565600, 26544800
Fax : 91-011-26853041, 26865180